

தமிழியக்க
வெளியீடு

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா மலர்

எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து

ஆதி மொழியென் அருமைத் தமிழ் என்றே
ஓதி உலகுக் குணர்த்திடவே - தீதின்றி
ஆவன செய்பே ரறிஞர்அண் ணாமலையின்
தேவநே யப்பாவா ணர்.

தமிழில் தமிழ்சார்ந்த கன்னடந் தெ லுங்கில்
அமைகே ரளந்துளுவில், ஆர்வம் - கமழ்கின்ற
ஆங்கிலத்தில் ஏனை அயல் மொழியில் வல்லுநர் எப்
பாங்கிலுளார் பாவாணர் போல்?

வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
அந்தமிழே ஆதிஎன் னும்தேவ நேயர்தாம்
எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து.

என்தமிழிற் கொஞ்சம் இருந்ததெலுங் கிற்கொஞ்சம்
பின்ஆங் கிலத்திலே பீஏயும் - நன்குடையேன்
என்று மொழிவார்போல் இல்லைநம் பாவாணர்
பன்மொழிவல் லார்இந்தப் பார்க்கு.

பன்மொழியில் வல்லரென்று பைந்தமிழர் நாவினிலே
இன்னும் சிலபேர் இருக்கின்றார் - அன்னவர்கள்
நாட்டுக்குச் செய்ததென்ன? நம்தமிழை மாற்றலர்க்குக்
காட்டிக் கொடுக்கும் கயவு.

வீணாள்ப டாதுதமிழ் மேன்மையினைக் காட்டுவதில்
வாணாளை ஆக்கும்பா வாணர்க்கு - நாணாமல்
அல்லல் விளைவிக்கும் அயலார்க் கடியார்கள்
இல்லாம லில்லை இவண்.

நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா? - பாவிகளே
தேவநே யர்க்குச் செயுந்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்.

திக்கற்ற செந்தமிழ்த்தாய் வெல்கவே வெல்கென்று
மெய்க்குழைக்கும் தொண்டர்மனம் வேகவே வைக்கும்.
தடிப்பயல் யாவனே தப்புவான்? அன்னோன்
நடுத் தெருவில் நாறும் பிணம்.

புண்ணானால் நெஞ்சம் தமிழுலகு பொன்று மென்று
அண்ணா மலைப்பல் கலைக்கழகம் - இந்நாளில்
தேவநே யர்க்குத் திருத்தொண்டு செய்த தென்க
யாவரும் ஏத்தும் படி.

வாழ்ந்தாலே நாம் வாழ்வோம் வாழாளேல் நாம்வாழோம்
தாழ்ந்த தமிழகத்தில் செந்தமிழ்த்தாய் - ஆழ்ந்தாழ்ந்து
பாராது பாவாணர்க் கின்னல் புரிவதனால்
வாராது வாழ்விற் புகழ்!

எந்தமிழ் மேலென்றே உண்மை எடுத்துரைப்போன்
செந்தமிழன்! செந்நெற் பயன்மழை! - நந்தமிழின்
கீழறுப்போன் கீழோனே! தேவநே யர்வாழ்க!
வாழிய செந்தமிழ் மாண்பு.

பாவேந்தர் பாரதிதாசன், *(குயில் - 22 - 8 - 60)*

மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா மலர்

தி.பி. 2033 மேழம் 8 [21.4.2002]

தமிழியக்கம்

672, பெரியார் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
திருச்சிராப்பள்ளி – 621 021
பேசி : 0431 – 458298

வரவேற்புக் குழு

ஆட்சிக் குழுவினர்

பேரா. பி.**திருமுதுகுன்றன்**
தலைவர்

முனைவர் **இரா.இளவரசு**
பொதுச்செயலாளர்

புலவர் **கி.த.பச்சையப்பன்**
துணைத்தலைவர்

முனைவர் **கு.திருமாறன்**
இணைச்செயலர்

முனைவர் **மு.இளமுருகன்**
இணைச்செயலர்

தோழர் **அ.கண்ணம்மாள்**
பொருளாளர்

மாவட்டப் பொறுப்பாளர்கள்

தோழர் **கி.வெற்றிச்செல்வன்**
சென்னை மாவட்டம்

தோழர் **செந்தலை ந.கவுதமன்**
கோவை மாவட்டம்

புலவர் **பி.தமிழகன்**
திருச்சி மாவட்டம்

தோழர் **தங்க.வெற்றிவேந்தன்**
தஞ்சை மாவட்டம்

புலவர் **சீ.வெற்றிச்செல்வன்**
திருவாரூர் மாவட்டம்

தோழர் **பொன்.மாறன்**
மதுரை மாவட்டம்

முனைவர் **அ.துரை**
நாமக்கல் மாவட்டம்

பேரா. **மு.சிவந்தபெருமாள்**
புதுக்கோட்டை மாவட்டம்

பேரா. **இரா.தமிழ்நம்பி**
பெரம்பலூர் மாவட்டம்

முனைவர் **மு.இளங்கோவன்**
வேலூர் மாவட்டம்

வழக்கறிஞர் **இரா.சி.தங்கசாமி**
நெல்லை மாவட்டம்

பாவலர் **இலக்கியன்**
புதுவை மாநிலம்

மலர்க்குழு

முனைவர் **இரா.இளவரசு**
புலவர் **கி.த.பச்சையப்பன்**
முனைவர் **கு.திருமாறன்**
முனைவர் **ந.அரணமுறுவல்**
திருமலி **கோ.இளவழகன்**
திருமலி **அ.மதிவாணன்**
திருமலி **கி.வெற்றிச்செல்வன்**
திருமலி **பா.இளங்கோ**

ஏற்பாட்டுக் குழு

முனைவர் **ந.சக்திவேலு**
திருமலி **வீ.ந.சோமசுந்தரம்**
புலவர் **மு.செல்வராசு**
முனைவர் **ப.கங்கை**
பாவலர் **பரணன்**
பாவலர் **அருள்.செல்லத்துரை**
அ[illegible]ர் **குறள்மொழி**
புலவர் **ப.சின்னச்சாமி**
திருமலி **ஆ.மணிவண்ணன்**
திருமலி **மு.மலைக்கொழுந்தன்**
வழக்குரைஞர் **தமிழகன்**
திருமலி **சு.மதியழகன்**

கண்காட்சிக் குழு

புலவர் **பெ.குறளன்பன்**
பேரா. **இரா.தமிழ்நம்பி**
புலவர் **பி.தமிழகன்**
புலவர் **பி.இராமதாசு**
ஓவியர் **சிவ.சந்திரசேகரன்**
புலவர் **பாசுகரன்**
திருமலி **தி.மா.சரவணன்**
திருமலி **ந.கருணாகரன்**

மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா மலர்

பதிப்பு : 2033 மேழம் 8 (21.4.2002) ● *வெளியீடு :* தமிழியக்கம், 672, பெரியார் சாலை, கலைஞர் கருணாநிதி நகர், திருச்சிராப்பள்ளி - 621 021. பேசி : 0431 - 458298 ● *அளவு :* 1/4 மடிகலன் *கட்டு :* அட்டைக்கட்டு ● *ஒளியச்சு :* பாவாணர் கணினி, சென்னை - 600 014 ● சென்னை - 600 014 ● *அச்சகம் :* சார்ப் பிரிண்ட், சென்னை - 5. பேசி : 8572012 ●

டாக்டர் கா. காளிமுத்து,
எம்.ஏ., பி.எச்டி.
பேரவைத் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தொலைபேசி அலுவலகம் : 536 27 08
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 15-4-2002

வாழ்த்துச் செய்தி

அன்புடையீர்!

வணக்கம். நலம், நலமே வாழி!

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவைத் தமிழியக்கம் நடத்துவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

வடமொழியாம் சமற்கிருத ஆதிக்கத்தை எதிர்க்கவே பாண்டித்துரைத் தேவர் நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்கினார். தமிழ்ச்சங்கம் ஈன்ற தலைமகன் பாவாணர்.

தமிழ் ஆரியமொழிக்கு மூலம்; திராவிடமொழிகளுக்குத்தாய் என்று நிறுவியவர் பாவாணர்அவர்கள்.

அவரால். சங்கத் தமிழைச் சாய்க்கவந்த சமற்கிருத்தின் ஆதிக்கம் சங்கறுபட்டு சாய்ந்தது.

இன்று இந்தி ஆதிக்கத்தையும்- பிறமொழி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடவேண்டியுள்ள நிலையில் நாம் உள்ளோம். பாவாணர் நூற்றாண்டில் தமிழைக்காக்கச் சூளுரையேற்போம்!

பாவாணர் நூற்றாண்டு விழாச் சிறக்கவும், விழாமலர் மணக்கவும் என் நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

(கா.காளிமுத்து)

பெறுநர்

முனைவர் இரா. இளவரசு அவர்கள்
பொதுச்செயலாளர்
தமிழியக்கம்
672, பெரியார்சாலை
கலைஞர் கருணாநிதி நகர்
திருச்சி-620 021.

மு. தம்பிதுரை
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள்..
28-3-2002

வாழ்த்துச்செய்தி

அன்புடையீர்,

வணக்கம்!

பன்மொழிக்கடலாம்- பண்பாட்டின் பெட்டகமாம்- தமிழ்ச் சொற்பிறப்பியல் ஆய்வுப் பேரறிஞர் பெருந்தகை மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களின் பன்முகத் திறன்களைப் பாருக்குத் தெரிவிக்கும் வண்ணம் தாங்கள் உருவாக்கும் பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா மலர், மணக்கும் மனோரஞ்சித மலராய், அழகு சிலிர்க்கும் செந்தாமரைப் பூவாய்; அகம் களிக்கச் செய்திடும் மல்லிகை நறுமலராய் பூத்து மணந்தெளித்திட வாழ்த்துக்களை வழங்குவதில் பெரு மகிழ் வெய்துகின்றேன்.

தேவநேயப்பாவாணரின் மொழிக் கனவுகள் நனவாக- அவரது தனித்தமிழ்ப் பற்று அனைவருக்கும் ஏற்பட- தமிழ் அரியணை ஏறிட, எங்கும் தமிழ்- எதிலும் தமிழ் என்று தமிழ் என்கின்ற நோக்கம் நிறைவேறிட மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில் செம்மாந்து நடைபோடும் தமிழக அரசு முனைந்து செயலாற்றி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

புரட்சித்தலைவி அரசு தமிழ்- தமிழின- தமிழ்நாட்டு வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் தொடர்ந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு நல்லாதரவு தரவேண்டியது நற்றமிழ்க் குலத்தின் நீங்காப்பெருங்கடமையாகும்.

திருச்சியில் பாவாணர் நூற்றாண்டு விழா பெரும் சீரோடும் சிறப்போடும் நடைபெறவும்- பாவாணரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் அரிய மலர் சிறந்து மணம் வீசவும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க பாவாணர் புகழ்!

அன்புடன்

மு. தம்பிதுரை

பெறுநர்

பேரா. இரா.இளவரசு அவர்கள்
பொதுச்செயலாளர், 'தமிழியக்கம்'
672, பெரியார் சாலை
கலைஞர் கருணாநிதி நகர்
திருச்சி-620 02'

சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் — சென்னை – 600 005

முனைவர் பொன்.கோதண்டராமன் (பொற்கோ)
துணைவேந்தர்.

20.4.2002

வாழ்த்துரை

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் 20ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்ச் சமுதாய வரலாறு முதலான பல்வேறு துறைகளில் இடைவிடாமல் ஒரு இயக்கம் போலப் பணியாற்றியவர். அவருடைய பணிகளால் தமிழின் மேன்மையும் தமிழ்ச் சமுதாய வரலாறும் துலக்கம் பெற்றது.

குறிக்கோள் பிறழாமல் வாழ்நாள் முழுவதும் தளர்வறியா மனத்தினராய்த் தொண்டாற்றிய அந்தப் பெருமகனாருக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் அவரது நூற்றாண்டு நிறைவு விழாவை ஒட்டித் தமிழியக்கம் மலர் வெளியிட இருப்பதறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த முயற்சி சிறப்பாக நிறைவேற என்னுடைய அன்பு நிறைந்த இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிற தமிழ் நெஞ்சங்களுக்கு என்னுடைய அன்பு நிறைந்த இனிய நல்வாழ்த்துகள்.

(பொற்கோ)

தொலைபேசி (அலுவலகம்) : 5361074 (இல்லம்) : 2350304
தொலைப்படி : 91-44-5367651 / 91-44-5366693
மின் அஞ்சல் : portko@unimad.ernet.in
தொலை அச்சு : 41-6376

மருத்துவர் ச.இராமதாசு, எம்.பி.பி.எஸ்.
நிறுவனர்
பாட்டாளி மக்கள் கட்சி
229, நேரு வீதி, திண்டிவனம் - 604 001
விழுப்புரம் மாவட்டம்

E-mail :founderpmk@Sify.com.

வெளியூர் : 04147
தொலை நகல் : 22586
வீடு : 22709

நாள்: 11.4.2002

வாழ்த்துகிறேன்

மதிப்பிற்குரிய,

தமிழியக்கப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு இனிய வணக்கம்.

''தமிழியக்கம்'' என்ற அமைப்பு பல ஆண்டுகளாக தமிழ் வளர்ச்சிக்காக, பல்வேறு பணிகள் ஆற்றி வருவதை அறிந்து மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். அரசியல் என்ற நிலையிலே நாங்களும் தமிழை ஆட்சிமொழியாக ஆக்கவேண்டும் என்று, டில்லியிலே ஆட்சிமொழி மாநாடு நடத்தினோம். தமிழ் வளர்ச்சி என்ற நிலையிலே ''பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை'' நிறுவி தமிழ்த் தொண்டாற்றி வருகிறோம்.

இவ்வாறெல்லாம் தமிழுக்குத் தொண்டுசெய்ய, தமிழ்மொழியைக் காக்க, தமிழ் மொழியை வளர்க்க நமக்கெல்லாம் தமிழுணர்வு ஊட்டிய தமிழ்ச்சான்றோர்களில் முன்னிலையில் நிற்பவர் தேவநேயப் பாவாணர் ஆவார். அவர் என்றும் நம் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவர். அப்பெருமகனார் ஆய்வுகள் மூலம் தமிழை உயர்த்திய வகையில் நம்மையும் உயர்த்தியிருக்கிறார் என்பதே உண்மை.

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை, தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ'' என்றார் பாரதிதாசன். அந்த வகையில் தான் செய்த தமிழ்த் தொண்டின் மூலம் என்றும் நம் நெஞ்சில் புகழோடு நிலைத்திருக்கும் ஆய்வறிஞர் பாவாணர்க்கு நூற்றாண்டு விழா மலர் வெளியிடயிருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எல்லா வகையிலும் விழாமலர் சிறந்திடவும், மணந்திடவும் அதன் மூலம் பயன்மிகப் பெருகிடவும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க பாவாணர் புகழ்!
வளர்க தமிழ்த் தொண்டு!
ஓங்குக தமிழியக்கம்!

அன்புடன்,

(டாக்டர்.இராமதாஸ்)
நிறுவனர்-பா.ம.க.

பெறுநர்:

முனைவர் இரா.இளவரசு அவர்கள்
பொதுச்செயலாளர்,
தமிழியக்கம்,
ஆர்.என்.5, பட்டினப்பாக்கம்,
சென்னை – 600 028.

மணம் நுகருமுன்...

நாமெல்லாம் உணவருந்திய பொழுதுகளில் நமக்காகப் பசித்திருந்து எழுதியவர்; நாமெல்லாம் விழிமூடி உறங்கிய பொழுதுகளில் நமக்காக விழித்திருந்து ஆய்ந்தவர்; ஊண்வேளை, உறக்கவேளை என்றில்லாமல் எவ்வேளையும் தமிழ்வேரை அகழ்ந்தவர்; தன்னலத்தைக் கருதாமல் தமிழர் நலம் பேணியவர்; அவர்தாம் பாவாணர்!

அவர் பணியின் அருமையை அரசுகளும் பல அறிஞர்களும் அறிந்துகொள்ள முயலாதபோது ஊர்ப்புறத் தமிழர்கள் பலர் உணர்ந்து கொண்டனர். அவர் நூல்கள் தமிழை, தமிழரை விடுவிக்கும் வெளிச்ச விதைகளைக் கொண்டவை என்பதை அறிந்து கொண்டனர். 'பாவாணர் நூல்வெளியீட்டுக்குழு' என்று பல ஊர்களில் அமைத்துத் தங்களால் இயன்ற பொருட்கொடையை அளித்துதவினர். குல, மதக் கட்சிக் கொள்கைகளைக் கடந்து தமிழ்ச்சார்பில் நின்று பாவாணர்க்கு மட்டுமே தமிழுலகம் இத்தகு கொடையை வழங்கியது.

எளிய தமிழர்களை ஏந்திக்கொண்ட இணையற்ற மொழிமீட்பராகிய பாவாணர்க்கு நூற்றாண்டு விழா!

நூற்றாண்டு தொடங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னரே தி.பி. 2031 மீனம் 12 (25.3.2000)இல் தொடங்கி மாதம் ஒரு பாவாணர்ப் பொழிவு என்று திட்டமிட்டு இருபத்தாறு பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

பாவாணர் நூற்றாண்டு தொடங்கிய தி.பி. 2031 சுறவம் 25 (7.2.2001) அன்றே தமிழியக்கம் தஞ்சையில் 'பாவாணர் மடல்கள்' என்னும் நூல்வெளியீட்டோடு நூற்றாண்டுத் தொடக்க விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடியது.

தமிழியக்கம் தமிழ்நாட்டரசுக்கும் பல்கலைக்கழகங்கட்கும் பாவாணர் பணியாற்றிய கல்வியகங்களுக்கும் நூற்றாண்டு விழாவைத் தக்க முறையில் கொண்டாடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தது. அதனைப் பொருட்படுத்திச் சென்னைப் பல்கலைக்கழகம் முதலிய சில கல்வி நிறுவனங்கள் விழா எடுத்தன. நூற்றாண்டு நிறைவில் தமிழக அரசும் கல்வியகங்கள் அனைத்திலும் விழா எடுக்க ஆணையிட்டது. இந்த நடவடிக்கை பாவாணரை அறியாதாரும் ஓரளவு தெரிந்துகொள்ளப் பயன்பட்டது.

நூற்றாண்டின் முத்திரை நிகழ்வாகத் 'தமிழ்மண் பதிப்பகம்' தமிழ்ப்பதிப்புத் துறையின் வரலாறு காணாத வகையில் பாவாணர் நூல்கள் அனைத்தையும் வெளியிட்டுப் பரப்பும் முயற்சியை மேற்கொண்டது. இம்முயற்சியில் தமிழியக்கத்தார்க்குத் தக்கதோர் இடமுண்டு.

தன்னை உணராத தமிழனிடம் அவனை உணரச் செய்யும் சிறந்த அறிவுக் கருவிகளாகிய பாவாணரின் கருத்துகளைக் கொண்டுசெல்லும் பணியைத்

தமிழியக்கம் தன்னிகரற்ற வகையில் செய்திருக் கின்றது. அப்பணிகளின் மணிமுடியாக அமை வதே திருச்சிராப்பள்ளியில் மேழம் 8 (21.04.2002) இல் நிகழ்த்தப்பெறும் நிறைவுவிழா!

விழாவையொட்டி வெளியிடப்பெறும் இம்மலர் பெருமுயற்சியில் மலர்ந்திருக்கிறது. கருவுயிர்ப்பில் தாய் படுந்தொல்லையை இதனை உருவாக்கியவர்கள் பட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் நீள அகலப்பரப்பில் வாழும் நற்றமிழ் உணர்வாளர்கள் பலரிடமும் படைப்பு கள் கேட்கப்பட்டன. அவரவர்களுக்கு ஈடுபாடு உள்ள துறையைச் சார்ந்து எழுதுமாறு கேட் டோம். தனித்தமிழியக்கத்தைச் சார்ந்த பல பிரிவினரிடமும் வேறுபாடு இல்லாமல் படைப்புகள் வேண்டிப் பரிவுடன் எழுதி னோம்.

முன்னரே வெளியிடப்பெற்ற படைப்பு கள் என எங்களால் அறியப்பட்டவை விலக்கப் பட்டன. காலந்தாழ்ந்து வந்தவையும், இன்னும் சிறப்பாக எழுதப்பட்டிருக்கலாமே என நாங்கள் கருதியவையும் மலரில் இடம்பெறவில்லை. பக்க அளவைக் கருத்தில் கொண்டு சில படைப்புகள் அடிப்படைக் கருத்து மாறாமல் சுருக்கப்பெற்றன.

எங்கள் வேண்டுகோளை ஏற்றுப் படைப்புகளை விடுத்த அனைவர்க்கும் அகங் கனிந்த நன்றி.

இறுதிக்கிழமையில் சில நாட்களே, எஞ்சியிருக்கும் நிலையில் மலரை உருவாக்கும் பணியை மேற்கொண்டு உணவையும் உறக்கத் தையும் பொருட்படுத்தாமல் வினையாற்றிய தோழர்கள் என்றும் நன்றிக்குரியவர்.

மலர்க்கான பொருட்செலவை ஈடு கட்டும் வகையில் விளம்பரங்கள் அளித்துதவிய வர்கள், பிறரிடம் சென்று விளம்பரங்களைப் பெற்றுதவியவர்கள், நன்கொடை வழங்கிய வர்கள் முதலிய அனைவர்க்கும் உளம்நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

''தொல்காப்பியர் காலத்துக்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் ''பாவாணர்'' என்றே பெயரிடலாம்.

இவர் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்ப்பது தமிழ்; கொடுப்பது தமிழ்; விண்டது தமிழ்; விளக்குவது தமிழ் என்று தமிழே என்பாகவும் தசையாகவும் குருதியாகவும் வாய்க்கப் பெற்ற தமிழின் முழுஉருவம் பாவாணர்.''

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்



''பல்லாயிரம் மாணவர் என்னிடம் பயின்றனர். இறுதியில் தமிழ்ப் பற்றும் தமிழாசியன் மாட்டன்பும் உள்ளவனாக நீ ஒருவன்தான் தேறினாய்.''

- பாவாணர்

உள்ளே...

வாழ்க்கைச் சுவடுகள் 8
தமிழியக்கம்
- முனைவர் இரா.இளவரசு 11
கரும்பு தின்னக் கைக்கூலி
- பாவாணர் 15
வெள்ளச் சேத விளரிப் பதிகம்
- பாவாணர் 18
தமிழன் உரிமை வேட்கை
- பாவாணர் 19
பாவாணர் கொள்கைகள் பாரெங்கும் பரவ...
- முனைவர் மு.தமிழ்க்குடிமகன் 25
தன்னொளி ஞாயிறு
- முனைவர் கு.திருமாறன் 27
பாவாணர் போற்றிய பெருமக்கள் 34
தக்கார்
- புலவர் கி.த.பச்சையப்பன் 35
கழக வ.சு.வும் மொழிஞாயிறும்
- முனைவர் இரா.முத்துக்குமாரசாமி 37
பாவாணர் என்பவர் யார்? 40
பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வின் பயன்
- புலவர் இரா.இளங்குமரன் 41
மண்ணில் விண்
- முனைவர் இ.சுந்தரமூர்த்தி 45
தேவநேயர் திறன்
- முதுகண்ணன் 48
வேர்ச்சொல் ஆய்வில் பாவாணரும் முந்தையரும்
- பேரா.கு.பூங்காவனம் 49
அரிதரிதே இனியொரு பாவாணர் தோன்றல்
- பொறிஞர் கு.ம.சுப்பிரமணியன் 54
தனித்தமிழ் இயக்கத் தொண்டர்களே
- மா.செ.தமிழ்மணி 55
மதுரையும் பாவாணரும்
- அருளாளன் 57
பாவாணரின் ஆய்வுநெறி அழகு
- செந்தலை ந.கவுதமன் 61
தமிழ்ப் பேராயம்
- முனைவர் அரசக்கண்ணன் 65
பாவாணரின் இலக்கிய வரலாறு
- முனைவர் கா.கோ.வேங்கடராமன் 73
மாமருந்து பாவாணர்
- புலவர் சி.சம்பூர்ணம் சேந்தமாங்குடியார் 77
வரலாறு காணாத வரலாறு
- தமிழியக்கன் 78
பாவாணர் காட்டும் தமிழர் திருமண முறை
- தமிழ்நம்பி 79
திருக்குறள் தமிழ் மரபுரையின் சிறப்பியல்புகள்
- முனைவர் ந.சக்திவேலு 81
தமிழாய்வு ஏவுகணை எய்தி வென்றாய்!
- புலவர் ஆ.மாடசாமி 86
மறைமலை அடிகளாரும் பாவாணரும்
- பா.இளங்கோ 87
வியன்புகழ் கொண்ட பாவாணா!
- முனைவர் மு.இளங்கோவன் 90
உலக மொழிகளும் தமிழும்
- முனைவர் ச.அகத்தியலிங்கம் 91
பாவாணர்
- பாவலர் இலக்கியன் 98
பாவாணரின் 'இசைத்தமிழ்க் கலம்பகம்'
- முனைவர் இரா.திருமுருகன் 99
பூந்தமிழின் உயிர்மூச்சே தேவநேயன்
- புலவர் பா.வென்னரசு 104
குமரிக்கண்ட அகழ்வாய்வு
- பொறிஞர் குமரிமைந்தன் 105
தனித்தமிழைப் போற்றிடுக
- அருள்.செல்லத்துரை 117
நீங்காத அணியாம்
- பாவலர் சி.இறையரசன் 118
தமிழ் திரவிடத்தின் தாய்
- முனைவர் இரா.கு.ஆல்துரை 119
ஒரேர் உழவர் அவர்
- பாவலர் ம.முத்தரசு 124
பாவாணர் இசையும் - படைப்பும்
- முனைவர் இ.அங்கயற்கண்ணி 125
புனைகதையும் தனித்தமிழும்
- புலவர் தி.நா.அறிவுஒளி 129
பாவாணர் மதவியற் கொள்கை
- பாவலர் பரணன் 131
பாவாணர் கதைகள்
- பாவலர் முல்லைவாணன் 135
திராவிட இயக்கமும் பாவாணரும்
- பொன்.மாறன் 137
பாவாணரின் மாந்தநேயம்
- தா.அன்புவாணன் வெற்றிச்செல்வி 139
தமிழ் வாழ்வர்
- புலவர் குறளன்பன் 143
மொழிமூலப் பண்டாரம் நம் பாவாணர்
- பாவரிமா இளஞ்சித்திரன் 144
பாவாணருடன் நான்
- கல்லை பெருஞ்சித்திரன் 145
செவ்வியல் மொழி தமிழ்
- முனைவர் மலையமான் 147
ஆய்வுலகச் செம்பரிதி
- முனைவர் கடலூர் மணிமாறன் 150
புதுவையில் தமிழியக்கம்
- முனைவர் அ.அறிவுமதி 151
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - பாவாணர் 154
பாவாணரின் மாணவர் இலக்கணக் கொடை
- புலவர் பி.தமிழகன் 155
தமிழ் ஞாயிறு
- புலவர் வெற்றியழகன் 157
ஒண்ட வந்த பிடாரி - பாவாணர் 158
குமரிக்கண்டத் தமிழரின் வானியல் மேதைமை
- வெள்ளுவன் 159

வாழ்க்கைச் சுவடுகள்

தி.பி 1933 (1902)

- திருநெல்வேலி மாவட்டச் சங்கரநயினார் கோவிலில் திரு. ஞானமுத்தர் - பரிபூரணம் அம்மையார் இணையரின் பத்தாம் மகவாகவும் நாலாம் மகனாகவும் பெப்பிரவரி மாதம் 7 ஆம் பக்கல் வெள்ளிக்கிழமை தேவநேசன் பிறத்தல்.

தி.பி. 1938 (1907)

- தம் ஐந்தாம் அகவைக்குள் பெற்றோரை இழந்த தேவநேசன் ஆம்பூரிலுள்ள மூத்த தமக்கையாரிடம் வளர்தல்
- ஆம்பூர் மிசெளரி நல்லஞ்சல் உலுத்தரன் விடையூழிய நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்புவரை பயில்தல்
- 'யங்கு' துரைமகனாரின் கடனுதவி பெற்றுப் பாளையங்கோட்டைத் திருச்சவை விடையூழியக் கழக (C.M.S.) உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் படிவம் (பதினோராம் வகுப்பு) வரை பயில்தல். அதன்பின் ஆசிரியப் பயிற்சி பெறுதல்.

தி.பி. 1952 (1921)

- கோழபுரம் (சீயோன் மலை) விடையூழியக் கழகப் பள்ளியில் ஆசிரியராகப் பணியிற் சேர்தல்.

தி.பி. 1953 (1922)

- பாளையங்கோட்டைத் திருச்சவை விடையூழியக் கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் மாசிலாமணியாரின் சான்றிதழ் பெற்று ஆம்பூரில் தாம் பயின்ற பள்ளியிலேயே ஆசிரியராகப் பணியாற்றல். மாசிலாமணியார் தம் சான்றிதழில் தேவநேசனைத் தேவநேசக் கவிவாணன் என்று குறித்திருந்தார். அப்பெயரே பின்னாளில் தேவநேயப் பாவாணனாக மாறியது.

தி.பி. 1955 (1924)

- மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் தேர்வைப் பிரவேசம், பாலபாண்டிதம் தேர்வுகளை எழுதாமல் ஒரே தடவையில் எழுதித் தனி ஒருவராக வெற்றிபெறல்.

- சென்னை திருவல்லிக்கேணிக் கெல்லற்று உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றல். (ஓராண்டு)

தி.பி. 1956 (1925)

- கிறித்தவ இலக்கியக் கழகம் (C.L.S.) வழி 'சிறுவர் பாடல் திரட்டு' நூல் வெளியிடல்.
- சென்னை தாம்பரம் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றல் (மூனறு ஆண்டுகள்)

- எசுத்தர் பொன்னம்மாளை வாழ்க்கைத் துணைவியாய் ஏற்றல்.

தி.பி. 1957 (1926)

- திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் புலவர் தேர்வு எழுதி வெற்றி பெறல்.

தி.பி. 1959 (1928)

- எசுத்தர் அம்மையார் இயற்கை எய்தவே 'மணவாளதாசன்' என்னும் கைக்குழந்தை யைத் தம் தமையனார்க்குத் தத்துக் கொடுத்தல்.
- மன்னார்குடிப் பின்லேக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றல் (நான்கு ஆண்டுகள்)

தி.பி. 1961 (1930)

தம் தமக்கை மகளார் நேசமணி அம்மையாரை வாழ்க்கைத் துணையாக ஏற்றல்.

தி.பி. 1962 (1931)

''செந்தமிழ்ச் செல்வி'' இதழில் பாவாணரின் முதற் கட்டுரை ''மொழியாராய்ச்சி'' வெளியாதல்.

தி.பி. 1963 (1932)

''கிறித்துவக் கீர்த்தனம்'' நூல் வெளியிடல்

தி.பி. 1965 (1934)

- சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''கீழைக் கலை இளவல்'' (B.O.L.) தேர்ச்சி பெறல்.
- ''இயற்றமிழ் இல்ககணம்'' நூல் கழக வெளி யீடாக மலர்தல்
- திருச்சிப் புத்தூர் ஈபர் மேற்காணியார் உயர் நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரிய ராகப் பணியாற்றல் (ஒன்பது ஆண்டுகள்)

தி.பி. 1967 (1936)

- 'கட்டுரைக் கசடறை'' நூல் வெளியிடல்.

தி.பி. 1968 (1937)

- ''கட்டுரை வரைவியல்'' கழக வெளியீடாக வெளிவருதல்.
- இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் பங்கு கொள்ளுதல் ''செந்தமிழ்க்காஞ்சி'' நூல் வெளி யிடுதல்.

தி.பி. 1971 (1940)

''ஒப்பியன் மொழிநூல்'' நூல் வெளியிடல்.

தி.பி. 1972 (1941)

''தமிழன் எப்படிக் கெட்டான்?'', 'தமிழர் சரித்திரச் சுருக்கம்'' முதலான சிறுநூல்கள் வெளியிடல்.

தி.பி. 1974 (1943)

- 'சுட்டு விளக்கம்' நூல் வெளியிடல்.
- சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றல் (ஓராண்டு)

தி.பி. 1975 (1944)

- ''திரவிடத்தாய்'' நூல் வெளியிடல். தொல் காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியத் திற்குக் குறிப்புரை வரைதல்.
- சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றல் (12 ஆண்டுகள்)

தி.பி. 1977 (1946)

- தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனா வரையத்திற்குக் குறிப்புரை வரைதல்.

தி.பி. 1980 (1949)

- ''சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'' நூல் கழக வெளியீடாக வருதல்.
- மறைமலையடிகளாரிடம் தம் தமிழ்ப் புலமைக்குச் சான்று பெறுதல்.

தி.பி. 1981 (1950)

- ''உயர்தரக் கட்டுரை இலக்கணம்'' (முதற் பாகம்) நூல் வெளிவரல் (கழக வெளியீடு)

தி.பி. 1982 (1951)

- ''உயர்தரக் கட்டுரை இலக்கணம்'' இரண்டாம் பாகம்'' நூல் வெளிவரல் (கழக வெளியீடு).

தி.பி. 1983 (1952)

- சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதுகலைப் பட்டம் (MA) பெறல்.
- ''பழந்தமிழாட்சி'' நூல் கழக வெளியீடாக வெளியிடுதல்.

தி.பி. 1984 (1953)

- ''முதற்றாய் மொழி'' நூல் கழக வெளியீடாக மலர்தல்.

தி.பி. 1985 (1954)

'தமிழ்நாட்டு விளையாட்டுகள்'' நூல் வெளியாதல் (கழக ளெியீடு)

தி.பி. 1987 (1956)

- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழித்துறை வாசகராகப் (Reader) பணியாற்றல் (ஐந்து ஆண்டுகள்)
- ''தமிழர் திருமணம்'' நூல் வெளியிடல்.

தி.பி. 1992 (1961)

- பர்.இரா.பி.சேதுவின் இடையீடுகளால் பாவாணரின் பணி தடைபட்டுப் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினின்று வெளியேறல்.

தி.பி. 1994 (1963)

- ஆருயிர்த் துணைவியார் நேசமணி அம்மையார் பெரும்பிறிதுறல்

தி.பி. 1997 (1966)

- "The Primary Classical Language of the World", ''இசைத்தமிழ்க் கலம்பகம்'', ''பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும்'' ஆகிய நூல்கள் வெளியிடல்.

தி.பி. 1998 (1967)

- மதுரைத் தமிழ் எழுத்தாளர் மன்றம் ''பாவாணர் மணிவிழா'' வைக் கொண்டாடிப் பொற்கிழி வழங்கல்.
- ''The Language problem of Tamilnad and its logical solution'' ''தமிழ் வரலாறு'', ''வட மொழி வரலாறு'' ஆகிய நூல்கள் வெளியிடல்.

தி.பி. 1999 (1968)

- திருச்சியில் 'உலகத் தமிழ்க் கழகம்' தொடங்குதல் (6.10.1968)
- 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?'', ''வண்ணனை மொமிநூலின் வமுவியல்'' ஆகிய நூல்கள் வெளியிடல்.

தி.பி. 2000 (1969)

- முகவை மாவட்டம் பறம்புக்குடியில் உ.த.க. முதல் மாநாடு நடைபெறல்.
- ''திருக்குறள் தமிழ் மரபுரை'' வெளியிடல், ''இசையரங்கு இன்னிசைக் கோவை'' ''தமிழ் கடன் கொண்டு தழைக்குமா'' என்ற குறுநூல்கள் வெளியிடல்.

தி.பி. 2002 (1971)

- மதுரையில் உ.த.க. இரண்டாம் மாநாடு நடைபெறல்.
- தென்மொழி, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்டம்'' அறிவித்தல்.

தி.பி. 2003 (1972)

- ''தமிழர் மதம்'', 'தமிழர் வரலாறு'' நூல்கள் வெளியிடல்.
- உ.த.க. சார்பில் தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கு தஞ்சையில் நடைபெறல்.

தி.பி. 2004 (1973)

- ''வேர்ச் சொற் கட்டுரைகள்'' நூல் கழக வெளியீடாக மலர்தல்.

தி.பி. 2005 (1974)

- தமிழ் நாட்டரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கத்தின் இயக்குநராகப் பணியாற்றல் (8.5.74)

தி.பி. 2009 (1978)

- ''மண்ணில் விண்'' நூல் வெளியிடல்

தி.பி. 2010 (1979)

- ''தமிழ் இலக்கிய வரலாறு'' நூல் வெளியிடல்

தி.பி. 2012 (1981)

- An epitome of the Lemurian Language and ramifications என்ற சுருக்க நூல் வெளியிடல்.
- மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு ''மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்'' என்ற தலைப்பில உரையாற்றல் (5.1.81)
- அன்று இரவே உடல்நலங் கெட்டு மருத்துவ மனையில் சேர்க்கப் பெறல்.
- 15.1.81 இரவு 12.30க்குப் பேரா இயற்கை எய்துதல்.

தி.பி. 2028 (1997)

- தமிழ் நாட்டரசால் பாவாணர் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பெறல்.

பாவாணர் மக்கள்

நச்சினார்க்கினிய நம்பி
சிலுவையை வென்ற செல்வராயன்
அருங்கலை வல்லான் அடியார்க்கு நல்லான்
மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி
மணி மன்ற வாணன்.

தமிழியக்கம்

முனைவர் இரா.இளவரசு,
பொதுச் செயலாளர்

தொல்காப்பியம் தொடங்கித் தொடரும் தமிழ்நூற் பரப்பில் பல இடங்களில் 'தமிழ்' என்னும் சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது. பல்வேறு பொருள்களில் அஃது ஆளப்பட்டுவருகின்றது எனினும் மொழியையும், மொழி பேசும் மக்களையும், மொழி வழங்கும் இடத்தையும், பண்பாட்டையும் குறித்து நிற்பது தனித்து நோக்கத்தக்கது. தமிழ்மொழி, தமிழர், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு ஆகிய அனைத்தையும் உணர்த்தும் இச்சொல் ஓர் இயக்காற்றல் வாய்ந்ததாக இலங்கு கின்றது. 'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' என்று மோசிகீரனைப் பாராட்டச் செய்தது. ''அருந்தமிழாற்றல் அறிந்திலர்'' என்று கனகவிசயர் தலையில் கல்லேற்றி யது. தமிழறிவும் தமிழ்மறமும் மதிப்புக்குரியவை என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

'தமிழியக்கம்' கண்ட பாவேந்தர் பாரதிதாசன்

''உடலியக்கும் நல்லுயிரே,
உயிரியக்கும் நுண்கலையே,
மக்கள் வாழ்வாம்,
கடலியக்கும் சுவைப்பாட்டே
கண்ணான செந்தமிழே,''

என்று தமிழ்மொழியின் இயக்காற்றலைப் பாடுவார். 'வெங்குருதிதனில் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்' என்றும் பேசுவார். ஆற்றல் வாய்ந்த தமிழ் ஓர் இயக்க மாகவே அவர்க்குத் தோன்றியது. 'தமிழியக்கம்' என்பது 'தமிழாகிய இயக்கம்', 'தமிழுக்காக இயக்கம்' எனப் பல நிலைகளில் பொருள்விரியத்தக்கது. இன்று தமிழ் சார்ந்த இயக்கங்கள் அனைத்தையும் சுட்டுகின்ற ஒரு தொடராக இது விளங்கு கின்றது. பழந்தமிழ் நூல்களின் அச்சீட்டைத் தழுவி எழுந்த 'தமிழ் மறுமலர்ச்சி இயக்கம்', இந்தித்திணிப்பை எதிர்த்தெழுந்த 'தமிழ்க்காப்பு இயக்கம்', 'தனித்தமிழ் இயக்கம்' முதலிய பல இயக்கங்களும் 'தமிழியக்கம்' என்னும் குறியீட்டோடு தொடர்புபடுத்திக் பேசப்படுகின்றன; எழுதப்படுகின்றன.

முதன்முதல், தெளிவாகத் திட்டமிடப்பட்ட நெறிமுறைகளைக் கொண்டு இயங்கும் ஓர் அமைப்பாக - இயக்கமாகத் 'தமிழியக்கம்' தொடங்கப்பட்டது 1972இல் தான்.

இவ்வியக்கங் கண்டவர்களில் பெரும்பாலோர் 1968இல் பாவாணரால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழ்க் கழகத்தில் முனைப்பாகப் பாடுபட்டவர்கள். இயக்கப்பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டவர்கள். 'தென்னிந்தியா முழுவதும் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தோற்றுவிக்கப் பெறல் வேண்டும்' என்பது பாவாணரின்

விருப்பம். 1968இல் உ.த.க. தோற்றுவிக்கப் பட்டபோது திருவனந்தபுரத்தில் ஆய்வு மேற்கொண்டிருந்த இரா. இளவரசுக்கு கேரள மாநில அமைப்பாளர் பொறுப்பு முன்னறிவித்த லின்றி வழங்கப்பட்டது. முகவை மாவட்டப் பொறுப்பை ஏற்றிருந்த மு.தமிழ்க்குடிமகன் பல கிளைக்கழகங்களை உருவாக்கி உ.த.க. வரலாற்றில் முன்னும் பின்னும் கண்டிராத எழுச்சி மாநாட்டைத் தக்க தோழர்களின் துணையுடன் நடத்திக்காட்டினார். தஞ்சை மாவட்டத்தில் கல்லூரி மாணவரிடமும் மற்றவரிடமும் இடையறாத தொடர்புகொண்டு மாவட்ட அமைப்பாளர் சி.அறிவுறுவோன் பல ஊர்களில் கிளைக்கழகங்களை உருவாக்கி னார்.

இவ்வாறு உ.த.க.வில் முனைப்பாகச் செயல்பட்டவர்கள், மேலிருந்து இயக்குபவர் களின் தவறான அணுகுமுறைகளாலும், ஒரு சார்பு வினைப்பாடுகளாலும் உ.த.க வளர்ச்சி முடங்கித் தேய்வுறுவதை வருத்தத்தோடு உணர்ந்தனர். உ.த.க. தலைவர் பாவாணரும் ''தஞ்சைச் சரபோசியரசர் கல்லூரித் துணைத் தமிழ்ப்பேராசிரியர் இளவரசு, க.மு., அவர்கள் உ.த.க. பொதுச்செயலாளராக அமர்த்தப் பெற்றுள்ளார். அவர் பணி வருகின்ற உ.த.க. ஆட்டை விழாவில் தொடங்கும்'' என்று அறிவித்தார் (முதன்மொழி நவம்பர் 1971). இயக்கவளர்ச்சி பற்றியும் 3ஆவது மாநாடு நடத்துவது பற்றியும் முடிவு செய்ய நெய்வேலி யில் உ.த.க. ஆட்சிக்குழுக்கூட்டம் 14.5.72இல் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 3ஆவது உ.த.க. மாநாட்டைச் சேலத்தில் நடத்துவதென்றும், கழகத்தை வளர்த்துச் செல்வதற்கான நடவடிக் கைகளை எடுப்பதென்றும், பொதுச்செயலாள ராகத் தமிழ்க்குடிமகன் பொறுப்பேற்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் முடிவுகளைச் செயல்படுத்த முடியாத வளர்ச்சி சூழ்ச்சி வல்லா ரால் முட்டுக்கட்டை இடப்பெற்றது. கழகத்தை மேலெடுத்துச் செல்ல முடியாத நிலை!

இந்த நிலை ஒருபுறம் இருக்க, உ.த.க. வின் 'மொழிக்கொள்கை மட்டுமே' என்னும் நிலைப்பாடு பல கிளைகளில் உறுப்பினர்களின் வினவுதலுக்கு உரியதாயிற்று. உறுப்பினர்களின் கருத்துகளுக்கு வடிவம்தரும் வகையில் 12.3.72 அன்று இரா. இளவரசு தலைமையில் நடந்த தஞ்சை மாவட்ட உ.த.க.வின் சீரமைப்புக் கூட்டம் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறை வேற்றியது.

1. தமிழக அளவில் பொதுவுடைமை பேசும் செயற்படுத்தும் இயக்கமாக உ.த.க. மாற வேண்டும்.
2. முற்றிலும் பகுத்தறிவு இயக்கமாக உ.த.க. செயல்பட வேண்டும்.
3. விரைவில் தஞ்சை மாவட்டத்தில் உ.த.க. மாநாடு நடத்த வேண்டும்.

உலகத் தமிழ்க் கழக மாதிகையான 'முதன்மொழி' இதழில் (தி.பி. 2003 மீனம் - மேழம் 1972) மேற்குறித்த கூட்ட நடப்புகள் இடம்பெற்றுள்ளன. தூய தமிழை அனைத்து நிலைகளிலும் கடைப்பிடித்து வளர்த்தெடுப்ப தோடு பொதுவுடைமைக் கொள்கை, பகுத்தறிவுக்கொள்கை ஆகிய இரண்டையும் உ.த.க.வின் கொள்கைகளாக இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதை முதல் இரண்டு தீர்மானங்களும் வலியுறுத்துகின்றன. இத்தீர் மானங்கள் செயல்வடிவம் பெறமுடியா நிலை!

இந்தச் சூழ்நிலையில் எதிர்கால வினைப் பாடுகளைச் பற்றி முடிவு செய்வதற்காக ஒத்த கருத்துடைய நண்பர்கள் திருச்சியிலும் மதுரை யிலும் பிற நகரங்களிலும் கூடிப் புதிய இயக்கம் காண்பதென முடிவு செய்தனர். அவ்வாறு பிறப்பெடுத்ததே 'தமிழியக்கம்' என்னும் அமைப்பு.

தமிழியக்கத்தின் நோக்கங்களாக மூன்றும் துணை நோக்கமாக ஒன்றும் அமைந்தன. அவை:

''1. துறைதோறும் துறைதோறும் தமிழின் தூய்மையைப் பேணல்; அனைத்து நிலைகளி லும் வளமிக்க, புத்துலக அறிவியன் மொழியாக வளர்த்தல்;

2. மூட நம்பிக்கையை ஒழித்து, முற்போக்குக் குமுகாயத்தை உருவாக்குதல்;

3. சுரண்டலற்ற பொருளியல் சமநிலை காணல்; அதன் வாயிலாக முரண்பாடற்ற குமுகாயத்தை நிறுவுதல்;

துணைநோக்கம்

வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் மொழி, வாழ்வு, உரிமைகளில் அவ்வப் பொழுது எழும் சிக்கல்களை அக்கறையோடு கண்டுணர்ந்து தீர்வு காணல்''

இயக்கத்திற்கென மேலே கறுப்பும் நடுவில் சிவப்பும் கீழே பச்சையும் கொண்ட மூவண்ணக்கொடி உருவாக்கப்பட்டது. உலக உருண்டையினூடாக மூன்று அம்புகள் - இயக்கத்தின் மூன்று கொள்கைகள் - பாய்வது போன்ற அமைப்பில் இயக்கச் சின்னமும் உருவாக்கப் பெற்றது.

இவ்வாறு உருவமைக்கப்பட்ட தமிழியக் கத்தின் தொடக்கவிழா தி.பி. 2003 கன்னி 22 (8.10.72) ஞாயிறு அன்று தஞ்சை இராமநாதன் மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. கொடி யேந்திய மிதிவண்டி அணிவகுப்பு நிகழ்ந்தது. பின்னர் புலவர் சேந்தமாங்குடியார் இயக்கக் கொடியை ஏற்றிவைத்தார். பேரா.இரா. இளவரசு தலைமையில் பேராசிரியர்கள் சி. இலக்குவனார். ம.இலெ.தங்கப்பா, மு. தமிழ்க் குடிமகன், புலவர் வி.பொ. பழனிவேலனார், அ.இறையன், இரா. நிலவழகன், செல்வி கோ. சாந்தி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

பேரா. பா. வளனரசு தலைமையில் பட்டி மன்றமும் பெங்களூர் செல்வி குயிலி - திரு.பத்மி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

தொடக்கவிழாச் செய்திகள் தமிழ், ஆங்கில நாளேடுகளில் வெளிவந்தன. அவற்றுள் 'தினமலர்' இதழிலும் 'இந்தியன் எக்சுபிரசு' இதழிலும் வெளிவந்தவை :

தஞ்சையில் தமிழ் இயக்கத் தொடக்க விழா

தஞ்சாவூர் அக்.10. தமிழியக்கத் தொடக்க விழா திரு. இரா. இளவரசு தலைமையில் இங்கு நடைபெற்றது. புலவர் திரு.சேந்தமாங்குடியார் கொடியேற்றினார். இயக்கத்தின் அவசியம் குறித்து திரு. இலக்குவனார், திரு. தமிழ்க் குடிமகன் மற்றும் பலர் பேசினர். பட்டிமன்றம் சிறப்பாக நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுரையில் தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள இவ்வியக்கத்தின் தலைவராக பேராசிரியர் திரு. இரா. இளவரசும் பொதுச் செயலாளராகப் பேராசிரியர் திரு. தமிழ்க்குடி மகனும் பொறுப்பேற்று உள்ளனர்.

இவ்வியக்கம் கறுப்பு, சிவப்பு,பச்சை, மூவண்ணங்கொண்ட தனிக்கொடியை ஏற்றி யுள்ளது. அடிமை நிலைமை சுட்டிக் காட்டக் கறுப்பு வண்ணமும், உரிமை உணர்வைத் தெரிவிக்கும் வகையில் சிவப்பு வண்ணமும், உரிமையின் பயனாகிய செழுமையைச் சித்திரிக்கும் முறையில் பச்சை வண்ணமும் கொடியில் இடம் பெற்றுள்ளன. இவ்வியக்கம் கட்சிக் கலப்பற்ற நிலையில் தமிழுக்கும், தமிழினத்துக்கும் தொண்டாற்றும்.

தினமலர். 11.10.72

NEW ORGANISATION FOR TAMILS
(Express News Service)

A New organisation, called the "Tamil Iyakkam" was formed here on sunday, with the objective of serving the intereste of Tamils without any distinction of caste, creed, or rank and of establishing a casteless socialistic pattern of society.

The organisation will translate **"Scientific"** words in **"Chaste Tamil"**

The organisation will have its headquarters in Madurai. prof. THIRU. Ira. Ilavarasu, will be its president and prof, Mu. Thamizhkudimaghan its General Secretary.

The General Secretary told newsmen on sunday that the organisation would have a separate tricolour flag-black, red and green.

The movement would ask all firms to have name boards in "pure Tamil" and would

protest against AIR programmes which ``went against rationalism".

Its sympathisers would picket the Sri Lanka High Commissioner's office at Madras in support of the Tamils in Lanka.

- The Indian Express - 10.10.72.

தமிழியக்கக் கிளைகள் தஞ்சை, மதுரை, கோவை, தென்னார்க்காடு, திருச்சி, புதுக் கோட்டை, சென்னை முதலிய தமிழகத்தின் பல இடங்களிலும் புதுச்சேரியிலும் தொடங்கப் பெற்றன. கல்லூரி மாணவர்களிடையும் கிளைகள் தோன்றின. அவ்வாறு உருவான பல மாணவர் கிளைகளில் திருவையாறு அரசர் கல்லூரி மாணவர் கிளை மிகச் சிறப்பாகச் செயல்பட்டது. தி.பி. 2004 (1973) பாவாணரின் 72ஆம் பிறந்தநாளை முன்னிட்டுப் 'பாவாணர் என்பவர் யார்?' என்னும் இரண்டு பக்கத் துண்டறிக்கையை வெளியிட்டது. பாவாணரை அழைத்துப் பெருமை கொண்டது. தெலுங்குக் கீர்த்தனத் தியாகராசர்க்கு ஆண்டுதோறும் அங்கு இசைவிழா நடந்து வருகிறது. தமிழுக்கும் அங்கே இசைவிழா எடுக்கவேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்த மாணவர் களும் மற்றவர்களும் அரசர் கல்லூரிப் பகுதியில் பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப.சுந்தரேச னாரைக் கொண்டு தி.பி. 2004, சுறவம் 3 (16.1.73) அன்று இசைவிழா நடத்தினர். வேய்ங்குழ லிசை, மெல்லிசை, வாய்ப்பாட்டு, பெரு வங்கிய இசை, தவில் இசை முதலியனவும் இடம் பெற்றன. தமிழியக்கத்தாரால் தொடங்கப் பெற்ற தமிழிசை விழா பின்னர் ஊர்ப்பெரு மக்களால் விரிந்த அளவில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

ஈழத்தமிழர் நலனைப் பாதுகாப்பதில் நாட்டின் பல பகுதிகளில் உள்ள தமிழியக்கத்தார் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர். 'தமிழக ஈழ நட்புறவுக்கழகம்' திரு. ந.அரணமுறுவல் முதலிய தமிழியக்கத் தோழர்களால் தொடங்கப் பெற்று நூல்கள், அறிக்கைகள் வெளியீடு, பேரணி, போராட்டம் நடத்துதல், ஈழ நிலையை அங்கிருந்து வருபவர்களைக் கொண்டு தொடர்ந்து மக்களுககு விளக்கிச் சொல்லுதல் முதலிய பல பணிகளைச் செய்தது. தமிழியக்கம் வேறு சில அமைப்புகளுடன் இணைந்து சென்னையில் 21.06.1981 அன்று ஈழத்தமிழர் களை ஆதரித்து, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துத் தியாகராயநகர் பனகல் பூங்காவிலிருந்து ஆளுநர் மாளிகைவரை பேரணி நடத்தி இந்திய அரசின் முன் கோரிக்கை களை வைத்த அறிக்கையைத் தமிழக ஆளுநர் சாதிக் அலியிடம் நேரில் அளித்தது.

தமிழ்வழிக் கல்வி இயக்கத்தில் தனித்தும் பிற அமைப்புகளோடு இணைந்தும் தமிழி யக்கம் மேற்கொண்ட செயல்கள் பல. குறிப்பாகத் தஞ்சையில் பேரணியோடு கூடிய மாநாடு நடத்தியதும் மாநாட்டு நிகழ்வுகளையும் தீர்மானங்களையும் சுவடியாக வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கன. தமிழுக்கும் பகுத்தறிவிற்கும் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் வானொலிக்கு எதிர்ப்புக்குரல் கொடுத்தமை, ஆனந்தவிகடன் முதலிய இதழ்களின் ஆங்கில மோகத்தைக் கண்டித்து அவர்களுக்கு எழுதி யமை, அனைத்திந்திய அளவில் தேசிய இனங் கள் பற்றி நடந்த மாநாட்டுக் கருத்தரங்கில் (1981) 'தேசிய இனச்சிக்கல் - வரலாறும் படிப்பினை யும்' என்னும் தலைப்பில் கட்டுரை அளித்தமை முதலிய பல நிகழ்வுகள் மனங்கொள்ளத் தக்கன.

தமிழியக்கத்தைச் சார்ந்தவர்கள் ஆங் காங்கே தாங்களும் பிறரும் மேற்கொள்கின்ற தமிழ்ச்சார்பு நடவடிக்கைகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

தமிழியக்கம் பற்றிய பருந்துப் பார்வை நினைவுகள் ஓரளவே இங்குப் பதிவு செய்யப் பட்டுள்ளன. அதன் வரலாற்றைச் செப்பமாகவும் முழுமையாகவும் எழுதுவதற்கு அறிவு, கைகாட்டி (தமிழ்க்குடிமகன்) மாணாக்கன் (வி.பொ.பழனிவேலனார்) மீட்போலை (பெங்களூர்) தமிழியக்கம் (1980 -81) ஆகிய இயக்கச்சார்பு இதழ்கள் பெரிதும் பயன்படுவன. அவற்றின் துணைகொண்டு செறிவான வரலாறு இனி எழுதப்பெறும்.

பாவாணர் பேசுகிறார்

கரும்பு தின்னக் கைக்கூலி!

1980ஆம் ஆண்டு முனைவர் இரா.இளவரசு அவர்களைச் சிறப்பாசிரியராகவும் ந.அரணமுறுவல் அவர்களை ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்த 'தமிழியக்கம்' இதழுக்குப் பாவாணர் அளித்த செவ்வி...

நற்றமிழ்ப் பற்று

மறைமலையடிகள் தொடர்புக்கு முன்பே தமிழ்ப்பற்று இயல்பாகத் தோன்றியது. உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருக்கும் போதே சேக்சுப்பியரின் முப்பத்தேழு நாடகங்களையும் படித்துவிட்டு ஆக்சுபோர்டில் ஆங்கிலப் பேராசிரியராகப் போகவேண்டும் என்று விரும்பினேன். முதலில் பூதவியல், உடலியல், பயிரியல் முதலியன படித்தேன். சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவற்றில் பயிற்சி பெற்றேன். பாளையங்கோட்டை, திருச்சபை விடையூழியர் கழக உயர்நிலைப்பள்ளியில் 1918 - 20ஆம் ஆண்டுகளில் வரலாற்றையும் தமிழையும் சிறப்புப் பாடங்களாகப் படித்தேன். அப்போது எனக்குத் தமிழில் பற்று உண்டாகி விட்டது.

'பாவாணன்' ஆனேன்

என்னுடைய அத்தான் ஒருவர் ஆம்பூரில் ஆசிரியராக இருந்தார். அவர் அவ்வூர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரிடம் எனக்கு வேலை கேட்டார். தகுதியுள்ள புலவர் யாரேனும் சான்றிதழ் கொடுத்தால் வேலை தருவதாகத் தலைமை ஆசிரியர் சொன்னார். பண்டித மாசிலாமணி (நாடார்) என்பவர் எனக்கு முன்பே தெரிந்தவர். பாளையங்கோட்டை, சாராதக்கர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். நான் மாணவனாக இருக்கும்போதே பாட்டுக்கட்டிக் கொண்டிருப்பேன். அவர் அடிக்கடி திருத்திக் கொடுப்பார். அவரிடம் பரிந்துரை கேட்டேன். அவர் ஒரு நேர்த்தியான தகுதிச்சான்று கொடுத்தார். உடனே எனக்கு வேலை கிடைத்தது. அந்தத் தகுதிச்சான்றில் என்னைக் கவிவாணர் என்று பண்டித மாசிலாமணி குறித்திருந்தார். நான் அதைப் பயன்படுத்தி என் இளமைச் செருக்கில் என் பெயரோடு 'கவிவாணன்' என இணைத்துக் கொண்டேன். பல்லாண்டின் பின் தனித்தமிழுணர்ச்சி தோன்றிய பின்னர் அது 'பாவாணன்' என மாற்றப்பட்டது.

ஆசிரியனாகிப் பட்டம் பெற்றேன்

ஆம்பூரில் துணைத் தமிழாசிரியராக இருந்துகொண்டே மதுரைப் பண்டிதர் தேர்வுக்குப் படித்துத் தேறினேன். அந்தக் காலத்தில் பத்து ஆண்டுகள் ஆங்கிலம் பேசவும் எழுதவும் கேட்கவும் கூடாது என்று பூட்கை கொண்டேன். அது நானே என் தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொண்டது போலாயிற்று. பிறகுதான் என் தவற்றை உணர்ந்தேன். அப்புறம் 'பி.ஓ.எல்.' தேர்வு எழுதித் தேறினேன். அப்படித்

தமிழில் அமிழ்ந்ததால் தான் தமிழ் அறிவும் வேர்ச்சொல் ஆய்வில் ஈடுபாடும் ஏற்பட்டன.

பல பள்ளிகளில்...

ஆம்பூரில் இரண்டு ஆண்டுகள் இருந்து விட்டுச் சென்னை கெல்லட்டு உயர்நிலைப் பள்ளியில் ஓர் ஆண்டும், பின்னர் அப்போது பாரிமுனையில் இருந்த கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் மூவாண்டும் பணி யாற்றினேன். பிறகு மன்னார்குடி 'பின்லே பள்ளி'க்குப் போனேன். மன்னார்குடிப் பள்ளி யில் முதலில் நாற்பத்தைந்து உருபா சம்பளம். பின்னர் பள்ளி வருமானம் குறைந்ததால் என் சம்பளம் நாற்பதாகக் குறைக்கப்பட்டது. அதன் பின் திருச்சி கீபர் மேற்காணியார் உயர்நிலைப் பள்ளியில் அறுபது உருபா சம்பளத்தில் அமர்த்தப்பட்டேன். அப்போது போர் நடந்த தால் பொருள் விலை ஏறிவிட்டது. அதனால் சென்னை முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளயில் எழுபத்தைந்து உருபா சம்பளத்தில் தலைமைத் தமிழாசிரியனாகப் பதவியேற்றேன்.

கல்லூரிப் பணியில்...

சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்தரக் கல்லூரி ஆனது. அக்கல்லூரி முதல்வர் ஏ.இராம சாமி(கவுண்டர்) அவர்கள் சிறந்த தமிழ்ப் பற்றாளரும் அறிஞருமாவார். அக் கல்லூரியில் நான் வேண்டுகோள் கொடுத்து ஒரு கிழமை யிலேயே எனக்குத் தலைமைத் தமிழாசிரியனாக அமர்த்தோலை வந்துவிட்டது. அந்தக் காலத்தில் முதல்வருக்கே சம்பளம் நூற்றைம்பது உருபா தான். ஆங்கில ஆசிரியருக்குச் சம்பளம் உருபா நூறு. மொழியாசிரியருக்கு (தமிழ், வடமொழி...) அறுபது உருபா. போர்க் காலப்படி பதினெட்டு உருபாவோடு சேர்த்து எழுபத்தெட்டு உருபா தான் சம்பளம். ஆறாண்டுக்குப் பின்னரே மொழி யாசிரியர்க்கும் பிற பாட ஆசிரியர்க்குப் போல் சம்பளம் நூறு உருவாவாக உயர்ந்தது.

முதல்வர் இராமசாமி (கவுண்டர்) காலத்திற்குப்பின் இராமசாமி (முதலியார்) என்பவர் நகராட்சித் தலைவராக ஆனார். இவரை நோக்கி அற்றை நாட் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏ.இலட்சு மணசாமி அவர்கள் 'உங்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏன் இல்லை' என்று ஒரு முறை கேட்டார். நகராட்சித் தலைவர் 'அதற்கு என்ன செய்யவேண்டும் என்றார். 'சிறப்புத் தமிழ்வகுப்பு தொடங்குங்கள். தமிழ்ப் பேராசிரியர் பதவி தோற்றுவிக்கலாம்' என்று துணைவேந்தர் சொன்னதால் இருபது மாணவர் களைச் சேர்த்துச் சிறப்புத் தமிழ் வகுப்பைத் தொடங்கினோம். நான் இருநூறு உருபா சம்பளத்தில் பேராசிரியராக அமர்த்தப்பட்டேன். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். அங்கே எனக்கு நல்ல பணி. ஆனால் நம்மவர்களே அதைக் கெடுத்துவிட்டார்கள். நான் விலக வேண்டியதாயிற்று.

மறைமலையடிகளோடு தொடர்பு

பாரிமுனையிலிருந்த கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் நான் பணியாற்றிய போது அண்மையில் இலிங்கிச் செட்டித் தெருவிலிருந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு நாள்தோறும் நண்பகல் போவேன். பதிப்பகத்தாரும் என் வரவை எதிர்பார்ப்பார்கள். அந்தத் தொடர்பால்தான் நெல்லைப் புலவர் தேர்வு எழுதித் தேறினேன். செந்தமிழ்ச் செல்விக்கு 'இலக்கண வழுக்கள்' முதலிய கட்டுரைகள் எழுதிவந்தேன். நெல்லையப்ப (பிள்ளை), சுப்பையா (பிள்ளை) ஆகியோர் என்னை மிகவும் பாராட்டினார்கள். முன்பே எனக்குத் தனித் தமிழுணர்ச்சி இருந்ததால் மறைமலையடிகளோடு தொடர்பு கொள்ள நேர்ந்தது. அவரிடத்திலும் அடிக்கடி போனேன். ஆனால் முதன்முறை அவரிடம் பரிந்துரைக்குப் போனது சென்னைப் பல்கலைக்கழகத்தில் வெங்கடராசுலு (ரெட்டியார்) பதவி வெறுமை யான போதுதான். அந்தப் பரிந்துரைக்காக ஒருநாள் காலைப் பொழுதில் மறைமலையடி களிடம் சென்றேன். அடிகளார் "எல்லோருக்கும் தருவதுபோல் உங்களுக்குத் தரக் கூடாது. சிறப்பாகத் தரவேண்டும். எண்ணி எழுதுவேன். இங்கேயே இருங்கள் என்றார். பகல் அவருடன் உணவருந்திவிட்டுக் காத்திருந்தேன். மாலையில் மிக நேர்த்தியான பரிந்துரை மடலொன்று எழுதிக் கொடுத்தார்.

'ஒப்பியன் மொழிநூல்' தான் என் னுடைய முதல்நூல். 1938இல், நான் திருச்சியில்

பணியாற்றியபோதுதான் அதை எழுதினேன். அப்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இந்தி எதிர்ப்பாளர்கள் வகுப்பு வேற்றுமைக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறைப் புகுந்தார்கள். அப்போது அவர்களுக்கு வழக்கு மன்றத்தில் தற்காப்புக் கருவியாக இருக்குமாறு இது எழுதப்பட்டது. திருச்சியில் பணியாற்றிய போதே 'திராவிடத்தாய்', 'கட்டுரை கசடற' ஆகிய நூல்களும் வெளியாயின. 'கட்டுரை கசடற' என்னும் நூலே பின்னர் 'கட்டுரை வரைவியல்' எனக் கழகத்தாரால் வெளியிடப் பட்டது. 'சுட்டு விளக்கம்' 'முதற்றாய் மொழி' ஆகிய நூல்கள் சேலத்திலிருக்கும்போது வெளி யாயின.

அகரமுதலிப் பணி

அகரமுதலிப் பணி மாபெரும் பணி. பல ஆண்டுகள் செய்யவேண்டியது. பல இலக்க உருபா செலவாகும்.

இப்போதுள்ள அலுவலகமோ மழை நாளில் ஒழுகுகின்றது. வேறு காப்பான இடம் தேவை.

தேவையான நூல்களை வாங்கப் பணம் இல்லை. என் சொந்த நூலகத்தைக் கொண்டு தான் பணி நடந்துவருகிறது. சம்பளத்தில் பாதிப் பணம் பொத்தகம் வாங்கவே செலவாகிறது.

பலரிருந்து செய்தாக வேண்டிய பணி இது. இப்போது நான் மட்டும் செய்கின்றேன். மதிவாணன் ஒருவர்தான் துணையாளர். வேறு சிலரையும் பணியமர்த்தம் செய்யவேண்டும். உடனடியாக உதவித்தமிழ்ச் சொற்றொகுப்பாளர் ஒருவர் அமர்த்தப்பெறவேண்டும். அவர் சிறந்த இலக்கணப் புலமையும் ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனும் ஒருங்கே அமைந்தவராக இருத்தல் வேண்டும். மதுரை முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் புலவர் இரா.இளங் குமரன் இப் பதவிக்குத் தகுதியானவர். அவரைத் துணைப் பேராசிரியர் சம்பளத்தில் அமர்த்தி னால் வருவார். மேலும் பதிப்பாண்மை எழுத்துறவாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும். அப்பதவிக்கு ஈரோடு வாசவி கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் சதா சிவம் பரிந்துரைக்கப்பட்டு அரசிற்கு வேண்டு கோள் விடுத்துள்ளார். இன்னும் அமர்த்தமாக வில்லை.

தொலைபேசி, இன்னியங்கி போன்ற ஏந்துகள் இருப்பின் பணியை எளிதாகவும் விரைவாகவும் செம்மையாகவும் செய்ய இயலும்.

ஆனாலும் எனக்கு இது ஓர் இன்ப வேலை. ஆசிரியராக இருந்தபோது இதைத் திருட்டுத்தனமாகச் செய்துவந்தேன். இப்போது கரும்பு தின்னக் கைக்கூலி! இது எனக்கு இன்ப வேலையாதலால் ஏழுநாளும் பகல் முழுதும் வேலை செய்து வருகிறேன்.

- 15.1.1980

ஆரியர் என்னும் பெயர்

ஆரியன் என்ற பெயர் தோன்றியது இந்திய நிலத்திலேயே. ஐரோப்பியரை ஆரியர் என்றது மொழியினம் பற்றியே.

ஆரி = மேன்மை. ஆரியன் = மேலோன். இச்சொல்லையே ஆரியர் தங்கட்கு இட்டுக்கொண்டனர். இந்திய வரலாற்று நூலில், ஆரியர் என்பது பூசகரோடு கூடிய ஆரிய ஆயர் கூட்டத்தையே குறிக்குமேனும், தமிழாரியப் போராட்டத்தில் ஆரியர் என்பது, ஆரியப் பூசாரியரையே என்பதை அறிதல் வேண்டும்.

ஐரோப்பா சென்று ஆரியராக மாறிய பிராகிருத திராவிடர், முதற்கண் காண்டிநேவியம் சென்று தங்கினதால், அதையடுத்த தியூத்தானிய மொழி தமிழுக்குச் சற்று நெருங்கியதாகவும், அதற்குத் தெற்கிலுள்ள இலத்தீனம் அதினுஞ் சற்று விலகியதாகவும், அதற்குத் தென்கிழக்கிலுள்ள கிரேக்கம் மிக விலகினதாகவும், இந்தியா வந்த ஆரியம் மிக மிக விலகினதாகவும் உள்ளன.

- பாவாணர்

வெள்ளக்கேடு விளிம்ப பதிகம்

பாவாணர் பாடுகிறார்

எத்தனை வெள்ள மோநாம் இதுவரை கதையிற் கேட்டோம்
இத்தனை கொடுமை யாக எவருமே கண்ட தில்லை
அத்தனார் கோயி லுள்ளும் அனைவரும் நசுங்கிச் சாகப்
பித்தமா வெறியின் வேகம் பிடித்தது காற்றுப் பூதம்

வெள்ளமென் றறிவிப் பின்றி வீட்டினுள் உறங்கும் வேளை
கொள்ளையர் வருதல் போலக் கூடிய இரண்டு பூதம்
பொள்ளெனக் கேடு செய்யப் பொடித்தன பணிச்சா லைகள்
நள்ளிர வன்றே நாகை நத்தப்பா ழாயிற் றந்தோ

கண்ணினுக் கெட்டு மட்டும் கண்டது வெள்ளக் காடு
மண்ணியல் ஊர்தி யொன்றும் மற்றவூர் சென்ற தில்லை
உண்ணவோர் உணவு மில்லை உரைக்கவோர் வழியும் இல்லை
விண்ணவர் உதவி போலூண் வீழ்ந்தது மூன்றாம் நாளே

தமிழ்நிலந் தலையாஞ் சென்னை தாவியே தெலுங்க நாட்டில்
இமிழ்கடல் எரியுந் தோன்ற எழுமலை யலைக ளாலே
அமிழ்கரை யூர்கள் மாய்ந்தார் ஆயிரம் பத்தோ டைந்தும்
குமிழ்நுரை வெள்ளம் வந்து குடிகொண்ட டூர்கள் எல்லாம்

ஆருயிர் அனைய என்றன் அன்பனை இழந்தேன் என்பார்
கார்பணி கற்பின் செல்வக் கண்ணகி இழந்தேன் என்பார்
சீரிய அறிவு வாய்ந்த சேயரை இழந்தேன் என்பார்
ஊரினில் உள்ள எல்லா உறவையும் இழந்தேன் என்பார்

இரவிலே தந்தை தாயை இழந்தபிள் ளைகள் காலை
அருவிபோல் கண்ணீர் சிந்தி அம்மையப் பனையே கூவி
வெருவியே யழுது தேம்பி வெந்தழல் மெழுகுபோல
உருகியுள் வெந்த கோலம் உள்ளுவார் குலையும் வேகும்

அருந்தலாய் விற்ற காலை அரும்பெரும் பாடுபட்டு
வருந்தியே தேடிப் பெற்ற வளம்படு பொருளும் வீடும்
பருந்தடி குஞ்சு போலப் பசக்கென மறைந்து போக
இருந்துபின் அழுது நைந்தார் எத்தனை பேர்கள் அம்மா!

அரசனே கொடுமை செய்யின் ஆரிடம் சொல்வ தென்பார்
பரசுறு கடவுள் காப்பும் பறந்திடின் நாமென் செய்வாம்
துருசினில் மாயும் மக்கள் தொல்லைகள் தீரும் வண்ணம்
கரிசொடு செருக்கொ ழிந்து காவல்பூண் அமைச்சர் ஆள்க

நன்செயும் புன்செ யாகி நாற்புற வரம்ப ழிந்து
முன்செயல் யாவும் கெட்டு முதிர்ந்தநெற் பயிரு மற்று
வன்செயல் வெள்ளக் காலாய் வதிந்தது வடிந்த பின்னும்
என்செய வுணவிற் கென்றே இரங்கினர் உழவ ரெல்லாம்

சடசட வென்று கொட்டிச் சாடும்வன் புயலாற் செத்த
படபட வென்ற டித்துப் பண்ணை இற் கோழி யெல்லாம்
கடகட வென்று மாய்ந்த கால்நடை கணக்கி லாத
மடமட வென்று சாய்ந்த மரங்களே சாலை சோலை

நீர்மிகின் சிறையு மில்லை நீளியின் வலியு மில்லை
கார்மிகின் உறையு ளில்லை கனல்மிகின் அணைப்பு மில்லை
பார்மிகும் பரிசொன் றில்லை பரவெளி மனையெழுப்பிக்
கூர்மதிக் குடும்பத் திட்டங் கொண்டினி தொழுகு வோமே

பாவாணர் எழுதுகிறார்

தமிழன் உரிமை வேட்கை

உரிமை என்றால் என்ன?

மாந்தன் இவ்வுலகில் இருக்கை, காலந்தள்ளுகையும் வாழ்க்கையும் வாழ்வும் என முத்திறப்படும். வருமானம், நுகர் பொருள், உடல் நலம் முதலியன குன்றியிருத்தல் காலந்தள்ளுகை; அவை இன்றியமையாத அளவிருத்தல் வாழ்க்கை; அவை அளவிறந்திருத்தல் வாழ்வு. இவற்றைப் புல்வாழ்க்கை, அளவு வாழ்க்கை, நல்வாழ்க்கை என்றுங் கூறலாம்.

வாழ்வும், உரிமை வாழ்வு, அடிமை வாழ்வு என இருவகைப்படும்.

தன் இல்லத்திற் குடியிருந்து, உடலுழைப்பாலோ மனவுழைப்பாலோ தானே தேடிய பொருளைக் கொண்டு, இறைவனடியார், விருந்தாளர், ஏழையுறவினர், இரப்போர், புலவர் ஆகிய ஐவகுப்பார்க்கு அளித்துண்டு, தன் தாய் மொழி இலக்கியச் செம்மொழியாயின் அதில் இயன்றவரை தூய்மையாகப் பேசியெழுதி, கடவுள் நம்பிக்கையிருப்பின் தன் தாய் மொழியிலேயே வழிபட்டு, தன் முன்னோர் வளர்த்த பண்பாட்டைப் போற்றிக்காத்து, பகுத்தறிவொடும் தன்மானத்தொடும் வாழ்வதே, தனிமகன் உரிமை வாழ்வு. தம் நாட்டில் அல்லது தமக்கென்றுரிய ஒரு தனிநிலப் பகுதியில் வதிந்து, மேற்கூறியவாறு வாழ்ந்து வருவதே, ஒரு நாட்டினத்தின் அல்லது மக்கள் வகுப்பின் உரிமை வாழ்வு.

''தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்'' (குறள் .1107)

என்று திருவள்ளுவர் கூறுதல் காண்க.

கல்விக்கும் அயல்நாட்டுறவிற்கும் ஒரு மொழியைத் தெரிந்து கொள்வதும், உரிமையின் பாற்பட்டதே.

மூவகை வாழ்க்கையும், உரிமையின்றேல் அடிமை வாழ்க்கையே.

தமிழனுக்கு உரிமையுண்டா?

தமிழன் என்றது இற்றைத் தமிழனை.

ஒரு வீட்டிற்கு ஆவணம் போல், ஒரு நாட்டிற்கு உரிமைச்சான்று உண்மையான வரலாறு. இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே, மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, இந்தியா சரியானபடி தெற்கிலுள்ள தென்றும், இந்திய வரலாற்றைத் தெற்கினின்றே தொடங்கவேண்டும் என்றும், எழுதி வெளியிட்டார். இந்திய வரலாற்றுத் தந்தையெனத்தகும் வின்சென்று சிமிதும், தம் 'முந்துகால இந்தியா' (Early India) என்னும் வரலாற்றுப் பொத்தகத்தில், சுந்தரம் பிள்ளையின் கூற்றைப் பாராட்டி, எதிர்கால இந்திய வரலாற்று ஆசிரியரெல்லாரும் தம் வரலாற்று நூலைத் தெற்கினின்றே தொடக்க வேண்டுமென்று வலுவுறச் சார்ந்துரைத்தார்.

அக்கொள்கையைத் தழுவி, பி.தி.சீநிவாசையங்கார் 'இந்தியக் கற்காலம்' (Stone Age In India), 'ஆரியர்க்கு முன்னைத் தமிழக் கலை நாகரிகம்' (Pre - Aryan Tamil Culture), 'தமிழர் வரலாறு' (History of the Tamils) முதலிய நூல்களையும்; வி.ரா. இராமச்சந்திர தீட்சிதர் 'தமிழர் தோற்றமும் பரவலும்' (Origin and Spread ot the Tamils), 'வரலாற்றிற்கு முன்னைத் தென்னிந்தியா' (Pre - Historic South India) முதலிய நூல்களையும், எவரும் மறுக்க முடியாதவாறு திறம்பட எழுதிப் போயினர்.

ஆயின், அவர் மறைந்தபின், பேரா. கே. நீலகண்ட சாத்திரியார் அவர் கொள்கைக்குங் கூற்றிற்கும் நேர்மாறாக, ஆரிய வேதத்தையே அடிப்படையாகக் கொண்டு இந்திய வரலாற்றை வடக்கினின்று தொடங்கி, உண்மைக்கும் உத்திக்கும் ஒவ்வாவாறு பேரன் பாட்டனைப் பெற்றான் என்பது போல், தமிழர் வரலாற்றைத் தலைகீழாக வரைந்துள்ளார்.

தமிழன் பிறந்தகம் தெற்கில் முழுகிப் போன குமரி நாடென்னும் அடிப்படையிலேயே, தமிழின் சிறப்பையும் தமிழன் உயர்வையும் உண்மையாக உணர்தலொண்ணும்.

'வரலாற்றிற்கு முன்னைத் தென்னிந்தியா' என்னும் வரலாற்றுப் பொத்தகம் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாயிருந்தும், அதைப் படியாமையாலோ, தம் இயற்கையான அடிமைத்தனத்தாலோ, வையாபுரித் தன்மையாலோ, தலைமைப் பதவித் தமிழ்ப் பேராசிரியரும் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியாரை எதிர்த்துத் துணிவதில்லை. அதனால், தமிழன் தொன்மையும் முன்மையும், தாய்மையும், தலைமையும் தமிழ் நாட்டிலும் ஒப்புக் கொள்ளப்படாமலேயிருக்கின்றன.

ஒரு மொழியின் சிறப்பை எடுத்துக் காட்ட, அகர முதலிபோற் சிறந்தது வேறொன்றுமில்லை. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலி (Lexicon), 23 ஆண்டுகளாகப் பொதுமக்கள் பணத்தில் நாலரை யிலக்கம் உருபா செலவிட்டுத் தொகுக்கப்பட்டது. ஆயின், மூல (ஆதி) வையாபுரியாரைத் துணைக் கொண்டு தமிழ்ப் பகைவரான பிராமணத் தமிழ்ப் புலவரே அதைத் தொகுத்ததனால், தமிழ் ஒரு புன் சிறு புதுக் கலவை மொழியெனக் காட்டப்பட்டுள்ளது. அவ்வகர முதலியின் குற்றங்குறைகளை யெல்லாந் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியும், தன்னலப் பிண்டங்களான தலைமைத் தமிழ்ப் பேராசிரியருட் சிலரும் அதைப் புறக்கணியாது போற்றி வருகின்றனர்.

இங்ஙனம், தமிழ் வரலாறு மறைக்கப் பட்டும், மறுக்கப்பட்டும், தமிழ்மொழி தாழ்த்தப்பட்டும் வீழத்தப்பட்டும் இருப்பதால் தமிழ் அனைத்திந்திய ஆட்சி மொழியாகாதும், திருக்கோயில் வழிபாடு நடைபெறாதும் போகின்றன. இதனால் தமிழ் வளர்ச்சியும் தமிழன் முன்னேற்றமும் தடைப்படுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் முன்னேறும் வழி மொழியே. அது தாய் மொழியாகவும் இருக்கலாம்; அயன் மொழியாகவும் இருக்கலாம். தாய் மொழியில் முன்னேற்றத் திற்கேற்ற இலக்கியமில்லாவிடின், அஃதுள்ள அயன்மொழியே முன்னேற்ற வழியாகும். இதற்கு, ஆப்பிரிக்க ஆத்திரேலிய அமெரிக்கப் பழங்குடி மக்களே தலைசிறந்த எடுத்துக் காட்டாம்.

தமிழில் ஓரளவு பண்டையிலக்கியம் இருப்பினும், இக்காலக் கல்வி அறிவியமும் அதன் வழிப்பட்ட நுண்கம்மியமுமே யாதலால், மக்கள் முன்னேற்றத்திற்கு ஆங்கிலம் போன்ற ஒரு மேலை மொழியறிவு இன்றியமையாத தாகின்றது. அதனால், அது அயலாரால் வலிந்து புகுத்தப்படாது. மக்களாலேயே விரும்பிக் கற்கப்படுகின்றது. இது அடிமைத்தனமன்று.

ஆயின், உலகில் வேறெங்கணும் காண முடியாத ஒரு வேடிக்கையும் வியப்புமான மொழியடிமைத்தனம், இந் நாவலந் தேயத்தில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், கடந்த மூவாயிரம் ஆண்டாக இருந்து வருகின்றது. அது வேத மொழியும் சமற்கிருதமும் தேவமொழி யென்பதும், அதை இலக்கிய வழக்காக வழங்குவோர் நிலத்தேவர் (பூசுரர்) என்பதும், அதினின்று ஏனை மொழிகளெல்லாம் கடன் கொள்ளாதென்பதும், அது பிராமணனாலேயே

சரியாகப் பலுக்கப்படும் (உச்சரிக்கப்படும்) என்பதும், அதன் பலுக்கம் இம்மி திறம்பினும் பெருங்கேடு விளையும் என்பதும், அதிற் செய்யப்படும் வழிபாடே இறைவனுக்கு பேரின்பத் தருவதென்பதும், பிராமணனுக்குத் தொண்டு செய்வதே அரசர், வணிகர், வேளாளர், கைத்தொழிலாளர் ஆகிய பிற வகுப்பாரெல் லாம் உய்யும் வழி யென்பதும், பிறவுமாம்.

இவ்வுலகில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருபவர் மக்களே. ஆதலால், உலகமொழிகள் எல்லாம் மக்கள் மொழிகளே. வேத மொழியோ சமற்கிருதமோ தேவமொழியாயின், அவற் றோடு நெருங்கிய தொடர்புற்ற கிரேக்க மொழி யும், அதற்கினமான இலத்தீனம் செருமானியம் முதலிய ஐரோப்பிய மொழிகளும் தேவமொழி களா யிருத்தல் வேண்டும். அவை அங்ஙனம் இல்லை.

பிராமணரின் முன்னோர் வெண்ணிறத் தரா யிருந்ததனால் தேவரெனப் பட்டாரெனின், இன்று அவர் வழியினர் அந் நிறத்தராயில்லை. இன்று ஐரோப்பியரும் அவர் வழியினருமே நிலத்தேவர் எனப் படல் வேண்டும்.

வேதம் என்னும் மறைநூலால் ஆரியம் தேவமொழியாயிற்றெனின் சிறு தெய்வ வழுத்துத் திரட்டாகிய வேதத்தினும் வீடு பேறளிக்கும் பெருந்தேவ வழுத்துத் திரட்டும் கடவுள் வழுத்துத் திரட்டுமாகிய தமிழ்மறைகள், கோடிக்கணக்கான மடங்கு சிறந்தனவாதல் வேண்டும்.

இனி, வேதமொழி வல்லோசையும் மூச்சொலியும் நிரம்பியதனால் தேவமொழி யெனப்படும் எனின், அவ்விரண்டும் பன் மடங்கு சிறந்த காளவாய்க் கத்தலும் தேவ மொழிக் கினமாதல் வேண்டும்.

இனி, வேதமொழியும் சமற்கிருதமும் எத்தகைய மொழிகள் என்பதைப் பார்ப்போம்.

வேதமொழி என்பது எத்தகையது?

வேத ஆரியர் மிகச் சிறுபான்மையரா யிருந்ததனால், கிரேக்கத்திற்கு மிக நெருக்கமா யிருந்த அவர் மொழி, அக்காலத்து வடநாட்டு வட்டார மொழியாகிய பிராகிருதத்தொடு இரண்டறக் கலந்து, அதன் பான்மையதாகி எகர ஒகரக் குறில் இழந்து இருமொழிக் கலவை யாயிற்று.

சமற்கிருதம் எத்தகையது?

தமிழிலுள்ள பல்துறை யிலக்கியத்தை மொழி பெயர்த்தற்கு வேதமொழி போதிய சொல்வள மின்றியிருந்ததனால், ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை வேதமொழி யோடு கலந்து, சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கை யிலக்கிய மொழியை உண்டாக்கினர்.

சமற்கிருதம் (ஸம்ஸ்க்ருத) என்றாலே கலந்து செய்யப்பட்டது என்பதுதான் பொருள்.

கும்முதல் = கூடுதல், கலத்தல். கும் - கும்மல் = கும்பல் , குவியல். L. Cumulus, heap. இதினின்றே Cumulate, accumulate முதலிய ஆங்கிலச் சொற்கள் பிறக்கும்.

கும் - கும்மி = கைகுவித்தடித்துப் பாடி யாடும் கூத்து.

கும் - குமி - குவி. குமி - குமிழ் - குமிழி = குவிந்த நீர்மொட்டு. குவி - குவியல், குவால், குவை.

கும் - கும்பு - கும்பல். கும்பு - குப்பு - குப்பல், குப்பை, குப்பம், கொப்பம்.

கும்பு - கூம்பு - கூப்பு, கூம்புதல் = குவிதல்.

கை கூப்புதல் = கை குவித்தல்.

கும்பு - கும்பிடு, கும்பிடுதல் = கை குவித்தல்.

கும்- கொம் - கொம்மை. கொம்மை கொட்டுதல் = கைதட்டியழைத்தல்.

கும்மி - கொம்மி = கும்மியாட்டம்.

கொம்மி - தெ.கொப்பி (gobbi).

Cum (கும்) என்பது இலத்தீன மொழியில் ஒரு கூட்டிணைப்புச் சொல் (Cumulative Conjunction). அது ஆங்கிலத்தில் com, con, col, cor, co என்று திரிந்து with, together, altogether, completely என்று பொருள்படும் முன்னொட்டு (Prefix) ஆகும்.

அதுவே கிரேக்க மொழியில் Sym, Syn, Syl, Sy என்று திரிந்து together, together with, in union with, என்று பொருள்படும் முன்னொட்டாகும்.

அதுவே சமற்கிருத்தில் ஸம் என்று திரிந்து, with, together with, along with, together, altogether என்று பொருள்படும் முன்னொட்டாகும்.

ஸம்ஸ்க்ருத என்னும் சொல்லிற்கு, put together, constructed, well or completely formed, perfected என்று மானியர் உவில்லியம்சு சமற்கிருத - ஆங்கில அகரமுதலி பொருள் கூறுதல் காண்க.

கருத்தல் என்பது, செய்தல் என்று பொருள் பட்டுக் கட்டல் (களவு செய்தல்), வின்னல் (வினவுதல்) என்பன போலக் குமரி நாட்டில் வழங்கிப் பின்னர் வழக்கற்றுப்போன ஒரு தூய தென்சொல்.

தமிழகத்தில் தொன்று தொட்டு வெள்ளாளர், காராளர் என்று இருவேறு நிறத்தார் இருந்து வந்திருக்கின்றனர். அளவிறந்து வெயிலிற் காய்பவர் கருத்திருத்தலும், நிழலில் வேலை செய்பவர் வெளுத்திருத்தலும், பெரும்பான்மை யியல்பு. கையிற் காழ்ப்பேற வேலைசெய்யின் கருப்பர் கை கருத்தும், சிவப்பர் கை சிவந்தும் போகும். அதனால், செய்தலைக் குறிக்கக் கருத்தல் செய்தல், என இரு வினைச் சொற்கள் தோன்றின. ''செய்த கை சேவேறும் செய்யாத கை நோவேறும்'' என்பது பழமொழி.

கரு - கருமம் - கம்மம் = கம்மியத் தொழில்.

''கம்மஞ்செய் மாக்கள்'' (நாலடி .393)

கம்மம் - கம் - கம்மவர் - கம்மவாரு (தெ) =முதல் தொழிலான உழவைச்செய்யும் தெலுங்க வகுப்பார்.

கருமம் - வ. கர்மன்

கம் = 1. தொழில்.

''ஈமுங் கம்மும் உரும்என் கிளவியும்''

(தொல். எழுத். புள்ளி.33)

2. கம்மியர் தொழில் (நன். 223, விருத்.)

கம் - காம் (இந்தி)

கம் - கம்மாளன் = 1. கொல்லன், தச்சன், கற்றச்சன், தட்டான், கன்னான் என்னும் ஐவகைச் கொல்லருள் ஒரு வகுப்பான் 2. பொற் கொல்லன்.

கம்மாளன் - பிரா. கம்மார, வ. கார்மார.

கம் - கம்மி = 1. தொழிலாளி, ''மட் கலஞ்செய் கம்மி'' (பாரத. திரௌ. 64) 2. கற்றச்சன்.

கம் - கம்மியம் = 1. கைத்தொழில், 2. கம்மாளத்தொழில், 3. கட்டடத்தொழில். வ. கர்மண்ய.

கம்மியன் = 1. தொழிலாளி ''கம்மியரும் ஊர்வர் களிறு'' (சீவக. 495) 2. கம்மாளன் 3. கற்றச்சு.

கம்மியநூல் = கட்ட நூல் (சிற்பசாஸ்திரம்) 'கம்மியநூற் றொல்வரம் பெல்லை கண்டு'' (திருவிளை. திருநகரங். 38).

கம்மக்குடம் = கன்னான் செய்த குடம் (நன். 222, மயிலை.)

கம்மகாரர் = 1. கலத்தச்சர் 2. கப்பலோட்டி கள்.

'கம்மகாரர் கொண்டாடும்படி நன்றாக ஓடிற்று'' (சீவக. 501, உரை)

கரு என்னும் முதனிலையைக் 'க்ரு' என்று திரிப்பர் வடமொழியாளர்.

ஒ.நோ: துரு (துருவு) - வ. த்ரு. பெரு - வ. ப்ருஹ்

பொறு - வ. ப்ரு (bhru)

செய் = சிவப்பு. செய்ய = சிவந்த. செய்யன் = சிவந்தவன், சிவன்.

கருத்தல், செய்தல் என்னும் இரண்டும் உறவியற் சொற்கள் (Relative terms).

கரு - கருவி = கருமஞ் செய்வதற் கேது வான துணைப்பொருள். இச்சொல் வடமொழி யில் இல்லை.

கரு + அணம் = கரணம் = 1. செய்கை 2. கருவி. இச்சொல்லினின்று காரண, கார்ய

என்னும் இரு சொற்களைப் பிறப்பித்துள்ளனர் வடமொழியாளர். இவை மேலை யாரிய மொழிகளுள் ஒன்றிலுமில்லை.

கருத்தல், செய்தல் என்னும் இருவினைகளும், வெளுத்தல் (சலவை செய்தல்) என்பது போல, தன்வினையாகவும் பிறவினையாகவும் ஆளப்பெற்றன.

சமற்கிருதம் என்னும் மொழிச் சிறப்புப் பெயர் மட்டுமன்றிப் பாஷை (பாஷா) என்னும் பொதுப் பெயரும் தென் சொல் திரிபே.

ஒருவர் வாயினின்று சொற்கள் வருவது, ஒரு துளையினின்று நீர் ஒழுகுவதும் வானத்தினின்று மழை பெய்வதும் போன்றிருக்கின்றது. நீரொழுக்கு சிறுத்திருப்பின் பெய்தல் என்றும், திரண்டிருப்பின் பொழிதல் என்றும் சொல்லப் படும். அங்ஙனமே, ஒருவர் கடன் மடை திறந்தாற்போல் தட்டுத்தடையின்றிப் பேசின், கோடை மழைபோற் பொழிகிறார் என்று சொல்வது வழக்கம். அது பற்றியே சொற்பொழிவு என்னும் கூட்டுச் சொல்லும் தோன்றிற்று. ஆகவே, விரைந்து பேசுவது பொழிவதும் விரைவின்றிப் பேசுவது பெய்வதும் ஆகும் என்பது பெறப்பட்டது.

பெய்தல் என்ற சொல் கொச்சை வழக்கில் பேய்தல் என்று வழங்கும். அதனால், ''பேய்ந்துங் கெட்டது, ஒய்ந்துங் கெட்டது'' என்னும் பழமொழி எழுந்தது.

பேய் - பேயு - பேசு - பேச்சு.

பேசு - வ. பாஷ் (bhash) - பாஷா.

ஒ.நோ: தேய் - தேயு -தேசு - வ. தேஜஸ்

தேசு - இ. தேஜ்.

கொச்சை வழக்கினின்றும் செஞ்சொல் அல்லது இலக்கணச் சொல் பிறப்பதுண்டு.

எ -டு : கொண்டுவா - கொண்டா - கொணா - கொணர். கொண்டா என்பது கொச்சைச் சொல்லாகவும், கொணா, கொணர் என்பன செஞ்சொல்லாகவும், கொள்ளப்படுதல் காண்க.

இனி, ஆரிய முதனூலானதும், இறைவனாலும் இயற்றப்படாது என்றுமுள்ளதாகச் சொல்லப்படுவதமான வேதத்தின் பெயரே, தென சொல்லின் திரிபாயிருப்பது, சிறப்பாகக் கவனிக்கத் தக்கதும் மிக மகிழ்ச்சி தருவது மாகும்.

விழித்தல் = 1. கண் திறத்தல், 2. கவனித்துப் பார்த்தல், 3. அறிதல், 4. விளங்குதல், 5. தெளிதல்.

வழி = 1. கண் 2. அறிவம் (ஞானம்).

''தேறார் விழியிலா மாந்தர்'' (திருமந். 177).

விழி - L. vide, **GK.** (w) eid, **OE.** wit, **Skt.** வித்.

வித் - வேத = அறிவு, அறிவு நூல், மறை.

செவியுறுதல் = கேட்டல்.

செவியுறு - வ. ச்ரு - ச்ருதி = 1. கேள்வி, 2. கேட்டறியப்படும் வேதம்.

முன்னுதல் = கருதுதல் AS. mun (to think)

முன்னம் = 1. கருத்து, 2. கருதும் மனம், (திவா),

முன் - முன்னம் - முனம் - மனம், வ. மனஸ். L. mens. E. mind,

மன்+ திரம் = மந்திரம் = 1. கருதுந்திறம் 2. (திண்ணிய) எண்ணம். 3. சூழ்வு, 4. நிறைமொழியான மறைமொழி. (தொல், செய்.176) 5. திருமூலர் திருமந்திரம் 6. பேய் வினை மறைமொழி. வ. மந்த்ர.

மன்னுதல் = பொருந்துதல், கூடுதல், நிலைபெறுதல்.

மன் - மன்று - மந்து - மந்தை

மன் - மனை. மன் + திரம் = மந்திரம் = 1. வீடு. ''மந்திரம் பல கடந்து'' (கம்பரா. ஊர்தேடு. 138) 2 அரண்மனை (பிள்) 3. திருக்கோவில் (பிங்.) 4. குதிரைச்சாலை (பிங்.) 5. குகை. ''அரிமந்திரம் புகுந்தால்''(நீதிவெண். 2)

மந்திரம் - வ. மந்திர

மண்டுதல் = வளைதல், மண்டியிடுதல் = காலை மடக்குதல், மண்டு - மண்டலம் = 1. வட்டம், 2. வட்டாரம் 3. நிலப்பகுதி, 4. காலப்

பகுதி (40 அல்லது 48 நாள்) 5. நூற்பகுதி 6. வேதநூற் பகுதி.

மண்டுதல் = 1. நெருங்குதல். 2. கூடுதல் 3. நிறைதல். மண்டு - மண்டகம் = மக்கள் கூடும் கூடம்.

மண்டகப்படி என்னும் வழக்கை நோக்குக.

மண்டகம் - மண்டபம். ஒ.நோ. வாணிகம் - வாணிபம். மண்டபம் - வ. மண்டப.

முன் - மன் = சிறப்பாகச் கருதியறியும் மாந்தன். மன்பதை = மக்கட் கூட்டம்.

OE. man, **OS, OHG,** man, **Goth,** manna,

Skt, மனு - மனுஷ்ய - (மனுடன், மானிடன், மனிதன்)

இங்ஙனம், சமற்கிருதச் சொற்களுள் ஐந்திலிரு பகுதி தமிழ். சமற்கிருதத்திலும் ஏனையாரிய மொழிகளிலும் உள்ள சுட்டுச் சொற்கட்கெல்லாம் மூலம், அ,இ,உ ஆகிய தமிழ் முச்சுட்டுக்களே.

கிறித்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே, ஆரியப் பூசாரியர் தம்மை நிலத்தேவரென்றும் தம் இலக்கிய மொழியைத் தேவமொழி யென்றும் சொல்லி, பல் வேள்விச்சாலை முது குடுமிப் பெருவழுதி, இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யானைச் செல்கெழு குட்டுவன் போன்ற மூவேந்தரையும் ஏமாற்றி, ஆகமங்களை எழுதி வைத்துக்கொண்டனர். அவை அறிவாராய்ச்சி மிக்க இக்காலத்திற் செல்லா.

நாடு தமிழ் நாடு. மக்கள் தமிழ் மக்கள். மதம் தமிழர் மதம். கோவில் தமிழரசர் அல்லது திராவிட அரசர் அல்லது தமிழ் நாட்டரசர் கட்டியவை. அவற்றிலுள்ள தெய்வப் படிமை கள் தமிழக் கம்மியர் செதுக்கியவை. எந்நாட்டி லும் தாய்மொழியில் வழிபாடு செய்வதே, இயல்பும் முறைமையும் பயன்படுவதும் இறைவனுக்கு ஏற்புமாகும். சமற்கிருதம் அயன் மொழியும், பெரும்பாலும் தமிழ்க் கலப் பாலானதும், தமிழை ஒழிக்க வேண்டுமென்றே புனையப்பட்டுக் கரவாகப் புகுத்தப்பட்டதும், எங்கேனும் என்றேனும் வழங்காது இலக்கிய மொழியாகவேயிருந்து வருவதும், தமிழர்க்கு இம்மியும் பொருள் தெரியாததும், ஆரியப் பூசாரியர்க்கும் தெளிவாய் விளங்காததும், தமிழர் முன்னேற்றத்திற்கு வலுத்த முட்டுக்கட்டை யானதும், தமிழின ஒற்றுமையைக் குலைப்ப தும், அவரது அடிமைத்தனத்தை நிலைநிறுத்து வதுமான போலி மொழியாதலால், திருக் கோவில் தமிழ் வழிபாட்டை வேட்பதும், அதற்கேற்ற சட்டம் இயற்றுவதும், இறைவனும் எதிர்க்க வொண்ணாப் பிறப்புரிமையே. அதை மறுத்தற்கு ஒன்றிய நாட்டினங்கள்' (U.N) சார்பான உலகத் தீர்ப்பு மன்றத்திற்கும் அதிகாரமில்லை.

தமிழ் விடுதலையே தமிழன் விடுதலை. தமிழன் இன்னும் விடுதலை பெறவில்லை.

தமிழர் தாம் குமரி நாட்டுப் பழங்குடி மக்களின் வழியினர் என்னும் வரலாற் றுண்மையறிந்து, முழுவுரிமையும் விரைந்து பெறுக.

மொழியினங்கள் பிரிந்த காலநிலைகள்

ஆப்பிரிக்கரும் ஆத்திரேலியரும் சீனரும் அசைநிலைக் காலத்தில் குமரிநாட்டினின்று பிரிந்துபோனதாகத் தெரிகிறது.

துரேனியர் அல்லது சித்தியர் எனப்படும் மக்கள் கொளுவுநிலைக் காலத்திற் பிரிந்து போயிருக்கலாம்.

அவருக்குச் சற்றே பிற்பட்ட தமிழருள் ஒருசாரார் வடக்கே சென்று பிராகிருதராக மாறினர். அவருக்குப் பிற்பட்டவர் திரவிடராகத் திரிந்தனர்.

பிராகிருதருந் திரவிடரும் கலந்த வகுப்பார் ஒரு சாரார் வடமேற்காகச் சென்று ஐரோப்பாவில் ஆரியராக மாறினர். அவருள் ஒரு பிரிவினரே இந்தியாவிற்குள் புகுந்த வேத ஆரியராயினர்.

- பாவாணர்

பாவாணர் கொள்கைகள் பாரெங்கும் பரவ...

முனைவர் மு.தமிழ்க்குடிமகன், மேனாள் அமைச்சர்

1957இல் பாவாணர் எழுதிய 'ஒப்பியன் மொழிநூலை'ப் படித்த காலத்திலிருந்து இன்றுவரை - இந்த 45 ஆண்டுகளாகத் 'தனித்தமிழ்' பரப்பும் தொண்டர்களாகவே இருந்து வருகிறோம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். கலைஞர், பாவாணரை இயக்குநர் ஆக்கினார். அவர் நூல்களை நாட்டுடைமை யாக்கினார். ஆனால் இன்றைய அரசு பாவாணரது நூல்களை 20 இலட்சம் உருபா கொடுத்து வாங்கி, நூலகங்களில் இடம்பெறச் செய்துவிட்டது. பாவாணரது நூற்றாண்டு விழாவை அரசும் சிறப்பாகக் கொண்டாடியது; கல்லூரிகள், பல்கலைக் கழகங்களும் கொண்டாடுமாறு ஏற்பாடும் செய்து தந்தது. எனவே பாவாணர் தமிழக அரசு புரிந்து ஏற்ற தமிழறிஞர் ஆகிவிட்டார்.

அண்ணாமலையிலிருந்து வெளியேற்றப்பட்ட அவலத்துக்கு ஆளானவர். இன்று, எல்லாப் பல்கலைக் கழகங்களும் கொண்டாடும் பெருமைக்கும் ஆளானவர்.

அவர்தம் மனைவியை இழந்தபோது, அவரது வறுமை நிலை ஒருசிலர்க் காவது தெரிந்திருந்தது. இன்று அவரது குடும்பத்திற்கு 20 லட்சம் பரிவுத் தொகை.

பறம்புக்குடி உ.த.க. மாநாட்டில் அவரது நூல்கள் மட்டும் விற்கப்பட்ட வகையில் உருபா 2000/- கிடைத்தது. அதைப் பார்த்தே, கண்கலங்கினார் பாவாணர். இன்று, அவர் நூல்கள் அரசால் உருபா 20 இலக்கம் கொடுத்து வாங்கப்பட்டுள்ளன. இந்த ஏற்றங்கள் காலங்கடந்து கிடைத்தாலும், அனைத்தும் பாவாணர்க்குத் தரப்பட்ட ஏற்றங்களே.

இந்த வகையில் ஏற்றத்திற்கும் புகழ்ச்சிக்கும் உரியவரான பாவாணர் கொள்கைகள் என்ன ஆயின? அவை ஏற்றம் பெற்றனவா? எண்ணிப் பார்ப்போம்.

கழகம் எனும் சங்க காலத்தில் 3% மட்டுமே வடமொழிக் கலப்பு இருந்தது. காலப்போக்கில் சரிக்குச்சரி வடமொழியைக் கலந்து, மணிப்பிரவாள நடைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் மறைமலையடிகளைத் தலைவராகவும், பாவாணரைச் செயலாளராகவும் கொண்ட தமிழியக்கம் அந்த மணிப்பவழ நடையைத் தூக்கி எறிந்துவிட்டது. பாவாணர் கொள்கை அதுதான். ''தமிழை வடமொழிப் பிணிப்பிலிருந்து மீட்பது'' அவரது குறிக்கோள். இன்று நானோ, இளவரசோ, இளங்குமரனோ மணிக்கணக்கில் பேசினாலும் சுவை குன்றாமலும் சூடு குறையாமலும் நல்ல தமிழில் பேசும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். எங்களைப் போன்ற நூற்றுக்கணக்கானவர் இந்தத் திறனைப் பெற்றிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் 'நல்கைக் கோரிக்கை'யில் பேசிய போது அடுத்த நாள் 'தினகரன்' இதழ் பின்வருமாறு குறிப்பிட்டது. ''தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடி மகன் சட்டமன்றத்தில் ஒரு மணிநேரம் வேகமாகப் பேசியும், பிறமொழிச்

சொல்லே கலக்காமல் நல்ல தமிழில் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது'' என்று எழுதியிருந்தது.

ஆம்! தமிழ் வடமொழிப் பிணிப்பிலிருந்து மட்டுமன்றித் தமிங்கிலப் பிணப்பிலிருந்தும் மீண்டுவிட்டது. பாவாணரது அந்தக் குறிக்கோள், எங்கள் பலரது வாழ்வோடு ஒன்றிவிட்டது. அவரது குறிக்கோள் நிறைவேறிவிட்டது.

ஆனால், தமிழ் உலக முதன்மொழி எனும் அவரது கொள்கை எந்த அளவுக்கு உலகத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது?

கொல்கத்தாவிலும், தில்லியிலும் இருந்து ஆட்சி செய்த ஆங்கிலேயர்க்குக் கிடைத்த இந்தியச் செய்திகள் சமற்கிருதத்தை முன்னிலைப்படுத்தின. அதனாலேயே, பல உண்மை வரலாறுகள் கூட ஆங்கிலேயர்க்கும், பிற வெளிநாட்டார்க்கும் தெரியாத மயக்கநிலை இருந்தது. அந்த நேரத்தில் பி.டி.சீனிவாச ஐயங்கார், வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், டி.ஆர்.சேச ஐயங்கார் போன்றவர்கள் எல்லாம் தமிழின் பெருமையை, தமிழ் இலக்கியங்களின் வளமையை உலகறியச் செய்தார்கள். அதன் பிறகே தமிழின் தொன்மை உணரப்பட்டது. உலகம் இன்று, இந்தியாவின் தொன்மை மொழிகள் தமிழும், சமற்கிருதமும் என்பதை ஒப்புக் கொண்டு விட்டது. ஆனால் பாவாணரின் 'முதல் தாய்மொழி'க் கருத்துகள் 'The Primary Classical Language of the World' நூலின் உட்கருத்துகள் உலகோரின் கவனத்தைக் கவர்ந்துள்ளனவா? இது ஒரு வினாக்குறி ஆகும்.

'குமரிக்கண்டம்தான் மாந்தன் பிறந்தகம் - அதுவும் தமிழன் பிறந்தகம்' என்னும் கோட்பாட்டை நிறுவிட, நாம் முயற்சி எடுக்க முடியுமா? குமரிக் கண்டத்தில் அகழ்வாராய்ச்சி செய்து உருசியரும்,வேறு சிலரும் சொன்ன உண்மைகளைத் தவிர, இந்திய அரசோ, தமிழக அரசோ இந்த அகழ்வாராய்ச்சிக்கு நிதி ஒதுக்கும் நிலை உள்ளதா?

இதுவும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்றாகும்.

இன்று நாடெங்கிலும் தமிழுணர்ச்சி பரவியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. எந்த அரசியல் இயக்கமும் தமிழுணர்ச்சிக்கு மாறாக நடப்பதில்லை என்பதும் உண்மை.

எனினும், தமிழ் ஆட்சிமொழிக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள், விளம்பரப் பலகைகள் முற்றிலும் தமிழில் அமைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தமிழைக் கோயில்களின் வழிபாட்டு மொழியாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள், சிலரால் தடுக்கப்பட்ட காட்சிகள், பலரால் அவை தகர்க்கப்பட்ட காட்சிகள், தமிழ்வழிக் கல்விக்காக எடுக்கப்பட்ட முயற்சிகள், ஆங்கிலத்தின் மீது ஏற்பட்டுள்ள அளவற்ற காதலால் ஏற்படும் தமிழ்ப் படுகொலைகள் -

இவையெல்லாம் நம் கவனத்துக் குரியவை; நிறைவேற்றித் தீரவேண்டிய கொள்கைகள்.

எனவே, நமக்கு உள்நாட்டிலும் நிறைய வேலை இருக்கிறது.

உலகளவிலும் நமக்குக் கடமைகள் இருக்கின்றன. செய்வோமா...! வெல்வோமா?

எல்லாரும் எக்காலும் எந்நிலத்தும் செந்நிலையில்
நல்லாராய் வாழ்ந்து நலனுகரச் - சொல்லாய்ந்து
வள்ளுவன் அனறி வகுக்க நடுநிலையன் (பு)
உள்ளவன் யாரே உரை.

ஆரியன் தேவென்(று) அறிவிழந்து மூவேந்தும்
பூரிய தாழ்விற் பொருந்தியகால் - சீரிய
தெய்வப் புலவன் திருவள் ளுவன்தந்தான்
உய்வைத் தமிழர்க்(கு) உவந்து.

- பாவாணர்

தன்னொளி ஞாயிறு பாவாணர்

முனைவர் கு.திருமாறன்,
இணைச்செயலர்

மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் தோன்றி நூறாண்டுகள் முடிந்தன. நூற்றாண்டு தொடங்கு முன்னரே 25.3.2000ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளியில் பாவாணர் தமிழியக்கம் 'நூற்றாண்டை நோக்கி...' என ஒரு விழா நடத்தியது. தொடர்ந்து, பாவாணரின் பன்முக ஆற்றலைப் புலப்படுத்தும் பாங்கில் இருபத்தைந்து திங்கட் பொழிவுகள் புலவர் இளங்குமரனார், முனைவர் இரா.இளவரசு, பேராசிரியர் கு.பூங்காவனம் முதலிய அறிஞர்கள் வாயிலாக நிகழ்த்தப்பெற்றன. அவற்றுள் இரண்டு சிறப்பு நிகழ்வுகளாக அமைந்தன. அவற்றில் புலவர் இளங்குமரனார் தொகுத்த 'பாவாணர் மடல்கள்', பாவலர் பரணனார் எழுதிய 'பாவாணர் தமிழ்நூறு' ஆகிய நூல்கள் வெளியிடப்பெற்றன. பாவாணரின் நூற்றாண்டுத் தொடக்க நாளான 7.2.2002 அன்று தஞ்சையில் பாவாணர் நூற்றாண்டுத் தொடக்க விழாவைத் தமிழியக்கம் நடத்தியது.

காணாத புதுமை

தொடர்ந்து நெல்லை, சங்கரன்கோயில், கோவை முதலிய நகரங்களிலும் தமிழகத்தின் பல்வேறு சிற்றூர்களிலும் பாவாணர்க்கு விழாக்கள்; சென்னையில் 20.1.2002 அன்று பாவலரேறு தமிழ்க்களச் சார்பில் பெருவிழா. அண்டை மாநிலங்களான புதுச்சேரி, கருநாடகம் ஆகியவற்றிலும் பாவாணர் விழாக்கள். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழும் தமிழர்கள் பாவாணர்க்கு விழாவெடுத்து மகிழ்ந்தனர். தமிழ்நாட்டரசு எல்லாப் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாவாணர் நூற்றாண்டுவிழா கொண்டாட வேண்டுமென ஆணையிடத் தொடர்ந்து நிகழ்ந்தன பாவாணர் விழாக்கள். வேறு எந்தத் தமிழறிஞர்க்கும் இல்லாத அளவில் சாதி கடந்து, மதம் கடந்து ஆசிரியர் - மாணவர் என்ற உறவுகூட இல்லாது தமிழர் வாழ் நிலப்பரப்பெல்லாம் பாவாணர்க்குத் தமிழுணர்வாளர்கள் தாமே முன்வந்து விழாவெடுத்து மகிழ்ந்ததும் மகிழ்வதும் தமிழகம் இதுவரை கண்டிராத புதுமை.

பாவாணர் என்கிற மாமனிதரை, பெரும் பேரறிஞரைத் தமிழுலகம் கண்டுகொண்டதும் தம் தலைவராக வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டதும் எவ்வாறு நிகழ்ந்தன? எவரெவர் கரணியராக இருந்தனர்? அம் மொழிஞாயிறு எங்ஙனம் தமிழர்தம் நெஞ்ச இருளகற்றி அங்கே நிலைகொண்டது? என்றறிவது பாவாணர் விழாக்கள் பாரெங்கும் நிகழ்வதற்கான அடிப்படையைப் புலப்படுத்தும்.

குடத்துள் விளக்காய்...?

'புலமக்களிடையேயும் பெரிதும் அறியப்படாமல் குடத்துள் விளக்காய் இருந்த பாவாணரை அவர்தம் அருமை மாணவர் பாவலரேறு தம் 'தென்

மொழி'யின் மூலம் பொதுமக்களும் போற்றும் நிலைக்கு வெளிக் கொணர்ந்து, நாடெங்கும் ஆங்காங்கு அன்பர்கள் குழுவை உருவாக்கி எவ ராலும் புறக்கணிக்க முடியாத நிலையில் குன் றின் மேலிட்ட விளக்காக உயர்த்தி நிறுத்தினார்' என்கிறது 'தென்மொழி அவையம்' வெளியிட்ட 'பாவாணர் வாழ்க்கைக் குறிப்புகள்' எனும் நூல்.

'எவராலும் அறியப்பெறாமலும் எவராலும் புரக்கப் பெறாமலும் எவ்வகையிலும் உணரப்பெறாமலும் இருந்த அவரையும் அவர் அறிவையும் குன்றின் மேலிட்ட அரும்பாடு முழுக்க முழுக்கத் தென்மொழியையே சார்ந்த தென்றால் அது மிகையான கூற்றன்று. பெருமைக்காகக் குறிக்கப் பெறுவதுமன்று; கடமையுடன் நினைக்க வேண்டிய ஒரு வரலாற்று உண்மையாகும்' என்பர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

'தென்மொழி' இதழ் 1.8.1959இல் திங்கள் ஈரிதழாகப் பெருஞ்சித்திரனார் எனும் புனை பெயர்பூண்ட துரை.மாணிக்கத்தால் தொடங்கப் பெற்றது. முதல் இதழிலேயே பாவாணரின் 'தமிழ் கடன் கொண்டு தழைக்குமா' என்ற கட்டுரை வெளியிடப்பெற்றது. 14.1.1960 வரை வெளிவந்த 'தென்மொழி' இதழ் வெளியீடு நின்றுபோனது. மூன்றாண்டுகளுக்குப் பின் 1963 பிப்பிரவரி திங்கள் முதல் பாவாணரைச் சிறப்பாசிரியராகக் கொண்டு மீண்டும் வெளி வந்தது. 'தென்மொழி'யின் தோற்றத்திற்கு முன் பாவாணர் தமிழர்களால் அறியப் பெற்றிருந் தாரா, இல்லையா என்பது நம்முன் நிற்கும் வினா. விடைகாண முயல்வோம்.

ஏராளமான கட்டுரை எழுதியவராக

'மொழியாராய்ச்சி - ஒப்பியன் மொழி நூல்' எனும் கட்டுரை 1931 (சூன் - சூலை) இல் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளிவந்தது. அடுத்த இதழிலேயே 'வடமொழி சென்ற தென்சொற் கள்' என்ற கட்டுரை வெளிவந்தது. இதே தலைப்பில் 1936 இறுதிவரை ஒன்பது கட்டுரை களைப் பாவாணர் செந்தமிழ்ச் செல்வியில் தொடர்ந்து எழுதினார். 1959ஆம் ஆண்டுக்கு முன்பே செந்தமிழ்ச் செல்வியில் இலக்கணம், இலக்கியம், வரலாறு, மொழியாராய்ச்சி முதலி யன குறித்து ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரை களைப் பாவாணர் எழுதியுள்ளார்.

1932 சூலை - ஆகத்து - 'தமிழ்ப் பொழில்' இதழில் 'பாவினம்' என்ற கட்டுரையைப் பாவாணர் படைத்துள்ளார். தொடர்ந்து, பாவாணரின் பல கட்டுரைகளை வெளியிட் டுள்ளது தமிழ்ப் பொழில். அண்ணல் தங்கோ நடத்திய தமிழ்நிலம் (5.12.1947) இதழில் 'தமிழ் நில வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்குதல் வேண்டும்' என்ற பாவாணர் கட்டுரை வெளி யிடப்பெற்றுள்ளது. மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் (1956) சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டுச் சிறப்புமலர் (1958) முதலிய பல சிறப்பு மலர்கள் பாவாணர் கட்டுரைகளைத் தாங்கி மணம் பரப்பியுள்ளன.

இவையெல்லாம் புலமக்களிடையே பாவாணர் புலமை நலத்தையும் ஆய்வுத்திறத் தையும் கொண்டு சென்றன.

அறிஞர் அண்ணாவின் 'திராவிடநாடு', 'காஞ்சி' ஆகிய இதழ்களுக்கு அடுத்த நிலையில் பாவலர் கண்ணதாசனின் 'தென்றல்' திராவிட இயக்கத்தினரிடமும் தமிழுணர்வாளர்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுத் தாக்குரவு ஏற்படுத்திய சீரிய இதழ். அவ்விதழில் பாவாண ரின் 'நன்னூல் நன்னூலா?', உவமை தென் சொல்லே முதலிய பல கட்டுரைகள் வெளி வந்தன. 1957ஆம் ஆண்டிலேயே "பாவாணர் மொழித்துறையில் கிட்டத்தட்ட தமிழகம் பெற்றெடுத்த ஒரே அறிஞர் என்று கூறத்தக்கவரா யுள்ளார். அவருடன் பக்கத்திலோ சற்றுத் தொலைவிலோ வைத்து ஒப்பிட, எண்ணக்கூடத் தமிழகம் மொழித்துறையிலே இன்னும் ஓர் அறிஞனைப் பெற்றத் தரவில்லை" என்றும்

"அவர் இயந்திர அறிஞர் அல்லர்; தமிழினத்தின் உயர்வு உணர்ந்தவர்; அதில் பற்று உள்ளவர்; மொழிநூல் கற்றவர் மட்டுமல்ல கற்பிப்பவர்; இயற்றுபவர் மட்டுமல்லர், மொழி நூலை ஆக்கும் சிந்தனை அறிஞர்" என்று பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் பாவாணரைப் போற்றி எழுதினார். பாவாணர் ஆய்வாளர் இளங்கோ '1954இல் தொடங்கியது முதல் கிழமைதோறும் மூவாயிரம் முதல்

ஐயாயிரம் படிகள் வரை விற்ற 'தென்றல்' கிழமையிதழ் பாவாணரைப் பெரிதும் மதித்தது. அவரைப் பேராசிரியர் என்றும் திராவிட மொழிநூலார் என்றும் அடையிட்டே அழைத்து மகிழ்ந்தது' என்பர். புலவர்களும் அறிஞர்களும் மட்டுமல்லாது ஓரளவு கற்றறிந்த அல்லது படிக்க மட்டுமே தெரிந்த பொதுமக்களும் பாவாணரை அறிந்துகொள்ளத் தென்றல் கருவியாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

பன்னூல் ஆசிரியராக

பாவாணரின் நூல்களில் முதலில் வெளிவந்தவை சிறுவர் பாடல் திரட்டு, மருதநிலப் பாடல்கள் (1925) ஆகியன. அடுத்தவை அவரது துவாரகை மன்னன் அல்லது பூபாரந் தீர்த்த புண்ணியன் ஆகியன. 1932இல் வெளியாயின. 1937இல் செந்தமிழ்க் காஞ்சி, கட்டுரைக்கசடறை என்னும் வியாச விளக்கம் முதலியன வெளிவந்தன. கட்டுரை வரைவியல் (1939) இயற்றமிழ் இலக்கணம் (1940), ஒப்பியன் மொழிநூல் (1940), தமிழன் எப்படிக் கெட்டான் (1940), தமிழன் சரித்திரச் சுருக்கம் (1941), சுட்டு விளக்கம் (1943), திராவிடத்தாய் (1944), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1949), உயர்தரக் கட்டுரை இலக்கணம் - 1 (1950), உயர்தரக் கட்டுரை இலக்கணம் - 2 (1951), பழந்தமிழாட்சி (1952), தமிழ்நாட்டு விளையாட்டுக்கள் (1954), தமிழர் திருமணம் (1956), ஆகிய பல்துறைசார் ஆய்வு நூல்களைப் பாவாணர் எழுதியுள்ளார். எனினும் பாவாணரின் ஒப்பியன் மொழிநூல் தனித் தன்மையும் மிகுசிறப்பும் வாய்ந்தது. இந்தி எதிர்ப்புப் போரில் 'சிறைத் தண்டனையுற்ற தமிழ்த் தொண்டரின் தற்காப்பிற்காக ஒப்பியன் மொழிநூல் முதற்புத்தகம் முதற்பாகம் என்னும் நூலை எழுதினேன்' என்பர் பாவாணர்.

''வடமொழியாளர் கொள்கைகளை யெல்லாம் பிய்த்தெறிந்து, தமிழ்மொழி முதல் முதன்மையுடைத்தென்றும் அது ஒப்புயர் வில்லாத் தனிமொழி யென்றும், தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் வடமொழியும் வடமொழி யாளரும் கடப்பாடுடையரென்றும் திரு. பாவாணர் தம் நூலில் நிலைநாட்டியுள்ளார். தமிழ்மக்கள் என்று பாராட்டிக் கொள்ளும் ஒவ்வொருவர் கையிலும் இந்த ஒப்பியன் மொழிநூல் சுவடி இருக்கவேண்டும். அவர்கள் அதனைப் பன்முறையும் ஊன்றிப் படிக்க வேண்டும் அதிற்கண்ட கருத்துக்களை மனதிற் பதிக்க வேண்டும். நம் தண்டமிழ் மொழியை இழித்துரைக்கும் எவரையும் திரு. பாவாணர் உதவிகொண்டு வாயடக்கித் தமிழ்மக்கள் தம் தாய்மொழிப் பற்றினை நிலைநாட்ட வேண்டும்'' என்று நூல் வெளிவந்தவுடனேயே தமிழவேள் உமாமகேசுவரனார் தமிழ்ப்பொழிலில் மதிப்பிட்டுப் பாவாணரைப் போற்றினார்.

1949இல் மறைமலையடிகள், ''பண்டித ஞா.தேவநேயன் பி.ஓ.எல். பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி எழுதிய நூல்கள் தமிழ் மொழியின் நீண்டகாலத் தேவையை நிறைவேற்றின'' என்றும், தம்மால் ''மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத்துறையில் ஆராய்வதற்கு முன்வரக் கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர் தாம் எழுதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமுடையதாதலால் பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத்துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயன் ஒப்பற்ற தனித்திறமையுடையவர் என்றும் அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருது

கின்றேம்'' என்று சான்றளித்துப் பாராட்டியுள்ளார்.

இக்கூற்றுகள் 1950க்கு முன்பே அறிஞர்கள் போற்றி ஏற்றுக்கொண்ட ஆய்வறிஞராகப் பாவாணர் விளங்கினார் என்பதைப் புலப்படுத்து கின்றன.

''ஒரு காலத்தில் பாவாணர் இயற்றிய 'ஒப்பியன் மொழிநூல்'தான் எம்போல் பலருக்கும் தமிழ்ப் பகையையும் அதன் மறைநிலையையும் கண்டு கொள்ளுதற்குத் துணைசெய்தது எனில் மிகையன்று'' என்பர் பேராசிரியர் க.அன்பழகன். ஒப்பியன் மொழிநூல் வெளி வந்த காலத்தில் பேராசிரியர் க.அன்பழகன் மாணவப் பருவத்தில் இருந்தார் என்பதைக் கருத்திற்கொண்டால் பாவாணர் இளைஞர் பலரின் உள்ளங்கவர்ந்த நூலாசிரியராகத் திகழ்ந்தார் என்பது தெளிவாகும்.

களங்கண்ட மறவராக...

தமிழ்மொழி காக்கும் போரில் ஈடுபட்ட மறவர்கட்குப் படைக்கருவிகளாக ஒப்பியன் மொழிநூலையும் செந்தமிழ்க் காஞ்சியையும் படைத்தளித்த பாவாணர் நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்ட களம்காண் மறவராகவும் விளங்கினார். 1937 செப்டம்பரில் திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் இந்தி எதிர்ப்புப் பொழிவுகளாற்றிய பாவாணர் 1937 அக்டோபரில் சேலத்தில் இந்தி வல்லாண்மையை எதிர்த்துப் பேசினார். திருச்சிராப்பள்ளியில் இந்தி எதிர்ப்பு வாரம் கொண்டாடத் திட்டமிட்ட அவர் தன் வீட்டில் தமிழ்க்கொடி ஏற்றித் தம் தறுகண்மையைப் புலப்படுத்தினார். திருச்சிராப் பள்ளியில் சென்னை மாநிலத் தமிழர் மாநாட் டின் 'தொண்டர் படைத் தலைவர் தோழர் வித்துவான் தேவநேயப் பாவாணர்' எனக் 'குடியரசு' (26.12.1937) இதழ் சுட்டுகிறது. தொடர்ந்து, காஞ்சி இந்தி எதிர்ப்பு மாநாடு (1938), சென்னைத் தமிழுணர்ச்சி மாநாடு (1943) முதலியவற்றில் கலந்து கொண்ட பாவாணர் 1944இல் சேலத்தில் நாவலர் நெடுஞ்செழியன், 'டார்பிடோ' சனார்த்தனம் ஆகியோர் கலந்து கொண்ட விழாவில் பங்கேற்றுள்ளார். 1956இல் குழித்தலையில் நடந்த ஆட்சிமொழி மாநாட்டில் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றியுள்ளார் பாவாணர்.

'தென்மொழி'யின் தோற்றத்திற்கு முன்னரே பாவாணர் தமிழ்நாட்டில் நடைபெற்ற தமிழ்க் காப்பு இயக்கச் செயற்பாடுகள் பலவற்றிலும் தம் பங்களிப்பைச் செய்து ஒரு மொழிப் போராளியாகத் தமிழர்களால் அறியப் பெற்றிருந்தார் என்பதை இந்நிகழ்வுகள் தெளிவாக்கு கின்றன.

பதியச் சொல்லும் பொழிஞராக

19.2.1944இல் பேராசிரியர் இரா.பி.சேது தலைமையில் நடைபெற்ற புறநானூற்று மாநாட்டில் 'புறநானூறும் மொழியும்' எனும் தலைப்பில் அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தியுள்ளார் பாவாணர். ''திரு. தேவநேயன் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவார். பல தமிழ்க்கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின் கீழ் அவர் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவை கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்து அவையோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழத்தின'' என நெகிழ்ந்துரைக்கிறார் மறைமலையடிகள்.

அடிகளார் முதலிய அறிஞர்கள் பாராட்டும் பொழிஞராக மட்டுமின்றி மாணவர் மயங்கும் பேச்சாளராகவும் பாவாணர் விளங்கியுள்ளார் என்பதற்குக் குடந்தை அரசு கலைக் கல்லூரியில் நடந்த ஒரு நிகழ்வு சான்றாகிறது. 1956ஆம் ஆண்டில் குழந்தை அரசு கலைக் கல்லூரியின் தமிழ்ப் பேரவைத் தொடக்க விழாவிற்கு அக்காலத்தில் தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளரான அறிஞர் அண்ணா அவர்களை அழைக்க விரும்பினர் பேரவைப் பொறுப்பாளர்களும் பெரும்பான்மை மாணவர்களும். கல்லூரி முதல்வர் எசு.இலட்சுமி நாராயணன் எனும் பார்ப்பனர் அதற்கு இசைவு தராத நிலையில் அண்ணாவிற்கு ஈடான பேச்சாளராகப் பாவாணரை அறிந்தேற்றிருந்த மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்த அவரை அழைத்தனர். 1.9.1956

ஆம் நாள் பேராசிரியர் அ.கிருட்டிணமூர்த்தி தலைமையில் 'அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் திராவிட மொழி ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் புலவர் திரு. ஞா.தேவநேயப் பாவாணர், எம்.ஏ. அவர்கள் ''திராவிட மொழிகளும் தமிழும்'' எனனும் பொருள்பற்றி உரை' வழங்கியுள்ளார்.

இவற்றால் ஐம்பதுகளிலேயே அறிஞர் களால் போற்றப் பெற்ற, மாணவர்கள், இளைஞர்கள் மனம்கவர்ந்த சிறந்த பேச்சாள ராகப் பாவாணர் விளங்கினார் என்பது புலனா கின்றது.

கலைச் சொல்லாக்க வல்லுநராக

1932இல் சென்னை அரசினர் கலைச் சொற்கள் தொகுதி ஒன்றை வெளியிட்டனர். அத்தொகுதியில் கலைச் சொற்கள் எனும் பெயரில் வடமொழிச் சொற்களே மிகுதியாக இருந்தன. இதன் எதிர்நிலையாக சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் முயற்சியால் 1934இல் கலைச் சொல்லாக்கக் கழகம் அமைந் தது. இம்முயற்சியின் விளைவாக 1938இல் கலைச் சொற்கள் எனும் நூல் வெளியிடப் பெற்றது. இந்நூல் உருவாக்கக் குழுவில் பாவாணர் இடம்பெற்றிருந்தார். 1940இல் கழக ஆட்சியர் வ.சுப்பையா விருப்பத்திற்கிணங்க ஆட்சிச் சொல் அறிஞர் கீ.இராமலிங்கனார் அணியப்படுத்திய ஆட்சிச் சொற்களை மேலாய் வும் திருத்தங்களும் செய்துதந்த வல்லுநர்களில் பாவாணரும் ஒருவர். 'செந்தமிழ்ச் செல்வி'யில் 'கலைச் சொல்லாக்க நெறிகள்' பற்றி 1941இல் கட்டுரைகள் எழுதிய பாவாணர் 'கலைச் சொல்லாக்கப் பாடல்கள் 20' எனும் சுவடியை வெளியிட்டுள்ளார். 1957இல் கல்லூரிக் கலைச் சொல்லாக்கக் குழுவில் இடம்பெற்றுப் பங்களிப்புச் செய்த பாவாணர், 11.9.1958இல் கோவையில் நடந்த தமிழாசிரியர் மாநாட்டில் ஓராண்டில் தமிழில் கலைச்சொற்கள் அனைத் தையும் தம்மால் உருவாக்கிவிட முடியும் எனக் கருத்துரைத்துள்ளார்.

இங்ஙனம் கலைச்சொல்லாக்க வல்லுந ராகத் தனித்தமிழியக்கம் சார்ந்தவர்களாலும், அரசினராலும் கண்டறிந்து ஏற்கப் பெற்றுள்ளார் பாவாணர்.

விருதுகள் பெற்ற அறிஞராக

பாவாணரின் பல்துறை அறிவைப் போற்றியும் பல்வகைப் பணிகளைப் பாராட்டி யும் பட்டயங்கள்வழங்கியுள்ளன சில அமைப்பு கள். 1957 சூலையில் சேலம் தமிழ்ப் பேரவை, ''தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களின் தலைமையில் தமிழின் தூய்மை, தொன்மையை நிலைநாட்டும் பல்கலைக்குரிசில் திரு. ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களின் அருந்தமிழ்த் தொண்டினைப் பாராட்டித் 'திராவிட மொழிநூல் ஞாயிறு' எனச் சிறப்புப் பெயரும் பொன் முடிப்பும் வழங்கி ஒரு பட்டயம் அளித்துள்ளது.

1958இல் 'ஆட்சிச் சொல்லாக்கத்தில் பெருந்துணை புரிந்தமைக்காக'ச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் இரண்டாம் பரிசாக ஒரு பட்டயத்தை வழங்கியது. 'ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள்' எனும் நூலைத் திருத்தம் செய்தமைக்காக 4.2.1959இல் அந்நாள் கல்வி யமைச்சர் நூலை வெளியிட ஆளுநர் விட்ணுராம் மேதி 'இரண்டாம் பரிசு' அளித்துப் பாராட்டி யுள்ளார்.

புரவலர் புரந்த புலமையராக

'அடங்காத தமிழ்ப் பற்றும் மடங்காத் தன்மானமும்' கொண்ட பாவாணர் தம் கைப்பொருள் கொண்டு ஒப்பியன் மொழி நூலை 1940இல் வெளியிட்டு ஓராயிரம் உருபா இழந்தார். 'அங்ஙனந் தாங்கொணாச் சூடு கண்டதினால் அதன்பின் என் சொந்தச் செலவில் எத்தகைய நூலையும் வெளியிட மிகவும் அஞ்சினேன். துணிந்து வெளியிடப் பொருளும் என்னிடமில்லை' என்பர் பாவாணர்.

அந்நிலையில் 1931ஆம் ஆண்டு முதலே பாவாணரை அறிந்திருந்த திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சியர் வ.சுப்பையா பாவாணரின் நூல்களை வெளியிட்டும் விற்பனை செய்தும் பெரிதும் துணைபுரிந்திருக்கிறார். இதுபற்றி,

''இலக்கணம் சொல்லாராய்ச்சி மொழி யாராய்ச்சி அரசியல் வரலாறு முதலிய இலக்கியப் பொருள் பற்றியனவும், புலமக்க ளன்றிப் பொதுமக்கள் வாங்காதனவும், விரைந்து விலையாகாதனவும் ஆரிய வெறியர்க்கு மாறானவும், வெளியீட்டிற்குப் பெருஞ்செலவு செய்ய வேண்டியனவும் சிறியவற்றோடு பெரியனவுமான இயற்றமிழ் இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திரவிடத்தாய், சுட்டுவிளக்கம், முதற்றாய் மொழி, பழந்தமி ழாட்சி, மாணவர் உயர்தரக் கட்டுரை இலக்கணம் (2 பாகம்) என்னும் எண்ணூல் களோடு, நான் ஏற்கனவே வெளியிட்ட கட்டுரை வரைவியல் என்னும் நூலையும் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சி மேலாளரான தாமரைத்திரு. வ.சுப்பையாப் பிள்ளை அவர்கள் வாரமுறை யில் ஒவ்வொன்றாக வெளியிட்டு விற்புவிலை யில் ஒப்பந்தத்திற்கேற்ப உரிமைத் தொகையை யும் ஆண்டிற்கிருமுறை கணித்து ஒழுங்காக அனுப்பி வந்திருக்கின்றார்கள். இதனால் நான் ஒருபோதும் வெளியிட்டிருக்க முடியாத பல அரிய நூல் வெளிவந்து என் பெயர் உண்ணாடும் வெளிநாடும் பரவியதுடன் என் தமிழ்த் தொண்டும் பலமடங்கு சிறந்து வந்திருக் கின்றது. அவர்கள் ஒப்பந்தப்படி விடுத்துவந்த அரையாட்டைத் தொகை என் குறைந்த சம்பளக் காலத்தும் வேலையில்லாக் காலத்தும் பெரிதும் உதவியதென்பதை நான் சொல்லவேண்டுவ தில்லை. அதோடு அவ்வப்போது நான் செந்தமிழ்ச் செல்விக்கு விடுத்த வேர்ச்சொல் பற்றிய என் உரிமைக் கட்டுரை கட்கும் அவர்கள் அளித்துவந்த அன்பளிப்புத் தொகை எனக்குப் பேருதவியாயிருந்ததென்பதைச் சொல்லாமல் இருத்தற்கில்லை'' என நன்றியுணர்வோடு பாவாணர் சுட்டுகிறார்.

பாவாணர் சேலம் நகராண்மைக் கல்லூரி யில் பணியாற்றிய காலத்தில் (1944 - 56) அக்கல்லூரி முதல்வர் சேலம் அ.இராமசாமியார் பாவாணர்பால் நிறையன்புகாட்டி அவர் புலமைத் திறம் வியந்து அவரின் மொழியாய்வு சீர்மிகு முறையில் தொடரப் பல்லாற்றானும் துணை செய்திருக்கிறார்.

''இந்நூலும் ஏனை எழில்மொழி யாராய்ச்சி
நன்னூலும் நன்கிருந்து நான்செய்தேன் -
எந்நாளும்
ஏராள ஓய்வும் இணங்கும் இராமசாமி
தாராளம் தந்ததனால் தான்.

சேலங்கல் லூரி சிறந்திராம சாமியின்றேல்
ஞாலம் பரவுதமிழ் ஆராய்ச்சி - நூலியற்றும்
தேவநே யன்எங்கே தென்மொழித்
தொண்டெங்கே
பாவுதமிழ் மீட்பெங்கே பார்''

என்று இராமசாமியார் புரந்த பாங்கினையும் அதனால் தம் தமிழ்த்தொண்டு சிறந்ததையும் நெகிழ்ந்து பாடுகிறார் பாவாணர்.

இவையனைத்தும் 1959ஆம் ஆண்டிற்கு முன்பே நிகழ்ந்தன என்பது கருத்திற்கொள்ள வேண்டிய வரலாற்றுப் பதிவுகள்.

தலைவர்கள் போற்றிய தகைமையராக.

தாம் எழுதிய ஒப்பியன் மொழிநூலை வெளியிடுமாறு பாவாணர் விடுத்த வேண்டு கோளை ஏற்காத பெரியார் ஈ.வெ. இராமசாமி அந்நூலைத் தாம் பேசச் செல்லும் ஊர்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தார்.

''தமிழிரின் மொழிவளம் ஆட்சிவளம் முதலிய' துறைகள் பற்றி அரிய ஆராய்ச்சி உண்மைகள் மிளிரும் தோழர் தேவநேயப் பாவாணர் எழுதிய ஒப்பியன் மொழி நூலில் உள்ளவைகளைத் தமிழர் கற்றுணர வேண்டும்'', என்று 1945இல் அறிஞர் அண்ணா வேண்டி யுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் பாவாணர்க்கெதிராகக் கொண்டான்மார் செய்த சூழ்ச்சியறிந்த பாவேந் தர் பாரதிதாசன் பாவாணர்க்குப் பரிந்து 'இளவரசர் முத்தையா அவர்களுக்கு என் விண்ணப்பம்'' எனத் தம் 'பாவேந்தர் குயில்' இதழில் (19.8.1958, 26.8.1958, 2.9.1958, 9.9.1958) எழுதினார். மேலும், 16.8.1960இல்

''வடமொழியும் இந்தியும் மற்றும்
வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே

அந்தமிழே ஆதிஎன்னும்தேவ நேயர்தாம்
எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து''
''நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா? - பாவிகளே
தேவநே யர்க்குச் செயுந்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்''

எனக் கனன்று பாடிய பாவேந்தர் 'எவன் எவ்விடர் செயினும் இன்னும் பார் என்னும் அடல் ஏறு', 'பேரறிஞர்', 'பன்மொழி வல்லார்', 'எந்தமிழ் மேலென்று உண்மை எடுத்துரைப் போன், செந்தமிழன்! செந்நெறப்பயன்மழை' என்றெல்லாம் தம் வெண்பாக்களில் பாவாணரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

'தென்மொழி' தோன்றிய காலத்தில்

1.8. 1959இல் தென்மொழி இதழைத் தொடங்கிய போது பாவாணர் மாணாக்கர் என்று அறிமுகமாகியிருந்த துரை மாணிக்கம் 'கொய்யாக் கனி' எனும் ஒரு நூலை மட்டுமே வெளியிட்டிருந்தார். அந்நூற்குப் பாவாணர் அணிந்துரை வழங்கினார். 1963இல் தென் மொழி மீண்டும் வெளிவந்தபோது பாவாணர் சிறப்பாசிரியராக அறிவிக்கப் பெற்றார். பொதுவாக நன்கு அறிமுகமாகிப் பலராலும் மதித்துப் போற்றப்பெறுகிற ஒருவரிடம் நூலுக்கு அணிந்துரை பெறுவதும் இதழின் சிறப்பாசிரியர் என அறிவிப்பதும்தாம் வழக்காக உள்ளன. இவையே பாவாணரைத் தமிழுலகம் நன்கறிந்து கொண்டிருந்தது என்பதற்கும் பெருஞ்சித்திரனாரே பாவாணரால் அறிமுகம் செய்யப்பட வேண்டிய நிலையில் இருந்தார் என்பதற்கும் சான்றுகளாக உள்ளன.

எனினும் 'தென்மொழி'யின் தோற்றம் முதல் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாவாண ரைத் தம்பாடல்களாலும் ஆசிரியவுரைகளாலும் பிறவகையாலும் மனமாரப் போற்றியுள்ளார். பாவாணர்க்கென ஓர் அணி உருவாகப் பெருஞ் சித்திரனார் தென்மொழி வழியாக அடித்தளம் அமைத்தார். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்தை அறிவித்துச் செயற்படுத்த முயன்றார் பெருஞ்சித்திரனார்.

பாவாணர் கொள்கைகளைப் பரப்புவதி லும் அவரது இயக்க நடவடிக்கைகளுக்குத் துணைநின்றதிலும் பெருஞ்சித்திரனாருக்கும் தென்மொழிக்கும் பெரும் பங்கு உண்டு என்பது உண்மையே.

உயர்ந்தோர் தொழவிளங்கிய தன்னொளி ஞாயிறு.

இதுவரை குறிக்கப் பெற்ற செய்திகளால் 'தென்மொழி' தோன்றுவதற்கு முன்பே, பாவாணர் ஏராளமான கட்டுரை எழுதியவராக, பன்னூலாசிரியராக, களம் பல கண்ட மறவராக, பதியச் சொல்லும் பொழிஞராக, கலைச் சொல்லாக்க வல்லுநராக, விருதுகள் பெற்ற அறிஞராக, புரவலர் புரந்த புலமையராக, தலைவர்கள் போற்றிய தகைமையராக விளங்கிப் புலமக்களாலும் பொதுமக்களாலும் நன்கு அறியப் பெற்றிருந்தார் என்பது தெளிவா கிறது. இங்ஙனம் உயர்ந்தோர் தொழ விளங்கிய பாவாணரைப் 'புலமக்களாலும் அறியப் பெறாது குடத்துள் இட்ட விளக்காக' இருந்தவர் என்று எழுதுவது உண்மைக்குச் சற்றும் தொடர்பில்லாத செயல் என்பது வெள்ளிடை மலை. மேலும் 'எவராலும் அறியப் பெறா மலும் புரக்கப் பெறாமலும் எவ்வகையிலும் உணரப் பெறாமலும் இருந்த அவரையும் அவர் அறிவையும், குன்றின் மேலிட்ட அரும்பாடு முழுக்க முழுக்கத் தென்மொழியையே சார்ந்தது' எனப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதியிருப்பது மிகையுரை மட்டுமன்று; வரலாற்று உண்மைகளுக்கு முற்றிலும் புறம்பானது; எத்தகைய அடிப்படையும் அற்றது.

பல்கதிர் விரிக்கும் சுடரொளி ஞாயிறு உலகைச் சூழ்ந்த இருளகற்றும். ஞாயிற்றுக்கு எவரேனும் ஒளி தர முடியுமா? முடியாதன்றோ? அவ்வாறே மொழிஞாயிறு பாவாணரும் அறிவுச்சுடர் கான்று, தமிழையும் தமிழரையும் சூழ்ந்த இருளகற்றிய தன்னொளி ஞாயிறாகத் திகழ்ந்தார் என்பது உண்மை; முற்றிலும் உண்மை.

பாவாணர் போற்றிய பெருமக்கள்

பெரியார்	புண்ணூற்றுக் கல்லடியும் சாணக் குண்டும் பொறுத்தலருஞ் சொல்லடியும் புகழ்போற் கொண்டு கண்ணாற்றில் கலஞ்செலுத்தும் கடுஞ்செய் கைபோற் கைதூக்கித் தென்னவரைக் கரைபபி லேற்றித் தொண்ணூற்று மூன்றாண்டு தொடர்ந்த பின்னும் துளங்காது துலங்குபகுத் தறிவுத் தொண்டால் நண்ணூற்றைத் தாண்டவரும் நோற்ற லாற்றன் நானிலத்துப் பெரியாரை வாழ்த்து வோமே.
மறைமலையடிகள்	மூவா யிரமாண்டு மோதும் வடமொழியாற் சாவாந் தகைநின்ற தண்டமிழை - மேவிக் குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த அப்பர் அமரர் மறைமலை யார்
கு.மு.அண்ணல் தங்கோ	பாட்டாளி மக்கள் பரிந்திசைத்தும் ஏழையர்வாய்க் கேட்டின்ப முற்றும் கிளர்ச்சி பெறப் - பாட்டாக ஒள்ளிய வெள்ளை உயர்பொருளை ஈந்தவன்காண் வள்ளலான் அண்ணல்தங் கோ.
வை.பொன்னம்பலனார்	மறைமலை மாணடிகள் மாண்பார் தமிழும் நிறைபெரி யாரின் நிமிர்வும் - மறலியெனும் தென்னன் திடமும் திணிந்தான் புலவோருட் பொன்னம் பலமே புகல்
கழக ஆட்சியர் வ.சுப்பையா	பாட்டும் உரையும் பதவிதரு நற்சான்றும் காட்டும் படங்கடிதம் கையெழுத்தும் - கூட்டிப் புலவர் வரலாற்றைப் போற்றுங் கலையில் வலவன்யார் சுப்பையாவல் லால்.
சேலம் இராமசாமி	சேலங்கல் லூரி சிறந்திராம சாமியின்றேல் ஞாலம் பரவுதமிழ் ஆராய்ச்சி - நூலியற்றும் தேவநே யன்எங்கே தென்மொழித் தொண்டெங்கே மேவுதமிழ் மீட்பெங்கே மேல்.
செந்தமிழ்க்கிழார்	முந்தியே ஆரியத்தால் மொய்ம்பழிந்த செந்தமிழ் பிந்திய இந்தியால் பேருமற - நைந்தழியும் எல்லைவரு முன்னே இடுக்கண் களைந்தமகன் செல்வராசன் என்றுயர்த்திச் செப்பு

தக்கார்

புலவர் கி.த.பச்சையப்பன்
துணைத்தலைவர்

உலகில் தோன்றிய முதன்மொழி தமிழ். முதன் முதலில் மாந்தன் பேசிய மொழி தமிழ். உலகில் தோன்றிய மொழிகட்கெல்லாம் மூலமொழி தமிழ். திராவிட மொழிகட்கெல்லாம் தாய்மொழி தமிழ் என்றெல்லாம் தம் நுண்ணிய மொழியாராய்ச்சியால் உலகிற்கு நிறுவிக்காட்டிய உயர்தமிழ்ப் பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழாவினைத் தமிழியக்கம் சீருஞ்சிறப்புமாகக் கொண்டாடுவது நமக்கெல்லாம் நிறைமகிழ்வினைத் தருகிறது.

நிறைமகிழ்வு நமக்கு நிலைக்குமாறு இருப்பதாக நினைக்கத் தோன்றுகிறதா தமிழகத்தின் தமிழ்மொழி நிலை?

தமிழகக் கல்வி நிலையங்களில் தமிழ் மொழிக் கல்விக்கு உரிய இடம் இல்லை. தமிழகத்தின் சந்துபொந்துகளில் எல்லாம், மூலை முடுக்குகளில் எல்லாம் ஆங்கில வழி மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப் பதினிலைப் பள்ளிகள் கிளைகள் பலவிட்டு விழுதுகள் பல ஊன்றிப் பழுதுகள் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்ப் பண்பாட்டுத் தளங்களைத் தரை மட்டமாக்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ் அம்மை, அப்பன், அத்தை, மாமன் மறைந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். ''மம்மி, டாடி''களும், ''ஆண்ட்டி அங்கிள்''களும் அன்றாடம் நம் அடுப்பங்கரைக்கே வந்து போகிறார்கள். இது ஏதோ அயல்மொழி கற்றல் என்று அமைதியாக இருந்துவிட முடியாது. இவை தமிழ் அழிப்புத் தொடக்கம்.

''தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய்'' ஆண்ட போதுங்கூட ஆங்கில மழலையர் பள்ளிகட்கும், பதினிலைப் பள்ளிகட்கும் அளவிடற்கரிய ஆக்கமும் ஆதரவுங் கொடுப்பது தடுத்து நிறுத்தப்படாதது மிகப் பெரிய கொடுமையாகும். தமிழ்வழிக் கல்விக்குத் தலைமையிடம் தரத் தகுமுயற்சி இல்லை. தமிழமைப்புகளைத் தடுத்து நிறுத்தத் தயங்கவில்லை. தமிழரைத் தமிழராக வளர்த்தெடுக்கத் தவறினர்.

தவறியதன் விளைவு தமிழ்நாட்டைத் தமிழன் தவிரப் பிற இனத்தவர். தலைமையேற்று அரசாளும் அடாத நிலை ஏற்பட்டது. வந்தேறிகளின் வளர்ப்பிடமாகத் தமிழ்நாடு வாய்த்துள்ளதை எண்ணின் மனங் காய்கிறது.

தமிழகத்தை ஆள வந்தோர், ''தன்பெண்டு தன்பிள்ளை சம்பாத்தியம்'' என்னும் தன்னல வட்டத்துள் வாழத் தொடங்கியதன் தீய விளைவே தமிழகத்தின் இழிநிலைக்குக் காரணம் என்பதைத் திண்ணமாக எண்ணல் வேண்டும்.

''தமிழ் நாட்டில் அரசியல் துறையில் தலைமை தாங்கி வழிகாட்ட ஒருவர் இல்லை'' என்று 51 ஆண்டுகட்கு முன்னர்ப் பாவாணர் எழுதினார். அவர் கூற்று இன்றும் பொய்க்கவில்லை.

எண்ணிலடங்கா இடையூறுகளில், இன்னல்களில், வறுமைத் துன்பத்துள் ஆழ்ந் திருந்தபோதும் உள்ளந் தளராமல், ''சொல்லா ராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் எனக்கு இயல்பான இன்பந்தரும் கலைகள்'' என எழுதப் பாவாணரைத் தவிர வேறெவர் துணிந்து எழுத உள்ளார்? ஒரு சிறு ஏந்து தவறினாற் கூட ஒய்ந்து ஒதுங்கிப் போவோர் உள்ள உலகமன்றோ இது.

''வடமொழி வரலாறும் தலைநாகரிகமும் புகழ் வேண்டி எழுதுபவை அல்ல. தமிழை வடமொழியினின்று மீட்டற்கு எழுதுபவை'' என்று பாவாணர் அன்றைக்கே எழுதினாலும், இன்றைக்கும் அயல்மொழி ஆங்கில வல்லாண் மையிலிருந்தும் இந்தி வல்லாண்மையிலிருந் தும், தமிழ் மொழியை மீட்க வேண்டிய பெரும் பொறுப்புத் தமிழியக்கத்தினர்க்கும், தமிழார் வலர்க்கும், ஆசிரியர் கழகத்தினர்க்கும், தொழி லாளர் கழகத்தினர்க்கும் மிகுதியும் உள்ளது.

ஏனெனில் தமிழ்த் திரைப்படங்கட்குக் கூடத் தமிழில் பெயரிடாமல் ஆங்கிலத்திலும் வேறு பிற மொழிகளிலும் பெயரிடுகின்றனர். உரையாடல்களில் ஆங்கிலம் அளவிடற்கரியது. இந்தியையும் சேர்த்துப் பேசுகின்றனர். தொலைக்காட்சிகளில் ஆங்கிலத் தொல்லையும் அருந்தமிழ்க் கொலையும் சொல்லி மாளாதன. இவை தமிழர்க்குக் காட்டு விலங்குகள்; நாட்டுக் குள் புகுந்துள்ளன; வீட்டுக்குள்ளும் நீட்டு கின்றன வாலை. வேட்டையாட வேண்டியவர் கள் வீண் வேலை செய்கிறார்கள்.

கன்னடத் திரைப்படத்தில் தமிழ் உரை யாடல்கள் வந்ததற்காகத் தமிழ்த் திரைப்படத் தைத் திரையரங்குகளில் காட்டக்கூடாது என மறித்துத் தடை செய்துள்ளனர் கன்னட வெறியர். தமிழ் நடிகர்களை விரட்டியடித்தனர். அந்த அளவுக்குக் கன்னடர் மொழிவெறியுடன் செயற்படுகின்றனர்.

ஆனால் நந்தமிழர், தமிழர் தலைவர் எனப்படுவோர் கன்னடனைக் கன்னடத்தியை முறையே வருங்கால முதல்வரெனவும் தலைவி எனவும் போற்றித் தலைமேல் வைத்தும் காலில் விழுந்தும் தம்மைக் கடையரினும் கடைய ராக்கிக் கொள்கின்றனர்.

தமிழ் நாட்டுக்குக் காவிரிநீர் தரமறுத்த தேவகௌடாவைத் தலைமையமைச்சராக்கி யவர் தமிழர் தலைவர்தாமே. தமிழனைத் தலைமையமைச்சராக்கும் வாய்ப்பை மறுத்தவர் அவர்தாமே.

தமிழியக்கத்தாராகிய நாம் இன்னும் எத்தனை பொறுப்புணர்ச்சியுடன் தமிழ்ப் பணியாற்ற வேண்டியுள்ளது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டியுள்ளது.

மக்கட்கு, விழிப்புணர்த்தவும், செழிப் புள மொழி செழுந்தமிழே என வற்புறுத்தவும் நம்மனோர்க்கு நாளும் பணிகள் உள.

''தக்கார் ஒருவர் தலைமை யெடுக்கா விடின் தமிழ்நாடு அமிழ்நாடே'' எனப் பாவாணர் தேடிய தக்கார் தலைமை தமிழியக்க மாகத் தமிழ்ப்பற்றாளராக ஏனிருந்து செயற்படக் கூடாது?

தெருவெல்லாம் தமிழ் முழக்கஞ் செழிக்கச் செய்யவும் கெடலெங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்யவும் ''ஓர் கூட்டம்'' வேண்டும் என்பார் பாவேந்தர். அந்த ''ஓர் கூட்டமாக'' நாம் இருந்து உறுதியாகத் தமிழியக்கச் செயலாற்றுவோம்.

தமிழ்மொழி ஞாயிறு

வே. முத்துலக்குமி

உலகொளி பரப்பும் ஒளிமிகு ஞாயிறாய்த்
தமிழ்மொழி தனியொளி தரணியில் பரப்பிய
எழுசுடர் ஞாயிறு இசைப்பா வாணர்
எழுத்தால் உரையால் இன்றமிழ் காத்தவர்
மறைமலை அடிகளின் மனத்தில் நிறைந்தவர்
தனித்தமிழ் இயக்கம் தழைத்திட உழைத்தவர்
தமிழ்மொழிக் காவலர் தமிழ்மொழி ஞாயிறு!
சிந்தையே தமிழெனும் செந்தமிழ்ச் செல்வர்
செந்தமிழ் ஞாயிறு தேவ நேயரே!

கழக வ.சு.வும் மொழிஞாயிறும்

முனைவர் இரா. முத்துக்குமாரசாமி, சென்னை

தமிழ் மொழி, இனம் ஆகியவற்றின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்தும் செலுத்திவந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகள் அடிபொற்றிப் பணியாற்றிவந்ததால் அந்த உணர்வு கொண்ட தமிழறிஞர்களைத் தன் பக்கம் ஈர்த்து வந்தது. அவ்வகையில் தனித்தமிழ் உணர்வு கொண்டு திகழ்ந்த மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரையும் கழகம் ஈர்த்ததில் வியப்பில்லை. தனித்தமிழ் உணர்வை ஊட்டுவதற்குச் 'செந்தமிழ்ச் செல்வி' எனும் மாத இதழைக் கழகம் தோற்று வித்து அதனை ஒரு போர்வாளாகப் பயன்படுத்தி வந்தது. இதில் கழகத்தைத் தோற்றுவித்த வ. திருவரங்கனாரும் அவர்தம் தம்பியான வ. சுப்பையாவும் இடர் பல ஏற்படினும் கொண்ட கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை. வ.சு. வும் பாவாணரும் 1930 முதல் நெருக்கமாயினர்.

மன்னார்குடி பின்லே கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த பாவாணர் 1-7-1931இல் வ. சுக்கு எழுதிய கடிதத்தில் அவர்தம் தனித்தமிழ் நடையின் வீச்சைக் காணலாம்.

"கடிதங்களும் பணமும் கைவயம். இங்கே நான் எள்ளளவும் எதிர்பாராத ஓர் இடர்ப்பாடு எனக்கு நேர்ந்துள்ளது. பஞ்சாபிகேசையர் (பி.ஏ., எல். டி) என்பார் ஒருவர். இதுகாறும் கால அட்டவணை மட்டும் வரைந்து வந்தவர், காலேஜ் கணக்காசிரியர் இன்று துரையின் இளக்காரத்தினிமித்தம் பலவகையில் தலையிட்டு, நான் உங்களிடம் ஏதோ பணம் பெற்றுக்கொண்டு உங்கள் வெளியீட்டு நூல்களை வைத்திருப்பதாகப் பொய் சொல்லி விட்டார். துரையும் சிறிதும் மூளையின்மையால் நம்பிக்கொண்டார். இன்னோர் இடர்ப்பாடும் எனக்கு நேர்ந்திருக்கிறது. அதைப் பற்றி அடுத்த கடிதத்தி லெழுதுவேன். வேலைக்கு மட்டும் கேடில்லை. பண்டிதர்க்குரிய உரிமையும் அதிகாரமும் எடுபட்டன. நான் சென்ற வாரமே வேலையை விடுவதற்கிருந் தேன். ஆனால் ஒரு பயனோக்கி இவ்வாண்டு முழுதும் இருக்கத் துணிந்தேன்".

தொடக்க முதலே கழகமும் பாவாணரும் ஒரு குறிப்பிட்ட இனத்தாரால் ஒதுக்கப்பட்டனர். ஆனாலும் இதிலும் எதிர்நீச்சலிட்டு இருவரும் தத்தமக்குரிய புகழை நிலைநாட்டிக் கொண்டதுதான் வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்தியாகும்.

கழகத்திற்காகச் சிறுசிறு இலக்கண நூல்களையும் துணைப் பாட நூல்களையும் பாவாணர் தொடக்கத்தில் எழுதலானார். கழகத்திற்கும்

தமக்கும் நெருக்கம் ஏற்பட்டுவிட்டதென 29-7-1931இல் எழுதும் பாவாணர் "உங்களைப் பற்றித்தான் எனக்கு நல்லெண்ணம். பிறரைப் பற்றி எனக்கில்லை. உலகம் அழுக்காறு நிறைந்தது. செல்விக்கு மட்டும் என் ஆயுள் வரையும் சிறந்த கட்டுரைகள் ஒழுங்காய் அனுப்பிக்கொண்டிருப்பேன்." என்று வ. சு.வுக்கு எழுதினார். 1931இல் எழுதியது போல பாவாணர் மறையும் வரை செல்விக்கு இடையீடின்றிக் கட்டுரைகள் எழுதித் தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருந்த கூனலை நிமிர்த்தி, தமிழின் தனித்தன்மையையும் தலைமைத் தன்மையையும் நிலைநாட்டினார்.

உலக மொழிகள் அனைத்துக்கும் மூல மொழி தமிழே என்பதை நிலைநாட்டுவதே என் நோக்கம் என்று அதனைத் தம் வாணாள் குறிக்கோளாக அறிவித்திருந்த பாவாணர் அதற்குச் செல்வியை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

இந்தி மொழி தமிழகத்தில் திணிக்கப் பட்டபோது வ. சு. வும், பாவாணரும் இதனைத் தத்தம் பொறுப்பு கருதி நேரடியாக இல்லாது மறைமுகமாக எதிர்த்தனர்.

"ஹிந்தியைப் பற்றி, ஏதேனும் புரட்சி அல்லது மறுப்புக் கூட்டம் அங்கு நிகழ்ந்ததா? இங்குள்ள பண்டித சங்கம் சென்ற வாரம் ஓர் எதிர்ப்புத்தீர்மானம் நிறைவேற்றியது. இன்று மாலை நகர மண்டபத்தில் ஹிந்தியெதிர்ப்புக் கூட்டமொன்று நிகழப் போவதாகக் கேள்வி" என்று பாவாணர் திருச்சியிலிருந்து எழுதினார் (23-8-1937).

செல்வியில் சொற்பிறப்பாராய்ச்சி பற்றிக் கட்டுரை எழுதவிருப்பதாகத் தம் எண்ணத்தை வெளியிட்டவுடன் வ. சு. அது பற்றி விளக்கம் கேட்கிறார். "வேர்ச் சொல் வரிசையைப் பற்றி நீங்கள் மாதிரி கேட்பது வியப்பாக யிருக்கிறது. உங்கள் ஐயத்தையும் குறிக்கின்றது. அறிஞரை நம்பி அவர்வயின் நூல்வினையை ஒப்புவிக்கும் திறன் இன்னும் நம்மவர்க் கேற்படவில்லை" என்று குறிப்பிட்டுவிட்டு (31-7-1940) 'இறு' என்னும் சொல்லுக்கு விளக்கம் தருகிறார். இப்பணியே விரிவாகிச் செல்வியில் வெளிவந்த தொடர் கட்டுரைகளாக ஏறத்தாழ 40 ஆண்டுகள் வெளியாயின.

தமிழ் வளர்ச்சிக்கெனத் தனியாக ஓர் அமைப்பு வேண்டுமென்பதில் இருவரும் உறுதியாக இருந்தனர். "சென்னையில் நாம் ஏற்படுத்திய 'தமிழறிஞர் கழக'த்தைத் தலைமையாக வைத்துக் கொண்டு, கோட்டந்தோறும், கூற்றந்தோறும் கிளைகளும், சிறு கிளைகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்' என்று திருச்சியிலிருந்து பாவாணர் (23-10-1941) எழுதுகிறார்.

இதுவே பின்னாளில் உ. த. க. என்னும் உலகத் தமிழர் கழகம் தோன்றக் கரணியமாக இருந்ததெனலாம்.

வ. சு. வும், பாவாணரும் நெருக்கமாக யிருப்பினும் கணக்கு என்று வரும்போது சில சமயங்களில் பிணக்கு ஏற்படும். பின்னர் அது சரி செய்யப்படும். ஆனாலும் இதையும் மீறி ஏற்பட்ட ஒரு பேரிழப்பைக் குறிப்பிடல் வேண்டும். மிக விரிவான பழமொழி அகர வரிசையைத் தொகுக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டுப் பாவாணர் பதின்மூவாயிரம் பழமொழிகளைத் தொகுத்தார். இதைக் கழகம் வெளியிட வேண்டுமென்று வ. சு. வுக்கு எழுதுகிறார்.

"பழமொழியகராதியை வாரமுறையில் வெளியிட எனது இற்றையலுவல் இடந்தரவில்லை. ஆசிரியர் வாரமுறையில் நூல்களை வெளியிடக் கூடாதென்பது (சேலம்) நகராண்மைக் கழக விதி. ஆதலால் உரிமையைத் தான் விற்க வேண்டும். எ00ரூக்குக் கேட்கின்றீர்கள். இன்னும் ஒரு நூறு கூட்டி அ00 ஆகக் கொடுத்துவிட்டீர்களாயின் காரியம் முடிந்துவிடும். பிற அறிஞர்க்கு, சிறப்பாகப் பார்ப்பனருக்குத் தெரியாத பல பழமொழிகள் உலக வழக்கினின்று தொகுக்கப்பட்டுள்ளன. ஆதலால் ஒரு நூற்றைக் கவனியாது உடனே இசைக." (13-7-1946)

ஒரு நூறு ரூபாய் வேறுபாட்டினால் இம் முயற்சி கைவிட்டுப் போயிற்று. பின்னர் அது சேரக்கூடாத ஒருவர் கையைச் சேர்ந்து, தமிழ் மக்களுக்குக் கிடைக்காமலே போயிற்று. இது தமிழுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பு.

"குமரி நாட்டுக் கொள்கையும் தனித் தமிழ்க் கலைக் கொள்கையும் பற்றி அவர்கள் (பாவாணரின் பல்கலைக்கழக இடுநூற் கட்டுரையை மதிப்பிட்டவர்கள்) என்னை வெறுப்பதால் யான் பார்த்தும் பயனில்லை." (28-3-1959)

குமரிக்கண்டமே மாந்தனின் பிறப்பிடம் என்னும் கொள்கையிலும் தனித் தமிழ்க் கொள்கையிலும் பாவாணர் உறுதியாக இருந்த தால் அவர்தம் இடுநூல் ஏற்றுக் கொள்ளாமற் போயிற்று. கழகமும் இவ்விரு கொள்கை களிலும் உறுதியாக இருப்பதனால் இன்றும் எதிர் நீச்சல் போடும் நிலையிலேயே உள்ளது.

பாவாணர் திருக்குறள் மரபுரை அச்சிடும் பணியில் ஈடுபட்டிருந்த போது கண்ணறுவை செய்து கொண்டதால் அச்சுப்பணி தடைப் பட்டது. வ. சு. வுக்கு அதை முடித்துத்தர எழுது கிறார். 'என்னால் ஒன்றும் செய்ய இயலாது. ஆதலால் தாங்கள்தான் சென்னை திரும்பிய வுடன் (நெல்லையிலிருந்து) அன்புகூர்ந்து, முழுப்பொறுப்பையும் ஏற்றுத் திருக்குறள் வேலையை விரைந்து முடிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்" (காட்டுப்பாடி, 26-11-1969). பணி முடிந்தது பற்றி மரபுரை முன்னுரையில் பாவாணர் எழுதியதை நூலில் காணலாம்.

பாவாணரின் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை அரசு ஏற்றுக் கொண்டு அவரைத் தலைமைப் பதிப்பாசிரியராக அமர்த்த வேண்டுமென்று தவத்திரு. குன்றக்குடி யடிகளாருடன் இணைந்து ஆட்சியாளர்களை அடிக்கடி வ. சு. பார்த்துப் பேசி அதில் வெற்றி கண்டார். அதற்கான அலுவலகம் சரியாக அமையவில்லையே என்று வ. சு. வருந்தினார். 'செல்வி' யில் இது குறித்துத் தலையங்கம் எழுதினார். அலுவலகம் சரியாக அமையாத தால் பாவாணர் தம் இல்லத்திலிருந்து கொண்டே அரசுப் பணியைச் செய்தார். அங்கிருந்து மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்றார். அங்கேயே மறைந்தார்.

தம்மை யாரும் சரியாகப் போற்ற வில்லையே என்று அவ்வப்போது வ. சு. வுக்கு எழுதுவார்.

'ஒரு மொழி வளர வேண்டுமெனின் அம்மொழி அடியாரைப் போற்றல் வேண்டும். அம் மொழித் தொண்டரைப் போற்றல் வேண்டும். இத் தமிழ் நாடு மறைமலையடி களையும் போற்றவில்லை. என்னையும் போற்றவில்லை. ஒரு சில தமிழன்பர் இல்லா விடின் நான் இதுவரை உயிரோடிருந்திருக்க முடியாது.'(8-12-1969)

"தகுதியற்ற ஒரு தன்னலப் பொறாமைக் கூட்டுக் கொள்ளைக் கூட்டம் அரசியல் துறையிலும் பல்கலைக் கழகத்திலுமிருந்து தமிழைக் கெடுத்து வருகிறது. நான் தமிழுக் காகப் பட்ட பாட்டை இறைவன்தான் அறிவான். என் பணிக்கு இறைவன் துணை யுண்டென்று நம்பிக்கையினால் இன்றும் இதில் ஊன்றியிருக்கின்றேன்." (20-8-1970)

கழகத்தால் பாவாணர் சிறப்புற்றதும் பாவாணரால் கழகம் சிறப்புற்றதும் நாடறியும். வ. சு. வின் பவள விழா மலருக்கு எழுதிய பாவாணர் "வ. சு. பிள்ளையால், நான் ஒரு போதும் வெளியிட்டிருக்க முடியாத பல அரிய நூல்கள் வெளிவந்து என் பெயர் உண்ணாடும் வெளிநாடும் பரவியதுடன், என் தமிழ்த் தொண்டும் பன் மடங்கு சிறந்து வந்திருக் கின்றது' என்று குறிப்பிட்டுள்ளார்.

1931இல் 'மொழி ஆராய்ச்சி' என்னும் முதல் கட்டுரையைச் 'செல்வி' யில் எழுதிய பாவாணர் 1982இல் 'தமிழரின் பிறந்தகம்' என்ற இறுதிக் கட்டுரைவரை நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் நூல்களும் எழுதி வ. சு. வுடன் தம் நட்பை உறுதி செய்து வாழ்ந்தார்.

1973 பிப்பிரவரித் திங்கள் ஏழாம் நாள் பாவாணர் அவர்களின் எழுபத்திரண்டாம் பிறந்தநாளை முன்னிட்டு அளிக்கப்பட்ட துண்டறிக்கை

பாவாணர் - என்பவர் யார்?

உலகின் முதற்செம்மொழியாகிய தமிழ்மொழியின் தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகிய பதினாறு பண்புகளையும் மறைத்தும்; திரித்தும், மழுப்பியும், குழப்பியும் வரும் ''மேலை ஆரிய'' மேய்ப்பர்களுக்கும்; 'கீழை ஆரிய' ஏய்ப்பர்களுக்கும் அறைகூவல் விடுக்கும் நிறைநூற் பெரும்புலவர்!

ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெலாரையும் மிஞ்சி, தப்பிலக்கணம் கண்ட புல்லரும் அஞ்ச - மொழியியலில் ஆணிவேருக்கும் மூலங்காட்டி வரலாற்றியலில் சல்லி வேரையும் கல்லிக்காட்டும் மொழியாராய்ச்சி மூதறிஞர்!

நல்லமரத்து புல்லுருவிகட்கும், சாரத்தை உறிஞ்சி ஈரத்தில் முளைத்த காளாம்பிகட்கும், பயிரை மேயும் வேலிகட்கும், இலக்கணங்களாய்த் திரிந்திழியும் இற்றைத் தமிழகக் கூலிப் புலவர்கட்குமிடையே, மொழித் தூய்மைக்கும், இனக்காப்பிற்கும் வழிகாட்டியாய் உலவும் வல்லரிமா!

குறைமதியார் தேக்கிவைத்த கறையிருளை நீக்கவந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார்!

தன்மதிப்பின் கொடுமுடியாய், தன்னுரிமை முகில் இடியாய் ஆர்த்திலங்கும் சீர்த்தியினார்!

நன்றிகொன்ற தமிழினத்தின் பன்றித்தனத்தால் புகழ் மறைக்கப்பட்டும், புறந்தள்ளப்பட்டும் குமைந்துருகும் ஈகஎரி! அமைந்தொளிரும் குடவிளக்கு!

மடமைத் தமிழரின் அடிமைத் தனத்தால் மிடிமை வாய்ப்பட்ட கடமைக் காவலர்!

அவர்தாம் நம் திரவிட மொழியியல் ஞாயிறு திரு. ஞா.தேவநேயப் பாவாணர்!

நேற்றுப் பிறந்த நாற்றக் குளுவான்களின் பிதற்றல்களையும்கூட ஆரியஇனம் தலைமேல் தாங்கிப் பாராட்டி வலம்வரும் போது, நம் பாவாணர் அவர்களின் ஈக வாழ்வின் எச்சங்களாயும், ஆராய்ச்சி வன்மையின் உச்சங்களாயும் வெளிவந்தும், வராமலும் இருக்கின்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட அரும்பெரும் நூல்களை தலைமேல் ஏந்திப் பரப்புவது, இன்று தமிழறிந்தார் ஒவ்வொருவரின் புறப்பகையின் வல்லாண்மைக்கும் உட்பகையின் புல்லாண்மைக்கும் இறுதியாயும், உறுதியாயும் சாவுமணியடித்து மூவாத் தமிழின் முன்மைச் செழிப்பையும், சொன்மைக் கொழிப்பையும் முழுதுலகும் அறியச்செய்யு முகத்தான், அவரால் தற்பொழுது தொகுக்கப்பட்டு வருவதே ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி'' யாகும்.

தமிழ்மொழியின் தொன்மையும், வன்மையும், அகற்சியும், ஆழமும் இக்கால மொழிநூலுக்கும், ஒலிநூலுக்கும் ஒத்த வகையில் மெய்ப்பிக்கப்பட்டு அஃது உலக மொழியாக வழங்குவதற்கு ஏற்றதென் பதை எண்பித்துக் காட்டும் இப்பேரகர முதலி தமிழின் வரலாற்றில் எவரும் செய்யாத, செய்ய முடியாத அரும்பெரும் முயற்சியாகும்.

தமிழ் உள்ளிட்ட பதினெட்டு திரவிடமொழிகளையும், தமிழ் மூலங்கொண்ட சமற்கிருதம் உள்ளிட்ட வட இந்திய கீழையாரிய மொழிகள் பலவற்றையும் முறைப்படி பயின்று ஆராய்ந்து இன்று உலகின் ஒப்புயர்வற்ற ஒரே மொழியாராய்ச்சிப் பேரறிஞராய்த் திகழும் பாவாணர் அவர்கள், மறைந்த சான், கென்னடி போன்றவர்களுக்கு ஈடாக ஆங்கிலத்தில் நுணுகப் பேசும் ஆற்றல் பெற்றிருந்தும்கூட, தம் கல்விச் சிறப்பை வயிற்றுப் பிழைப்பாக்கக் கருதாது தமிழ்க்கு உழைத்து வருகின்றார்.

தமிழுக்குத் தென்றலாயும், பகைவருக்குப் புயலாயும் விளங்கும் இவருடைய ஆராய்ச்சிகளால் நம் பகைவர்களின் 5000 ஆண்டுக்கால ஏமாற்றுகளும், தில்லுமுல்லுகளும், கீழறுப்புச் சூழ்ச்சிகளும் அம்பலமாயின. ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய உலக முதல் உயர்தனிச் செம்மொழியாகிய தமிழின் பெருமை உயர்ந்தது.

அருமைத் தமிழர்களே!

பாவாணரைத் தெரிந்து கொள்ளுங்கள்! அவர்வழி நின்று மொழித் தொண்டாற்றும் தமிழியக்கத்தின் வினைப்பாடுகளில் பங்குகொள்ளுங்கள்! தனித்தமிழ்த் தாளிகைகளை தவறாமல் படியுங்கள்! தமிழன்னையின் அடிமைத் தளைகளை அரிந்து தள்ளுங்கள்!

வெல்க தமிழினம்! வாழ்க பாவாணரின் புகழ்!

தி.பி. 2004 இவண்,
சுறவம் (தை) 25 மாணவர் தமிழியக்கம்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

துணைவியார் நேசமணி அம்மையாருடன் பாவாணர்

பாவாணர் இல்லத்தில்...



கலைக்களஞ்சியத்துடன் அறிவுக்களஞ்சியம்



பாவாணருடன் திருவாளர்கள் தமிழநம்பி,
பெருஞ்சித்திரனார், முல்லைவாணன், தே.மணி

கழக ஆட்சியர் வ.சுப்பையா அவர்களுடன்
உரையாடும் பாவாணர்

பாவாணருடன்
தலைமாணாக்கர் பெருஞ்சித்திரனார்.

உலகத் தமிழ்க் கழக முதல் மாநாடு, பறம்புக்குடி - 28, 29.12.1969
வரவேற்புரையாற்றும் பேரா. மு.தமிழ்க்குடிமகன்

மாநாட்டில் திருக்குறள் தமிழ் மரபுரை வெளியீட்டு நிகழ்ச்சி

மேடையில் :
முனைவர் சி.இலக்குவனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார், செங்கை செந்தமிழ்க்கிழார், மொழிஞாயிறு பாவாணர், பேரா. கோ.நிலவழகனார், அரிமாப்புலவர் மீ.மு.சின்னாண்டார், புலவர் குழந்தை (உரையாற்றுகிறார்)

உலகத் தமிழ்க் கழக
மாநாடு - பட்டிமன்ற நடுவரான
தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன்
பாவாணர்



பாட்டரங்கில்
'தென்மொழி' ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்



பாட்டரங்கில்
பேரா. இளவரசு

மேனாள் தமிழக
முதல்வர்
ம.கோ.இராமச்சந்திரன்
பாவாணருக்குச்
செந்தமிழ்ச் செல்வர்
விருது அளித்தல்

பாவாணர் நூல்களை நாட்டுடைமை ஆக்கி, மேனாள் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பாவாணரின் மகன் திரு. மணிமன்றவாணனிடம் பரிவுத்தொகை வழங்குதல். உடன் மேனாள் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மு.தமிழ்க்குடிமகன் மற்றும் மேனாள் கல்வியமைச்சர் திரு. க.அன்பழகன்.

தஞ்சையில் 7.2.2001 அன்று தமிழியக்கம் நடத்திய பாவாணர் நூற்றாண்டுத் தொடக்க விழாவில்
திருவாளர்கள் முனைவர் ந.அரணமுறுவல், புலவர் இரா.இளங்குமரன், பேரா. பி.திருமுதுகுன்றன்,
சட்டமன்ற உறுப்பினர் திரு. உபயதுல்லா, பேரா. கு.பூங்காவனம்,
திரு. மணிமன்றவாணன், முனைவர் மு.இளமுருகன்

தமிழ்நாட்டரசு நடத்திய பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா - சென்னை - 8.2.2002
தமிழக முதல்வர் திரு. ஓ.பன்னீர்செல்வம் உரையாற்றுகிறார். மேடையில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன், தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறைச் செயலாளர் இராமையா, இ.ஆ.ப., கல்வி அமைச்சர் முனைவர் மு.தம்பிதுரை, புலவர் புலமைப்பித்தன், முனைவர் மு.தமிழ்க்குடிமகன், திரு. மணிமன்றவாணன்

தமிழ்மண் பதிப்பகம் நடத்திய பாவாணர் நூல்கள் வெளியீட்டு விழா
சென்னை – 1.12.2001

முனைவர் பொற்கோ, சட்டமன்றப் பேரவைத் தலைவர் முனைவர் கா.காளிமுத்து,
பதிப்பக உரிமையாளர் கோ.இளவழகன், கல்வியமைச்சர் முனைவர் மு.தம்பிதுரை மற்றும் முனைவர் மு.தமிழ்க்குடிமகன்

பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வின் பயன்

புலவர் இரா. இளங்குமரன், அல்லூர்.

பாவாணர் பிறப்பினால் பைந்தமிழ் பெற்ற பெருநலம், வேர்ச்சொல் ஆய்வாகும். அவ்வாய்வின் பயன்பாடோ காலமாரியாய்க் கவின் செய்வதாம்.

பாவாணரின் வேர்ச் சொல் ஆய்வுப் பயனை அறிய வேண்டும் எனின், அவர்தம் ஆய்வு அரும்ப வாய்த்த தூண்டலை அறிதல் வேண்டும். அவர் ஆய்வே, பயன்நோக்கிய ஆய்வு என்பது வெள்ளிடை மலையாம். அதனை 'ஒப்பியன் மொழிநூல்' முகவுரையில் சுட்டுகிறார்:

''பள்ளியிறுதி, இடைநடுவு, கலைஇளைஞர் முதலிய பல்வகைத் தேர்வு கட்கும் உரிய தமிழ்ச் செய்யுட் பாடங்களுக்குத் தொடர்ந்து உரை அச்சிட்டு வரும் சில உரையாசிரியர்கள், தமது வரையிறந்த வடமொழிப் பற்றுக் காரணமாகத் தென் சொற்களையெல்லாம் வடசொற்களாகக் காட்டவே இவ்வுரை எழுந்தனவோ என்று தனித்தமிழர் ஐயுறுமாறு,

கலை - கலா; ஆவீறு ஐயான வடசொல்;

கற்பு - கற்ப என்னும் வடசொல்;

சேறு - ஸாரம் என்னும் வடமொழியின் சிதைவு;

உலகு - லோகம் என்னும் வடசொல்லின் திரிவு;

முனிவன் - மோனம் என்னும் வடசொல் அடியாய்ப் பிறந்தது;

முகம் - வடசொல்;

காகம் - காக என்னும் வடசொல்;

விலங்கு - திரியக்ஸ் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு;

- எனப் பல தூய தென் சொற்களையும் வடசொற்களாகத் தமது உரைகளில் காட்டி வருவது பத்தாண்டுகட்குமுன் (1930) என் கவனத்தை இழுத்தது. உடனே அச்சொற்களை ஆராயத் தொடங்கினேன்'' என்கிறார்.

தூய தென் சொற்களையும் வடசொற்களாகத் தம் வரையிறந்த வடமொழிப் பற்றுக் காரணமாக உரையாசிரியர்கள் காட்டியதே பாவாணரை ஆய்வுக்குத் தூண்டியது என்பது விளங்கும்.

பாவாணரின் ஆய்வு, 'எவ்வாய்வு' என்றும், 'அஃது ஆயப்பட்ட முறை என்ன' என்றும், 'அதன் பயன்பாடு யாது' என்றும் அவரே தெளிவிக்கிறார்:

(வடமொழி என உரையாசிரியர்களால் சொல்லப்பட்ட சொற்களின்) ''வேர்களையும் வேர்ப் பொருள்களையும் ஆராய்ந்தபோது அவையாவும் தென் சொல்லென்றே பட்டன. அவற்றை முதலாவது வடமொழிக்கும் தென்மொழிக்கும் பொதுச் சொற்களாகவும், போலிப்பொதுச் சொற்களாகவும் கொண்டு

இவ்வுண்மையை வேறொரு மொழியினின்றும் ஒருபோகு முறையான் உணர்த்துமாறு ஆங்கிலத்திற்கும் தமிழுக்குமுள்ள பொதுச் சொற்களை ஆராயத் தொடங்கினேன்.

''சேம்பர்சு, ஸ்கீற்று என்பவர்களின் ஆங்கிலச் சொல்லியலகராதிகளைப் பார்த்த போது ஆங்கிலத்திற்கும் தமிழிற்கும் பொதுவான சில ஆங்கிலச் சொற்கள் அகப்பட்டதுடன் அவற்றின் வாயிலாகவே, அவற்றின் மூலமாகவோ இனமாகவோ உள்ள சில இலத்தீன் கிரேக்குச் சொற்களும் அகப்பட்டன. பின்பு இலத்தீன் கிரேக்கு அகராதிகளைத் துருவினேன். வேறுசில சொற்களும் எனக்குத் துணையாயின.

''அவற்றுள் Navis (நாவாய்), Amar (அமர் - அன்புகூர்) முதலிய இலத்தீன் சொற்களும், Telos (தொலை-தூரம்), Palios (பழைய) முதலிய கிரேக்குச் சொற்களும் எனக்குப் பெரிதும் வியப்பை ஊட்டின.

''இவற்றுடன் தமிழ் இந்திய ஐரோப்பிய மூலமொழிக்கு மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியிருப்பதையும், அவரும் குண்டட்டும் வடமொழியிலுள்ள திராவிடச் சொற்கள் சிலவற்றை எடுத்துக் காட்டியிருப்பதையும், பண்டைத் தமிழகம் தென்பெருங்கடலில் அமிழ்ந்துபோன குமரி நாடென்றும், அந்நாட்டிலேயே தமிழர்தலைசிறந்த நாகரிகத்தை அடைந்திருந்தனர் என்றும் தமிழ்த் தொன்னூல்கள் கூறுவதையும், மாந்தன் முதல் முதல் தோன்றினது இலெமுரியா (Lemuria) - குமரிநாடு என்று வியன்புலவர் ஹெக்கேல் கூறியிருப்பதையும், தமிழ் உலகமொழிகள் எல்லாவற்றிலும் எளிய ஒலிகளைக் கொண்டு இயற்கைத் தன்மை உள்ளதாய், அதன் சில பல சொற்கள் பலமொழிகளிலும் கலந்து கிடப்பதையும் சேர நோக்கின போது, தமிழின் தொன்மை, முன்மை, தாய்மை முதலிய தனிப்பண்புகள் புலனாயின. பின்பு, மொழிநூற்றுறையில் ஆழ இறங்கினேன்'' என்கிறார்.

மாக்கசு முல்லர், கால்டுவெல் ஆகியோர் கூற்றைத் தாம் மெய்ப்பித்ததையும் பாவாணர் குறிப்பிடுகிறார்.

''மொழிநூல் என்பது உலகமொழிகள் எல்லாவற்றையும் தழுவும் பொதுக்கலை. உலகமொழிகள் எல்லாவற்றையும் ஆரியம் (Aryan) சேமியம் (Semitic) துரேனியம் (Turanian) என்னும் முப்பெருங்குலங்களாகப் பிரித்துள்ளார் மாக்கசு முல்லர். அம்மூன்றும் ஒரு மூலத்தினின்றும் கவைத்திருக்க வேண்டும் என்று அவரே திட்டமாய்க் கூறிவிட்டார். அம்மூலத்திற்குத் திராவிடம் மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியுள்ளார். இக்கூற்றை என்னால் இயன்றவரை முயன்று மெய்ப்பித்திருக்கிறேன்'' என்கிறார்.

இம்மெய்ப்பிப்புத் தொடங்குதல் 1931 முதலே ஆகிவிட்டது என்பதைச் செந்தமிழ்ச் செல்வியில் அவர் எழுதிய 'மொழியாராய்ச்சி' என்னும் கட்டுரை வெளியிடுகின்றது (9 : 275 - 285).

''உலகத்தில் உள்ள மொழிகள் எல்லாம் துரேனியம், செமிட்டியம், ஆரியம் என முப்பெருங்கவை (பிரிவு)களாய் அடங்கும். அவற்றுள் ஒவ்வொரு கவையும் பற்பல கிளைகளாய்ப் பிரியும். ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு மொழித் தொகுதியாகும். இவற்றுள் துரேனியக் கவையில் திராவிடக் கிளைக்குத் தலைமையாகக் கருதப்படுவது அமிழ்தினும் இனிய தமிழ் மொழியே.

''ஒரு மரத்தில் சிறு கிளைகட்கு நேர் இயைபு இன்றேனும் அவற்றைத் தாங்கும் பெருங்கவைகட்கு அடிமரத்துடன் நேர் இயைபு இருப்பது போல, உலகமொழித் தொகுதிகட்குள் சிறு பிரிவுகட்கு நேர் இயைபின்றேனும் அவற்றிற்கு மூலமான பெரும்பிரிவுகட்கு நேரியைபு திட்டமாயுள்ளதாம். எல்லாக் கிளைகட்கும் மூலமான ஓர் அடிமாம் இருப்பது போல எல்லா மொழிகட்கும் மூலமான ஒரு தாய் மொழியும் இருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள மக்களெல்லாம் ஒரு தாய் வழியினராதலின் அவர் வழங்கும் மொழிகளும் ஒரு தாய் வயிற்று வழியினவாதல் வேண்டும்.''

''உலகத்தில் மக்கள் முதன்முதல் தோன்றின இடம் கி.மு. 2000 ஆண்டுகட்குமுன் இந்துமாக்கடலில் அமிழ்ந்து போனதும், தலைச் சங்கம் இருந்ததுமான குமரிநாடே. ஆத்திரேலியா, தென்னிந்தியா, தென்னாப்பிரிக்கா என்ற மூன்றும் தொடக்கத்தில் நிலத்தால் இசைந்

திருந்தன என்று மேனாட்டு அறிஞர்கள் கண்ட உண்மையே இதற்குப் போதிய சான்றாம். ஆகவே, மக்கள் முதன்முதற் பேசியமொழி தமிழேயாதல் வேண்டும்.''

- என்று அக்கட்டுரை முகப்பில் உரைக் கிறார் பாவாணர்.

இக்கட்டுரையில் ஆங்கிலம், இலத்தீனம், கிரேக்கம் என்பவற்றில் இருந்து, தமிழ் வழிப் பட்ட சொற்களாக அறுநூற்றுக்கு மேலே எடுத்துக் காட்டுகிறார்.

*1931*இல் தொடங்கிய அவ்வேர்ச்சொல் ஆய்வு *1981*இல் அவர் இயற்கை எய்தும் வரை தொடர்ந்து நிகழ்ந்தது.

''வடமொழி வரலாறும் தலைநாகரிகமும் புகழ் வேண்டி எழுதுபவை அல்ல. தமிழை வடமொழியினின்று மீட்டற்கு எழுதுபவை. இத்துணைக் காலமும் (20 ஆண்டுகளாக) இதே நோக்குடன் கற்றும் ஆய்ந்தும் இருக்கிறேன். ஆராய்ச்சி முடிந்தது. உண்மையும் கண்டு விட்டேன்'' என்று 28.3.49இல் எழுதினார் பாவாணர் (பாவாணர் கடிதங்கள் பக். 20)

வேர்ச்சொற் கட்டுரைகள் என்னும் தொடரைப் பாவாணர் எழுதிவந்த காலத்தில், 'செல்வி வாசகர்களுக்குத் தெரிவிப்பு' எனக் குறிப்பு வரைந்தார் :

''நான் 'செல்வி'யில் வெளியிட்டு வரும் வேர்ச்சொற் கட்டுரைகள் சொற்களின் திரிபையே காட்டிக்கொண்டு செல்கின்றன என்றும், அவற்றை யாளும் நெறிமுறைகளை எடுத்துக் கூறவில்லை என்றும், அதனால் அவை அறிவியலின் பாற்பட்டனவல்ல என்றும், சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் செய்யாத பலர் மறைமுகமாகக் குறை கூறுவ தாகத் தெரிகின்றது'' என்று தெரிவிக்கும் பாவாணர், தம் விரிந்த மறுப்பின் இடையே,

''ஐம்பான் ஆண்டாக மொழியாராய்ச்சி செய்தும், 'செல்வி'யில் வெளிவரும் வேர்ச் சொற்கட்டுரைகள் போன்றவற்றை எழுதியும் வரும் ஒருவனை நெறிமுறையறியாது குருட்டுத் தனமாக வரைபவன் என்பது, அறியாமையோடு அழுக்காறுங் கலந்த இருட்டடிப்பேயன்றி வேறன்று.''

என்று கூறுவதில், பாவாணரின் உழைப்புப் புலப்படும். பயனும் புலப்படும்.

மேலும், ''ஓர் உண்மை ஆராய்ச்சியாளன் ஒருநாளும் ஆராயாது இருக்க முடியாது. அவன் ஆராயாவிடினும் அவன் உள்ளம் ஆராயும். அதற்குக் கனவென்றும் நனவென்றும் ஊண் வேளை என்றும் உறக்கவேளை என்றும் இல்லை. சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சி யும் எனக்கு இயல்பான இன்பந்தரும் கலைகள்'' என்று, என் அண்ணாமலை நகர் வாழ்க்கையில் எழுதினார் (54).

மேலும் வேர்ச்சொல் நெறிமுறைகளை அறிந்து கொள்ளும் வகையை, ''என் வேர்ச் சொற்கட்டுரைகளில் எடுத்துக் காட்டும் சொற் களினின்றே எழுத்தும் சொல்லும் திரியும் முறை களைப் பொது அளவுடீதியுள்ள எவரும் அறிந்து கொள்ளலாம்'' என்கிறார் (வேர்ச். கட். 203)

இங்குக் கூறப்பட்டவற்றால் பாவாணர் எழுத்துச் சான்றாலேயே அவர்தம் வேர்ச் சொல்லின் ஆய்வுப் பயன் விளக்கமுறுகின்ற தாம். அப்பயன் :

1. உரையாசிரியர்கள் வடசொல் என்று கூறிய பலவும் தென்சொல் என்றே தெளிவாயது.
2. உலகமொழிகள் பலவற்றிலும் தமிழ்ச் சொற்கள் கலந்து கிடப்பது காணப்பட்டது.
3. தமிழின் தொன்மை முன்மை தாய்மை முதலிய தனிப் பண்புகள் புலனாயின.
4. மாக்கசு முல்லர், கால்டுவெலார் கூறிய மொழியியற் கருத்துகள் மெய்ப்பிக்கப் பட்டன.
5. மக்கள் முதன் முதற்பேசிய மொழி தமிழே யாதல் வேண்டும் என்றும், அம்மொழி தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்றும் உறுதி செய்யப்பட்டன.
6. வேர்ச் சொல் நெறிமுறைகளை எடுத்துக் காட்டும் சொற்களினின்றே அறிந்து கொள்ள லாம் என்பனவாம்.

இச்சுட்டிய குறிப்புகளையன்றிப், பாவாணர் இயற்றிய நூல்கள் அனைத்திலும் இக்கருத்துகள் மெய்ப்பிக்கப்படுதல் கண்கூடு.

அவற்றுள்ளும், 'ஒப்பியன் மொழி நூல் - திராவிடம்' என்பது, திராவிடத்தின் தாய் தமிழே என்றும், உலகமுதன் மொழி தமிழே என்றும், அது தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்றும் நிறுவுகின்றது.

'முதல் தாய் மொழி' என்பதோ, ''மூல மொழிகளுள் முதன்மையானது தமிழே என்றும், அது தோன்றிய இடம் மாந்தன் பிறந்தகமாகிய குமரி நாடே என்றும் பத்தாண்டிற்கு முன்னரே வெளியிட்டேன். அதை மெய்ப்பிக்கும் வகையில் முதலாவது இந்நூல் வெளிவருகின்றது'' என்று அதன் முகவுரையில் வரைவதே அதன் பயனை வெளிப்படுத்தும்.

'திரவிடத்தாய்' என்னும் நூல் அதன் பெயராலேயே அதன் பொருட்பயனை விளக்கி விடுகின்றது.

மலையாளம் கன்னடம் தெலுங்கு துளு ஆகிய மொழிகளின் ''உயிரும் உடம்பும் போன்ற அடிப்படையும் முக்கியமுமான பகுதிகளெல்லாம் தமிழே என்றும், ஆடையும் அணியும் போன்ற மேற்புற அணியில் மட்டும் ஆரியந் தழுவின என்றும்'' மெய்ப்பிப்பது அது.

மொழிநூல் திறவுகோல் தமிழிலேயே உள்ளது என்பதையும் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதையும் தமிழ் 'உயர்தனிச் செம்மொழி என்பதையும், குமரிக் கண்டத்தமிழரின் கூர்மதி நுட்பம் இன்னது என்பதையும் விளக்கும் நூல் தமிழ் வரலாறாகும்.

தமிழ் திரவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமும் ஆகும் என்பதை மெய்ப்பிக்கும் நூல் வடமொழி வரலாறாகும். எத்தனையோ தென்சொற்கள் வடமொழிச் சென்று வாழ்வாங்கு வாழ்கின்றன. அவை நனவாகும் காலமும் நண்ணும் என்னும் அவர் கருத்தை (செந். செல். 9.295)த் தெள்ளத் தெளிவாக நிலைநாட்டியது அது.

'தென் சொல் வடசொல்லுள் புகாது' என்னும் கருதுகோளுரைகளை மாற்றியவர் கால்டுவெலார் எனின், அதனைத் தவிடு பொடியாக்கிக் காற்றில் தூற்றியவர் பாவாணரே என்பதை விளக்கும் நூல் அது. அதனால், 'சில தென்சொற்கள் வடமொழியிலும் உண்டு' என்று 'வடமொழி இலக்கிய வரலாறு' எழுதும் காலமும் கிளர்வதாயிற்று. இது பாவாணர் வேர்ச்சொல் ஆய்வுப் பயனாம்.

இனி இவையும் வேர்ச்சொற் கட்டுரைகளும்இவ்வழிச் சொல்லாய்வு வழிமுறை ஒன்றைத் தோற்றுவித்துப் பரவிய அளவில் தொண்டாற்றி வருதலும் பாவாணர் கொடையின் கொடையேயாம். அவ்வகையில் இரா.மதிவாணனார், ப.அருளியார், அரசேந்திரனார் வரவுகளும் தரவுகளும் சுட்டத்தக்கவை. அகல், வேர்ச்சொல் விரிவு, செந்தமிழ்ச் சொல்வளம், பாவாணர் ஆய்வும் அகழ்வாய்வும் என்னும் என் நூல்களும் பாவாணர் ஆய்வு வழிப்பட்டனவே.

திரு. ஞானகிரியாரின் தமிழ் - பகுதி 1. ஆங்கிலம் என்பதும், திரு. கோ.இராமச்சந்திரனாரின் 'பிறமொழிகளில் தமிழ்ச்சொல் ஆட்சி' என்பதும், திரு.க.ப.அறவாணனாரின் 'தமிழரின் தாயகம்' என்பதும், திரு. இரா.வேங்கட கிருட்டிணனாரின் 'தமிழே முதன்மொழி' என்பதும் திரு. கு.பூங்காவனரின் 'உலக முதன் மொழி தமிழ்' என்பதும், சாத்தூர் சேகரனாரின் சில படைப்புகளும் பாவாணர் வேர்ச் சொல்லாய்வின் மேல்நிலை விளைவு ஆக்கங்களாகும். அவ்வகையில் நா.மகாலிங்கனாரின் குமரிக் கண்ட ஆய்வும் சுட்டத்தக்கதாம்.

இந்நாளில் சொல்லாய்வு, வேர்ச்சொல்லாய்வு, சொற்பிறப்பாய்வு என்றெல்லாம் கட்டுரைகள் நூல்களாகவும், இதழ்வழியாகவும் வெளிப்பட்டு உலாவர ஊற்றுக்கண்ணாக இருந்தவையும் இருப்பவையும் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வுக் கொடைகளே என்பதை மாறுபட்டாரும் மறுக்கமாட்டார். அவ்வாறே,

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்னும் தொல்காப்பிய நூற்பா மெய்ப்பிக்கப்பட்ட பெற்றிமையில், பாவாணர்க்கு ஈடிணை எவருமில்லை என்பதைத் தமிழறியும்! தமிழ் நெஞ்சுமறியும்.

இவையெல்லாம், ''பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வின் பயன்'' என்னல் சாலா. ஏனெனில், காலம் காலமாகக் கவின வந்த கொடையைக் கணக்கிட வல்லார் எவர்? ●

மண்ணில் விண்

முனைவர் இ.சுந்தரமூர்த்தி,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளார்க்குப் பின் உலகத் தமிழ்க் கழகம் கண்ட பாவாணர் ஓர் அறிவு இயக்கமாகவே விளங்கினார். மறைமலையடிகளார் அறிவுக் கடலாகவும் பாவாணர் அறிவு இயக்கமாகவும் விளங்கினர் என்று கூறலாம். மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சி, பண்பாட்டு ஆராய்ச்சி எனப் பல்துறைகளிலும் ஆராய்ந்து தன் தனித்த அடையாளத்தைப் பதித்தவர் பாவாணர். மொழி பற்றிய ஆய்வில் மட்டுமன்றிப் பாவாணர் அரசியல் பற்றிய ஆய்விலும் தம் கருத்தைச் செறிவாகப் பதித்தவர் ஆவர்.

'மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை' என்னும் அவர்தம் நூல் நல்லாட்சிக்குரிய பல்வேறு கருத்துகளையும் எடுத்துக்கூறும் அரசியல் நூல் எனலாம். ''எல்லாத் தொழிலர்க்கும் எக்காலத்திற்கும் ஏற்றதும் வகுப்பு வேற்றுமையைத் தோற்றுவிக்காததும், உடம்பியற் பண்பாட்டையும் உளவியற் பண்பாட்டையும் ஒருங்கே வளர்ப்பதும், இறைவழிபாட்டை மறுக்காததும்; தனியுடைமையை விலக்காததும், பகுத்தறிவிற்கு முற்றும் ஒத்ததும், உயரியதுமான கூட்டுடமையாட்சி அல்லது வாழ்க்கை கி.மு. அல்லது கி.பி. முதல் நூற்றாண்டிலேயே திருக்குறள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது'' என்று நூலின் முன்னுரையில் குறிப்பிடுவது கருதத்தக்கது.

பண்டைத் தமிழகம் என்பது குமரிமுனைக்குத் தெற்கில் 2000 கல் தொலைவு வரை பரவியிருந்து இந்துமாவாரியில் மூழ்கிப்போன 'குமரிக்கண்டம்' என்னும் தென்கண்டம் என்பது பாவாணர்தம் கொள்கையாகும். இக்கருத்துக் குறித்த ஆய்வுகள் இன்னும் தொடர்ந்து நிகழ்ந்து வருவது பாவாணர் தம் கருதுகோளுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைகின்றது. இங்ஙனம் அமைந்த பழந்தமிழ் நாட்டின் ஆட்சியமைப்பும், குடும்ப அமைப்பும் எவ்வாறிருந்தன என்று இந்நூலின் வழியாகத் தம் ஆய்வுக் கருத்துகளை உரைக்கின்றார் பாவாணர்.

குமரி முனையினின்று வடக்கு நோக்கிப் பனிமலை வரை ஒரு கோடி முத்தால், கிழக்கிலுள்ள தெல்லாம் முதற்காலச் சோழ நாடென்றும், மேற்கிலுள்ள தெல்லாம் முதற்காலச் சேரநாடென்றும் அறிதல் வேண்டும் என்பார். மூவேந்தராட்சியும், பெரும்பாலும் செங்கோலும் ஒரோவொருகால் அருகிக் கொடுங்கோலுமாக இருந்ததாகத் தெரிகின்ற கோவரசாகும் (Monarchy) என்பார். அரசனின் ஆட்சித்துணைவராக ஐம்பெருங் குழுவார், எண் பேராயத்தார், உறுதிச் சுற்றத்தார் என்னும் நல்வாழ்வுத் துணைவர், உடன் கூட்டத்தார் அல்லது உழையர், திருவாய்க் கேள்வி, விடையிலார் என்பார் அமைந்தனர் என்று கூறுவார். இவர்தம் துணையோடு பண்டை முடியாட்சி நிகழ்ந்தது எனவுரைப்பார்.

அரசின் பயனாகப் பாதுகாப்பு, ஒழுக்கவுயர்வு, அமைதி நிலைப்பு, தொழிலொழுங்கு, செல்வ வளர்ச்சி, அயல்நாட்டுறவு ஆகியன நன்கு அமைதல்

வேண்டும் என்பார். அரசியல் வளர்ச்சி வரலாறு என்னும் தலைப்பின் கீழ் அக்காலத்து அமைந் திருந்த கிரேக்க அரசு, உரோமவரசு, பின்னர்த் தோன்றிய ஆங்கில நாட்டரசு அமெரிக்க ஒன்றிய நாடுகளின் அரசு, பிரெஞ்சு அரசு, சுவிட்சர்லாந்து அரசு முதலாய பல்வேறு அரசுகளின் அமைப் பையும் கூர்ந்தாராய்ந்து வெளிப்படுத்துவது பாவாணருடைய அரசியற் புலமையையும் ஆட்சியமைப்பின் வரலாறுணர்ந்த தன்மையை யும் தெளிவாகக் காட்டுவனவாம். பின்னர் இறுதி யாகக் கூட்டுடைமைத் தோற்றத்தின் சூழலையும் ஆய்ந்துரைத்து 'காரல் மார்க்கசு' வெளியிட்ட அறிக்கையையும் புலப்படுத்து கின்றார். இவ்வரலாற்றின் பின்னணியோடு வள்ளுவர்தம் கூட்டுடைமைக் கோட்பாட்டைப் பாவாணர் இந்நூலில் ஆராய்வது குறிப்பிடத் தக்கது.

'தனியுடமை நாடுகள் பெரும்பான்மை யாகவும் செல்வஞ் சிறந்தும் இருப்பதால், கூட்டுடமை, பொதுவாக, உரிமையில்லாத தென்றும் நெறி திறமபிய தென்றும், நீடித்து நில்லாதென்றும் கருதப்படுகின்றது. ஆயின் ஆய்ந்துநோக்கின் ஒரு குடும்பத்திற் பிறந்த எல்லாப் பிள்ளைகளையும் உணவளித்துக் காப்பது தந்தை கடமையாயிருப்பதைப் போன்று, ஒரு நாட்டிற் பிறந்த எல்லா மக்களை யும் உணவளித்துக் காப்பது அரசின் கடமை என்பதையடிப்படையாகக் கொண்ட கூட்டுடமையாட்சி 'உன்னைப் போலப் பிறனை நேசி' என்னும் உயரிய இறைவன் கட்டளையை அஃதொன்றே நிறைவேற்றுவதால் பண்பாட் டில் தலைசிறந்ததாகின்றது' என்று கூட்டுடமை யின் திறத்தைப் போற்றுவார்.

செல்வம் சிறந்த நாடுகளிலும் வேலை யில்லாத் திண்டாட்டம் ஓரளவு தோன்றி யிருப்பதனாலும், போருங் கொள்ளை நோயும் தடுக்கப்பட்ட இக்காலத்தில் மக்கள் தொகை வேகமாகப் பெருகுவதனாலும், நாளடைவிற் கூட்டுடமையே உலகெங்கும் பரவும் என்று எண்ணுவதற்கு இடமுள்ளது என்று மக்கள் தொகை அடிப்படையில் இக்கருத்தைப் பாவாணர் வலியுறுத்துவதும் எண்ணத்தக்கது.

கூட்டுடமை என்பது கல்வி நிரம்பாத தொழிலாளரை மட்டும் கொண்டியங்கும் கட்சி யியக்கமாயிராது, கடைநிலை ஊழியன் முதல் குடியரசுத் தலைவன் வரை எல்லா அலுவலரை யும் கைவினை, பொறிவினை ஆகிய இருவினை வகையும் செய்யும் எல்லா வகுப்பாரையும் கொண்டு, அறிவியல் (Science) கம்மியம் (Technology) என்னும் இருதிறப்பட்ட எல்லா அறிவுத்துறைகளையும் வளர்த்து நாடு முழுவதையும் ஆளும் ஆட்சியமைப்பாயிருப்ப தால், அதைத் தழுவுவார் அனைவரும் நினைவு, சொல், செயல் எனும் முக்கரண ஒழுக்கத்திலும் மிகப் பண்பட்டவராயிருத்தல் வேண்டும் என்பார். கூட்டுடமையைப் பின்பற்றுவோர் ஒழுக்க நெறியுடையவராய் இருத்தல் வேண்டும் என்று பாவாணர் வலியுறுத்திக் கூறுவது மிகக் குறிப்பிடத்தக்கது.

வள்ளுவர் கூறும் கல்வி பற்றிய கருத்துகள் கூட்டுடமையின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிவன என்பார். கூட்டுடமைக்கு மொழிப் பற்றும் இன்றியமையாதது என்பார். 'தமிழ்நாடு கூட்டுடமை நாடாயின், தமிழைப் போற்றுவது தமிழனின் தலையாய கடன். அதற்கேற்றவாறு கூட்டுடமைக் கட்சித் தலைவர் தமிழ்ப் புலவ ரல்லாவிடினும் தமிழ்ப் பற்றாளராகவாவது இருத்தல் வேண்டும்' என்று கூறுவது பாவாணர் தம் தமிழ் உள்ளத்தைக் காட்டும்.

நல்லாட்சிக்கு 'மக்கட்பெருக்க மட்டுப் படுத்தம்' இன்றியமையாதது என்பார். 'இன்று பார் முழுவதும் பரவியிருக்கும் மாபெருங்கேடு மக்கட் பெருக்கமே. விரைந்து கொல்லுங் கொடிய நோயுண்டும் அதைச் சரியாகக் கவனியாதிருக்கும் நோயாளிபோல், ஒன்றிய நாட்டினங்களோ (UN) சீனம், இந்தியா போன்ற மக்கட் பெருக்கம் மிக்க அதன் உறுப்பு நாடு களோ, இதைப் போதிய அளவு கவனியா திருப்பது அஞ்சத்தக்கதாகும் என்பார். இதற்குச் சிலகடுமையான தடுப்பு வழிகளையும் கையாள வேண்டும் எனச் சுட்டுவார். மணவாமை போற்றல், மணவகவை உயர்த்தம், மணவாண்டு குறித்தல் (ஐந்தாண்டிற்கும், பத்தாண்டிற்குமாக ஒரு நாளைக் குறித்தல்), பிள்ளைப் பேறில்லா

தவரைப் பாராட்டல், இருபிள்ளை வரம்பும் கட்டாய மலடாக்கமும், குடும்பக் கட்டுப் பாட்டுத் திணைக்களம் தோற்றுவித்தல், கல்லூரிக் கல்விப் பாடத்திட்டத்தில் 'மக்களியல் (Demography) சேர்த்தல், செய்தியறிவிப்பு வாயில்களில் குடும்பக் கட்டுப்பாட்டை விளக்கல் முதலாய வழிகளைப் பின்பற்றி மக்கட் பெருக்கத்தைக் குறைக்கவேண்டும் என்பார். மக்கட் பெருக்கக் கட்டுப்பாடு ஒரு நாட்டின் நல்லாட்சிக்கு வழிவகுக்கும் என்று கூறி மக்கட் குறைப்புத் திட்ட ஈகியர்க்கு (தியாகிகட்கு)ச் சலுகை காட்டலாம் என்பார்.

திருக்குறள், தமிழ் இலக்கியங்கள் ஆகிய வற்றில் காணலாகும் உழவுக் கருத்துகளைத் தொகுத்துக் கூறித் தமிழ்நாட்டு அரசின் கடமை யாகக் கொள்ளத்தக்கது உழவுத் தொழிலை ஊக்கப்படுத்துவது என்பார். கைத்தொழிலை வளர்த்தல், வாணிகத்தை வளர்த்தல், கல்வியைப் பரப்பல், உயர்த்தல் வேலையளிப்பு முதலாயின அரசுக்குரிய கடமைகளாகும். ஒருநாடு செல்வஞ் சிறப்பது வாணிகத்தினாலேயே யாதலால், நானில இயற்கை வளத்தையும் பல்தொழிற் செயற்கை வளத்தையுந் தொகுத்து, நிலவாணிகத் திற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தை கள் அமைத்தும், நீர்வாணிகத்திற்குத் துறைமுகங் களும் கலங்களும் கட்டியும், இருவகை வாணிகத் தையும் அரசு போற்றிவரல் வேண்டும் என்பார்.

கல்வி பற்றிய அவர்தம் சிந்தனைகளுள் சிலவருமாறு :

ஓர் உண்மைக் குடியரசு நாட்டில் அல்லது கூட்டுடமை நாட்டில் நூற்றுமேனி எழுபத்தை வர்க்குக் குறையாது தாய் மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்தவராயிருக்க வேண்டுமாதலின், ஐந்தகவைக்கு மேற்பட்ட எல்லாப் பிள்ளை கட்கும் இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி யளித்தல் வேண்டும்.

சேர்ப்புப் படிவங்களிலும் பதிவேடு களிலும் பெற்றோரின் தொழில் தவிர, பிறப்புப் பற்றிய குலப்பெயர்க் குறிப்பு இருத்தல் கூடாது. எல்லாரும் ஓரினம் என்னும் சமவுணர்ச்சியே பள்ளிச் சூழலில் நிலவவேண்டும். இங்கு மாணவ மாணவியர்க்குச் சொன்னதே ஆசிரியர்க்கும்.

தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழியும் கற்பிக்கப்படலாம். ஆயின் தொடக்கக் கல்வி முழுதும் தமிழ் வாயிலாகவே நிகழ்தல் வேண்டும். நாலாண்டு முடிவில் எல்லாப் பிள்ளைகளுந் தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்த வராயிருப்பர்.

தமிழாசிரியர், வரலாற்றாசிரியர், தொல் பொருளாராய்ச்சியாளர், மொழியாராய்ச்சி யாளர், மதவாராய்ச்சியாளர் முதலிய பதவிகட்கு அரசு தமிழ்ப்பகைவரை அமர்த்துதலும் அவர் எழுதிய நூல்களைப் பாடமாக வைத்தலும் கூடாது.

கொச்சை நடையைக் கையாண்டு தமிழைக் கெடுக்கும் நாட்சரி (Daily) கிழமையன் (Weekly) மாதிகை (Magazine) காலாண்டிதழ் (Quarterly) ஆண்டுமலர் (Annual) முதலிய வெளியீடுகளை அரசு கண்டித்தலும் தண்டித்த லும் வேண்டும்.

பணியமர்வோருக்கு அவர் கூறும் தகுதிப்பாடுகள் கூர்ந்து கருதத்தக்கன. சூதாட் டொழிப்பு, பரிசுச்சீட்டின் தீமைகள், மதவியல் சீர்திருத்தம், மூடநம்பிக்கையும் பழக்க வழக்க மும், தொழு நோயர் குடியிருப்பு, முதியோர் இல்லம், நகரமைப்பு, தலைநகர் விரிவு (Metropolitan Development) தேர்தல் முறை முதலாயின பற்றிய பாவாணரின் சிந்தனைகள் ஒருநாட்டின் நல்லாட்சிக்குத் தேவையாக விளங்குவனவாகும்.

தமிழ்நாட்டு அரசின் தனிக்கடமையாகத் தமிழுக்கு ஆற்றவேண்டியன பற்றியும் இறுதி யாகத் தொகுத்துரைத்துள்ளார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகட்கு முன் பாவாணரால் எழுதப்பெற்ற (முன்னுரை 1973, வெளியிடப்பெற்றது 1978) மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை என்னும் இந்நூல் பாவாணரின் அரசியல் சிந்தனைகளை முழுவதும் புலப்படுத்தும் ஓர் அரிய நூல், பாவாணர் மொழியாராய்ச்சியில் மட்டும் வல்லுநர் அல்லர், பன்முகப் பார்வை யாளர், அரசியல் திறம் வல்ல அறிஞர் என்பதும் இந்நூலால் நன்கு புலனாகும். ●

தேவநேயர் திறன் • முதுகண்ணன்

துள்ளறி வாளர்முன் தோலாத்தம் ஆய்வுதரும்
தெள்ளறிவைக் காட்டித் திகழ்ந்தவர் - கொள்ளறிவைக்
காட்டும்நூல் ஒவ்வொன்றும் கற்றவர்க்காம் நல்லுணர்வை
ஊட்டும்நூல் ஆகும் ஒளிர்ந்து.

ஓல்காச் சிறப்பின் உயர்தமிழ்ச்சீர் ஆய்ந்தெடுத்தே
அல்காச் சிறப்பின் அறிவேந்தப் - பல்காலும்
பார்த்துணர் வார்க்காம் பயன்நூல் படைத்தொளிர்ந்தார்;
ஓர்த்துணர் வாழ்வால் உயர்ந்து.

தூயதமிழ் வாழ்வு தொடர்ந்துநெறி தேர்தேவ
நேயராம் பாவாணர் நேர்உண்மை - வாயுமொழி
காட்டும் கலைவிளக்கம் காணவே செய்தார்சீர்
கூட்டும் நிலையறிவு கொண்டு.

தெள்ளறிவு சான்றதிருத் தேவநேயப் பாவாணர்
விள்ளறிவு தோன்ற விளக்கவரும் - ஒள்ளறிவுச்
சொல்லாய்வு காட்டும்; சுடர்தமிழ் வாழ்வேந்தும்;
நல்லாய்வு காட்டும் நவின்று.

தோயும் தமிழ்க்கொள்கை தோன்றநல் வித்தூன்றி
ஆயும் அறிவினால் ஆழ்ந்தாழ்ந்தே - ஏயும்
நிறைதமிழ் கண்டார் நெறிபோற்றி வாழ்ந்தார்
குறைதவிர் தொண்டுளம் கொண்டு.

வீழ்நாள் படாதுதமிழ் வீறும் பெருமைதனை
வாழ்நாள் படாதுபா வாணர்தாம் - சூழ்நாளால்
தொண்டேந்தி வண்டமிழ்ச்சீர் தொல்லுலக நல்லறிஞர்
கண்டேந்த வைத்தார் கவின்.

அடுத்து நமைக்கெடுத்த ஆரியத்தின் தீமை
எடுத்து விளக்கினார் ஈங்கே - தொடுத்தபல்
ஆய்வுகொண்டு உண்மை அறிய எதிர்வைத்தார்
தேய்விலா நன்மதியால் தேர்ந்து.

நல்லதமிழ்ச் சொல்லின் நயன்விண்டார்; மாற்றாராய்
வெல்ல வருவாரின் வீறெதிர்த்தார்; - சொல்லும்
தமிழ்க்கெதிர் நின்றார் தருக்கடக்கி நின்றார்;
அமிழ்தே தமிழென்றார் ஆர்த்து.

ஆர்த்தார் கொடுமை அடுத்தெதிர்த்துச் செவ்விநலம்
சேர்த்தார்நம் தேவநேயர் செந்தமிழ்ச்சீர் - பார்த்தார்
''எவரே மொழியறிஞர் என்றார்முன் னின்றார்
இவரே மொழியறிஞர்'' என்று.

ஆன்ற தமிழ்க்கலைகள் ஆழ்ந்தாய்ந்து வான்புலமை
தோன்ற விளங்குமுயர் தொல்லறிவு - சான்றவராம்
நல்லாரை வாழ்த்தினார்; நாடு தொழும்தமிழ்
வல்லாரை ஏத்தினார் வாழ்ந்து.

வேர்ச்சொல்லாய்வில் பாவாணரும் முந்தையரும்

முனைவர் கு.பூங்காவனம், வெங்காலூர்

'சொல்'லும் 'மொழி'யும் - சொல்லைக் குறிப்பனவேயாயினும், பின்னர் அவை வெவ்வேறு பொருளைக் குறிக்கத் தொடங்கின. சொன்மூலத்தைக் குறிக்கும் 'வேர்' என்பது, பயிர்களின் மூலமான வேரை நோக்கி ஒருசார் உவமையாய் அமைந்த வழிப்பொருளதாகும்.

கிடைத்துள்ள தமிழிலக்கண நூல்களுள் தொன்மையான தொல்காப்பியத்தின் முப்பிரிவினுள் ஒன்றாய்ச் சொல்லிலக்கணம் கூறப்பட்டது. பெயர் வினை இடை உரி என்னும் பாகுபாடும் சொற்பொருள் குறித்த சில வரையறைகளும் உரிச்சொற்பொருள் விளக்கமும் அங்குக் கூறப்பட்டன. பின்னைய நன்னூலும் பிறவும் வடமொழி வழிப்பட்ட பத இலக்கணத்தை முன்வைத்தன. உடலின் பல்வேறு 'தாது'க்களைப் போலச் சொல்லுறுப்புக்களை உவமைப்படுத்தின. 'பகுதி' என்பது பிரிக்கமுடியாத முதனிலைச் சொல் என்றும் உணர்த்தப்பட்டது. இவ்விலக்கண நூல்களில் முதனிலைக்கு முந்திய வேரைப் பற்றிய விளக்கம் இல்லை.

உலகப் பெருமொழிகளில் அகரமுதலிகளும் பேரகரமுதலிகளும் சொற்பிறப்பியல் அகரமுதலிகளும் தோன்றியபோது ஒப்புநோக்குச் சொல்வடிவங்களும் திரிவுகளும் கூறும் முயற்சியுடன் 'வேர்'காணும் முயற்சியும் காணப்படுகின்றது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகர முதலியிலும் சொன்மூலமும் வேரும் கூறும் முயற்சி நடைபெற்றதாயினும் அதன் குறைகளையுணர்ந்து ப்ன்னர் அம்முயற்சி கைவிடப்பட்டது.

பாவாணருக்கு முன் வாழ்ந்த அறிஞர் பெருமக்களுள் மாகறல் கார்த்திகேயனார், ஈழத்து ஞானப்பிரகாச அடிகள் ஆகிய இருவரைத்தவிர, கால்டுவெல், சூரிய நாராயண சாத்திரியார், மறைமலையடிகள் முதலானோர் தத்தம் ஆராய்ச்சிக் கொள்கைகளை நிலைநிறுத்தும் சான்றாக ஆங்காங்கே சில சொல்லாராய்ச்சிகளை மேற்கொளினும் அவை முறையான - முழுமையான சொல்லாராய்ச்சிகளல்ல. பாவேந்தர் பாரதிதாசனாரின் வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? என்னும் சொல்லாராய்ச்சித் தொடர் வடசொல்லெனக் கூறப்பட்ட சிலவற்றைத் தமிழெனக் காட்டும் முயற்சியேயாம்.

எனவே வேர்ச்சொல்லாய்வில் பாவாணருக்கு முந்தையோராகக் குறிக்கத் தக்கார் மாகறல் கார்த்திகேயனாரும், ஞானப்பிரகாச அடிகள் ஆகிய இருவரேயாவர். இம் மூவர்தம் வேர்ச்சொல்லாய்வு பற்றிய சுருக்கம் இங்குக் கூறப்படுகின்றது.

மாகறல் கார்த்திகேயனார்

கார்த்திகேயனார் எழுதிய மொழிநூல் 1913ஆம் ஆண்டு வெளிவந்தது. பாயிரவியல் இலக்கணவியல் முதனிலையியல் என்னும் முப்பிரிவினையுடையதாய், 328 பக்கங்களுடன் வெளிவந்தது.

அன்றியும் மதுரைத் தமிழ்ச்சங்க இதழாகிய செந்தமிழில் சொற்பொருட்காரணம் (12-10) தமிழ்ஓர் இயற்கை மொழி (12-8) என்னும் கட்டுரைகளும் கார்த்திகேயனார் மொழிநூற் கொள்கைக் கட்டுரைகளே. இவையே அவர்தம் மொழியாராய்ச்சித் தரவுகளாக உள்ளன.

பேரண்டத்தின் இயக்கம் குறித்த கொள்கைகள் நிலவின. அவை :

1. நிலவுருண்டை நடுவக்கொள்கை (Geocentric Theory)

2. திங்கள் நடுவக்கொள்கை (Lunar System)

3. கதிரவ நடுவக் கொள்கை (Solar System) என்பன.

கடவுள் வழிபாடு பற்றி, அல்மதம் உள்மதம் என இரு கொள்கைகளும், உள்மதத்திலும் ஒரு தெய்வம் பலதெய்வம் எனும் நிலைபாடும் இருந்தன.

கோள் இயக்கம், கடவுள் கொள்கை ஆகியவை பல்வேறு ஆராய்ச்சிக் கொள்கைகளிலும் வெளிப்பட்டன.

கதிரவ நடுவக் கொள்கை, முழுமுதற் கடவுள் கொள்கை ஆகியவற்றைத் தழுவியதாக உள்ள மாகறல் கார்த்திகேயனார் மொழியாராய்ச்சியிற் காணும் வேர்ச்சொல் பற்றிய சுருக்கம் வருமாறு :

1. நில அமைப்பில் முந்தியது குறிஞ்சி நிலம். அங்கு மூங்கில் நிறைந்திருந்தது. கதிரவ வெப்பத்தில் மூங்கிற்காடுகள்தீப்பற்றி எரிந்தன. மழை பெய்தபோது பெருந்தீ அவிந்தது. அப்போது தோன்றிய இயற்கை ஓசை 'சு' என்பது. சு+ல்= சுல் என்பது முதல்வேர்ச்சொல் - கதிரவனைக் குறித்தது.

2. செவிப்புலனாய் அமைந்த இயற்கை ஓசைகள் மூன்று. அவை எழுத்தோசை, இசையோசை, பொருளோசை என்பன. வாய் அங்காப்பு முதலிய அகமுயற்சியால் தோன்றுவது எழுத்தோசை. அதனைப் பலுக்கும் எடுத்தல் படுத்தல் நலிதல் என்னும் புறமுயற்சியால் எழுவது இசையோசை. முன்னர்க்குறித்த சுல் (சூரியன்) முதலானவை பொருளோசை.

எழுத்தோசைக்கு விந்து முதற்காரணம்.

இசையோசைக்கு ஆகாயம் முதற்காரணம்.

பொருளோசைக்குச் சூரியன் முதற்காரணம்.

எழுத்தோசையிலிருந்து எழுத்துக்களும் அவற்றின் இயையில் பொருளோசைகளும் தோன்றின என்னும் கொள்கையுடன் சொல் மூல.மான வேர்கள் பற்றி மாகறலார் கூறினார்.

3. கட்புலனாய இயற்கை வடிவம் ஒன்று. அது வட்டம். கதிரவன் வடிவமும் அது. வட்டம் - திரட்சி. இதுவே வளைவு; வளைவே சாய்வும் கோணமும் மூலையும். எழுத்துக்கள் இவ்வாறு வடிவம் பெற்றன.

சுல் - சூரியன் - எழுதல் வட்டம் திரட்சி எண்ணம் அழகு வெம்மை என்னும் கருத்துக்கள் இவ்வாறு தோன்றின.

4. மக்கட்கு முதன்முதல் இயற்கைப் பொருள்களின் தோற்றம் உண்டாகி, அறிவு பெருகியபின் செயற்கைப் பொருள்களின் தோற்றம் அமைந்தது. இயற்கை, செயற்கைப் பொருளுணர்ச்சியும் பெருகியபின் இயற்கை ஓசை செயற்கை ஓசை ஆகியதோர் சொற்கூட்டமும் உண்டாகியது.

5. தமிழ் - பெயர்க்காரணம் சொற்பொருள் பற்றிய மாகறலார் ஆய்வுகள் வருமாறு :

அ) தமிழ் - இனிமை. தமில் - தமிள் - தமிழ்.

த - வல்லினம்;

மி - மெல்லினம்;

ழ் - இடையினம்

மூவின எழுத்துச் சேர்க்கை தமில் (சூரியன் - இனிமைப் பொருளது) - தமிழாயிற்று.

ஆ) தமிழில் பெரும்பாலும் (மூன்றிலிரண்டு பங்கு?) இயற்கைச் சொற்களும், சிறுபான்மை (மூன்றிலொரு பங்கு?) செயற்கைச் சொற்களும் உண்டாதலால், அவ்வுண்மை தோன்றுமாறு த, மி என்னும் இரண்டு இயற்கை

எழுத்துக்களும் 'ழ்' என்னும் (ஒரு) செயற்கை எழுத்தும் கொண்டமைந்தது.

இ) ஆண்பால் பெண்பால் என்னும் இரண்டில் தமிழ் ஆண்பால் மொழி. எனவே, ஆண்பால் எழுத்தாகிய குறிலில் தொடங்கியது.

ஈ) அங்காத்தல் எளிதாதல் பற்றி அங்காத்தல் ஒலி முதலில் அமைந்தது.

உ) தமிழ் சூரியனாகிய ஓர் வியாபக இயற்கைத் தாதுவினின்றும் தோன்றியது. ஆதலால் தமில் - தமிள் - தமிழ். தாமம் - ஒளி, சூரியன்.

6) தமிழினின்றும் பஞ்ச திராவிடமும் பாலி, காண்டி, மொழிகளும் உண்டாயின. இவ்வெல்லாவற்றினின்றும் பாகதம் பிரிந்தன. இப் பாகதங்களுக்குப் பின் செந்தமிழ் உண்டா யிற்று. சான்று :

கோடரம் - தமிழ்

கோடா - பாகதம்

கோடரம் செந்தமிழில் மீண்டும் குதிரை என வந்தது.

7. ஆப்பிரிக்க நாட்டு மொழிகள் பாலி மொழியன.

ஆ பாலிகா - ஆப்பிரிக்கா.

இத்தகைய கொள்கைகளை முன்வைத்து மாகறலார்தம் வேர்ச்சொல்லாய்வு மொழி நூலாக விரிந்துள்ளது.

ஞானப்பிரகாச அடிகளார்

ஈழத்துத் திருத்தந்தை ஞானப்பிரகாச அடிகளார் எழுதிய 'தமிழ் அமைப்புற்ற வரலாறு' (1927) என்னும் நூலும், தமிழ்ச் சொற் பிறப்பு - ஒப்பியல் அகராதி (1938 - 1944) என்னும் நூலும் அவர்தம் வேர்ச்சொல்லாய்வு பற்றிய தரவுகளாகும்.

இயல்பாகவே சொல்லாராய்ச்சி மேற் கொண்டிருந்த ஞானப்பிரகாச அடிகளார்க்குக், கதிரைவேற்பிள்ளையின் தமிழகராதியிலும், சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியிலும் இருந்த குறைபாடுகள் அவரை மேலும் ஆராய வும் எழுதவும் தூண்டின எனலாம். இதனை, ".... Here Katiravel Pillai failed me as his arrangement of the senses of many important words was by haphazard and not in the order of their historical evolution a failing to be deplored in the case also of the Tamil Lexicon of the Madras University now in the course of publication..." (தமிழ் அமைப்புற்ற வரலாறு - Introduction) என்னும் அவர்தம் கூற்றால் அறியலாம்.

19ஆம் நூற்றாண்டில் வடமொழியின் அடிப்படையில் மொழி ஆராய்ச்சி செய்தவர் மாக்சுமுல்லர். அதே காலகட்டத்தில் மோனியர் வில்லியம்சு என்பார் தொகுத்த வடமொழி அகரமுதலியும் வெளியானது. இவர்கள் 'தாது' என்னும் வடமொழிக் கொள்கையை ஏற்றவர் களாய், ஒரு சொல்லின் சுருங்கிய வடிவைத் தாது என்றும் வேர் என்றும் வரையறுக்கவும், வடமொழியின் தாதுக்கள் இத்துணை என்று கணக்கிடவும் முற்பட்டனர். மொழியாய்வில் தமது முன்னோடியாய் மாக்சுமுல்லரையும், மோனியர் வில்லியம்சுவையும் ஞானப்பிரகாச அடிகளார் ஏற்றுப் பின்பற்றியுள்ளார். அவர் வேர்ச் சொற்களைத் 'தலையடிகள்', 'அடிகள்', 'தாதுக்கள்' என்னும் சொற்களாலேயே சுட்டியுள் ளார்.

கதிரைவேற்பிள்ளை அகராதியில் அடிகள் கண்ட 'பொருள் வரிசையின்மை' என்னும் குறைபாடும் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகர முதலியிலும் அவர்கண்ட அதே குறை பாட்டுடன் அங்குச் சுட்டப்பட்ட தவறான வேர்களும் வடமொழித் தாதுக் கொள்கையின் அடிப்படையில் அவர் ஒரு மாற்று வழியில் ஆராய்தற்குத் தூண்டியிருக்கின்றன.

அடிகளாரின் வேர்ச்சொல்லாய்வுச் சுருக்கம் வருமாறு :

1. தமிழ்த் தலையடிகள் அண்மை, சேய்மை, கீழுறல், மேலுறல் என்னும் ஆதி எண்ணங்களை முறையே குறிக்கின்ற அ, உ, இ, எ எனும் சுட்டுக்களை முதனிலையாகவும், ஒரோர் மெய்யை இறுதியாகவும் கொண்ட பண்டைக்காலச் சொற்களாம் தமிழ்த் தலை யடிகள் பின்வருவன :

அகரவாதி அடிகள் : அண்மைப்பொருள்

அஂ°, அட், அண், அத், அப், அம், அய், அர், அல், அவ், அழ், அள், அற், அன் - என்பன *(14)*

உகரவாதி அடிகள் : சேய்மைப் பொருளும் மறைந்திருக்கும் (கண்ணுக்கு எட்டாத) பொருளும்

உக், உட், உண், உத், உப், உம், உய், உர், உல், உவ், உழ், உள், உற், உன் என்பன *(14)*

இகரவாதி அடிகள் : கீழுறுதற்பொருள்

இக், இட், இண், இம், இய், இர், இல், இழ், இள், இற், இன் - என்பன *(11)*

எகரவாதி அடிகள் : மேலுறுதற் பொருள்

எக், எட், எண், எத், எய், எர், எழ், எற், என் - என்பன *(9)*

இவ்வாறு தலையடிகள் (வேர்கள்) *48* என்று வரையறுத்த அடிகள் இவ்வடிவங்களை வடமொழித் தாதுக்களின் வடிவங்களைப் போலவே அமைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

இவை அவ்வப்பொருளில் எவ்வாறு வெவ்வேறு சொற்களாய் விரிந்தன என்பதை அவர்தம் நூலுள் காட்டுவதுடன், அவற்றின் நெறிமுறைகளை எட்டுக்கட்டளைகளாகக் கூறியுள்ளார்.

2. ஒலித்திரிபு : ''தமிழ் மொழியினுள்ளும், சிறுபான்மை பாகதங்களுள்ளும் வழங்கியிருக்கும் ஒலி மாற்றுக்கள் மட்டும் இங்குக் காட்டப்படும்'' என்னும் முன்னுரையுடன் சொல்விரிவுகளின் போது உயிர் எழுத்துத் திரிவுகளும் மெய்யெழுத்துத் திரிவுகளும் எவ்வாறு நிகழ்கின்றன என்றும் அடிகளார் சுட்டியுள்ளார். சான்றாக ஒன்று : அ/இ - (உ-ம்) பசை > பிசின், கடா - கிடா.

அ, ஆ/எ, ஏ - (உ-ம்) கல்லு-தல் > கெல்லுதல்

ஆளுதல் > (தெலுங்கு) ஏலு.

இவ்வாறு உயிர் எழுத்து அ - இ, ஆ, எ, ஏ, உ, ஒ, ஓ எனத் திரியும் எனக் காட்டியுள்ளார். அவ்வாறே மெய்யெழுத்துத் திரிபுகளும் காட்டப்பட்டன. ஒரு சான்று :

க்/g - (உ-ம்) கெலித்தல் > (தெலு.) gel - uchu. பிற பாகதங்களில் இது பெருவழக்கு.

க்/ச் - (உ-ம்) கெடு-தல் (தெலு.) செடு. கன். கெவி > செவி.

க்/த் - (உ-ம்) கொப்பூழ் > தொப்புள்; கும்மட்டி - தும்மட்டி.

க்/ப் - (உ-ம்) வயோதிகம் > வயோதிபம்; ஓங்கல் - உம்பல்

க்/ய் - (உ-ம்) ஆகிற்று > ஆயிற்று

பகிர்தல் > பயிர்தல்

க்/வ் - (உ-ம்) நோக > நோவ; ஆகு-தல் > (தெலு.) ஆவு.

3. உருத்திரிபு

முதனிலைக் கேடு, இடைநிலைக் கேடு, கடைநிலைக் கேடு, தலைத் தோன்றல், இடைத் தோன்றல் கடைத்தோன்றல், நிலைமாற்றம், தடுமாற்றச் சொற்பிரிவு, இனந்தழுவல், ஒப்புமைச் சொல்லாக்கம் என்னும் முறைகளால் சொற்கள் உருத்திரிந்தன எனக் காட்டப் பட்டுள்ளது. சான்று :

கடைநிலைக்கேடு - (உ - ம்) போது > பூ; இடுதல் - ஈதல்; அது > அ.

4. பொருட்டிரிபு : ''சொற்கள் காலச் செலவிலே உருவத்தில் மட்டும் அன்று, பொருளிலும் விகற்பம் அடைகின்றன. இதுதான் பொருட்டிரிபு எனப்படும்'' என்று கூறிச் (1) சிறப்பியல்பு சுட்டலும் தனித் தொன்றிற்குப் பெயரிடுதலும் (2) சார்பு பற்றி விரிதல் (3) இனந்தழுவல் (4) இயைபுடைமை அல்லது உருவகம் (5) ஆகு பெயர் (6) உயர்வு நவிற்சியும் தாழ்வு நவிற்சியும் (7) எதிர்நிலை (8) இழிவடைதலும் ஏற்றம் பெறலும் (9) இடக்கரடக்கல், மங்கலம், இடுகுறியாக்கம் என்னும் இம்முறைகளினால் பொருட்டிரிபு நிகழ்கின்றது என்று அடிகளால் காட்டியுள்ளார்.

இவ்வேர்ச்சொல் ஆராய்ச்சியால், ''தமிழ் அடிகள் உள்ளபடி மக்களுள் இயல்பாய் எழுந்த ஒரு ஆதிப் பாஷையோடு பிணைப்புண்டன வாய்க் கிடத்தல் எமது ஆராய்ச்சியால் இப்போது வெளிப்பட்டிருக்கின்றது. இவ் அடிகள் சுட்டு

கின்ற எண்ணங்கள்தாம் மக்கள் சிந்தித்த ஆதி எண்ணங்கள் ஆகின்றன. ஆகவே, அவ்அடிகளில் நின்றே இந்து - ஐரோப்பிய மொழிகள் எல்லாம் பிறந்து விகற்பித்தன என்பதும் துணியப்படும்'' என்று ஞானப்பிரகாச அடிகளார் முடிவு செய்துள்ளார். எனவே,

1) நால்வகைக் கருத்துக்கள்

2) நாற்பத்தெட்டு அடிச்சொற்கள்

3) வரையறுத்த சொற்பிறப்புக் கட்டளைகள், ஒலித்திரிபு உருத்திபு முறைகள்

4) இடுகுறியாக்கம்.

என்பவை அடிகளார் கண்டறிந்த வேர்ச் சொல்லாய்வு முடிவுகளாகச் சுட்டத்தக்கவையாம்.

பாவாணர் வேர்ச்சொல்லாய்வு : பாவாணருடைய மொழியாராய்ச்சி 1924 அளவில் தொடங்கியதெனலாம். முதலில் பொழுது போக்காகவும், ஒருசொல் தமிழா வடமொழியா எனக் காணும் அறிவு நாட்டத்தாலுமே (Intellectual Curiosity) அவர்தம் மொழியாராய்ச்சி தொடங்கியுள்ளது. அப்போதிருந்து அவர் எழுதிய பல்வேறு கட்டுரைகளும், ஒப்பியன் மொழிநூல், திரவிடத்தாய், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்னும் நூல்களும் அவர்தம் அறிவுக் கூர்ங்கத்திற்குச் சாணை தீட்டும் முயற்சிகளே! முதல் தாய்மொழி, தமிழ் வரலாறு வேர்ச்சொல் கட்டுரைகள் (2 மடலம்) என்னும் முந்நூல்களும் அவர்தம் மொழியாராய்ச்சி முழுமையைக் காட்டுவன ஆம். அவர்தம் வேர்ச்சொல்லாய்வுச் சுருக்கம் வருமாறு :

1. மொழி மாந்தன் படைப்பே. மொழி இயற்கை நிலை செயற்கை நிலை என்னும் இரு நிலைகளில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுத் தொடர் முயற்சியால் தோன்றியது. உணர்வொலி, ஒப்பொலி, விளியொலி, குறிப்பொலி, வாய்ச்செய்கையொலி, குழவி வளர்ப்பொலி, சுட்டொலி என்னும் உணர்வும் கருத்தும் சார்ந்து தோன்றிய ஒலித்தொகுதி சில சொற்களைக் கொண்ட இயற்கை மொழியாய் இருந்தது.

2. சுட்டொலிக் கருத்தின் வளர்ச்சியாகச் சேய்மையைச் சுட்டும் அங்காப்பினால் தோன்றிய ஆகாரமும், இருமருங்கும் ஆகிய அண்மையைச்சுட்டும் ஈகாரமும், முன்மையைச் சுட்டும் ஊகாரமும் உடற்சைகைக்கேற்ற வாய்ச் சைகையாகவே முறையே ஆ, ஈ, ஊ என்னும் சுட்டொலிகள் தோன்றின. அவற்றுள்ளும் கட்புலம் செவிப்புலம் ஆகியவற்றுக்கு எட்டாத சேய்மை பற்றிய கருத்துக்களும் அவற்றைச் சுட்டும் சொற்களும் சிலவே தோன்றின. அவ்வாறே அண்மைச் சுட்டாகிய ஈகாரமும் சில சொற்களையே தோற்றுவித்தது. ஆயின் முன்னோக்கிய உடற்செலவும், அறிவுப்புலப்பாடும், மனச்செலவும், உருவலிப்பும் (கற்பனை) ஆகிய கருத்து விரிவினால் முன்மையைச்சுட்டும் ஊகாரமே மொழியின் பேரளவான ஆக்கத்தின் அடிப்படையாய் அமைந்தது. அவ்வகையில் தோன்றல், முற்படல், முற்செலவு, நெருங்கல், தொடுதல், கூடுதல், வளைதல், துளைத்தல், துருவல் என்னும் முற்செலவுக் கருத்துச் சொற்கள் தோன்றின. நெடிற்சுட்டுக்கள் பின்னர்க்குறில்களாயின.

முதன்மொழியாகவும் மொழிக்குடும்பத்திற்கும் உலகக் கிளைமொழிகளுக்கும் தாயாகவும் அமைந்த தமிழ்ப் பேராலமரம் உறக்குந் துணையதாய 'உ' என்னும் வித்தினின்றும் தோன்றியது என்பதே தேவநேயக் கொள்கையாம்.

3. வளர்ச்சி நிலையடைந்த இயன்மொழிகளும் அவற்றினின்றும் திரிந்த திரிமொழிகளும் பெரும்பாலும் வேர் (Root) அடி (Stem) முதனிலை (Theme) என்னும் மூவகை மூலச் சொற்களையும் அவற்றினின்று திரிந்த பல்வகைத் திரிவுச் சொற்களையுமே கொண்டுள்ளன. வேரின் வளர்ச்சி அடியும், அடியின் வளர்ச்சியே முதனிலையும் ஆகும். வேர், அடி, முதனிலை என்னும் வகையீடும் ஆணிவேர் பக்கவேர் கிளைவேர் என்னும் வகையீடும் ஒன்றே. வேருக்கு மூலமான விதையும் உண்டு என்று வேர் வரையறை செய்தவர் பாவாணர். பாவாணருக்கு முன், வேர், தலையடி, அடி, முதனிலை, தாது என்பவை வேர் ஒன்றையே குறிக்கப் பயன்பட்டன என்பதையும் அறிதல் நன்றாம்.

4. ''ஒரு கருத்தினின்றும் மற்றொரு கருத்துத் தோன்றும்போது ஒரு சொல்லினின்றும் மற்றொரு சொற்பிறக்க இடமுண்டாகிறது. கருத்து வேறுபடும்போது சொல்லும் வேறு படல் வேண்டும். அன்றேல் பொருண்மயக்கம் உண்டாவதோடு மொழி வளர்ச்சியுறாது. இதுவே சொல்லாக்க அடிப்படை நெறிமுறை'' என்றுரைத்த பாவாணர் வரைந்த சொற்பிறப்பியல் நெறிமுறை நூல் அழிந்துபட்டதேனும், அத்தலைப்பில் அவர் வரைந்த கட்டுரைகளும், நூல்களில் ஆங்காங்குச் சுட்டும் நெறிமுறைகளும் ஒருங்கே தொகுக்கத் தக்கவையாம்.

5. பாவாணர்தம் அரை நூற்றாண்டுக்கால ஆராய்ச்சியால் கண்ட உண்மை, ''வேர்ச்சொற்கள் சிறுவேர் பெருவேர் என இருவகைய. சிறுவேர் பன்னூற்றுக் கணக்கின. பெருவேர் ஒரு நூற்றிற்கு உட்பட்டவை'' என்பதாம். அன்றியும், ''உலகமொழிகள் மூவாயிரத்துள்ளும் வேர்ச்சொல் காண்பதற்கு எளிதாகவும் மிகுதியாகவும் இடம்தரும் மொழி தமிழ் ஒன்றே; அஃது இயன்மொழியாதலால் பெரும்பாற் சொற்களின் வேர்வடிவை அல்லது வேருறுப்பை இன்றுந் தாங்கி நிற்கின்றது'' என்பதும் அவர் கண்டறிந்ததேயாம்.

மாகறல் கார்த்திகேயனார், ஞானப்பிரகாசடிகளார், பாவாணர் என்னும் மொழிப் பேரறிஞர்கள் மூவரின் ஆராய்ச்சிப் பரப்பைச் சுருங்க உரைத்ததே இக்கட்டுரை. இவற்றை ஒப்பிட்டும் உறழ்ந்தும், சீர்தூக்கியும் செய்யும் ஆய்வு பெருநூலாய் விரியத்தக்கதாகும்.

அரிதரிதே! இனியொரு பாவாணர் தோன்றல்!

● பொறிஞர் கு.ம.சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி

நெருநலொரு புலவனவன் பேரோ தேவ
நேயனெனும் பாவாணன்! தமிழ்க்கே வாழ்ந்தோன்!
பெருமையுணர்ந் திலமவனும் வாழ்ந்த நாளில்
பிறதகவி லாரையெலாஞ் தாங்கி நின்றோம்!
அருந்தமிழை உலகமுதன் மொழியென் றாய்ந்தோன்!
அவன்பிறவா திருந்திருப்பின் என்னாம்? நேயன்
அருமையறி யாததமிழ் மாந்தர்! என்னே!
அரிதரிதே இனியொருபா வாணர் தோன்றல்!

எத்தகைய பணியவர்தம் பணிய தற்கோர்
ஈடுமிலை இணையுமிலை! தமிழன் னைக்கே
இத்தகைய பணியாற்றிப் போந்தோர் இங்கே
எவருமிலர்! எனினுமவர் வாழ்ந்த நாளில்
மெத்தனமாய் இருந்ததமிழ் அரசோ அந்த
மேன்மகனைக் கண்டுகொள வில்லை! தேவப்
பித்தனிதைப் பொருட்படுத்தவில்லை அந்நாள்!
பெரிதவர்க்குத் தமிழொன்றே! அதற்கே வாழ்ந்தார்!

தனித் தமிழியக்கத் தொண்டர்களே

மா.செ.தமிழ்மணி

"மாறுதல் ஒன்றே மாறாததாகும்" என்று மார்க்சு கூறுவதாகப் பொதுமையர் கூறுவர். இவ்வியங்கியல் நிலைக்கு உட்பட்டதே மொழியும் ஆகும்.

இக்கொள்கைக்கு ஒப்பவே கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாள முந்துளுவும்..." தோன்றி ஒன்று பல ஆகியும் "ஆரியம் போல் உலகவழக்கொழிந்து சிதையா" சீரிளமைத் தொன்மொழியாம் நம் தென்மொழி தமிழ் மாறுதலுக்கு உட்படல் இயற்கையே என்கின்றார் தமிழ்மலை மறைமலையடிகள்.

அம்மாறுதல் எவ்வாறாய் இருத்தல் வேண்டும் என்கின்றார் எனின், "எவ்வகைப் பொருளையும் எத்தகைய கருத்தையுந் தெரிவித்தற்கு எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் இருப்பவும் அவற்றைப் புறந்தள்ளி மற்றை மொழிச் சொற்களை... இயற்கையோடொத்து மெல்லென நடக்குந் தமிழ்ச் சொற்களினிடையே சேர்த்துக் கூறுதல் விடுத்து, வயிற்றிற்கு இடப்பெற்ற உணவுப் பொருள்கள் தமது உருவு திரிந்து உடம்பிற்கு வேண்டும் பாலாக மாறும் அளவில் அம்மாறுதல் இருக்க வேண்டும்" என்பார்.

இவ்வாறு மறைமலையடிகள் கூறற்குக் கரணியம்தான் என்னையெனின், தமிழைச் சிதைப்பினின்றும் தற்காத்தற்கேயாம்'

அடிகளாரின் தனித்தமிழ் முயற்சிக்குப் பெரும் அரணாகவும், முன்னுரைக்கு ஒரு விரிந்த நூலாகவும் அமைந்ததுதான் பாவாணரின் மொழியாய்வுத் தொண்டு.

பாவாணரின் மொழியாய்வுத் தொண்டுப் பரப்போ பாவலரேறு போன்ற நுண்மாண் நுழைபுலத் திறலாளர்களே கண்டு வியந்து நிற்கும் அளவினதாகும். பன்மொழிப் புலமையும் ஆய்வும் அறிவியல் ஓர்மையும் உடைய பாவாணரின் தனித்தமிழ் இயங்குநிலையே இன்றைய தனித்தமிழ் இயக்கங்கட்கு அடித்தளம் என்பதை எதனுடன் ஒப்பிடலாம் எனின் "தமிழரின் தலைநிமிர்ந்த வாழ்வு தமிழால்தான்" என்பதற்கு ஒப்பிடலாம்.

பாவாணரின், ஏன் மறைமலையடிகளின், தனித்தமிழ் இயங்கு நிலைகளில் மட்டுமன்றித் தமிழின் தனித்த வரலாற்றுச் செம்மாப்பின் உள்ளுயிர்ப்பின் ஒன்றித் தோன்றிய பாவலரேறு அவர்கள், தம் தென்மொமி வாயிலாக மொழியாய்வு சூரியக் கதிர்களால் மொழிநல நீர்முகந்து தமிழினப் பயிர் விளைவிக்கும் கொண்டலாகப் பொழிந்தார். பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ஒரு தலைமுறை தமிழியத் தொண்டினைத் தமிழின வேருக்குப் பாய்ந்த பெருஞ்சித்திரப் பெருவெள்ளம் என்றால் யாரே மறுப்பார்?

அறிவியலறிஞரின் ஆய்வகக் கண்டுபிடிப்புகள், செய்பொருளாகி அடிநிலை மக்களின் அன்றாடப் பயன்படு பொருளாவது போன்று, தனித்தமிழியக்க முன்னோடிகள் அனைவரின் அருந்திறல் கொண் முடிவுகள் எல்லாம் தொடக்க

நிலைக் கல்வி மாந்தரிடை வந்து சேர்ந்ததனைப் 'பெருஞ்சித்திரம்' என்றால் மிகையன்று.

இதனை அவரின் ''தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்'' எனுங் குறுநூலே விளக்கி நிற்கும்.

இவ்வாறாக அறிவுநிறை மாமலைகளில் சுரந்த தனித்தமிழியக்கஆறு பெருஞ்சித்திரப் பாய்ச்சலாகித் தமிழ்நிலத்தில் ஈரம் பொசிய - சுரக்க - அறிஞர்களாய், இயக்கங்களாய், தொண்டர்களாய் விதைக்கப்பெற்ற நிலையில் தமிழின மக்கள் தம் தாய்மொழியால் தகுநிலை பெற்றனரா எனின் 'இல்லை' என்று தயக்க மின்றிக் கூறலாம்.

ஆம், தமிழ்நாட்டில் தாய்மொழி கற்கா மலே கல்வியில் ஆராய்ச்சிப் பட்டங்கூடப் பெறலாம்.

பெறுகின்ற பட்டமும் கூடத் தாய்மொழி எழுத்தாலும் இல்லை; தாய்மொழிச் சொல்லா லும் இல்லை.

தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழ் இன்னமும் 'நீச பாஷையே!'

தமிழ்நாட்டு அறமன்றங்களில் நுனிநாக்கு ஆங்கிலக் கூத்தே.

தமிழக ஆட்சிக் குறிப்புகள் ஆவணங்கள் அமைச்சரக நடைமுறை அத்தனையும் தமிழ் அறியாதனவே!

ஏன் தமிழ்நாட்டு முதலமைச்சரே செய்தி யாளரிடைப் பலுக்கி மினுக்குவது ஆங்கிலக் குதப்பலே!

தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் பிற மொழியாளர் எக்காளம். அதேபோழ்து நாடாளு மன்றத்தில் தமிழ்நாட்டு உறுப்பினர் ஆங்கில மொழிவழியே உரைநிகழ்த்தல்.

தமிழ்நாட்டுக் கடைத் தெருக்களில் பெயர்ப் பலகைகள் ஆங்கில நாட்டுக்காரனுக் காக!

கடைப்பெயர்கள், திரைப்படப் பெயர் கள் தாளிகைகளின் பெயர்கள், தாளிகைத் தலைப்புகளின் பெயர்கள், வீடுகளின் பெயர் கள், மக்களின் பெயர்கள், உணவுப் பண்டங் களின் பெயர்கள், உண்ணும் சோறு எல்லாமே தமிழல்லாப் பிறமொழிகளில்தான்.

பேசும் மொழியில் மட்டும் என்ன வாழ்கிறது?

ஆங்கில மழலையர் பதின்நிலைப் பள்ளி கள்தான் ஊர்ப்புறங்களில், நகர்த் தெருக்களில்!

இவையெல்லாம் இந்தத் தமிழர்க்கு 'ஈசி'யாகச் செய்யமுடிகிறது!

இந்த இழிவெல்லாம் நீங்க என்ன செய்ய வேண்டும்?

தமிழியக்கங்கள், தமிழியத் தொண்டு மன்றங்கள்; கழகங்கள்; விழா எடுத்தல் விடுத்து; அரங்கு ஆர்ப்பரிப்புகள் அகற்றித் - தாழ்ந்த - தாழ்த்தப் பெற்ற தமிழர்களிடைக் கலந்துரை யாட - கருத்துரைக்க - கண்டுகண்டு பேசி உணர்வூட்ட - தெருக்களுக்கு வரவேண்டும்.

ஏழைகள், மோழைகள். உறவில் ஒன்ற வேண்டும். உரிமை உணர்வை ஊட்ட வேண்டும். உழைப்புக்கு உரியதைப் பெற வைத்து உழைப்பின் பயனைப் பெறவேண்டும்.

அப்படி ஒருதனித்தமிழ்ப் பெரும்படைப் பேரணி புறப்படுமா?

தமிழ் வறுமையுடைய மொழியா?

தமிழின் இயல்பை யறியாத சிலர், ஆங்கிலம் போல் தமிழையுங் கருதிக்கொண்டு, ஒருமொழி பிறமொழியினின்று கடன் கொண்டால்தான் வளரமுடியுமென்றும், மொழித் தூய்மையென்பது பொருளற்ற மொழி வெறியென்றும் கூறுவர். காலதர், சாளரம், பலகணி என முச் சொல்லிருக்கவும் சன்னல் என்னும் போர்த்துக்கீசியச் சொல்லை வேண்டாது வழங்கியதால், அம்முச் சொல்லும் வழக்கற்றுப் போய்த் தமிழ் வறுமையடைந்துள்ளமை காண்க

- பாவாணர்

மதுரையும் - பாவாணரும்

அருளாளன், மதுரை.

வினை செய்வதற்குரிய வழிவகைகளை எல்லாம் குறைவில்லாதபடி எண்ணிப் பார்த்து, இடத்தோடு பொருந்தி வரக்கூடிய குறிப்பிட்ட வினையை ஒருவர் செய்ய முற்பட்டால் அவ்வினையில் வெற்றிபெற அஞ்சாமை ஒன்றே அவர்க்குத் துணை.

திருவள்ளுவரின் (497) இந்த அஞ்சாமை இலக்கணத்திற்கு ஒப்பாகத் திகழ்ந்தவர் நமது மொழிநூலறிஞர் தேவநேயப் பாவாணர் தாம்.

மதுரைக்கும் பாவாணருக்கும் ஏற்பட்ட தொடர்பு ஒரு முழுமையான வரலாறு. இயன்றமட்டும் சுருக்கித் தந்துள்ளேன்.

1960இல் மதுரைத் தியாகராசர்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த முனைவர் மா.இராசமாணிக்கனார்தாம் இத்தொடர்புக்கு வழிவகுத்தவர். பாவாணரின் நூற்றாண்டு விழா நிகழ்ந்துவரும் இன்று அவரை நான் நினைவு கூர்கின்றேன்.

அவர் எங்கள் எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக இருந்தார். ஒருநாள் எங்களை அழைத்தார். அவருடைய அன்பிற்குரிய மாணவரான என்.எம்.ஆர். சம்புநாதன் இல்லம் தெற்குமாசி வீதியில் இருக்கிறது. அங்குப் பேரா.மெ.சுந்தரம் அவர்களுடன் நாங்கள் சென்றோம்.

''உங்களை நான் வரச்சொன்னது ஒரு முகாமையானது, ''தேவநேயப் பாவாணர் என்பவரைத் தெரியுமா?'' என்று கேட்டார். நான், பாவேந்தர் மகன் மன்னர் மன்னன் திருமணத்தில் பார்த்தேன். (1956) அவர்தாம் திருமணத்தை நடத்தினார்'' என்றேன்.

''ஆமாம், அவர் மிகப் பெரும்புலவர். மிகச்சிறந்த அறிஞர் அவர். தமிழுக்குக் கிடைத்த அரிய பொக்கசம். மறைமலையடிகளார்க்கு அடுத்து இவர்தாம் தனித் தமிழ்க் காவலர். அவர் எழுதிக் குவித்து வைத்துள்ள கருவூலத்தை நூல்களாக்க வேண்டும். அவை மறைந்து விடக்கூடாது. அழிந்து விடக்கூடாது. அதைக் காக்கவேண்டியது நமது கடமை. அவரிடம் செல்வமில்லை. வறுமையில் உள்ளார். தமிழ் உலகம் இன்னும் அவரை அறிந்து கொள்ளவில்லை.

உலக மொழிகளில் எங்கெங்குத் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன என்பதை நெடுங்காலமாக ஆய்வுசெய்து வைத்திருக்கிறார். அவை அனைத்தும் நூல்களாக வெளிவர நமது மன்றம் ஒரு நிதி திரட்ட வேண்டும். இந்த நிதி அவருடைய குடும்பச் செலவுக்கு அல்ல; அதை அவர் ஏற்கவும் மாட்டார்.

அவரின் இந்த நிலைக்குக் கரணியமானவன் ஒரு வடநாட்டான். அவனால் பல்கலைக்கழகத்திலிருந்து விலகல் கடிதம் எழுதித் தூக்கி எறிந்துவிட்டு வெளியே வந்துவிட்டார். அப்பேர்ப்பட்ட தன்மான அரிமா; வறுமைக்காக யாரிடமும் கையேந்த மாட்டேன் என்று கூறும் பண்பாளர்.

எனவே எப்படியாவது நிதி திரட்ட வேண்டும். எம் போன்ற பேராசிரியர்கள், புலவர்களுக்காக அவர் எழுதுகிறார். தமிழ் மொழி நூறாண்டுக்கு நிலைத்து நிற்க அவர் பணி தொடர நாம் உதவவேண்டும்'' என்று நீண்ட பொழிவையே நிகழ்த்தினார் இராசமாணிக்க னார்.

இச்செய்தியைக் கேட்டதும் பேரா. மெ.சுந்தரமும் பு.மனோகரனும், ''சரி செய்கின் றோம்'' என உறுதியளித்தனர். திரு. மெ.சுந்தரம் தலைவராகவும் மனோகரன் துணைத் தலைவ ராகவும் என்னைச் செயலாளராகவும் கொண்டு செயல்பட எண்ணினோம். அடுத்த ஓரிரு திங்களில் பேரா. மெ.சுந்தரம் வீட்டில் கூடினோம். பாவாணர் யார்? என்பதைப் பல இடங்களில் கூட்டங்கள் நடத்தி முதலில் அறிமுகம் செய்வோம். தென் பகுதி நகரங் களுக்குப் பாவாணரை அழைத்துச் சென்று கூட்டங்கள் நடத்தத் திட்டம் போட்டுப் பாவாணரை மதுரைக்கு வரவழைத்தோம்.

முதல் கூட்டத்தை 1961இல் மதுரை வெற்றித் தனிப்பயிற்சிக் கல்லூரியில் நடத்தி னோம். இக்கூட்டத்திற்குப் பேரா. சி.இலக்கு வனார் தலைமையேற்றார். பேராசிரியர்கள் அவ்வை. சு.துரைசாமி, அ.கி.பரந்தாமனார், மெ.சுந்தரம், முனைவர் தேவகிருபை தியாக ராசன், இரா.இளங்குமரனார் ஆகிய பெருமக்கள் பாவாணரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி னர்.

கூட்டம் முடிந்ததும் மெ.சுந்தரம் அவர்கள் இல்லத்தில் தங்கவைத்தோம். பின்னர் தென்மாவட்ட நகரங்களுக்கு - விருதுநகர், சிவகாசி, கோயில்பட்டி, இராசபாளையம், காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய இடங்களுக்குக் கூட்டிச்சென்றோம். தமிழண்ணல் அவர்கள் காரைக்குடி வந்தார். இது முதல் பணி.

இரண்டாவது பணியாக எழுத்தாளர் மன்றத்தின் தனிச்சுற்றறிக்கையாகத் 'தமிழ்ப் பாவை'யை எட்டே பக்கத்தில் வெளியிட்டு வந்தபோது, பாவாணரிடம் வடசொல் - தமிழ்ப் பட்டியலைப் பெற்று வெளியிட்டு அனைவர்க் கும் அனுப்பினால் அவரைப் பற்றிப் பலர் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் என்று கருதினேன்.

இதற்காகவே பாவாணரின் முகவரியுடன் காட்டுப்பாடிக்குப் புறப்பட்டேன். அங்கு நான் கண்டகாட்சி நெஞ்சை உலுக்கியது. பாவாணர் வேட்டியை தாறுபாய்ச்சுக் கட்டித் தரையில் உட்கார்ந்து சுளகில் உள்ள அரிசியில் கல்லைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். நான் வாயிலில் நின்றபடி, ''ஐயா'' என்று அழைத்தேன்.

''யார்?'' என்று கேட்டுத் திரும்பினார். ''ஐயா கருணை வந்திருக்கிறேன்'' என்றேன்.

''ஓ... அருளாளன்... வாருங்கள், வாருங் கள்'' என்று கூறி, மூக்குக் கண்ணாடியைத் தூக்கி விட்டுப் பார்த்தார்.

''நான் கொண்டு சென்ற ஆரத்திப் (ஆப்பிள்) பழங்களைக் கொடுத்தேன். வாங்கிய அவர், இந்தப் பழங்கள் இருந்திருந்தால் என் மனைவி இறந்திருக்க மாட்டார்' என்று கலங்கினார். அவரின் நிலையறிந்து வருந்தி னேன். மா.இராசமாணிக்கனார் கூறியது முற்றிலும் உண்மை என்பதையுணர்ந்தேன்.

''வீட்டில் யாருமில்லையா ஐயா...'' என்றேன்.

''மணி, என் மகன் உள்ளான். வெளியே சென்றிருக்கிறான்; வந்துவிடுவான்'' என்று கூறினார்.

மதுரை நண்பர்களைப் பற்றியெல்லாம் உசாவினார். சிறிது நேரம் உரையாடிவிட்டு நான் கொண்டு சென்ற வடசொல் - தமிழ்ப் பட்டியின் கோப்பை அவரிடம் கொடுத்தேன். ''ஆமாம். மதுரையில் கூறினீர்களே... கொடுங்கள், ஓரிரு கிழமைக்குள் குறித்து விடுகிறேன்'' என்றார். நான் விடைபெற்று வந்தேன்.

அதன்படி அவர் விடுத்துதவிய பட்டியலைத் தமிழ்ப் பாவையில் வெளியிட்டுப் பரப்பினோம். சில கட்டுரைகளும் எழுதினார்.

பேரா. மெ.சுந்தரத்தின் தூண்டுதலால் பல்வேறு ஊர்களுக்குச் சென்றோம். கருமுத்து தியாகராசர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருப்பத்தூர் வள்ளல் அரங்கசாமி, த.பி.சொக்க லால் குழுமம், சேலம், கோவை போன்ற

இடங்களுக்குச் சென்றோம். ஓரளவு நிதி திரட்டினோம். 1963லிருந்து 1967வரை திரட்டி னோம்.

1967இல் ஆட்சி மாறியது. கலைஞரை அழைக்கலாம் என முடிவு செய்தோம். அப்போது அவர் பொதுப் பணியமைச்சர். சென்னை சென்றேன். கலைஞரும் ஒத்துக் கொண்டார். மதுரை 'காலேஜ் அவுஸ்' அரங்கில் விழா நடத்தத் திட்டமிட்டு அழைப்பிதழ் அச்சாக்குவது அனைவர்க்கும் அனுப்புவதை மெ.சுந்தரம் அவர்களிடம் ஒப்படைத்தோம். விழாத் தலைவராக முத்தமிழ்க் காவலர், நிதியை வழங்குபவர் திரு. கருமுத்து தியாகராசர், நிதியைப் பெற்று பாவாணரிடம் வழங்குபவர் கலைஞர் என்பது முடிவு.

கலைஞருடன், மதியழகன், பாவலர் முத்துசாமி ஆகிய அமைச்சர்களும் அரங்கிற்கு வந்துவிட்டனர். ஆனால் யார் வரவேண்டுமோ அவர் - மொழிஞாயிறு பாவாணர் வரக் காணோம்.

துடித்துப் போனோம். தொடர் வண்டி நிலையத்திலும் பேருந்து நிலையத்திலும் ஆளை நிறுத்தியிருந்தோம். பா.மெ.சு.தான் அழைப் பிதழை அனுப்பியவர். ஆனால் பாவாணரைக் காணோம். வேறு வழியின்றி விழாவைத் தொடங்கினோம். பாவாணர் வந்து விடுவார் என்று இறுதிவரை எதிர்பார்த்தோம்.

நிதியை (10 ஆயிரம்) கலைஞரிடம் கொடுத்து, கருமுத்து தியாகராசர் பெற்றுக் கொண்டார். அவர் அதை முத்தமிழ்க் காவல ரிடம் ஒப்படைத்தார். மதுரையில் பாவாண ருக்குச் சிறப்புச் செய்ய எண்ணிய எங்கள் எண்ணம் நொறுங்கிப் போய்விட்டது. ஏமாற்றம் ஒருபுறம் பாவாணருக்கு என்ன ஆனதோ என்ற பதைப்பு ஒருபுறம். ஒரு கிழமை சென்று என் பெயருக்கு அஞ்சலட்டையொன்று வந்தது. இதோ அச்செய்தி:

> மத வெறியும் அதனாலேற்படும் போருமே, மக்கள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கும் அமைதியாய் முன்னேறுவதற்கும் தடையாய் நிற்கின்றன. - பாவாணர்

ஆ1135, 2ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,
காட்டுப்பாடி விரிவு.
9.9.67

பேரன்பரீர்

வணக்கம்.

என் மணிவிழா அழைப்பிதழை இங்குக் காட்டுப்பாடிக்கே விடுக்குமாறு பா.மெ.சுந்தர னார் அவர்கட்குச் சென்ற காரியே (2.9.67) சென்னையினின்று எழுதிவிட்டு, இங்கு வந்து நேற்று வரை எதிர்பார்த்தேன். ஒருகால் அதே போல் சென்னைக் கடிதம் தவறினாலும் தவறலாமென்று, சென்ற திங்கட்கிழமை 4.9.67 அழைப்பிதழை இங்கேயே அனுப்புமாறு தங்கட்கும் ஓர் அஞ்சலட்டை விடுத்தேன். இருவர்க்கும் எழுதியும் அழைப்பிதழ் வராமை யால் விழாத் தலைவர் அமையாமை பற்றி விழா ஒத்திவைக்கப் பெற்றது போலுமென்று கருதிக் கொண்டேன்.

இன்று சென்னையினின்று திரும்பப் பெற்ற அழைப்பிதழ் இங்கு வந்து சேர்ந்தது. என்ன பயன்? ஒருவரா இருவரா, சிறுவரா, எளியரா விழாவில் என்னைச் சிறப்பிக்க வந்தவர்! எத்துணைப் பெரியார் எத்துணை அரிய நேரத்தை எனக்காகச் செலவிட்டனரோ! இனி மேலும் பல பெரியார் மீண்டும் ஒன்றுகூடுதல் எளிதா! நான் வராமையால் என்னைப் பற்றி அவர் எத்துணையோ தவறாகக் கருதி என்னை வெறுத்திருப்பரே! இவ்வேற்பாட்டிற்கு எத்துணைக் காலமும் முயற்சியும் தங்கட்குச் சென்றன அவையாவும் வீணாயிற்றே! இதை யெல்லாம் நினைக்கும்போது என் நெஞ்சம் எத்துணைப் புண்படுகிறது. பிற புலவர்க்குப் பெரியார் பலர் சேர்ந்தால் அதில் வியப் பொன்றுமில்லை; எளிய நிலையிலிருப்பவனும் முகமன் கூறிப் பிறரைப் புகழும் இயல்பில்லாத வனும், புலவரும் விரும்பாத தனித்தமிழ் நடையினனும், ஆரியத்தை வன்மையாய் எதிர்ப்பவனுமாகிய என்னைப் பாராட்டப் பெரியார் பலர் கூடினராரெனின் அது வியப்பி னும் வியப்பே.

சென்னைக்கு விடுத்தபோதே இங்கும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தால் இது நேர்ந்தி

ராது. அல்லது அழைப்பிதழ் வாராயினும் வந்திடுக என்று எழுதியிருந்தாலும் வந்திருப் பேன். விழாவிற்கு நான் வராமையால் என்மேல் குற்றமில்லையென்று விருந்தினர் விடுத்திருக்க லாம். என் பொருட்டே ஏற்பாடு செய்யப் பெற்றமையால் என் நிலைமையைத் தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

- ஞாதேவநேயன்

இத்தனை செய்தியையும் ஓர் அஞ்ச லட்டையில் அடக்கியிருந்தார். இதிலும் வேடிக் கை என்னவென்றால் இந்த அட்டையில் என் பெயர் முகவரியைச் சரியாக எழுதிவிட்டு, மதுரை - 10 என்பதற்கு மாறாகச் சென்னை - 10 என எழுதிவிட்டார். அவ்வட்டை சென்னை போய்ச் சுற்றி 19.7.67 அன்று எனக்குக் கிடைத்தது.

இதிலிருந்து பாவாணர் எத்துணைத் துன்பத்தோடு - குழப்பத்தோடு எழுதியிருப்பார் என அறிந்து வேதனைப்பட்டேன். பாவாணர் எனக்கு எழுதிய அத்தனை அஞ்சலட்டைகளை யும் புலவர் இளங்குமரனார் பெற்றுச் சென்று பாவாணர் மடல்கள் என்ற ஓர் அரிய நூலொன்றை வெளியிட்டுள்ளார்கள்.

பாவாணரின் இறுதி நாள் மதுரை 1981 சிலை (சனவரி) 5ஆம் நாள். மதுரை உலகத் தமிழ் மாநாடு. இரண்டாம் நாள் பாவாணர் உரையாற்ற வேண்டும். 'மாந்தரின் தோற்றமும் தமிழர் மரபும்' என்பது தலைப்பு.

நான் பாவாணரைப் பல இடங்களில் தேடினேன். இத்தனைக்கும் விருந்தினரைப் பார்த்துக் கொள்ளும் குழுவின் உறுப்பினன் நான். தேடியலைந்து கடைசியில் உணவருந்து மிடத்தில் கண்டேன். பெருமகிழ்வோடு அழைத்து உட்கார வைத்து உணவுத் தட்டைப் பெற்று உண்ணவைத்த பேறு எனக்குக் கிடைத்தது.

''நீங்கள் உண்ணவில்லையா?'' என்று கேட்டார்.

''நீங்கள் முடியுங்கள்; நான் பின்னர் உண்பேன்'' என்றேன். மீண்டும் போய் பனிக் குழைவுக் குப்பியுடன் வந்து, ''ஐயா... ஐஸ்கிரீம்'' என்று கூறினேன். அவர், ''ஓ... பனிக்குழைவு!'' என்று வாய் மலர்ந்து சிரித்தார். அவர் ஆசையோடு சாப்பிடுவதையே கண்டு மகிழ்ந்தேன். வாயெல்லாம் வழிந்தது; நான் அவரின் மேல் துண்டை எடுத்துத் துடைத்து விட்டேன். உண்டு முடிந்ததும் வண்டிக்கு அனுப்பிவைத்தேன்.

அடுத்த நாள் அவரின் உரை. இரண்டு மணிநேரம் ஆற்றினார். பேசிக் கொண்டே யிருந்தார். நான் விருந்தினரைப் பகலுணவுக்காக அழைக்க அடுத்த கட்டடம் சென்றுவிட்டேன்.

தொண்டு

''தொள் - தொண்டு = தொளை

மாந்தன் உடம்பில் ஒன்பது தொளையிருத்தலால், தொளைப் பெயர் அதன் தொகைப் பெயராயிற்று.

ஒன்பதிற்கு முதலாவது வழங்கிய பெயர் தொண்டு என்பதே.

''தொண்டு தலையிட்ட பத்துக்குறையெழுநூற்று (தொல். 1358)

''தொடித்திரித்தன்ன தொண்டு படுதிவவின் (மலைபடு. 21)

''தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ் (சிலப். பக். 221. குறிப்புரை)

ஒன்று முதல் பத்து வரையுள்ள பெயர்களெல்லாம் தனிச் சொல்லாயிருப்பதையும், ஒன்பது என்பது கூட்டுச் சொல்லாயும் பது (பத்து) என்று முடிவதாயும் இருப்பதையும் நோக்குக.''

- பாவாணர்

பாவாணரின் ஆய்வுநெறி அழகு!

செந்தலை ந.கவுதமன்,

சூலூர் – பாவேந்தர் பேரவை, கோவை.

திருவையாற்று அரசர் கல்லூரி ஆண்டு விழாவுக்கு வர இசைந்தார் பாவாணர்! 'உலக மொழிகளில் தமிழ்' எனும்தலைப்பையும் அவரே தந்துவிட்டார். இது நடந்தது 1973இல்!

அரசர் கல்லூரியில் நாங்கள் புலவர் கல்வி படித்து வந்தநேரம்! இறுதி யாண்டை எட்டிவிட்ட நிலை! படிப்பு முடிவதற்குள் பாவாணரைக் கல்லூரிக்கு அழைத்துவந்து விடவேண்டும் என்னும் துடிப்பு எங்களுக்கு!

'பகுத்தறிவுக்குப் பெரியார்!

தமிழுக்குப் பாவாணர்!' - என

இருவரை மட்டுமே தலைவர்களாக ஏற்றுக்கொண்டு கல்லூரியில் செயற்பட்டு வந்தோம்!

அண்ணா பிறந்தநாள் விழாவிற்குத் தந்தை பெரியார் கல்லூரிக்கு வந்துவிட்டார். ஒரு விருப்பம் நிறைவேறிவிட்டது.

பாவாணர் வருகைக்குத் தான் தவம் கிடந்தோம். தவம் பலித்தது. எங்கள் தோழர் மு.இளமுருகன்தான் இலக்கியக் கழகச் செயலாளர். (இப்போது தஞ்சைக் கரந்தைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்)

பாவாணர் திருவையாறு பயணியர் விடுதியில் மூன்றுநாள் தங்கவும், விரும்பிய உணவை அவருக்கு வழங்கவும் விரிவான ஏற்பாடுகளை இளமுருகன் செய்துவைத்திருந்தார்.

விழாவிற்கு முதல்நாளே வந்து விடுவதாக (வழக்கம்போல் அஞ்சலட்டையில்) எழுதிவிட்டார் பாவாணர்! அவரைப் பேருந்து நிலையத்தில் (பகல்) இரண்டு மணிக்கு வரவேற்பதாக ஏற்பாடு. புறப்பட்டோம்!

குறித்த நேரத்திற்கு முன்பாகவே வந்துவிட்ட பாவாணர், தனியொருவராகக் கல்லூரி நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டார். வழியில் ஒரு தட்டி அவர் நடையை நிறுத்திவிட்டது.

'அரசர் கல்லூரிக்குப் பாவாணர் வருகை!' எனத் திருவையாறு கடைவீதியில் பெரிய அளவில் விளம்பரத் தட்டி எழுதிவைத்திருந்தோம்.

தட்டியை அண்ணாந்து பார்த்தபடி பாவாணர் நின்று கொண்டிருந்தார்.

பாவாணரைப் பார்த்த மகிழ்ச்சியில் கல்லூரி நண்பர்கள் பரபரப்படைந்தனர்.

'எனக்கு இப்படியொரு வரவேற்பா?' என்பதுபோல் மலைத்து நின்றார் பாவாணர்.

திருவையாறு பயணியர் விடுதிக்கு அவரை அழைத்துச் சென்றோம். இளமுருகன், மருதமுத்து, எழில்கோ, தமிழினியன் முதலிய நண்பர்கள் பாவாணரின் தேவைகளைப் பட்டியலிட்டுக் கொண்டனர்.

'உழுந்து வடை' மீது தமக்குள்ள காதலைப் புலப்படுத்தினார் பாவாணர்.

மறுநாள் விழா! எங்களுக்குக் கல்லூரி முதல்வராய் அப்போது இருந்தவர் திரு. கோ.வேங்கடாசலம். ஆங்கிலம் கலந்து பேசுவதில் பழகிப்போனவர்!

'உங்களைப் பார்த்தாலே பயமா இருக்குய்யா! உங்களை மாதிரி சுத்தமான தமிழ்லே பேச நானும் ட்ரை பண்ணித்தான் பாக்குறேன், முடியலய்யா!' - இப்படி எங்களிடம் அடிக்கடிக் 'கவலை'ப்பட்டுக் கொள்வது அவர் வழக்கம்!

''உங்க தலைவரை நானும் வந்து பார்த்துப் பேசிட்டு வந்துர்றேன்யா!' எனக் கூறிய முதல்வர், பாவாணரை வரவேற்பதற்காகப் பயணியர் விடுதிக்கு வந்தார். உபசரிப்பாக ஏதாவது பேசியாக வேண்டுமே! தமிழ்ச் சொல்தானா என உறுதிசெய்து கொண்டு மனத்திற்குள்ளேயே சொற்றொடர் அமைத்து, மிக முயன்று பாவாணரிடம் பேசினார்.

'எது வேண்டுமானாலும் கூறுங்கள் அய்யா! ஏற்பாடு செய்கிறேன்' எனக் கூறி நிறுத்தியபிறகு தான், பாவாணர் கூறிய விடையைக் கேட்டுக் குழம்பிப்போனார்.

'முட்டை முளை வரை மட்டும் இயன்றால் ஏற்பாடு செய்யுங்கள்!' என்றார் பாவாணர்! இதுவரை கேள்விப்படாத பொருளாயிருக்கிறதே என்பதால் முதல்வர் கோ.வேங்கடாசலம் குழம்பி நின்றார்.

'ஏற்பாடு செய்கிறேன் அய்யா!' என விடைபெற்றுக் கொண்டு வெளியில் பாய்ந்த முதல்வர், எங்களிடம் மிகுந்த பணிவோடு கேட்டார்:

''என்னய்யா சொல்றாரு உங்க ஆளு? முட்டை முளைவறை கேட்கிறாரே!'

'ஓவல் டின்'னுங்க அய்யா! அதைத்தான் தூய தமிழில் சொல்கிறார் பாவாணர்'

எங்கள் பதிலைக் கேட்டு வியந்து போய் விட்டார் முதல்வர்.

'ஓவல் டின்னா! என்னென்னமோ தெரிஞ்சு வச்சிருக்கீங்கய்யா! நான் தெரிஞ்சுக்க வேண்டியது உங்ககிட்டே நிறைய இருக்குது!''

எங்களை வியப்போடும் மதிப்போடும் பார்த்துப் பேசிய முதல்வர், பாவாணர் காட்டுப் பாடிக்குப் புறப்பட்டுச் செல்லும் வரை, அவரோடு பேசும் ஒவ்வொரு முறையும் எங்களில் யாரேனும் ஒருவர் அருகில் இருக்குமாறு பார்த்துக் கொண்டார்.

பாவாணரோடு பழகினாலும், அவரின் நூலோடு பழகினாலும் - புதுப்புதுச் சொற்கள், புதுப்புதுச் செய்திகள் என 'நவில்தொறும் நூல் நயம்' நொடிதோறும் தோன்றியபடி இருக்கும்.

பாவாணரின் உரையாடல் போன்றே நூலமைப்பும் ஆய்வுநெறியும் தனித்தன்மையானவை; கூர்ந்து நோக்கி விளங்கிக் கொள்ள வேண்டியவை.

பிறநாட்டு உத்திகளை நகலெடுத்த ஆய்வாளர்களே தமிழ்நாட்டில் மிகுதி!

பாவணரின் ஆய்வு மூல ஆய்வு! தமிழுலகில் புதுத்தடத்தில் ஆய்வுப் பயணம் செய்தவர் அவர்.

பாவாணர் ஆய்வுக்கு நெறிமுறை உண்டா என்னும் அய்ய வினாவும் ஆய்வுலகில் சிலரிடம் உண்டு.

எந்த மூல ஆய்வும் நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு உருவாகாது.

எள்ளிலிருந்துதான் எண்ணெய்!

இலக்கியத்திலிருந்துதான் இலக்கணம்!

எழுதியவற்றிலிருந்துதான் நெறிமுறை!

பாவாணர் ஆய்வு - ஒரு நெறிமுறைக்கு உட்பட்டே இயங்குவதை, அவர் நூல்களை ஊன்றி நோக்கும் எவரும் உணர முடியும்!

அவரின் ஆய்வு நெறிமுறையை, அவரே வகுத்து வழங்கும் வாய்ப்பை நாம் இழந்து

விட்டோம் ஆனால், அத்துறையில் பயிற்சியுடைய எவரும் இப்போது உருவாக்கி வழங்கி விடமுடியும். அதற்கான ஆய்வுப் பரப்பை நம்முன் விரிந்த அளவில் வைத்துச் சென்றுள்ளார் பாவாணர்.

எந்த மூல ஆய்விலும், கண்டுகாட்டிய உண்மைகளில் பத்துக்கு நான்கு நின்றாலே போதும்! பாவாணர் ஆய்வு அதனையும் தாண்டி நிற்கக் கூடிய கட்டுக்கோப்பும் செறிவும் உடையது!

புலமையும் பயிற்சியும் போதிய முயற்சியும் இருந்தால் மட்டுமே, பாவாணர் நூல்களின் முழுப் பயனைப் பெறமுடியும்.

பாவாணர் நூல்கள் தேங்காய் போன்றவை! பல்லும் கையும் கருவியும் இருந்தால் மட்டுமே தேங்காயை உரிக்கவும் உடைக்கவும் சுவைக்கவும் முடியும்.

அவர் நூல்களின் ஒவ்வொரு பக்கத்தையும் அளந்து அளந்துதான் அசைபோட வேண்டும்; அசைபோட்டு அசைபோட்டுத்தான் நகர்ந்து செல்லவேண்டும்!

'புலவரும் விரும்பாத தனித்தமிழ் நடையினனும் ஆரியத்தை வன்மையாய் எதிர்ப்பவனுமாகிய என்னை' - எனப் பாவாணர் தம்மைப் பற்றிக் கூறுவதைக் கொண்டே, அவரின் இடத்தையும் இலக்கையும் உணர்ந்துகொள்ள இயலும்.

சொற்களுக்குள் நுட்பத்தை நுழைத்துச் செல்லும் அழகுநடை பாவாணருடையது!

சொல்லவந்த செய்திக்கு எடுத்துக்காட்டுத் தரும்போது, (முழுப் பாட்டையும் போட்டுப் பக்கத்தை நிரப்பாமல்) ஒரு சொல்லோ அடியோ காட்டிச் செல்வதே பாவாணர் வழக்கம்.

செய்தியைத் தொகுத்தும் பகுத்தும் வகுத்தும் விரித்தும் ஒப்பிட்டும் - செல்லும் ஆய்வுநெறி அழகைப் பாவாணர் நூல்களில் மட்டுமே பார்க்க முடியும்! காட்டாக ஒன்று :

மொழியின் தோற்றநிலையைக் குறிப்பிடும் பாவாணர் உணர்வொலி, ஒப்பொலி, குறியொலி, செய்கையொலி, குழவி வளர்ப்பொலி என்பனவற்றைக் குறிப்பிடுவார்.

இந்நிலைகள் அனைத்தும் உழைப்பின் அடிப்படையில் உருவானவை என்பது தெளிவு!

'மொழியின் தோற்றத்திற்கு உழைப்பே அடிப்படை' என்பார் ஏங்கெல்சு. இந்த மார்க்சிய உண்மையை உறுதிப்படுத்துவதாக விரிந்து செல்வதே பாவாணர் ஆய்வு!

'மொழியைப் படைத்தவன் மாந்தன்' என்பதே பாவாணர் ஆய்வில் அழுத்தம் பெறும் அடிப்படை உண்மை.

★ சைகைக் காலம்

★ குறிப்பொலிக் காலம்

★ சுட்டொலிக் காலம் - என மொழி வரலாற்றை முப்பகுப்பு ஆக்குவார் பாவாணர்.

மூன்றிலும் முதிர்ந்தது 'சுட்டொலி' என்பார். சுட்டொலி மூன்று ஆ, ஈ, ஊ! அவற்றின் இற்றை வடிவம் அ, இ, உ!

மூல வடிவையே இன்றளவும் தாங்கி நிற்பன மலையாளம் (ஆயாள்) தெலுங்கு (ஆபனி) முதலிய திரவிட மொழிகள்!

தமிழில், மாறிய சுட்டுவடிவம் பிற மொழிகளில் மாறாமையைக் 'குடியேற்றப் பாதுகாப்பு' (Colonial Preservation) எனக் குறிப்பிடுவார் பாவாணர்.

'சுட்டடிக் கொள்கையாளர்' எனப் பாவாணர் இன்று அறிவுலகால் போற்றப்படுகிறார்.

சுட்டெழுத்துகளிலிருந்தே தமிழ் தோன்றிய வரலாற்றை முதல் தாய்மொழி, சுட்டுவிளக்கம் முதலிய நூல்களில் தெளிவுபடுத்திக் காட்டகிறார்.

ஆ, ஈ, ஊ எனும் முச்சுட்டுகளுள் சொல்வளச் சுரங்கமாக அவர் காட்டவது ஊகாரச் சுட்டு!

'சுட்டொலி' எனும் ஒன்றைத் துருவித் துருவிப் பாவாணர் வளர்த்துச் செல்லும் ஆய்வுநுட்பம் வியப்பும் மலைப்பும் தருவது.

சுட்டொலியின் மூலம் காட்டும் பாவாணரின் ஆய்வுப் பாதையை ஒரு சோற்றுப்பதாக இங்கே சுருக்கமாகக் காணலாம்.

மொழி இருவகை : 1) இயன்மொழி, 2) திரிமொழி.

இயன்மொழி இருவகை :1) அசை நிலை, 2) சொல் நிலை

சொல்நிலை இருவகை : 1) இலக்கண வகை, 2) இலக்கிய வகை

இலக்கண வகை நான்கு : 1) அசைச் சொல், 2) புணர்ச்சொல், 3) பகுசொல், 4) தொடர்ச்சொல்

இலக்கிய வகை இரண்டு : 1) இயற் சொல், 2) திரிசொல்

இயற்சொல் தோன்றிய வகை மூன்று : 1) கத்தொலி, 2) வாய்ச் சைகையொலி, 3) குறிப் பொலி

வாய்ச்சைகையொலி இருவகை : 1) சுட்டொலி, 2) சுட்டாஒலி

வாய்ச் சைகைக்கு முந்திய நிலை மூன்று : 1) கைகால் சைகை, 2) கண் சாடை, 3) முகக் குறிப்பு

கத்தொலி பிறக்கும் உணர்வுமுனை மூன்று : 1) வியப்பு (ஆ), 2) மகிழ்ச்சி (ஈ), 3) அச்சம் (ஊ)

சுட்டொலிக்கும் மொழியின் தோற்றத் திற்கும் உள்ள முடிச்சை அவிழ்க்கக் கடந்து செல்ல வேண்டிய படிகளாக இவற்றைக் காட்டுகிறார் பாவாணர்!

தமிழின் மூலவடிவம் உலகமொழிகளில் திரிந்தும் சிதைந்தும் வழங்குவதைப் பாவாணர் ஒப்பிட்டுக் காட்டும்போது, வியப்பும் மகிழ்வும் நம்மை ஒருசேரத் தழுவிக் கொள்வது உண்மை.

அவரின் ஆய்வுநெறி அமைப்பும் அடிப்படை நெறிமுறைகளும் - மற்றுமோர் ஆய்வு முயற்சிக்கான வாயில்கள்! வாயிற் கதவைத் திறக்க முயல்வதற்கு முன் திறக்கும் கைகளை வலிமையாக்கிக் கொள்வது முகாமை!

திருவிழந்தோம்

திருவள்ளுவர் ஆண்டு விழா சேலத்தில் மிகச் சிறப்புடன் நடந்து கொண்டிருந்தது. பேராசிரியர் திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமை தாங்கியிருந்தனர். பல புலவரும் அறிஞரும் பேசி முடித்தனர். தலைவரவர் தம் பின்னுரையில், அன்று பேசிய அறிஞர்தம் ஏற்றத்தை அழகிய முறையில் நகைச்சுவையோடு விளக்கி முடித்தனர். கூட்டத்தில் ஒருமுகமாய் நிறைவேறிய தீர்மானங்கள் தலைவரால் படித்துக் காட்டப்பட்டன. இந்நிகழ்ச்சி முடிவுறும் நிலையில் செயலாளர் நன்றிகூற வேண்டி மேடையேறி ஒருபுறம் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. பாவாணர் தமக்கே உரிய குரலில் என்ன? என்று உரக்கக் கேட்டார். 'புதிய தீர்மானம் ஒன்றுள்ளது' என்று ஒரு குரல் வந்தது. செயலாளர் அவ்விடத்திற்கு ஓடினார். அத்தீர்மானத்தை அறிந்துகொண்டு வந்து பாவாணரின் காதுகளில் மெதுவாகச் சொன்னார். உடனே தலைவர் புன்னகையோடு கூட்டத்தைப் பார்த்து ஏறுபோல் நின்றார். கூட்டத்தார் எல்லோரும் தலைவர் ஏது சொல்லப் போகின்றாரோ என்று தம் கூர்ஞ்செவிகளை நீட்டிக்கொண்டிருந்தனர். 'கணீர்' என்ற பெருங்குரலில், பாவாணர் 'நாம் திருவை இழந்தோம்' என்றனர். உடனே கூட்டத்தார் அதன் உட்பொருளறிந்து மகிழ்ச்சியால் கைதட்டி ஆரவாரஞ் செய்து அடங்கினர்; உடனே தலைவர், ''அதனால் பிறர் சிரி சிரி (ஸ்ரீ, ஸ்ரீ,) என்று சிரிக்கின்றனர்'' என்று மீண்டுஞ் சொன்னார். மகிழ்வு இரட்டிப்பாயிற்று. அந்த மகிழ்வொலி அடங்க நெடுநேரம் ஆனது.

பெயர் முன் 'ஸ்ரீ என்று போடாமல் திரு என்றே போடவேண்டும் என்பதே அத்தீர்மானம். அதை ஆழமாக உள்ளத்தில் படியுமாறும், அழகாகவும் எடுத்துச் சொன்ன பேராசிரியர் (பாவாணர்) தம் திறன் வியந்து பாராட்டுதற்குரியது.

- தென்மொழி

தமிழ்ப் பேராயம்

முனைவர் அரசக்கண்ணன்

உலகின் முதன்மொழி தமிழே. ஆதலின் அதனை 'முதல்தாய் மொழி' எனப் பாவாணர் குறிப்பிடுவர். உலகில் முதன்முதல் இலக்கியங்கள் தோன்றிய மொழியும் தமிழே. ஆதலின் பிறமொழி ஏற்பு, கடன்பேறு, கலப்பு ஏதுமின்றி இலங்கியமொழியும் தமிழே. மொழி ஆய்வாளர் தமிழை இயற்கை மொழியென்று குறிப்பிடுவர். தமிழ்செயற்கை மொழியன்று. மக்கள் இயல்போடு இயைந்த மொழி தமிழே. தமிழ் தூயமொழியாய் அற்றைநாளில் துலங்கியது.

தமிழ் பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கத்தக்க சொல்வளம், வேர்ச்சொல்வளம், சொல்லாக்கத்தின் மொழியமைப்புகள் முதலான பெற்றுத் தனித்தமிழாய்' தழைத்து நின்றது. இத்தகு தனித்தியங்கும் ஆற்றலைக் கால்டுவெல் ''திராவிட மொழிகள் அனைத்திலும், உயர் தனிச் செம்மொழியாக நிலைபெற்றிருக்கும் தமிழ் தன்னிடையே இடம்பெற்றிருக்கும் சமற்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர்வாழ்வதோடு அவற்றின் துணை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம்பெற்று வளர்வதும் இயலும்'' என்று விளக்குவர்.

உண்மை நிலை இவ்வாறு இருக்கப் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவாமிநாத தேசிகர் 'இலக்கணக்கொத்து' என்ற தம் நூலின் பாயிரத்தில்,

''அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?''

என்று வினவுவர்.

இதுகாறும் தமிழைத் தமிழென்றே வழங்கி வந்தனர். தனித்தமிழ் என யாரும் சுட்டவில்லை. 'தனித்தமிழ்' என்ற சொல்லாட்சியை முதன்முதலில் பயன்படுத்தியவர் சுவாமி நாததேசிகரே யானாலும், அவரது கருத்துத் தமிழின் தனித்தன்மையை, தனித்தியங்கும் தகுதியை வினாக் குறியாக்கி மறுப்பதாக இருந்தமையால் தமிழறிஞர்கள் வீறுகொண்டெழுந்தனர். இயக்கங்கள் தோன்றின. இதனால் 'தனித்தமிழ்' என்ற சொல்லாட்சி நிலைபெற்றுப் பயன்பாடும் விரிவடைந்தது.

தமிழின் தொடக்க காலத்தில் பிறமொழிக் கலப்பு என்று ஏதுமில்லை. காலப்போக்கில், பிறமொழியாளர் வருகை, வல்லாண்மை, படையெடுப்புகள், வணிகம், அரசியல், சமயத் தொடர்புகள், அறிவியல் வளர்ச்சி எனப் பல்வேறு கரணியங்களால் கடன்பேறுகளும், கலப்பும் நிகழலாயின. தொடக்க காலத்தில் சிறு அளவில் நிகழ்வுற்ற இப்போக்குப் பின்னர்ப் பல்கிப் பெருகியது. வடமொழியாளர் திட்டமிட்டுத் தமிழைப் பாழ்படுத்தினர். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய ஆட்சி விரிவடைந்த காலத்தில் தமிழிருந்த இடத்தை மேலும் ஆங்கிலம் கைப்பற்றிக் கொண்டது. இந்நூற்றாண்டின் இறுதியில் தமிழ் அழிந்து படுமோ என்று அஞ்சத்தக்க நிலை உருவானது.

இந்நிலையில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஆங்கிலேயர்களும், பிற அயல்நாட்டு அறிஞர்களும் எழுதிய நூல்களின் தாக்கத்தால், தமிழ்க் குமுகத்திலும், மொழி, இன, அரசியலிலும் மாறுதல்கள் தோன்றலாயின. சமற்கிருதச் சார்பில்லாத தனித்தமிழ் இலக்கியங்கள் கிறித்து பிறப்பதற்கு முன்னரே இருந்தன என்றும், அவை செம்மை சான்ற சீரிய இலக்கியங்கள் என்றும் அயல் நாட்டறிஞர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் தமிழறிஞர்களுக்குக் கிளர்ச்சியூட்டின.

மறைமலையடிகளார் 'தனித்தமிழின் தந்தை' எனப்படுவார். ஆயினும் மொழிக் கலப்பை நீக்கித் தூய தமிழில் எழுத வேண்டும் என்ற முயற்சி மறைமலையடிகளாருக்கு முன்னரே நடைபெற்றுள்ளது.

பாம்பன் சுவாமிகள் (1850 - 1929) வடசொல் ஒன்றுமே கலவாத 'சேந்தன் செந்தமிழ்' நூலை எழுதினார். அதற்குரிய உரையும் தனித்தமிழில் எழுதப்பட்டது. மேலும் சேந்தன் செந்தமிழ் புலன் வனப்பு என்னும் வடசொல் தமிழ் அகரமுதலியும் எழுதப்பட்டது.

விருதை சிவஞான யோகிகள் முயற்சியால் 19.11.1908இல் 'திருவிடர்கழகம்' என ஓர் அமைப்புத் தோன்றியது. தனித்தமிழ் என்ற தொடர் இல்லாவிடினும், கழகத்தின் நோக்கம், குறிப்பு, கட்டளைகள் என்பனவெல்லாம் தனித்தமிழாகவே அமைந்திருந்தன.

இந்திய விடுதலை இயக்கப் போராளி சுப்பிரமணியசிவா தான் ஆசிரியராக இருந்த 'ஞானபானு' 1915ஆம் ஆண்டு சூலை மாத இதழில் தனித்தமிழில் கட்டுரை எழுதுவோர்க்கு உரூவா ஐந்து தமிழ்ப் பற்றாளர் ஒருவர் தர முன்வந்திருப்பதாக ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளார்.

''உங்களால் தனித்தமிழில் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள்'' எனத் தொடங்கிச் ''சமஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றாகியிருப்பது போன்று திரிபுச் சொற்களும் உபயோகப் படுத்தலாகாது. சுருக்கத்தில் எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்படவேண்டும்'' என்று விளம்பரத்தை முடிப்பர்.

இவ்வாறு பாம்பன் சுவாமிகள், சுப்பிரமணிய சிவா ஆகியோர் தனித்தமிழை வளர்க்க மேற்கொண்ட முயற்சிகள் மறைமலையடிகளின் தனித்தமிழ் உணர்வுக்குத் தளமாக அமைந்தது எனலாம்.

மறைமலையடிகள் தொடக்க நிலையில் வடமொழியினின்று தமிழ் பிறந்தது என்பார் கருத்தை மறுத்துக் கட்டுரைகள் எழுதிவந்தார். தமிழ்ச் சொல் இது, வடசொல் இது எனப் பகுத்தாயும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். கி.பி. 1903இல் அடிகள் வெளியிட்ட முல்லைப் பாட்டு ஆராய்ச்சி உரையிலும், கி.பி. 1906 இல் வெளியிட்ட பட்டினப்பாலை ஆராய்ச்சி உரையிலும், இவ்விரு நூல்களிலும் முறையே இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களின் எண்ணிக்கையை வரையறுத்துக் கூறுவர்.

தமிழ்ப் பாடல்களில் வடமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமையை இழப்பதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாது போகின்றன என்ற கருத்தை 1916ஆம் ஆண்டில் வெளியிட்டு அந்நாள் முதல் தமிழில் பேச, எழுத உறுதிபூண்டார்.

'வேதாசலம்' என்ற அவர் பெயர் 'மறைமலை' என மாறிற்று. 'ஞானசாகரம்' என்ற மாதிகை 'அறிவுக்கடல்' ஆயிற்று. அவர் நடத்திய சமரச 'சன்மார்க்க சங்கம்' 'பொது நிலைக் கழகம்' எனத் தமிழ்ப் பெயர் பூண்டது. மறு பதிப்புகளாக அவர் நூல்கள் வெளியிடப் பட்டபோது அவற்றில் இடம்பெற்றிருந்த வடசொற்களை முற்றாகக் களைந்து தனித்தமிழாக்கி வெளியிடுவதை மரபாகக் கொண்டார். பிறமொழிக் கலப்பால் விளையும் கேடுகளை விளக்கிக் கட்டுரைகள் வரைந்தார். கட்டுரைகளில் 'கொள்கை விளக்கம்' எழுதினார். எதிர்நிலைகளை எதிர்கொண்டார்.

அடிகளாரின் தனித்தமிழுணர்வுக்குக் கரணியமாக இருந்தவர்களின் வெளிப்பாடுகள் முயற்சிகளாக அமைய, அடிகளாரோ தனித் தமிழ்க் கோட்பாட்டை வாழ்வியல் நெறியாக

வும், கடைப்பிடியாகவும் கொண்டொழுகித் 'தனித்தமிழ்த் தந்தை' ஆனார்.

தனித்தமிழ் முயற்சிகளுக்கு முதன் முதலில் புலவர்களே பேராதரவு தந்தனர். எனினும் தனித்தமிழை எதிர்ப்பாராய்ச் சிலரும் இருந்தனர்.

சங்க இலக்கியங்கள் முதலாகப் பல நூல்களைக் கண்டாய்ந்து பதிப்பித்த உ.வே.சாமிநாதர் ''எல்லாம் தனித்தமிழ் வார்த்தைகளாகவே இருக்க வேண்டுமென்பது அனுபவத்தில் இயலுவதன்று'' எனக் கூறும் அவர் வடமொழி வழக்கையே போற்றினார். கலைச் சொல்லாக்க நிகழ்வின்போது ''தமிழில் இரண்டறக் கலந்த சொல்லெல்லாம் தமிழ்ச் சொல் என்பதே எமது துணிபு'' என்ற வையாபுரியார் 'சாஸ்திரம்' என்பதும் தமிழ்ச் சொல்லே என்பர்.

தன் மதிப்பு இயக்கத் தலைவர் பெரியார், பார்ப்பனீயத்தையும், சமற்கிருதத்தையும் எதிர்த்துப் போரிட்டு வந்தார். இந்தி மொழிக் கல்வி 1938 முதல் நடைமுறைக்கு வந்தது. பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார். வடமொழியாளர் திட்டமிட்டுத் தமிழைப் பாழ்படுத்தியமையால் சமற்கிருத எதிர்ப்புக் கொண்ட மறைமலையடிகளார் இந்தி எதிர்ப்புப் போரிலும் பங்குகொண்டார். இவ்வாறு தந்தை பெரியாரும் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரும் ஒருவரோடு ஒருவர் கலந்து செயல்படும் நிலைகள் தோன்றின.

பெரியார் தாம் நடத்திய இதழ்களுக்குக் குடியரசு, பகுத்தறிவு, புரட்சி, விடுதலை எனத் தனித் தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார். தன் மதிப்பியக்கப் புலவர்கள், எழுத்தாளர்கள், இளைஞர்களில் பலர் தனித்தமிழ்க் கொள்கையை ஏற்றனர்; பரப்பினர். 1944இல் திராவிடர் கழகம் தோன்றியது. திராவிடர் கழகப் பாவலராகப் பாரதிதாசன் விளங்கினார்.

பாரதிதாசன் தொடக்க காலத்தில் அளவற்ற வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தி வந்தார். பிறமொழிச் சொற்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற கருத்துக் கொண்டவராகவும் இருந்தார். மறைமலையடிகளாரின் தனித்தமிழ்ப் பரப்புதலினால் பாரதிதாசன் தனித்தமிழ்ப் பாவலராக உருவெடுத்தார்.

மறுபதிப்பாக அவர் நூல்கள் வந்தபோது, பிற மொழிச் சொற்களைக் களைந்து பதிப்பித்தார். 'கனியிடை ஏறிய சுளையும்' என்ற பாடலில் இடம்பெற்ற 'ருசி' என்னும் வடசொல்லை நீக்கினார். 'மணமக்கள் தூங்கினார்' என்று தொடங்கும் பாடலில் இடம்பெற்றிருந்த 'சிரமம்', 'சிந்தனா லோகம்' என்ற வடசொற்களை நீக்கி, மாற்றாக 'தொல்லை', 'நினைவென்ற உலகம்' எனுஞ் தமிழ்ச் சொற்களை இடம்பெறச் செய்தார்.

1945இல் 'தமிழியக்கம்' என்ற நூலை எழுதினார். அந்நூல் தனித்தமிழியக்கப் படைக்கலனாக விளங்கியது. இந்நூலால் பாரதிதாசன் தனித்தமிழியக்கப் பாவலரானார்; பரப்புநராகவும் திகழ்ந்தார்.

அண்ணா 1949இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தார். அண்ணா சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் இருந்தமையான் திராவிடர் கழகத்தை விடத் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்த் தன்மை மிகுந்ததாக விளங்கியது. தனித்தமிழை, அண்ணா ஆதரித்தார். தம் தம்பியர் முழுமையாகத் தனித்தமிழைக் கடைப்பிடிக்க வேண்டும் என விரும்பினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திய இதழ்கள், நம்நாடு, மன்றம், முரசொலி, தென்றல், முல்லை, தென்னகம், போர்வாள், முன்னணி, காஞ்சி, பொன்னி என்று தனித்தமிழ்ப் பெயர்களாகப் பொலிந்தன.

அவர்களின் மேடைப் பேச்சும் தனித்தமிழாக அமைந்தது. பெரியார், அண்ணா முதலிய திராவிட இயக்கத் தலைவர்கள் குழந்தைகளுக்குப் பெயர்சூட்டும்போது தமிழ்ப் பெயர்களையே வைத்தனர். திராவிட இயக்கத்தார் தனித்தமிழாகத் தங்கள் பெயர்களை மாற்றி அமைத்துக் கொண்னர். நெடுஞ்செழியன் (நாராயணசாமி), அன்பழகன் (இராமையா), மதியழகன் (சோமசுந்தரம்), வில்லாளன் (அர்ச்சுனன்), அரங்கண்ணல் (ரெங்கசாமி) என்றும் பெயர் மாற்றங்களை ஓர் இயக்கமாகவே நடத்தினர். தமிழில் பெயர் மாற்றம்

என்பது தனித்தமிழ்ப் பற்றின் அடையாளமாக இனங்காணப்பட்டது.

தனித்தமிழே தம் முதற்குறிக்கோள் எனக் கொண்டு வாழ்ந்தவர் பாவாணர். அதனால் அவர்க்கு மறைமலையடிகளோடு தொடர்பு ஏற்பட்டது. பாவாணர் எழுதிய 'ஒப்பியன் மொழி நூல்' 1940இல் வெளிவந்தது. 'தமிழர் கற்றுணரவேண்டிய நூல்' என ஒப்பியன் மொழி நூலை அண்ணா பாராட்டினார். இந்நூலைத் தாம் பேசச் செல்லும் ஊர்களுக்கெல்லாம் பெரியார் எடுத்துச் சென்று விற்பனை செய்தார். இதனால் தனித்தமிழ்க் கருத்துக்கள் மக்களிடம் சென்றன.

''அந்தமிழே ஆதி என்னும் தேவநேயர் தாம்
எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து'' என்று

பாவாணரைப் பாரதிதாசன் போற்றுவர். முல்லை, தென்றல் ஆகிய திராவிட இயக்க இதழ்களில் பாவாணர் கட்டுரைகள் வெளியிடப் பட்டன. தனித்தமிழ்க் கொள்கைகள் திராவிட இயக்கத்தாரால் ஏற்கப்பட்டு, மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டு, வளர்ந்து மக்கள் இயக்க மாக தனித்து உருவாகும் சூழ்நிலை தமிழகத்தில் உருவாகி இருந்தது. இந்தச் சூழ்நிலையில் 1968இல் உலகத் தமிழ்க் கழகம் தோன்றியது. பாவாணர் தலைவர், துணைத் தலைவர், பொதுச் செயலாளர், துணைச் செயலர், பொருளாளர் முதலிய மாநிலப் பொறுப்பாளர்களையும், மாவட்ட, வட்ட, கிளைப் பொறுப்பாளர் களையும் கொண்டு முறையானதோர் அமைப் பாக உருவானது. இதற்கு முன்னோடியாக 1960இல் சேந்தமாங்குடியாரால் இலால்குடியில் 'தனித்தமிழ்க் கழகம்' அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1964இல் தொடக்க விழா நிகழ்வுற்றது.

தமிழ்ப் பேராயம் (1959)

இக்கால கட்டத்தே தமிழ்நாட்டில் நிலவிய அரசியல் குமுகச் சூழலும், இந்தி எதிர்ப்பும், தனித் தமிழ்த் தலைவர்களும், அமைப்புக்களும் உருவாக்கியிருந்த தமிழ் உணர்வுக் கிளர்வுகளும், மாணவர்களை மிகவும் பாதித்துக் கிளர்ந்தெழச் செய்தது. சாதி, சமய மறுப்புக் கொள்கைகளை ஏற்றனர். தனித்தமி ழால் மொழி விடுதலை கிடைக்குமென நம்பினர். பகுத்தறிவுச்சிந்தனைகளைப் போற்றி னர். இவர்களில் பெரும்பான்மையோர் திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஈர்க்கப்பட்ட இளைஞர் ஆவர்.

தூயவளனார் கல்லூரிப் புதுவிடுதியைச் சேர்ந்த இவர்களால் 1959இல் தோற்றுவிக்கப் பட்டதுதான் 'தமிழ்ப் பேராயம்' என்ற தனித் தமிழ் அமைப்பாகும். தூய வளனார் கல்லூரிப் புதுவிடுதியில் பயின்ற மாணவர் மு.சாத்தையா ஒருநாள் பழைய புத்தகக் கடைக்குச் செல்கிறார். அங்கு எதிர்பாராமல் பாவாணரின் 'முதல் தாய்மொழி' என்னும் நூல் அறிமுகமாகிறது. அந்நூல் தனித்தமிழ் உணர்வை அவரிடம் கிளர்ந்தெழச் செய்கிறது. மு.சாத்தையா அதன் பின்னர்த் தமிழ்க்குடிமகனாகிறார். அங்குப் பயின்ற தமிழுணர்வுமிக்க நண்பர்களோடு அவர்க்குத் தொடர்பு ஏற்படுகிறது. அவர்களில் முதன்மையானவர் இரா.பிச்சை என்ற தன் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்ட இளவரசு ஆவர். கொள்கை உரமிக்க இவரோடு இவர் அறையில் நாமக்கல் வரத.சுப்பிரமணியன் என்ற தமிழ்ப் பற்றாளரும் பயின்று வந்தார். இவர்களுக்குள் ஏற்பட்ட மொழிவழித் தொடர்பு களே 'தமிழ்ப் பேராயம்' என்ற தனித் தமிழியக்கத்தைத் தோற்றுவித்தது எனலாம்.

பேராய உறுப்பினர்கள் தமிழ்ப்பெயர் ஏற்கவேண்டும். எழுத்து, பேச்சு இவற்றில் பிறமொழிச் சொல் கலவாது, தமிழ்ச் சொற்களே பயன்படுத்தவேண்டும் என்பனவே பேராயத் தின் முதன்மை நோக்கங்களாகும். வி.சு.இராம லிங்கம் தொல்காப்பியனாகவும், கோபால கிருஷ்ணன் அரசிளங்கண்ணனாகவும், நாக ராசன் அரவரசனாகவும், செயராமன் வெற்றி வேந்தனாகவும் தமிழ்ப் பெயர் ஏந்தினர். முத்து வைரவன் 'எழிலி' எனப் புனைப்பெயர் பூண்டார். யான் அரசக்கண்ணன் ஆனேன். இவ்வாறு அனைத்து உறுப்பினர்களும் பேராய விதிப்படி தமிழ்ப் பெயரினராக ஆயினர். தீர்மானிக்கப்பட்டபடி பேராய அனைத்து உறுப்பினர்களும் உறுப்பினர் கட்டணத்தை முறையாகச் செலுத்தி வந்தனர்.

பேராயத்திற்குச் செயலர் மட்டுமே உண்டு. முதல் செயலராக இரா.இளவரசு

ஆனார். பேராயத்தின் செயற்குழுவாக எண் பேராயம் விளங்கியது. பேராயம் கிழமைக் கூட்டம் நடத்தியது. ஒவ்வொரு கிழமையும் வெள்ளிக்கிழமை மாலை புது விடுதிமுன் பரந்து கிடக்கும் பசுமையான புல் வெளிப்பரப்பில் பேராயத்தின் கொள்கை விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது உறுப்பினர்களின் தனித்தமிழ்ப் பேச்சைக் கேட்கலாம். தனித் தமிழை வளர்க்க இனி யாது செய்வது என்று அவ்வப்போது பேசப்படும். பாவாணர் நூல்கள் உறுப்பினர்களிடையே அறிமுகம் செய்யப் பட்டது. பாவாணர் தனித்தமிழ்ப் பணி தங்கு தடையின்றி நடைபெற அவர்க்குப் பொருள் திரட்டிக் கொடுக்கப்பட்டது.

பெருஞ்சித்திரன் எனும் புனைபெயர் கொண்ட துரை.மாணிக்கம் 1959இல் திங்கள் இருமுறை இதழாகத் 'தென்மொழி' என்ற தனித்தமிழ் இதழை வெளியிடலானார். தனித் தமிழ் வேட்கை கொண்ட பேராயம் தனித்தமிழ் இதழாம் தென்மொழியை வாங்கி விற்பனை செய்தது. ஒவ்வொரு முறையும் 75 இதழ்கள் விற்பனையாயின. உடனுக்குடன் தொகையும் அனுப்பப்பட்டது. இதுபற்றி அதன் ஆசிரியர் ''தூய வளனார் கல்லூரி மாணவர்கள்தாம் தென்மொழி இதழை ஆதரிப்பதில் முன்னணி யில் இருக்கின்றார்கள்'' எனப் பாராட்டி எழுதினார். நிகழ்வுறும் கூட்டங்களில் தென் மொழி இதழ்கள் படிக்கப்படுவது நிகழ்வுறும். விரிவாக இதழில் இடம்பெறும் கருத்துக்கள் பேசப்படும். தென்மொழி இதழால் உறுப்பினர் கள் எழுச்சியுற்றனர். தென்மொழி இதழ் இடையில் நின்று போனது. எனினும் அஃது ஓர் இயக்கத்தின் இதழன்று.

ஆனால் 1959ஆம் ஆண்டிலேயே பேராயத் தின் தனித் தமிழ்க் கெள்கைகளைப் பரப்பிட 'தமிழ்ஒளி' என்ற கையெழுத்துப்படி திங்களிதழ் நடத்தப்பெற்றது. பேராயம் என்ற இயக்கத்தின் சார்பாக வெளிவந்த இதழ் என்ற சிறப்புத் தமிழ்ஒளிக்கு மட்டுமே உரியது.

'தமிழ்ஒளியின் ஆசிரியராகத் தமிழ்க் குடிமகன் திகழ்ந்தார். அதில்,

''வெங்குருதி பொங்குணர்வு எழுத்துப் பேச்சு'' என்று தொடங்கும் வெப்ப மூட்டும் தனித்தமிழ் உணர்வுப் பாடல்களை எழுதினார்.

கொள்கை வைரம் இளவரசு,

சேட்டுகளும் பூட்டுகளும் நமது நாட்டில்
செழிப்போடு கொழுப்போடு வாழும் போது
பாட்டன் வழிவந்த நமது அண்ணன் தம்பி
பஞ்சைகளாய்ப் பராரிகளாய் பாரிலெங்கும்
ஓட்டினையே கையேந்தி ஒடுங்கி வாழும்
ஒப்பற்ற இழிநிலையை ஒழிப்போம் வாரீர்!

எனத் தமிழன் தாழ்ந்த நிலையைத் தாங்காது பொங்கிப் பாடுவார்.

'எழிலி' என்ற முத்துவைரவன் சங்கப் பாச்சாயலில் பாட்டு ஓவியம் தீட்டுவார்.

படிக்கும் நாடகங்கள் படைக்கப்பட்டன. கனல் தெறிக்கும் கட்டுரைகள் வெளிப்பட்டன. 'பொன்னொளியாள்', 'ஆடிவரும் பொன் விளக்கு' என்ற தலைப்புகளில் யான் பெண்கள் நிலைகுறித்துக் கதைகள் எழுதிக் காட்டினேன். அரசிளங்கண்ணன் கட்டுரைகள் எழுதி வந்தார். கையெழுத்துப் படியேயாயினும் எண்ணம் தொடும் வண்ணங்களில் தலைப்பிற்கேற்றவாறு ஓவியங்கள் வரையப்பட்டன. படைப்புகள் அனைத்தும் பகுத்தறிவு, மறுமலர்ச்சி ஆகிய நோக்கங்களைக் கொண்டு தனித்தமிழை வளர்க்கும் முறையில், பிறமொழிச் சொற்கள் இல்லாதவாறு எழுதப்பட்டன. 'தமிழ்ஒளி' இவ்விதம் தனித்தமிழ் ஒளியாக வெளிவந்தது.

பேராய உறுப்பினர்கள் தனித்தமிழை அன்றாட வாழ்விலும் பயில்வாராயினர். அதனை நடைமுறை வழக்கிற்குக் கொண்டு வந்து, பிறர் ஏற்குமாறும் செயல்பட்டனர். அணியும் சட்டையை மெய்ப்பை என்றும், ஜிப்பா என்ற சொல்லுக்கு வட்டக்கழுத்து மெய்ப்பை என்றும், தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினர். உணவுக் கூடத்தில் 'புல்ஸ் ஐ' கொண்டு வா என்பதற்கு மாற்றாகக் 'காளைக் கண்' கொண்டு வா எனத் தமிழில் கூறுவாரா யினர். விளையாடுமிடங்களிலும் ஆங்கிலத்தை அகற்றித் தமிழால் ஆடினர். பந்து விளையாட் டிற்கு வகைக்கேற்பக் கால்பந்து, கைப்பந்து, பூப்பந்து, கூடைப்பந்து எனத் தமிழ்ப் பெயரால் குறிப்பிட்டனர்.

'சர்வீஸ்' என்பதற்குப் 'போடுகை' என்ற சொல்லையும் 'பாய்ன்ட்' என்பதற்குப் 'புள்ளி' என்ற சொல்லையும் ஒன்று, இரண்டு என்று எண்ணிக்கையைத் தமிழில் எண்ணியும்; 'லிப்ட்' என்பதற்குத் 'தூக்குதல்' என்ற சொல்லையும், 'அபன்ஸ்' 'டிபன்ஸ்' என்ற சொற்களுக்கு முறையே 'தாக்குதல்', 'தாங்குதல்' என்ற சொற்களையும் தமிழாகப் பயன்படுத்தினர்.

பேராயத்தின் தமிழுணர்வுத் தாக்கம் வகுப்புகளிலும் எதிரொலித்தது. தமிழ்க்குடி மகன் அப்போது கணித வகுப்பு மாணவர். அவர், கணிதப் பேராசிரியர் சூரிய நாராயணனிடம் தமிழிலேயே வினாக்கள் தொடுக்க, அப்பேராசிரியர் பூமத்தியரேகை, நிலநடுக்கம் என்ற சொற்களைப் பயன்படுத்தியும், கணிதத்தைத் தமிழிலேயே விளக்கியும் வகுப்புகள் நடத்தலானார்.

கல்லூரித் தமிழ்ப் பேரவைச் செயலராகத் தமிழ்க்குடிமகன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுகாறும் ஆவணங்களில் 'புனித சூசையப்பர்' கல்லூரி என்றே வழங்கிவரத் தமிழ்க் குடிமகன் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பேரவை மடல் கட்டில் 'தூய வளனார்' கல்லூரி என்று அச்சேற்றினார். பேரவைத் தலைவராம் தமிழ்த் துறைத் தலைவர் பெயரைத் தமிழ் மரபிற்கேற்ப அச்சடித்துக் கொடுத்தார். இதற்குத் தலைவர் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு மடல் கட்டைத் திருப்பிவிட்டார். இப்போது அக்கல்லூரிப் பெயர் தூயவளனார் கல்லூரி என்பதாம். பேரவைத் தலைவரும் பின்னாளில் தமிழ் மரபிற்கேற்பத் தன் பெயரை மாற்றியமைத்துக் கொண்டார்.

கல்லூரித் தமிழ்ப்பேரவை வகுப்புவாரியாக நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்ற தமிழ்ப் பேராய உறுப்பினர்கள் பரிசுக்குரிய நூல்களாகப் பாரதிதாசன் பாடல்களைத் தேர்ந்தெடுத்து வாங்கி வந்தபோது, பேரவைத் தலைவர் அந்நூல்களைக் கொடுப்பதற்கு உரியன அல்ல என்று நூல்களைத் திருப்பிவிட்டார். பின்னாளில் பேரவைத் தலைவரே பாரதிதாசனைப் பேசவும், எழுதவுமான தலைகீழ் நிலை ஏற்பட்டது.

கல்லூரி, விடுதி என்ற அளவிலே மட்டுமின்றிப் பேராயத்தின் தனித்தமிழ்க் கொள்கை நாடெங்கும் பரவிடக் கிளைகள் தொடங்கவும் தீர்மானிக்கப்பட்டது. 'தமிழ்ப் பேராயம்' என்ற பெயரில் என் ஊர் வேம்பங்குடியில் முதற் கிளையைத் தொடங்கினேன். எழிலி என்ற முத்து வைரவன் நாடியம் என்ற அவர் ஊரில் பேராயம் அமைத்தார். தீர்மானப்படி பேராய உறுப்பினர்கள் ஆங்காங்கே கிளைகள் தொடங்கி னர்.

அப்போது அக்கல்லூரி வரலாற்றில் என்றும் கண்டிராத முதல் மாணவர் போராட்டம் வெடித்தது. சிவ வடிவேல் பேராய உறுப்பினர் ஆவர். அவர்க்கும் விடுதி உணவு பரிமாறும் ஊழியர்க்கும், பரிமாறும் போது ஏற்பட்ட மனவருத்தம், விடுதி ஊழியர் மாணவர் சிவவடிவேலை மாலைப் பொழுதில் விடுதிக்கு வெளியே தாக்கும் வெறியாக வெளிப்பட்டது. இச்செய்தி தீயாக மாணவர் உள்ளத்தில் எரிந்து மாலைப் பொழுதைச் சிவக்கச் செய்தது.

அடித்த ஊழியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மாணவர் கோரிக்கை. அக்கோரிக்கை புது விடுதித் துணைக் காப்பாளரால் ஏற்கப்படவில்லை. வீறுகொண்ட மாணவர் முறைமை வேண்டித் திரண்டெழுந்தவர்களாய் மறைத்தந்தையர் வாழ் விடுதிக்கு முழக்கமிட்டு முன்சென்றனர்.

நிலைமை கட்டுக்கடங்காது போவது கண்டு விடுதித் துணைக்காப்பாளர் ஓடிவந்து மாணவர்களைத் தடுத்து நிறுத்தித் தன் செயலுக்கு ஆங்கிலத்தில் வருத்தம் தெரிவித்தார். அப்போது தங்கள் வருத்தத்தைத் தமிழில் சொல்க எனத் தமிழ்குடிமகன் முழங்கினார். ஆங்கிலத்தை விட்டுத் துணைக் காப்பாளரும் தமிழிற்கு வந்தார்.

மாணவர் ஆர்ப்பாட்டச் செய்தியறிந்து, விடுதிக் காப்பாளரும், மறைத் தந்தையும் வந்து சேர்ந்தனர். ''போராட்டம் கூடாது. ஆகாது'' என்றனர். இறுதியில் தாக்கிய ஊழியர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். போராட்டத்தில் கலந்து கொண்டார் என்பதற்காக எந்த மாணவரும் பழிவாங்கப்பட மாட்டார் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

1960ஆம் ஆண்டுக் கோடை விடுமுறை யில் பேராயச் சார்பில் நாடகம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பேராய உறுப்பினர்களே நாடகம் எழுதித் தரலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. அதன்படி நான் ஒரு நாடகம் எழுதித் தமிழ்க் குடிமகனிடம் கொடுத்தேன். ஒருநாள் கல்லூரித் தாழ்வாரத்தில் வகுப்புகள் தொடங்கு முன், தமிழ்க் குடிமகனும், அவர் நண்பரும் என்னைக் கண்டுகொண்டனர். நீங்கள் எழுதிய நாடகப் பெயரும், நான் எழுதிய நாடகப் பெயரும் ஒன்றாகவே உள்ளதே என்று என் நாடகத்தைப் பாராட்டிவிட்டு அடுத்த தடவை உங்கள் நாடகத்தை அரங்கேற்றுவோம் என்று சொல்லி அகன்றனர்.



அக்கோடை விடுமுறையில் சாத்தனூரில் எருதுகட்டு விழாவையொட்டித் தனித்தமிழ், சாதி மறுப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவுக் கொள்கைகளைக் கொண்ட தமிழ்க் குடிமகனால் எழுதப்பட்ட போராட்டம் என்ற நாடகம் அரங்கேறியது. இந்நாடகம் வீரமா முனிவர் (சோசப்பெஸ்கி) தலைமையில் நடைபெற்றது. பாவாணர்க்கு நிதியளிப்பு நாடகமாதலின் கட்டணம் வைத்துச் சுவரொட்டி விளம்பரம் செய்து நடத்தப்பெற்றது. குறையாத கூட்டம். ஆனால் தண்டலோ குறைவு.

இந்நாடகத்தில் மயிலாடுதுறை மனோன்மணி, திருவரங்கம் பிரேமா ஆகிய நடிகைகள் பங்கேற்றனர்.

இந்நாடகக் கதைத் தலைவன் தமிழ்க்குடிமகன். இரண்டாம் கதைத்தலைவன் இளவரசு. சிவவடிவேல் அப்பாவாக நடித்தார். தொல்காப்பியன், எழிலி நகைச்சுவைப் பாத்திரங்கள் ஏற்றனர்.

சாதி மறுப்புத் திருமணத்தை வலியுறுத்துவதே நாடக நோக்கம். எனினும் இந்நாடக வழித் தனித்தமிழைப் பரப்புதலையும் நோக்கமாக ஏற்றது.

சாவி, சன்னல், சாளரம் என்று பேசினால் என்ன என்று ஒரு பாத்திரம் வினவத், திறவுகோல், காலதர், வளிவழி, பலகணி முதலிய தமிழ்ச் சொற்கள் அழிந்துபோம் என்று மற்றொரு பாத்திரம் விடையிறுக்கப், பாத்திர உரையாடல் வழிப் பிறமொழிச் சொற்கலப்பின் கேடு மக்களுக்கு விளக்கப்பட்டது.

சாதிமறுப்புத் திருமணம் செய்த கதைத் தலைவன் (தமிழ்க்குடிமகன்) கொல்லப்பட, இரண்டாம் கதைத் தலைவன் (இளவரசு) கொல்லப்பட்டவனைத் தன் இருகைகளிலும் ஏந்திச் சாதிக் கொடுமையினை விளக்கிப் பேசி முடிப்பதோடு நாடகமும் துன்பியலாக முடிவுறும். இரண்டாம் கதைத் தலைவனாக நடிக்கும் இளவரசின் சாதிக் கொடுமை பற்றிய நாடக இறுதிப் பேச்சு மக்களை உணர்ச்சி வயப்படுத்திக், கண்ணீரால் நனைத்தது எனக் கூறுவர்.

இந்நாடகம் எழுதிய பாவலர் தமிழ்க் குடிமகனே பாடல்களும் எழுதினார். நிசலிங்கப்பா இசையமைத்தார்.

நடிக்கும் நாடகங்களில் தனித்தமிழ் பயில்தல் என்பது மிகவும் அரிதாகும். இந்நாடக வழித் தனித்தமிழ் கருத்துக்கள் வைக்கப்பட்ட போது மக்கள் கைதட்டி வரவேற்றுள்ளனர்

என்பதே பேராயம் சார்பில் நடத்தப்பெற்ற 'போராட்டத்தின்' வெற்றியாகும்.

பேராயச் சார்பில் என்னால் எழுதப்பட்ட நாடகம் நடத்தப்பெறாது போயினும், புது விடுதி ஆண்டு நிறைவு விழாவில் (1961) என்னுடைய தனித்தமிழ்க் கருத்துக்கள் கொண்ட 'எல்லாம் வாழ்வதற்கே' என்ற நாடகம் அரங்கேறியது. நாடகப் பாடல்களையும் யான் எழுதியிருந்தேன். அந்நாடக வரவேற்பைக் கேள்வியுற்றுத் தமிழ்க்குடிமகன் பாராட்டி மடல் எழுதியதோடு, நேரிலும் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்.

மீண்டும் கல்லூரி திறந்தது. தமிழ்ப் பேராயமே புதுவிடுதிப் போராட்டத்திற்குக் கரணியமென விடுதிப் பொறுப்பாளர்கள் தீர்மானித்தனர். இந்நிலையில் பேராயத்தின் அடுத்தாண்டுச் செயலராக நான் அமர்த்தப்பட்டேன். பொறுப்புகள் தரப்பட்டன. விடுதிப் பொறுப்பாளர்கள் சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்கினர். ஆண்டின் இறுதியில் பேராய உறுப்பினர்கள் பிரியும் நினைவாகப், பிரியாத உள்ளத்தோடு பிசப் கீபர் கல்லூரி வளாகத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படச் சுருள் நகலை விடுதிக் காப்பாளர் அரிதின் முயன்று பெற்றுப் புகைப்படத்தில் உள்ள பேராய உறுப்பினர்களைக் குறிவைத்தார். போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகப் பழிவாங்க மாட்டோம் என்ற உறுதிமொழியைக் காப்பாற்றாது மாணவர்கள் மீது நடவடிக்கைகள் தொடர்ந்தன. இதனால் பேராய நண்பர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மாணவர்கள் விடுதி நீக்கம் செய்யப்பட்டனர். யான் விடுதிச் சேர்க்கைப் பட்டியலில் இல்லாது தடை செய்யப்பட்டேன். இதனால் அவர்கள் அயற்கல்லூரிகளை அணுகினர். விடுதிக்குள் வருவதற்குப் பேராய நண்பர்களுக்கு இசைவு வழங்கப்படவில்லை. தடையாணை இருந்தது.

> ஆரிய வேடரின் அயர்ந்தனை மறந்தனை
> சீரிய மொழிநூல் செவ்விதி னுணர்த்தலின்
> மூரிய பெருமையை முற்று முணர்ந்தினே
> பூரிய அடிமையைப் போக்குவை தமிழனே!
>
> \- பாவாணர்

விடுதிக்குள் வரவே அஞ்சும் நிலை உருவாக்கப் பட்டது.

வரலாற்றுப் போக்கில் தனித்தமிழ் இயக்கங்களை நோக்குவோம். 19.11.1908இல் 'திருவிடர் கழகம்' தோன்றியது. அதில் அவையின் நோக்கங்களில் தனித்தமிழ்ப் பற்றிய குறிப்பில்லை. 1937இல் 'தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம்' தோன்றியது. இந்தி எதிர்ப்பை முன் வைத்து இக்கழகம் தோன்றியது. 12.1.1943இல் உருவான 'தமிழறிஞர் கழகம்' ஆறாம் அறிக்கையில் தனித்தமிழில் பேசுவதற்கு எளிதான முறைகள் காட்டப்பட்டுள்ளன. 1934ஆம் ஆண்டுச் 'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கமும்', 1943இல் உருவான 'தமிழறிஞர் கழகமும்' தூய தமிழ்ப் பணி செய்தபோதிலும் அவற்றைத் தோற்றுவித்தவர்கள் பெயர்கள் தனித்தமிழாக இல்லை.

'தனித்தமிழ் இலக்கியக் கழகம்' 1960இல் தோன்றியது என்றும் 1959இல் தோன்றியது என்றும் இருவேறு ஆண்டுகள் காட்டப்பட்டுள்ளன. இதுகாறும் வரலாற்றுப் பருந்துப் பார்வையில் தனித்தமிழ் நோக்கம் கொண்ட அமைப்புகளை நோக்கின் அவை ஒரேவழிச் செயல்பாடுகள் கொண்டதாகவே தோன்றும். ஆனால் ஓர் இயக்கத்திற்கு இருக்கவேண்டிய கொள்கை, விதிமுறைகள், கொள்கைப் பரப்பு உறுப்புகள், செயல் திட்டங்கள், பொறுப்பாளர்கள், கிளைகள், உட்கட்டமைப்புகள் ஆகிய அனைத்தும் கொண்ட சிறப்புப் பேராயத்திற்கு மட்டுமே உரியது. மொழித் தூய்மைக்காக மாணவர்களால் உருவாக்கப்பட்ட முதல் இயக்கம் உலக வரலாற்றில் இடம்பெறுவதாய்த் 'தமிழ்ப் பேராயமே' (1959) யாதல் புலனாகும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த இயக்கத்தை வளனார் கல்லூரி விடுதி ஆட்சிமன்றப் பொறுப்பாளர்கள் ''இனி மொழியின் பெயரால் எவ்வித அமைப்பும் கூடாதெனத்'' தடைசெய்தனர். அதனால் பேராயம் என்ற அமைப்பு முடங்கிப் போனது.

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

\- பாரதிதாசன்

பாவாணரின் இலக்கிய வரலாறு

முனைவர் கா.கோ.வேங்கடராமன்

வடசொல் மாசு படிந்தமையால் ஒலிகுன்றிச் செல்லாக் காசாகக் கிடந்த செந்தமிழ் வரலாற்றின் திருப்புமுனைக்காலம், இருபதாம் நூற்றாண்டு. மும்மைக் கழகத்தாரால் கண்ணேபோல் காக்கப்பட்ட கன்னித்தமிழ், மீண்டும் தனித்தமிழாய் எழுச்சி பெறற்குக் காரணமானோர் மூவர். தனித்தமிழ் இயக்கம், மறைமலையடிகளாரின் உள்ளத்தில் அரும்பித் தேவநேயப் பாவாணரின் பேச்சிலும் எழுத்திலும் மலர்ந்து மணம் பரப்பிப், பெருஞ்சித்திரனாரின் முயற்சியும் செயலுமாகக் கனிந்தது.

பாவாணரின் பன்முக ஆய்வு, தமிழுணர்வைத் தட்டி எழுப்புவது. அவர், எப்பொருளில் எந்நூல் எழுதினும், அவண் தனித்தமிழ் உணர்வே தலைதூக்கி நிற்கும். அவர் இயற்றிய தமிழ் இலக்கிய வரலாறும் இதற்கு விலக்கன்று. எனவே, இந்நூல் பிறர்தரும் இலக்கிய வரலாற்றினும் வேறுபட்டு இயல்கிறது.

உணர்வில்லாதவர் எத்துணைப் படைத்து என்ன பயன்? உணர்வு மிகுதி, சிலகால், நடுநிலைப் பிறழ்ச்சியை உண்டாக்குமாயினும், வீழ்ந்துகிடந்த தமிழர் நெஞ்சில் உரமேற்றுதற்கு அத்தகைய உணர்ச்சியூட்டும் தேவையானதாகிறது. எது புரைதீர்ந்த நன்மை பயக்கிறதோ, அதனைச் சிறப்புடைத்தாகப் போற்றி ஏற்பதே குமுகாய வளர்ச்சியின் திறவுகோலாய் அமையும்.

நோக்கம் : தமிழ் மொழியை இனங்காண முடியாத அளவிற்கு ஆரிய இருட்டு மறைத்தபோது, ஒளிபாய்ச்சி உண்மையை உணரச் செய்தலை அடிநோக்காகக் கொண்டு, தமிழ் இலக்கிய வரலாறு படைத்தார், பாவாணர். அந்நோக்கம், தமிழ்க் குமரிநாட்டின் தொன்மை, தமிழரின் முன்மை, தமிழின் முதன்மை என விரிந்து செல்கிறது; ஆரிய மொழியின் அயன்மை, ஆரியரின் கயமை, தமிழினத்தின் ஏமாற்றம் ஆகியவற்றை அம்பலப்படுத்துவதாகவும் இவ்வரலாறு நீள்கிறது. இக்குறிக்கோள்களை நிறைவேற்றப் பிறதுறைக் கருத்துக்களையும் நாடவேண்டியுள்ளது. மொழியாராய்ச்சி, மாந்தவியல், வரலாறு ஆகிய முப்பார்வைகொண்டு நூலை ஆக்கியிருப்பதாக அவரே முன்னுரையில் மொழிந்துள்ளார்.

சூழலை ஆராயாது, உரத்துக்கூறப்படும் வெற்றுக் கூச்சலால் பயனில்லை. எனவே, சூழலாராய்ச்சியோடு கூடிய வரலாறே சிறந்த வரலாறாக இருக்க முடியும். அப்போதுதான் இலக்கிய மாற்றம், நடைமாற்றம், உத்திமாற்றம் போன்றவற்றிற்கான அடிப்படைக் காரணங்களைப் புரிந்துகொள்ள முடியும். இன்னோன் இன்னநூல் இவ்வாறு யாத்தான் எனக் கூறும் அதேவேளையில், எதனால் இவன் இவ்வாறு இதனை யாத்தான் என வினவி, உரிய விடைகாணும் போதுதான் வரலாறு முற்றுப்பெற்றதாக இருக்கமுடியும். அவ்வகையில் பாவாணரின் இலக்கிய வரலாறு வெற்றிபெற்றுள்ளது என்றே கூறல்வேண்டும்.

அமைப்புமுறை

பாவாணர் தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலத்தினைத் தலைக்காலம் (கி.மு. 50000 - 1500), இடைக்காலம் (கி.மு. 1500 - கி.பி. 1900), இக்காலம் (20ஆம் நூற்.), எதிர்காலம் என நாற்கூறாக்குவதோடு, நூலினையும் அக்காலப் பகுப்பிற்கேற்ப, நான்கு பகுதிகளாகப் பகுத்து மொழிகின்றார். பொதுவாகத் தமிழ் இலக்கிய வரலாறு கழகக்காலம், கழகம் மருவியகாலம், போற்றியிலக்கியக்காலம், பிற்காலம், இக் காலம் எனப் பாகுபாடுறல் மரபு, பாவாணர், தமிழின் தொன்மைக்கு அழுத்தம் தருதலால், அவரது பகுப்பு மற்றவர் பகுப்பினின்றும் மாறு படுகிறது. இதனாலும் தமிழுணர்வு ததும்பும் அவரது மனப்போக்கு வெளிப்படுகிறது.

நூலின் தொடக்கத்தில் ஏறத்தாழ 60 பக்கங் களில் குமரிக்கண்டம், குமரித்தமிழர் வாழ்க்கை, உலகம் முழுதும் தமிழர் பரவுதல், திரிந்த ஆரியர் மீளத்திரும்புதல் போன்ற தொல்வரலாற்றுச் செய்திகளை மிக விரிவாக விளக்குகிறார். நூலின் இடையிலும் குமுகாயம் மொழி சார்பான ஆரியர் - தமிழர் போராட்டங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. (ஏறத்தாழ 80 பக்கங்களில் - முதற்பாகம் பக். 74 - 78, 212 - 238, இரண்டாம் பாகம் 25 - 51, 52 - 70) இலக்கண இலக்கிய வரலாறு பற்றி மொழியும் ஏனைய பகுதி களிலும் ஆங்காங்கே வடமொழி - தமிழ் ஒப்பீடும் உறழ்ச்சியும் விளம்பரப்படுகின்றன. எனவே, இந்நூலில் இலக்கிய வரலாற்றுச் செய்திகளைக் காட்டிலும் ஆரியர் - தமிழர் தம் போராட்டமும் போட்டியுமே மிகுந்துள்ளமை தெளிவாகிறது. உண்மையிலேயே இலக்கிய வரலாற்றுக் கூறுகள் ஏறத்தாழ நாற்பது விழுக்காடு அளவே இடம்பெற்றுள்ளன.

இலக்கிய வரலாறு கூறும் முறைமை யிலும் பாவாணர் நூல் வேறுபட்டு நிற்கிறது. எல்லா இலக்கிய இலக்கணங்களையும் ஒன்றாக நிறுத்திக் காலவரிசைப்படுத்தி மொழிதலே இலக்கிய வரலாறுகளின் வளமையாய் இருக்க, இவரது நூல்மட்டும் இலக்கிய இலக்கணங் களை மதஅடிப்படையில் சைவ இலக்கியம், வைணவ இலக்கியம், சமண இலக்கியம், புத்தமத இலக்கியம், கிறித்துவ இலக்கியம், இசுலாமிய இலக்கியம், மதஞ்சாரா நூல்கள் என வரிசைப்படுத்தித் தொகுத்துரைக்கின்றது. மதஞ் சார்ந்த நூல்கள் பற்றிக் கூறியபின், தொல்காப்பி யம் கழக இலக்கியங்கள் போன்ற தொன்னூல் களைக் குறிப்பிட்டுரைத்தல் புதுமையாகத் தோன்றுகிறது. வேறு எவரும் இவ்வாறு பகுத்து இலக்கிய வரலாறு செய்திலர்.

கருத்தும் விளக்கமும்

பாவாணரின் இலக்கிய வரலாற்றில் கழக இலக்கியங்களும் நயன் இலக்கியங்களும் சுருக்கமாகவே சுட்டப்பட்டுள்ளன. தொல் காப்பியத்திற்கு முன்னைய நூலாக அகத்தியம் என்ற முத்தமிழ் இலக்கணம் இருந்தது என உடன்படுகிறார். அவற்றின் காலம் முறையே கி.மு. 600, கி.மு. 1200 என அறிவித்துள்ளார். பல நூற்களுக்குக் காலம் குறிக்கப்படவில்லை.

தொல்காப்பியம் பற்றி விரிவாகக் கூறி யிருப்பினும், தொல்காப்பியரை வடநாட்டி லிருந்து போந்த 'பிராமணர்' என்கின்றார், பாவாணர்.

'அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே'
'மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்'
'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்'

போன்ற சில தொல்காப்பிய நூற்பாக் களைச் சுட்டிக்காட்டித் தொல்காப்பியரை ஆரியராக்குகிறார், அவர். நச்சினார்க்கினியாரின் உரைக்கூற்றும் இதற்குக் காரணமாகலாம். இலக்கணக் கருத்துக்கள் மிகப் பழமையானவை என்றும், ஆரியச் சார்புடைய கூறுகள் மட்டுமே தொல்காப்பியரால் சேர்க்கப்பட்டன என்றும் பாவாணர் கருதுகிறார். இருபதிற்கும் குறை வான ஆரியச் சார்பு நூற்பாக்கள் கலந்திருப்ப தால், 1610 நூற்பாக்கள் கொண்ட தொல்காப்பி யத்தையும் தொல்காப்பியரையும் ஆரியச் சார்புக்குள் அடக்குவது ஏற்புடைத்தாகாது.

பிற்காலத்தில் தோன்றிய சிந்தாமணி யிலும் கம்பனிலும் நூற்றுக்கணக்கான இடைச் செருகற் பாடல்களைக் காணுவோர், மிக முற்பட்ட தொல்காப்பியத்தில் இருபதுக்கும் குறைவான ஆரியச் சார்பு நூற்பாக்களைக் காணும்போது அவற்றையும் இடைச்செருகல் களாகவே கொள்ளத் துணிவர். பாவாணரின்

தொல்காப்பியர் பற்றிய முடிவு முரண்பட்ட தாகவே தோன்றுகிறது. தொல்காப்பியர் காலம் மிகவும் பிற்பட்டதாக வையாபுரியார் போன் றோர் கொள்வதற்கும் இவ் ஆரியச் சார்பு நூற்பாக்களே பெரிதும் காரணம். தொல்காப்பி யர் காலம் வெள்ளைவாரணரால் கி.மு. 5000 எனக் கூறப்படற்கும், வையாபுரியாரால் கழகக் காலத்திற்குப் பிற்பட்டது என்று குறிப்பிடப் படற்கும் முறையே தொன்மையானவையும் பிற்காலத்தவையுமான நூற்பாக்கள் கலந்தி ருத்தலே காரணமாக இருக்க முடியும். மிகக் குறைவாகவே கலந்துள்ள முரண் நூற்பாக்களை இடைச்செருகலெனக் கொண்டு களைவோமா யின் தொல்காப்பியம் இரண்டாம் கழகக் காலத்தது என்பதும், இராமாயண பாரதங்கட்கு முற்பட்டது என்பதும் வேதக் காலத்திலோ அதற்கு முற்பட்டோ தோன்றியது என்பதும் பெறப்படும். நூல்நடையும், இலக்கணக் கட்டுறுதியும், பண்பாட்டுச் சூழலும் நோக்கும் போது, தொல்காப்பியர் தமிழ் நெறியுணர்ந்த தமிழராகவே காணப்படுகிறார்.

இலக்கிய வரலாறு நுவலும் பாவாணர், குமரிக்கண்டம் பற்றிய பழந்தமிழ் நூற்செய்தி களை முற்றிலும் ஏற்று மொழிகிறார். தமிழ் மொழியே மாந்தனின் முதல்மொழி என்பதனை ஆணித்தரமாக நம்புகிறார். குமரிக்கண்டத்து நாகரிக நாகரே கடல் கோட்குப்பின் அமெரிக்கா வின் மாயா நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் என மொழிவதும், வடநாட்டுத் திராவிடருள் ஒரு சாராரே வடமேற்கிற் சென்று சுமேரிய நாகரிகத் தையும், பின் நண்ணிலக் கடல் நாகரிகத்தையும் தோற்றுவித்தனர் எனக் கூறுவதும் இன்றைய மாந்தரின வரலாற்றாய்வாளரால் ஏற்கத் தக்கவையாக உள.

தொல் பழந்தமிழகமாகிய குமரிநாட்டில் நாற்குலப் பாகுபாடு தொழில் அடிப்படையில் உருவாயிற்றென்றும், அதனைப் பின்வந்த ஆரியர் தமக்கேற்றவாறு திறம், பிறப்பு அடிப்படையில் மாற்றி உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டனர் என்றும் பாவாணர் குறிப்பிட்டுள் ளார். பழந்தமிழர்க்கெனத் தமிழ் நான்மறைகள் இருந்தன என்பதும், கல்வி பெற்ற தமிழ்ச் சான்றோர்கள் ஆரிய வருகைக்குமுன் அந்தணர், பார்ப்பார் என இருவகையினராகக் கொள்ளப் பட்டார்கள் எனக் கூறுவதும் புதுமையாக உள்ளன. இத்தகைய சூழல்களை வந்தேறி களாகிய ஆரியர்கள் தன்னல நாட்டத்தின் காரணமாகப் பிற்காலத்தில் பெரிதும் சிதைத்துக் கெடுத்துவிட்டனர் என்பது பாவாணரின் உட்கிடக்கை.

பாவாணர் தரும் விளக்கங்கள் பல பாராட்டத்தக்கவையாயுள.

'தமிழினின்று திரிந்தமொழி திராவிடம் எனப்பட்டது'' (ப.50)

''இலக்கியத் திறனாய்வு, நெறி திறம்பாத தாயின் செவியுறை (Criticism) என்றும், நெறி திறம்பிப் பழித்ததாயின் அங்கதம் (Safire) என்றும் பெயர்பெற்றது.' (ப.47)

'பெயரொப்புமை பற்றி மாந்தரைத் தேவரெனக் கொண்டது, எழுதப்பட்ட வரலா றின்மையையும், அப்புலவரின் சேணெடுந் தொன்மையையும் காட்டும்' (ப. 66)

'தென் கன்னடத்தின் உடுப்பியே நக்கீரர் குறித்த ஏரகமாதல் வேண்டும்' (80)

'திருப்புகழில் வடசொற்கலப்பு மிகுதி யென ஒருகுறை கூறுவதுண்டு. அது பாடினவர் குற்றமன்று; அக்காலத்து வழக்கே அதற்குக் கரணியம்' (100)

இவைபோன்ற விளக்கங்கள் பல, மணி களென நூலின் இடையிடையே பளிச்சிடு கின்றன. தமிழின் தொன்மையாலும் சிறப்பா லும் ஈர்க்கப்பட்டதால் ஏற்பட்ட தமிழ்மொழிப் பற்றே ஆரியத்தை எதிர்க்கத் தூண்டியது. தன் குழந்தைக்குத் துன்பம் தருவோரைத் தாய் பொறாள், அத்தகைய போக்கே பாவாணரின் ஆரியச் சாடலில் காணப்படுகிறது. ஆரியக் குறும்புகளாகப் பாவாணர் கருதுவன வருமாறு :

அ) ஆரிய மொழியைத் தேவமொழி என உயர்த்தியும் தமிழை இழிசினர் மொழியெனத் தாழ்த்தியும் மொழிந்தமை.

ஆ) ஆரிய இலக்கணத்தைப் புகுத்தித் தமிழைத் திரியச் செய்து பாலி, பிராகிருதம் போன்ற வடதிராவிட மொழிகளையும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற

தென் திராவிட மொழிகளையும் தோற்றுவித்துத் தமிழ்நிலத்தைச் சுருக்கியமை.

இ) தமிழரோடு தமிழரை மோதவைத்துச் சூழ்ச்சிசெய்து தம் மேலாண்மையை நிறுவியமை.

ஈ) தமிழில் ஆரியச் சொற்களை வலிந்து கலந்து ஆரியச் சார்புடையதாக்கித் தமிழை அழிக்க முனைந்தமை.

உ) தமிழ்ச் சொற்களைத் திருடிக்கொண்டு அவற்றை ஆரியச் சொற்களாக நம்பவைத்தமை.

ஊ) தமிழுக்கும் வடமொழியே தாய் என வலிந்து கூறியமை.

தமிழைச் சிறுமைப்படுத்தியும், தமிழின மக்களுக்குள் பகைமை ஏற்படுத்தியும் தமிழ் எல்லைகளைச் சுருக்கியும் சூழ்ச்சி செய்த - செய்கின்ற பிராமணர்களாம் ஆரியப் பூசாரிகளைத் தம்முதல் எதிரிகளாகக் கருதியமையால், வலுத்த குரலில் பாவாணர் எதிர்முழக்கம் செய்கிறார். தமிழின் உயர்வை வெளிப்படுத்த முனையுங்கால், ஆரியத் தடைகளோடு மோத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமை இயல்பானதாகவே தோன்றுகிறது.

இலக்கணத்தில் - குறிப்பாக யாப்பிலக்கணத்தில் பாவாணர் தனி ஆர்வம் கொண்டவர்.

'வெண்பாவிற்கும் கலிப்பாவிற்கும் இணையான யாப்பு வகை வேறு எம்மொழியிலும் காணவியலாது' (31)

'எழுவகை யாப்பும், வெண்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் தூய பாக்களும் மருட்பா பரிபாடல் என்னும் கலவைப் பாக்களும் ஆகிய அறுவகைப் பாக்களால் இயன்றன' (40)

'பரிந்து பாடுவது பரிபாடல் என்பர். பரிதல், காதல் கொள்ளுதல் அல்லது காதலால் உருகுதல். கலியும் வெண்பாவும் கலந்த கலவைப்பாவே பரிபாடல்' (84)

'செய்யுளின் ஒலிப்புமுறை, ஓசை, வண்ணம், குழிப்பு வண்ணம் என மூவகைப் படும். அவற்றுள், வண்ணமென்பது, எல்லாவடியும் மாத்திரையும் எழுத்தினமும் சீரும் ஒத்துவரப் பாடுவது' (101)

பாவாணரின் இந்நூற்சான்றுகள் அவர் இயல்பாகவே ஒரு பாவாணர் (பா வாழ்நர்) என்பதை நிலைநாட்டுவன. இலக்கிய வரலாற்றில் கூட யாப்பாராய்ச்சியை விட்டு விலக அவரால் முடியவில்லை.

மொழியாராய்ச்சி

மரபிலக்கணப் புலமை வாய்ந்த பாவாணர், தம் வாழ்நாளை மொழியாராய்ச்சிக் கென்றே ஒப்பளிப்புச் செய்தவர். தம் இலக்கிய வரலாற்றில் பல இடங்களில் அவர், வேர்ச் சொல்லாராய்ச்சி, மொழியின ஆராய்ச்சி போன்றவற்றை மேற்கொண்டுள்ளமை, இது மொழியாராய்ச்சி நூலோ எனும் மருட்சியினை ஏற்படுத்துகிறது.

'ஈகாரத்தினின்றும் ஏகாரமும் ஊகாரத்தினின்று ஓகாரமும் மோனைத் திரிவாகத் தோன்றின. முதற்கண் நெடிலாகவே தோன்றிய உயிர்கள் பின்னர்க் குறிலாகக் குறுகுன. அகரமும் இகரமும் சேர்ந்து ஐ என்றும், அகரமும் உகரமும் சேர்ந்து ஔ என்றும் இரு புணரொலிகள் (Diphthongs) எழுந்தன. அவை ஒலியளவில் முறையே அய் அவ் என ஒலித்தன.'' *(8)*

'எடுப்பிலா ஒலி எடுப்பொலியாக மாறுமேயன்றி, எடுப்பொலி எடுப்பிலா ஒலியாகத் திரியாது. பிஞ்சு முற்றிக் காயாவதே யன்றி, காய் இளந்து மீண்டும் பிஞ்சாவதில்லை' *(10)*

என ஒலியாராய்ச்சிக் கருத்துக்களையும்,

'(குமரித்தமிழில்)

தன்மைப் பெயர்கள்: ஏன் ஏம் ஏங்கள் *(11)*

முன்னிலைப் பெயர்கள் : ஊன் ஊம் ஊங்கள் *(14)*

'நீன் என்னும் பெயர் வழக்கை, இன்றும் பாண்டிநாட்டு நாடார்குல வழக்கிற் காணலாம். கன்னடத்தில் அப்பெயர் உகரவீறு பெற்று நீனு என வழங்குகிறது' *(14)*

'நீம் என்னும் பெயர் வழக்கை, இன்றும் பாண்டி நாட்டுச் சிற்றூர்ப் பகுதிகளிற் காணலாம்' *(14)*

'எழு கோள்களின் பெயராய் எழுநாட் கிழமை (வளம்) வகுக்கப்பட்டது. அது உலகம் முழுதும் பரவி இன்று வரை வழங்கிவரு கின்றது' (33) எனச் சொல்லாராய்ச்சிக் கருத்துக் களையும், 'ஏரணம் என்பது தருக்கநூலைக் குறிக்கும் தூய சொல்' (145)

'சென்ற நூற்றாண்டினரான மாக்கசு முல்லர் என்னும் ஆரியவெறியரே, ஐரோப்பிய மொழிகட்கும் வடநாட்டுப் பிராகிருதங்கட்கும் ஆரியம் என்னும் சொல்லைப் பொதுப் பெயராக்கினார்.'

''கும்பம் - 100 கோடி
சங்கம் (சங்கு) - இலக்கம் கோடி
தாமரை - கோடாகோடி
வாரணம் - நூறு கோடா கோடி'

எனச் சொற்பொருள் ஆராய்ச்சிச் செய்தி களையும் வாய்ப்பு ஏற்பட்ட போதெல்லாம் நுழைந்துள்ள திறம் பாவாணரது மொழியா ராய்ச்சி முனைப்பினை வெளிப்படுத்தும்.

பாவாணர் இலக்கிய வரலாறு தனித்தமிழ் நடைகொண்டு சிறப்பியல்புகளோடு செம்மாந்து நிற்கிறது.

பாடல் எண்ணிக்கை, காலம், ஆசிரியர் பெயர் போன்றவற்றைச் சுமக்கும் சுமைதாங்கி யாக இல்லாமல், உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் ஒப்புயர்வற்ற வீரச்சிலையாக விளங்குகிறது, அவரது இலக்கிய வரலாறு.

'மாமருந்து' பாவாணர்

● புலவர் சி.சம்பூர்ணம் சேந்தமங்குடியார், முசிறி.

கருத்த நிறம் நரைத்த மீசை
கட்டான உடல் எடுப்பான தோற்றம்
பாவியல் படைக்க வல்ல பாவலர்
பாரில் நமக்கு அவர்மா மருந்து.

பழம்பெரும் தமிழுக்குப் பயனேதும் கருதாமல்
பாடுபட்ட பாவாணர்க் கீடுகட்ட எவருண்டு,
ஒப்பாய்வு இலக்கணத்தை ஒப்புவு யர்வோடு
ஒப்புமை விளக்கி யஉயர் சான்றோர்.

கன்னல் மொழிபேசும் தமிழ்க் காவலரவர்
ஆய்ந்து தொகுத்த ஒப்பாய்வு இலக்கணநூல்
உலகினுக் கோர்எ டுத்துக் காட்டாம்
உலகியலா ரும்இதை ஒப்புக் கொள்வர்.

பொருளியார் சீர்கேடு புரட்டிய நிலையினும்
கருமம் சிதையாமல் கண்ணோட் டத்துடன்
கன்னித் தமிழ்ப் பயிர் வளர்த்த
கைம்மாறு கருதாத கார்மே கமவர்.

வரலாறு காணாத வரலாறு!

சீராண்ட தமிழுக்கு வேரான வர்; தூய
 செந்தமிழ் மூச்சானவர்;
பாராண்ட தமிழுலவு தேரான வர்; தூய
 பைந்தமிழ்ப் பேச்சானவர்;
ஏராண்ட தமிழுணர் வேறான வர்; புதுமை
 இன்றமிழ்க் கதிரானவர்;
வேராண்ட தமிழாய்வு வீறானவர்; மரபு
 விழைதமிழ்ப் புதிரானவர்.

பண்பாடு காத்தவர்; பழகுநா கரிகமொடு
 பரிவுள்ள பாவாணராம்;
பண்பாடு சீர்மரபு பயிலறிவு சான்றவர்;
 பலகருவி இசைவாணராம்;
கண்பாடு காணாது கலை, அறிவி யல்கூறு
 கண்டாய்ந்த மதிவாணராம்;
மண்பாடு மொழியென்று, மாண்பதவி, பொருளுக்கு
 மருளாத புதுவாணராம்!

சீர்கெட்ட அரசினால் சிறைஉற்ற தமிழெழச்
 சிறைநீக்கு களமானவர்;
நேர்கெட்ட அறிஞரால் நிறைகெட்ட தமிழாய்வு
 நிறைகாண நெறியானவர்;
வேர்கெட்ட சொல்லாய்வு, பார்பட்ட இழிவகல
 விடிவான ஒளியானவர்;
பேர்கெட்ட நிலையகல வேர்ச்சொல்லை ஆராய்ந்து
 பேறென்று மொழியாண்டவர்.

தலைகொண்ட உலகமொழி தகைகொண்டு தமிழொன்று
 தான்முதல தெனநாட்டினார்!
வலைகொண்ட மாந்தஇன நிலைகொண்டு தமிழஇன
 வழிமுதல தெனநாட்டினார்!
மலைகொண்ட குமரியே கலைகொண்ட மாந்தனெழு
 மண்! முதல தெனநாட்டினார்!
அலைகொண்ட மொழிஆழி நிலைகொண்டு தன்னைமொழி
 அதிகாரி என நாட்டினார்!

வரலாறு காணாத வரலாறு கண்டவர்;
 வழிநூலு மிழிநூலுமாய்
மரலாறு படுமழிவு மாண்பென்ன, மொழியாய்வை
 மதிமாய வைத்தநிலையை
நிரலாறு பட்டமொழி, நிலைநூலி லக்கணமு
 நிறைஆய்ந்து மொழிநாட்டினார்!
குரலாறு கொண்டெழுது கோலாறு கொண்டெழுது
 குறிகொண்ட நெறிஆளுவோம்!

பாவாணர் காட்டும் தமிழர் திருமண முறை

தமிழ்நம்பி, பெரம்பலூர்.

தமிழர் நாகரிகமும் பண்பாடும் சிறந்தவை பழைமையானவை என்ற கருத்துடைய பாவாணர் அவற்றைத் தெளிவுபடுத்தும் வகையில் பல நூல்களைப் படைத்துள்ளார். அந்நூல்களில் பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் இருந்து சான்று காட்டித் தமிழர் பண்பாட்டினையும் நாகரிகத்தையும் வரையறை செய்கிறார். தமிழகத்தில் ஆரியர் நுழைவினால் ஏற்பட்ட தீமைகளில் இருந்து தமிழர் தம் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காக்க வேண்டும் என்ற கருத்தும் பாவாணருக்கு உண்டு. இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாவாணர் படைத்த நூல்களில் தலையாயது தமிழர் திருமணம் என்ற நூலாம். தமிழர் திருமணம் குறித்துப் பண்டைய இலக்கிய இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு விரிவாக ஆய்வு செய்யும் பாவாணர், இடைக்கால மாறுதல்களால் ஏற்பட்ட தீமைகளைச்சுட்டுவதோடு மட்டும் நின்றுவிடாமல், காலத்துக்கேற்ற வகையில் தமிழர் திருமணம் எப்படி அமைதல் வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறார்.

மணமக்கள் இளமையர் ஆதலானும் எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மையர் ஆதலானும் ஆயிரங் காலத்துப் பயிரான மணவாழ்க்கையைப் பெற்றோரே பொறுப்பெடுத்துச் செய்து வைத்தல் வேண்டும் என்கிறார் பாவாணர். ஆண் உடம்பு கொண்டோரெல்லாம் ஆண்மையரல்லர். பெண்ணுடம்பு கொண்டோரெல்லாம் பெண்மையரல்லர். ஆதலால் முதலில் மணமக்களது பால் நிலையைக் கவனித்தல் வேண்டும் என்பர்.

தமிழ் இலக்கண நூல்கள் கூறும் பத்து வகைப் பொருத்தங்களுக்கு நிகராகப் பாவாணர் பன்னிரு பொருத்தங்களைச் சுட்டுகிறார். காதல், உடல்நலம், ஒழுக்கம், கருத்து, உண்டி, அகவை, உருவம், கல்வி, முறை, வினைத்திறம், தொழில், குடும்பநிலை ஆகிய பன்னிரண்டு பொருத்தங்களையும் பார்த்து மணமக்களைத் தெரிவுசெய்யின் அவர்கள் இல் வாழ்வு சிறக்கும் என்கிறார்.

திருமண நிகழ் முறை

கடவுள் வணக்கம், கரணம், சொற்பொழிவு, வாழ்த்திதழ் படித்தல், பாசடைப் பகிர்வு, பரிசளிப்பு, நன்றி கூறல் என்ற வரிசைப்படித் திருமணம் நடைபெறல் வேண்டும் என்பது மொழிஞாயிற்றின் கருத்து. திருமணத்தைத் தமிழில் தமிழ்ப் புலவர், ஆசிரியர், தமிழப்பார்ப்பார், குலத்தலைவர், அறிஞர், முதியோர் ஆகியோரில் ஒருவரே நடத்திவைத்தல் வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

மணமக்களைப் பந்தலிலோ, மண்டபத்திலோ அமைந்துள்ள மணவறையில் ஓர் அறுகாலியில் அல்லது இணையிருக்கை மெத்தை நாற்காலியில் நெருங்கி அமர வைத்தல் வேண்டும். கரண ஆசிரியன் முதல் குறளையோ கம்பராமாயணத்திலோ

பெரிய புராணத்திலோ உள்ள கடவுள் வணக்கச் செய்யுளை இசையுடன் கடவுள் வாழ்த்தாகப் பாடுதல் வேண்டும். (கடவுள் நம்பிக்கை இல்லாதவர் கடவுள் வாழ்த்தைத் தவிர்த்தும் கொள்ளலாம்). மணமக்களிடம் இன்னாரை மணக்க இசைவா என்றும் மணமக்கள் குரவரிடம் இவர்கள் மணந்துகொள்ளல் உங்கட்கு இசைவாஎன்றும் கரண ஆசிரியன் கேட்டல் வேண்டும்.

மணமகன் மணமகளது வலக்கையைப் பற்றிப் பெரியோர் முன்னிலையில் மண உறுதி மொழி எடுத்துக் கொள்ளல் வேண்டும். மணமகளும் அவ்வாறே செய்தல் வேண்டும். மணஉறுதி கூறல் முடிந்த உடன் மணமகன் மணமகள் கழுத்தில் மங்கல நாணைக் கட்டல் வேண்டும். அல்லது மோதிரத்தையும் அணிவிக்கலாம். இருவரும் பூமாலையை மாற்றிக் கொள்ளல் வேண்டும். மணமக்கள் குரவர்களில் ஒருவர் மணமக்களை 'நீவிர் இருவீரும் ஒருயிரும் ஈருடலுமாக ஒன்றிப், பகுத்தறிவு பாங்கிருக்க, தன்மானந்தழைத் தோங்க, குன்றாச் செல்வமுங் குறைய நலமுங் கொண்டு, உற்றோர் மகிழவும் மற்றோர் புகழவும் நிலவுலகில் நீடுழி வாழ்த்திருக்க' என வாழ்த்தல் வேண்டும்.

களவொழுக்க இன்பம் வாய்க்காத மண மக்கட்கெல்லாம் மணநாளின்பமே சிறந்தது. ஆதலால் மணநாளன்றே மணமக்களைக் கூட்டுதல் வேண்டும் என்பார் தேவநேயர்.

பாவாணரின் சீர்திருத்தக் கருத்துகள் :

1. சிவநெறியும் மால்நெறியும் தமிழமதம் பிள்ளையார் வணக்கம் பிற்கால ஆரியர் சேர்க்கை ஆதலால் திருமணத்தின்போது பிள்ளையார் வணக்கம் தேவையில்லை.

> **பேரன் பாட்டன்**
>
> மகன் தந்தைக்கும், பேரன் பாட்டனுக்கும் முந்தியவர் என்பதுபோல் தலை கீழாகத் தமிழ் வரலாறும் தமிழ்நாட்டு வரலாறும் இருந்து வருகின்றன.
>
> - பாவாணர்

2. மணவறையில் விளக்குவைத்தலோ, மணமக்களை அரிசியும் அறுகும் கலந்து தூவி வாழ்த்துதலோ தேவையில்லை.

3. தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்காகக் குலவெறி கொள்ளாமல் சாதிக்கலப்பு மணங் களைச் செய்தல் வேண்டும்.

4. திருமணத்திற்கு வருவோர் ஏந்துக் கேற்ற நேரத்தில் திருமணத்தை நடத்திக்கொள்ள லாம். நாளும்கோளும் பார்த்தல் கூடாது.

5. பிறப்பியம் பார்த்தல் கூடாது.

6. மணத்திற்கு முன்னரே மணமக்கள் வீட்டார் பரிசம், நகை, செலவு குறித்துத் திட்ட மான முடிவு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

7. தமிழில் நடக்காத திருமணத்திற்குத் தமிழன் செல்லுதல் கூடாது.

8. செல்வச் சிறப்பு மிக்க மணமக்களுக்கு உறவின் மொய் வைக்க வேண்டியதில்லை. மண மக்கள் ஏழைகளாக இருப்பின் தனக்கு எவ்வளவு வைத்தார்கள் என்று கணக்கிடாமல் தாராளமாக மொய் வைக்கலாம். திருமணம் முடிந்தபின் உறவினர் தனதில்லத்திற்கு எத்துணை விரைந்து திரும்ப முடியுமோ திரும்பி விடல் வேண்டும்.

9. தொகுதி மணம், பதிவு மணம், கட்டுச் சோற்றுத் திருமணம் போன்ற மணங்கள் உருவாதல் வேண்டும்.

10. கணவனும் மனைவியும் ஒருவரோடு ஒருவர் தனிமையில் பேசும்போது எப்படிப் பேசினாலும் படர்க்கையில் இருவரும் மதிப் பாகவே பேசுதல் வேண்டும்.

11. கலப்பு மணஞ் செய்வார்க்கு அரசு, திருமணச் செலவு முழுவதையுமோ, ஒரு பகுதி யையோ ஏறுறுக் கொள்ளல் வேண்டும். மண மக்கள் தகுதி நோக்கி உடனே அரசு அலுவ லளித்தல் வேண்டும். அவர் பெறும் மக்கட்குப் படிப்புதவியளித்தல் வேண்டும்.

பண்டைத் தமிழர் திருமண முறையை அடியொற்றிக் காலத்துக்கேற்ற மாற்றங்களை யும் உள்வாங்கிக் கொண்டு பெரியார் அண்ணா போன்றோரின் திருமணச் சீர்திருத்தக் கருத்து களில் சிலவற்றைச் சேர்த்துத் தமது திருமண முறையினைப் பாவாணர் உருவாக்கியுள்ளார்.

அது மிகையாகாது. இதனால் தான் திருக் குறளைப் பொதுமறை எனக் கூறுகின்றனர்.

மனித வாழ்வுக்கு இன்றியமையாத பல வேறு பண்புகளைக் கூறிச் செல்வதுதான் திருக்குறள். சின்னஞ்சிறு குறட்பாக்களில் செம்மையாக உலகப் பொதுமைகளைக் கவிதை உணர்ச்சியுடன் கூறுவது தான் திருக்குறள்.

மொழி பெயர்ப்போ, தழுவலோ அல்ல

இலத்தீன் போன்ற மொழிகளில் உள்ள இலக்கியங்களில் முதல் இலக்கியம் ஒரு மொழி பெயர்ப்பு இலக்கியம் என்று கண்டோம். இது போன்றே இந்திய நாட்டில் காணப்படும் பிற மொழிகளின் முதல் இலக்கியங்கள் அனைத்துமே இராமாயணத்தையோ அல்லது மகா பாரதத்தையோ அடியொற்றி எழுந்தவைதான். அது புதிய இந்தோ ஆரிய மொழிகளாயினும் சரி அல்லது பிற திராவிட மொழிகளாயினும் சரியே.

தமிழ் மண்ணில் பூத்த சில இலக்கிய மரபுகளின் அடிப்படையில் எந்த விதமான சார்போ, செல்வாக்கோ தழுவலோ இல்லாமல் தமிழ் மண்ணுக்கே உரிய சில சிறந்த வாழ்க்கை முறையினைக் கூறுவது சங்க இலக்கியம்.

வேறுபட்டது, வித்தியாசமானது

எனவேதான் ஒரு தனித் தன்மை வாய்ந்த, சுதந்திரமான வித்தியாசமான இலக்கியங்களைக் கொண்டு பழைமைக்குப் பழைமையாய் புதுமைக்குப் புதுமையாய் உள்ள ஒரு மொழியாக உள்ள மொழி தமிழ் மொழி. இலத்தீன் போன்ற பழைமையான மொழிகள் மக்கள் மத்தியிலிருந்து அகன்று விட, தமிழ் மொழி இன்றும் வாழும் மொழியாகவும் வளரும் மொழியாகவும் உள்ளமை இதன் தனித் தன்மையைக் காட்டும்!

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத் திற்கும் சில தனித் தன்மைகளும் தனிப் பண்புகளும் உண்டு. இக் கருத்தில் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் ஆராயும் போது பலவேறு உண்மைகள் தெரிய வரும்.

பாவாணர் விடுத்த பிறந்த நாட் செய்தி

இந்துமாவாரியில் மூழ்கியுள்ள குமரிக்கண்டத் தென்கோடியில் கி. மு. 50,000 (ஐம்பதினாயிரம்) ஆண்டுகட்கு முன்பே முழுவளர்ச்கி அடைந்த தமிழே உலக முதல் உயர்தனிச் செம்மொழியும் திரவிடத் தாயும் ஆரிய மூலமும் ஆகும். தேவமொழியென்று ஏமாற்றித் தமிழகத்திற் புகுத்தப்பட்ட சமற்கிருதம் என்னும் வடமொழியாலேயே தமிழ் தாழ்த்தப்பட்டது. அதனால் தமிழனும் தாழ்த்தப்பட்டான். தமிழன் மீண்டும் முன்னேறுவதற்குத் தமிழ் வடமொழியி னின்றும் விடுதலையடைதல் வேண்டும். வட மொழியினின்று தமிழை மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள். தமிழ் உயர்ந்தால் தான் தமிழன் உயரமுடியும். அதற்குத் தமிழர் இனி எல்லா வகையிலும் தமிழையே போற்றுதல் வேண்டும். முதற்கண் தமிழர் அனைவரும் தமிழ்ப் பெயரே தாங்கல் வேண்டும். ஆண்டில் ஒரு நாளைப் பெயர் மாற்றத் திருநாள் என்று இனி ஆண்டுதொறும் கொண்டாடி வருவது நன்று. பிறந்த அண்மை யிற் பிறமொழிப் பெயர் பெற்றவரெல்லாரும் அந்நாளில் தம் பெயரைத் தனித்தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ளலாம். அதை இல்லத்தில் விழாவாகக் கொண்டாடுவது டன் ஊர்வலத்தாலும் ஊரார்க்கறிவிக்கலாம்.

தமிழ்ப் பெயர் தாங்குபவரே உண்மைத் தமிழராவர். தமிழ்ப் பெயர் ஏற்றபின் தமிழிலேயே திருமணத்தையும் இருவகைச் சடங்குகளையும் செய்தலும் செய்வித்தலும் வேண்டும். கடவுள் நம்பிக்கையுள்ளவர் திருவழிபாட்டையும் தமிழிலேயே ஆற்றுதல் வேண்டும்.

இங்ஙனம் தொடர்ந்து செய்துவரின் இன்னும் ஐந்தாண்டிற்குள் தமிழர் தம் அடிமைத்தனமும், அறியாமையும் அடியோடு நீங்கி மேலையர் போல் புதுப்புனைவு தலைப்படுவர் என்பது திண்ணம்.

ஆங்கிலர் நீங்கியதால் தமிழ்நாடு விடுதலையடையவில்லை. ஆரியம் நீங்குவதே உண்மையான தமிழர் விடுதலையாம்.

முதன்மொழி, 15-2-1971.

பாவாணர்

பாவலர் இலக்கியன், புதுவை

அன்பு நிலவு; அறிவுப் பெருங்கடல்; ஆய்வுளத்தர்.
என்பும் தசையும் இணைந்த வியல்பென இன்றமிழில்
ஒன்றி வளர்ந்த உயர்தமிழ்க் கொள்கை ஒளிவயிரம்!
பொன் பொருள் வேண்டாப் பொது நலச் சான்றோர்! பொருகளிறே!

முன்பின் அறியா மொழியெலாம் நாட்டில் முதன்மைபெறத்
தன்மொழிப் பின்னுற்று வாழ்ந்திடத் தாங்காத் தமிழுளத்தர்.
அன்புத் தமிழுக் கரியணை தந்திட அல்பகலாய்
இன்னல் பலஏற்(று) உழைக்க எழுந்த இளங்கதிரே!

ஞால முதன்மொழி நந்தமிழ் தானென நாள் பலவாய்
சாலப் பரிந்தே தமிழுக் குழைத்த தகு புலவர்.
நீலக் கடல் மிசை நீந்து படகென நீந்தி வந்து
காலப் புயலைக் கடந்தவர் பாவாணர் காண்குவையே!

நெறி கெட்டு வாழ்ந்த, நிலைகெட்டுத் தாழ்ந்த, தமிழ்ப் பெருமை
அறியாத் தமிழர்க் கறிவு கொளுத்தி அருந்தமிழில்
செறிந்த வடமொழி நீக்கித் தெளிதமிழ் தேர்ந்தளித்தார்
எறியீட்டிப் பாவாணர்; ஏத்துவம் என்றும் அவர்புகழே!

ஈடில் தமிழோ டினிய இசையும் இலக்கணமும்
கூடிக் கலந்தே எழுந்தபா வாணர் குறைவிலதாய்த்
தேடிக் கொணர்ந்து நமக்கெலாம் தந்த செழுந்தமிழைக்
கோடி பெறுமெனக் கொள்ளினும் இங்குக் குறைபடுமே!

அன்னார் உழைப்பை அளவிட் டுரைப்பின் அது சிறிதே!
பொன்னை விரும்பிப் புகழை விரும்பிப் புரைபடவே
தன்னைப் பெரிதாய்த் தமர்க்கெலாம் காட்டிடும் தக்கையரோ
முன்னைத் தமிழ் காக்க முன்வரு வார் முழு மூச்சுடனே!

பன்மொழி கற்றவர் சொல்லாய்(வு) அறிஞர். பசுந்தமிழ்க்கு
நன்னிலை காணவே நாளும் உழைத்தவர்; நற்றமிழர்.
முன்னே பிறந்து கலைகள் வளர்த்திடு முத்தமிழைப்
பொன்னெனக் காக்க முனைந்தநம் பாவாணர் போற்றுவமே!

தமிழ்மொழி மீட்கும் தலைவனாய் இங்குத் தலைநிமிர்ந்தே
இமிழ் கடல் வேலித் தமிழகம் சீர்பெற ஈங்கெழுந்த
கமழ் புகழ்ப் பாவாணர் காட்டும் தமிழ்ப் போர்க் களம் நடந்தால்
அமிழுமோ ஆற்றல் படைத்த தமிழும்? அறைகுவை நீயே!

வெற்றுரை யாளர் எழும்பும் முழக்கமா விண்ணிடிக்கும்?
பற்றிலார் செய்யும் பணிகளா இங்குப பயனளிக்கும்?
சிற்றுணர் வாளர் செயல்களா இங்குச் சிறப்பளிக்கும்?
உற்றபா வாணர்கொள் கையே தமிழை உணர்த்திடுமே!

புரட்சி விளைக்கும் புதுமை அளித்திடும்; புன்மையாளர்
முரட்டுப் பிடிகள் தளரும்; தனித் தமிழ் முன்வளரும் .
உரமுடன் பாவாணர் தந்த உயர்கருத் தோங்கியெங்கும்
பரவிடின் இன்றே பழந்தமிழ் ஆட்சி பரவிடுமே!

பாவாணரின் 'இசைத்தமிழ்க் கலம்பகம்'

முனைவர் இரா. திருமுருகன், புதுச்சேரி

முத்தமிழ் என்றால் என்ன?

'முத்தமிழ் அறிஞர்', 'முத்தமிழ் வித்தகர்' என்றெல்லாம் பட்டம் கொடுத்து, முத்தமிழ் மன்றம் வைத்து, முத்தமிழ் விழா நடத்தும் இன்றைய தமிழர்கள் பலர்க்கு, முத்தமிழ் என்றால் என்ன என்றே தெரியாது! முத்தமிழைக் குறிக்கும் அடையாளக் குறியில், இயற்றமிழுக்கு ஏட்டுச் சுவடியையும், இசைத்தமிழுக்கு யாழையும், நாடகத்தமிழுக்கு ஆடும் மயிலையும் படமாகப் போடுகிறார்கள். யாழிசையில் எங்கே இருக்கிறது தமிழ்? மயிலின் ஆட்டத்தில் எங்கே இருக்கிறது தமிழ்?

முத்தமிழ் விழா நடத்துவோர், இயற்றமிழுக்குப் பட்டிமன்றம் நடத்துகிறார்கள். சரி; இசைத்தமிழுக்குக் குழலிசையரங்கு நடத்துகிறார்கள். குழலிசையில் எங்கே இருக்கிறது தமிழ்? நாடகத் தமிழுக்காகப் பரதநாட்டிய நிகழ்ச்சியை நடத்துகிறார்கள். அதில் தெலுங்குமொழியில் உள்ள 'ஏமகுவ' என்னும் பதவண்ணமும், சேத்திரக்ஞர் பதங்களும் பாடப்படுகின்றன. இந்த நாட்டிய நிகழ்ச்சியில் எங்கே இருக்கிறது தமிழ்? பரதநாட்டியத்துக்குப் பதில் பம்மல் சம்பந்தரின் தமிழ் நாடகத்தை நடத்தினாலும், அது நாடகத்தமிழுக்கு ஈடுசெய்வதாகாது. அந்த நாடகத்தில் வரும் உரையாடலும், பட்டிமன்றப் பேச்சைப் போல் இயல்தமிழிலேயே அடங்கும். அதில் நாடகத்தமிழ் இல்லை.

இசை, நாட்டியம் என்ற பெயர்கள் கலைகளைக் குறிக்கும். ஆனால் இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற சொற்கள் தமிழ் மொழியின் பிரிவுகளைக் குறிக்கும். 'இயலிசை நாடகங்களும் என்று சொல்லப்படா நின்ற மூன்று தமிழ்களும்' என்று விளக்குவர் அரும்பதவுரையாசிரியர் (சிலம்பு 3 - 45 உரை).

'வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழ் எனப்படும். அச்செய்யுள் இன்றியமையாத இசையிலக்கணம் இசைத்தமிழ் எனப் பெயர் எய்தி, அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும். இவ்விரண்டின் வழி நிகழ்த்தும் கூத்திலக்கணம் கூறி நாடகத்தமிழ் அவற்றின் பின்னர்த்தாம்' என்று விளக்குவர் பேராசிரியர் (தொல். பொருள். மரபியல் 110 உரை).

இந்தப் பாகுபாட்டைப் பாவாணர் நன்கு அறிந்திருந்தார். முத்தமிழ்க்கு அவர் கூறும் விளக்கம் வருமாறு:

‘தொல்காப்பியம், முத்துவீரியம் முதலியன இயற்றமிழ் இலக்கணம்; மணிமேகலை, நளவெண்பா முதலியன இயற்றமிழ் இலக்கியம்’.

இசை நுணுக்கம் தாளவகை யோத்து முதலியன இசைத்தமிழ் இலக்கணம்; செயிற்றியம், மதிவாணனார் நாடகத் தமிழ் நூல் முதலியன நாடகத்தமிழ் இலக்கணம்; சபாபதி, வேதாள உலகம் முதலியன நாடகத் தமிழ் இலக்கியம். அகத்தியம் முத்தமிழ் இலக்கணம்; சிலப்பதிகாரம் முத்தமிழ் இலக்கியம் (உயர்தரக் கட்டுரை இலக்கணம் பாகம் 2, பக்கம் 138).

(மேற்கண்ட விளக்கத்தில் நாடகத் தமிழ்க்கு இலக்கியமாகத் திரைப்பட நாடகங்களைக் கூறியது பொருத்தமில்லை. அவை இயற்றமிழாகிய உரையாடலைக் கொண்டிருப்பவை. நாடகத்தமிழ் என்பதில் உள்ள நாடகம் என்ற சொல் நாட்டியத்தைக் குறிக்கும். நாட்டியத்துக்கென்று எழுதப்பெற்ற இசைப்பாடல்களைக் கொண்ட திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு முதலிய நூல்களை நாடகத்தமிழ்க்குச் சான்றாகக் காட்டுவது பொருத்தமாகும்)

முழுமையான தமிழ் காப்புத் தொண்டு

மக்கட் பெயர்களைத் தமிழாக்குதல், ஊர்ப்பெயர்களைத் தமிழாக்குதல் முதலிய பணிகளைச் செய்து, பிறமொழியாளர் சிதைத்த நம் பண்பாடுகளை மீட்டு வருகிறோம். இவை யாவும் இயல் தமிழின் பாற்பட்ட பண்பாட்டு மீட்சியே. இதுபோல் இசைத்தமிழ் நாடகத் தமிழ்களில் பிறபண்பாட்டினர் செய்த அழிம்புகளிலிருந்து அவற்றை மீட்டெடுப்பது பற்றி நாம் நினைத்துப் பார்ப்பதும் இல்லை. எனவே நாம் செய்துவரும் தமிழ்த்தொண்டு மூன்றில் ஒரு பங்குத் தமிழ்த்தொண்டே என்று உணர வேண்டும்.

இயற்றமிழ் போலவே இசைத்தமிழ் நாடகத்தமிழ்களில் மாற்றினத்தார் செய்து வரும் தில்லுமுல்லுகளைப் பற்றி முழுமையாக அறிந்து, தெலுங்கு வடமொழி வழிப் படுத்தப்பட்ட அவை நம்முடைய சொத்துகள் என்ற அறிவினை நமக்கு ஊட்டியவர்களில் பாவாணர் தலைசிறந்தவர்.

பாவாணரின் இசைப்புலமை

பாவாணர் இசை கற்கும் வேட்கை கொண்டு 1931 இல் (தம் 29 ஆம் அகவையில்) மன்னார்குடி இராசகோபால் என்ற யாழ்ப் பாணரிடம் இசை கற்றார். பல இசைக் கருவிகளையும் வாசிக்கப் பழகிக் கொண்டார். சித்தார், மதங்கம், பதலை, சலதரங்கம் என்னும் இசைக்கருவிகளை வாசிக்கக் கற்றார். இவ்வியசையறிவினை அடிப்படையாகக் கொண்டு 12 ஆண்டுகள் இசை யாராய்ச்சி செய்தார். ‘இசைத்தமிழ்ச் சரித்திரம்’ என்ற, முடிகல (கிரௌன்) அளவில் 200 பக்கம் அச்சிடக் கூடிய இசை நூலை எழுதினார். ஆனால் அது அச்சாக வில்லை.

இவ்வாறெல்லாம் அவர் வளர்த்துக் கொண்ட இசைப்புலமையின் விளைவாக, இசையறிஞர் சிலரின் ஆய்வு முடிவுகளை மறுத்திருக்கிறார்; சிலரின் முடிவுகளை உடன்பட்டிருக்கிறார். ஆழ்ந்த இசை யாராய்ச்சியறிவு இல்லாமல் இவ்வாறெல்லாம் செய்ய இயலாது. அவற்றுட் சில வருமாறு:

1. கருணாமிருத சாகரம் என்ற தமிழிசை நூலில், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், தமிழிசையில் உள்ள அலகுகள் 24 என விளக்கியிருக்கிறார். அதனைப் பாவாணர் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழிசையலகுகள் 22 என்று விளக்கினார்.

2. யாழ் நூலில் விபுலானந்த அடிகளார் தமிழிசையில் ‘குரல்’ எனப்பட்ட நரம்பு இன்று ‘மத்திமம்’ என்று கூறுப்படும் சுரமே என்று எழுதியிருக்கிறார். பாவாணர் அதை மறுத்துக் குரல் என்பது சட்சமமே; மத்திமம் அன்று என்று நிறுவினார்.

3. வேங்கடமகி என்பவர் 72 மேள கர்த்தா என்னும் தாய்ப்பண்கள் முறையை உருவாக்கினார். பாவாணர் அதை மறுத்து,

அந்த முறை நடைமுறைக்கு ஒவ்வாதது; செயற்கையானது என நிறுவினார்.

4. மதுரைப் பெருவங்கிய (நாகசுர) இசைவாணர், நமது இசையில் உள்ள தாய்ப்பண்கள் 32 என்றும், நரம்பிடங்கள் (சுரத்தானங்கள்) 16 அன்று 12 என்றும் நிறுவினார். அவற்றைப் பாவாணர் உடன் படுகிறார்.

5. "இசை அணிகலம் (சங்கீதபூடணம்) எசு. இராமநாதனார் மயங்கா மரபின் இசைமுறை காட்டிக் 'குரலே சட்சம்' என்னும் பழங்கொள்கையை நிலை நாட்டினார்" என்று இராமநாதன் என்ற இசைப்புலவரை உடன் பட்டுப் பாராட்டுகிறார்.

6. "கு. கோதண்டபாணியார் ஐந்திசை முறை, ஏழிசையில் கிளை ஆய்ந்து வகுத்ததே என்றும், பன்னீரிசை முறையும் அவற்றின் இடைவெளிகளான இருபத்தீரலகு முறையும் தமிழிசையில் தொன்றுதொட்டு இருந்து வருவனவே' என்றும் உடன்பட்டுள்ளார்.

7. தாளினால் (ஆடுவோர் காலினால்) தட்டுவதால் தாளம் என்று பெயராயிற்று என்று தாளம் என்று சொல்லுக்குக் காரணம் கூறுகிறார்.

> கொட்டும் அசையும் தூக்கும் அளவும்
> ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்
> (சிலம்பு 3 – 16 அடி.நல். உரை)

என்ற நூற்பாவையும், சப்பாணி கொட்டு தல் என்ற வழக்கையும் நோக்கி, பாணி என்பது பாடுவோர் கையினால் அளந்து தட்டுவதால் பாணி என்றாயிற்று என்று விளக்குகிறார்.

8. இன்று கருநாடக சங்கீதம் என்று பெயர் பெற்றிருப்பது பழந்தமிழ் இசையே யன்றி வேறில்லை என்று விளக்குகிறார்.

இவர்தம் இசைப் பாடல்களை உடைய நூல்கள் :

1. இசைத்தமிழ்க் கலம்பகம்

2. செந்தமிழ்க் காஞ்சி

3. இசையரங்கு இன்னிசைக்கோவை

என்பன.

இசைத்தமிழ்க் கலம்பகம்

இவற்றுள் இசைத்தமிழ்க் கலம்பகம் தூயதமிழால் இயன்றது. 1966இல் வெளி வந்தது. 305 இசையுருப்படிகள் அடங்கியது. இவற்றில் பலவற்றிற்குப் பண்ணும் தாளமும் குறிக்கப்பட்டுள்ளன. சிலவற்றிற்கு மெட்டு கள் குறிக்கப்பட்டுள்ளன.

'எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது சனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியம் ஒன்று தற் காலத்தில் செய்து தருவோன், நம் தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின் றான்' என்ற பாரதியின் கருத்துப்படி, அக்காலத்தில் பலருக்கும் பழக்கமாய் இருந்த தியாகராசர் முதலியோரின் தெலுங்குக் கீர்த்தனைகள் சிலவற்றின் மெட்டுகளிலும், அனைவரும் அறிந்திருந்த திரைப்பாடல் களின் மெட்டுகளிலும் பாவாணர் பாடல்கள் இயற்றியிருக்கிறார்.

இவர் பின்பற்றிப் பாடிய தியாகராசர் கீர்த்தனை மெட்டுகள் : ரகுநாயக, கோரின வரமு, கொலுவமரகத, மருகேலரா, எதுடநில சிதோ, கத்தனவாரிகி, நனுபாலிம்ப, தினமணி வம்ச, வரமுலொசகி, சாந்தமுலேகா, சுஜன ஜீவன, மோட்சமுகலதா முதலியன.

இவர் பயன்படுத்திய திரையிசை மெட்டுகள் : பூமியில் மானிட, மணப்பாறை மாடு கட்டி, தங்கத்திலே ஒரு குறை, சந்திர சூரியர், ஞானக்கண், தூங்காதே தம்பி, உனைக் கண்டு மயங்காத, மன்மத லீலையை, சித்திரம் பேசுதடி, கொடியசைந்ததும் முதலியன.

இதுபோல் மக்களுக்குப் பழக்கமான இசையில் உள்ள தேவாரம், திருவாசகம், திருப்புகழ், காவடிச் சிந்து, பாரதியார் பாடல்கள், பாவேந்தர் பாடல்கள், நாட்டுப் புறப் பாடல்கள் ஆகியவற்றின் மெட்டு களிலும் இவர் பாடல்களில் பெரும்பாலன அமைந்துள்ளன.

பண்ணின் பெயர்களில் தமிழ்

இவர் இயற்றிய 'தென்பாலி முகத்தே' என்ற பாடலுக்குப் 'பித்தா பிறை சூடீ என்ற மெட்டு' என்று இசைக்குறிப்பெழுதித் தேவாரத்தில் அந்தப் பதிகத்துக்குரியதாகக்

குறிப்பிட்ட 'இந்தளம்' என்ற பண்ணின் பெயரையும் குறித்திருக்கிறார். முன்னோர் மொழிந்த பொருள்களையும் சொற் களையும் பொன்னே போல் போற்றுபவர் பாவாணர் என்பதற்கு இது சான்று. தியாகராசர் பாடல்கள் மருகேலரா என்ற பாடலில் 'ஜயந்தஸ்ரீ' என்ற இராகம் குறிப்பிட்டிருக்கும். அதே மெட்டில் பாவாணர் 'குறள் மாமறை' என்ற பாடலை எழுதியிருக்கிறார். அதில் பண் குறிப்பிடும் போது 'ஜயந்தஸ்ரீ' என்ற பெயரைத் தமிழ்ப் படுத்திச் 'சயந்தத்திரு' என்று குறித்திருக்கிறார். ஹம்ஸத்வனி, ஸ்ரீராகம், ஸௌ ராஷ்ட்ரம் முதலிய வட மொழியிலுள்ள பண்களின் பெயர்களைத் தமிழ் ஒலி முறைப்படி முறையே, அமிசத் தொனி, சீராகம், சௌராட்டிரம் என்று குறித்திருக்கிறார்.

தாளத்தின் பெர்களில் தமிழ்

தமிழ்ப் பண்களின் பெயர்களைப் போலவே தமிழ்த் தாளத்தின் பெயர்களும் முழுமையாக வடமொழியாக்கப்பட்டு விட்டன. பாவாணர் அவற்றைப் பின்வருமாறு தமிழாக்கியிருக்கிறார் :

ஏக - ஒற்றை	ஐம்ப - மூவொற்று
ஆதி - முன்னை	த்ரிபுட - முப்புடை
ரூபக - ஈரொற்று	சாபு - இணையொற்று

பாடல் உறுப்புகளின் பெயர்கள்

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்றுள்ள பெயர்களை முறையே பல்லவி, துணைப்பல்லவி, உருவடி என்றாக்கியிருக் கிறார். தொகையரா என்பதை உரைப் பாட்டு என்று குறித்திடுகிறார்.

இசைப்பயிற்சியில் தொடக்கப் பாடல் – தமிழில்

இன்றைய நிலையில் தமிழ்ப்பற்றுள்ள பெற்றோர்களும் தம் குழந்தைகளுக்குக் கீதம், சுரசதி முதலிய தொடக்கப் பாடல்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியாது. காரணம் இசை பயிற்றும் ஆசிரியர்கள் தமக்குத் தெரிந்த தெலுங்கு, வடமொழிக் கீதங்களையே குழந்தைகளுக்குக் கற்பித்து வருகின்றனர். சுரவரிசைப் பயிற்சிகளும் தாளப் பயிற்சிகளும் முடிந்தபின் பிள்ளையார் கீதம் என்ற ஒரு சிறிய உருப்படியைக் கற்பிப்பது வழக்கம். அது 'ஸ்ரீ கண நாத' என்று தொடங்கும் வடமொழிப் பாடல். இயலில் எல்லாம் தூய தமிழாக வேண்டுமென்று விரும்பினார். அதற்குப் பயன்படும் வகையில் 'லம்போதர' என்ற கீதத்தின் சுர அமைப்பில் 'அன்பே வடிவு' என்ற தமிழ்க் கீதம் ஒன்றை இயற்றினார். அது இசைத்தமிழ்க் கலம்பகத் தில் உள்ளது (ப. 3). உரிய சுர அமைப்புடன் அந்த 'ஸ்ரீ கணநாத' கீதத்திலும் பாவாணர் இயற்றிய தமிழ்க் கீதத்திலும் ஒரு பகுதியை அடியில் காண்க :

பிள்ளையார் கீதம்

பண் : மலகரி	தாளம் : ஈரொற்று.
ம ப த ச் ச் ரி	ரி ச் த ப ம ப
ஸ்ரீ . க ண நா த	சிந்து . ர வ ர் ண
எங் . கும் . நிறை	இறை. வா உன்றன்
ரி ம ப த ம ப	த ப ம க ரி ச
க ரு ண சா க ர	க ரி வ த . ன
எழி லா . ர் க ழல்	இணைபணிகின்றேன்
சா ரி ம க ரி	ச ரி க ரி சா
லம் போ. த ர	ல கு மி க ரா
அன் பே . வ டி	வெனும் அ ற வா
ரி ம ப த ம ப	த ப ம க ரி ச
அம் ப. சு த	அ ம ர வி னு த
இன் . பே. தரு ம்	இ சை ய றி வ ருள்

இசைப்பயிற்சியில் கீதத்துக்கு அடுத்த படியாகச் சுரசதி என்ற உருப்படி கற்பிக்கப் படும். சுரசதிகளில் 'ராரா வேணு' என்று தொடங்கும் தெலுங்குச் சுரசதி பலரு மறிந்தது. அதன் அமைப்பிலும் பாவாணர் 'ஆடுவோம்' என்ற தமிழ்ச் சுரசதி ஒன்றை இயற்றினார். அதன் பல்லவியை மட்டும் சுரத்துடன் அடியில் காண்க.

சுரசதி

பண் : பிலகரி தாளம் : முன்னை

பல்லவி

சா , ரி	கா பா	தா சா	நீ தா
ரா ர	வே ணு	கோ பா	பா லா
ஆ . டு	வோம் கோ	லாட் டம்	வா ரீர்
பா த ப	ம க ரி ச	ரி ச நி த	சா ;
ரா சி த	ச . த் கு ண	ச ய சீ .	லா .
ஆ ட க	ர னை வ ரும்	பு கழ் ந் திட	வே .

இசையரங்கின் இறுதியில் 'நீ நாம ரூபமுலகு' என்ற தெலுங்கு உருப்படியை மங்களம் என்ற பெயரில் பாடி முடிப்பது மரபு. அது சௌராட்டிரப் பண்ணில் அமைந்தது. அந்த உருப்படிக்கும் இணையாக ஒரு தமிழ் உருப்படியை இயற்றித் தந்திருக்கிறார். அது வருமாறு :

மங்களம்

'நீ நாம ரூப முலகு' என்ற மெட்டு

பண் : சௌராட்டிரம் தாளம் : முன்னை

பல்லவி

எல்லாரும் இன்புறவே இறைவன் அருளால் மங்களம்

துணைப்பல்லவி

பொல்லாப் பகையும் பசியும் பிணியும்
இல்லாமல் எங்கும் நன்கனம்

(எல்லாரும்)

இவை யாவும் 1941 அளவில் அண்ணா மலை அரசர், இராசாசி, கல்கி, இரா. க. சண்முக னார் முதலியோர் முன்னின்று தொடங்கிய தமிழிசை இயக்கத்திற்கு உறு துணையாய் இருந்தன. இவ்வாறு இசைப் பயிற்சி, இசை யரங்கு முதலிய எல்லா நிலைகளிலும் தேவைப் படும் தமிழ் உருப்படிகளைத் தூயதமிழில் இயற்றித் தந்து தமிழிசையியக்கத்துக்குப் பெருந்தொண்டு செய்திருக்கிறார் பாவாணர்.

பாடு பொருள்கள்

சென்ற நூற்றாண்டின் தொடக்கம் வரையில் பெரும்பாலும் தெய்வம் மட்டுமே இசைப் பாடல்களில் பாடுபொருளாக இருந்து வந்தது. பாரதியார் அதனைச் சிறிது மாற்றி நாடு, மொழி முதலியவற்றைப் புகுத்தினார். பாவேந்தர், தமிழ் உணர்வு, சீர்திருத்தம், இயற்கை முதலியவற்றைப் பெரும்பாலும பாடுபொருளாகக் கொண டார். பாவாணர் பழந்தமிழன் சிறப்பு, தமிழ் மொழியின் இளமை, முதுமை, தமிழே தேவமொழி என்பது, பொருளிலக்கணச் சிறப்பு, திருக்குறள், சிலப்பதிகாரம், தமிழ் நாடு, வடமொழியால் தமிழுக்கு வந்த கேடு, இறந்துபட்ட தமிழ் நூல்கள், மறைமலை யடிகள் மாண்பு, உ. வே. சாமிநாதையர், தனித்தமிழ், மொழிப்பற்று, இந்தி எதிர்ப்பு, இலக்கண அறிவில்லா எழுத்தாளர், பார்ப்ப னியத்தின் கொடுமை, கம்பன் துளசிதாசர் ஏற்றத் தாழ்வு, தமிழ் காக்கும் வழிகள், மாணவர்க்கு அறிவுரை முதலிய நூற்றுக் கணக்கான பொருள்களில் இசைப் பாடல் களை இயற்றினார். அவற்றை இசைத் தமிழ்க் கலம்பகத்தில் காணலாம்.

முடிவு

பாவாணரின் இசைத்தமிழ்க் கலம் பகம் நமக்குத் தரும் அறிவுரைகள் :

1. தமிழ்ப் பகைவர்கள் சொந்தம் கொண்டாடியும் சிதைத்தும் வரும் நம் இசைத்தமிழையும் நாடகத் தமிழையும், இயற்றமிழைக் காக்கும் அதே உணர்வுடன் பாதுகாத்தால்தான் நாம் முழுமையாகத் தமிழைக் காப்பாற்றியவர் களாவோம். இல்லாதவரையில், நமது மொழித்தொண்டு அரைகுறைத் தொண டாகவே இருக்கும்.

2. தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழில் இசை, நாட்டியப் பயிற்சிகள் தர வேண்டும். தமிழிசை நூல்களைப் பயிலச் செய்யவேண்டும். இசை, நாட்டியம் தொடர் பான பேச்சுகளைக் கேட்கச் செய்ய வேண்டும். இசை நாட்டிய அரங்குகளுக்கு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். இங்ஙனம் அவர்களை முத்தமிழ் உணர்வுள்ள தமிழர் களாக வளர்க்க வேண்டும்.

இங்ஙனம் தமிழர்களைத் தமிழ்ப்பண் பாடுள்ள தமிழர்களாக வளர்ப்பதற்குப் பாவாணரின் இசைத் தமிழ்க் கலம்பகம் பெரிதும் உதவும்.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்

பூந்தமிழின் உயிர்மூச்சே தேவநேயன்

● புலவர் பா. வெள்ளையன், புதுக்கோட்டை

கற்பனைகள் கலவாத உண்மை உள்ளம்;
கசடில்லா மொழியுணர்வில் தோய்ந்த உள்ளம்;
விற்பகையும் நடுங்கும்நல் வலிய உள்ளம்;
வேர்ச்சொல்லே வேராக ஓடும் உள்ளம்;
நற்புலமை வித்தாக விளையும் உள்ளம்;
நாடுமொழி தமிழென்றே நாடும் உள்ளம்;
பொற்புலகம் புதுவுலகம் படைக்கும் நல்ல;
பூந்தமிழின் உயிர்மூச்சே தேவ நேயன்!

பல்வேறு சொற்களுக்கு வேர்கள் கண்டார்;
பல்லாயிரம் புதுச்சொற்கள் நமக்குத் தந்தார்;
ஒல்லென்னும் வேர்ச்சொல்லே, ஓலம், ஓலை,
ஒலியுடனே ''ஒல்''லென்ற ஒலிக்கு றிப்பும்
சொல்லாகி வளர்கின்ற நிலையைச் சொன்னார்;
சொற்பொருளின் தனித்தன்மை எடுத்துச் சொன்னார்;
வில்லினின்று எழுகின்ற அம்பைப் போல
வேற்றுச்சொல் அதைவீழ்த்தித் தூய்மை செய்தார்.

உலகமொழி மூவாயிரம் அவற்றி னுள்ளே
ஒண்டமிழ்தான் மிகத்தொன்மை, ஒண்மை, முன்மை,
இளமைநல் வலிமையுடன் தாய்மை, தூய்மை,
இனிமையுடன் தனித்தன்மை பெருமை, திருமை
வளமையுடன் பல்வகையில் இயன்மை வியன்மை,
வளர்பண்பில், இலக்கியத்தில், அறிவில், செறிவில்,
நலத்துடனே நிலைபெற்ற மொழியே என்று,
நற்றமிழின் வரலாற்றை வரைந்த நேயன்!

தனித்தமிழே உயிர்மூச்சாய் உலக ரங்கில்,
தமிழ்மொழிக்கு முடிசூட்டி வணங்கச் செய்தார்!
கனித்தோட்டம் அவர்நூற்கள்; புலவர் உள்ளம்,
கற்கின்ற தமிழ்ப்புதையல்; குழந்தை உள்ளம்,
மணித்தமிழின் தனிமுத்து; மொழியின் வித்து,
மணக்கின்ற தமிழ்ப்பூங்கா! காலம் எல்லாம்,
இனிக்கின்ற இடம்தந்தார்; தமிழைத் தந்தார்;
இணையில்லாத் தமிழ்க் கடலாய்த் தானே நின்றார்!

''பாவாணர் நூற்றாண்டு'' காணும் நாமே
பைந்தமிழின் வளர்ச்சிக்கே இடமாய் நிற்போம்
நாவாலும் எழுத்தாலும் பெயரி னாலும்
நற்றமிழே நாம்நினைந்து பயிலச் செய்வோம்
மூவாத முத்தமிழே நமது வாழ்வின்
பேச்சாக மூச்சாக உயிர்க்கச் செய்வோம்
தேவநேயர் காட்டியநல் நெறியில் நிற்போம்,
தித்திக்கும் செந்தமிழை மீட்போம்! காப்போம்.

குமரிக்கண்ட அகழ்வாய்வு

பொறிஞர் **குமரிமைந்தன்**, பாளையங்கோட்டை

மொழிஞாயிறு பாவாணர் தம் மொழியாய்வுகளின் மூலம் தமிழே உலக மொழிகளுக்கெல்லாம் தாய் என்று நிறுவியதுடன் முதல் மனிதன் தமிழன் தானென்றும் அவனது பிறந்தகம் குமரிக் கண்டம் என்றும் எடுத்துக் கூறியவர். அதை நிறுவுவதற்காக 31-12-1972 அன்று தஞ்சையில் தமிழர் பிறந்தகத் தீர்மானிப்பு மாநாடு என்ற ஒன்றை நடத்தினார். அந்த மாநாட்டில் குமரிக்கண்டம்தான் தமிழர்களின் பிறந்தகம் என்ற தன் முடிவை எதிர்ப்போர் முன்வரலாம் என்று அறைகூவல் விடுத்தார். அதன்பின் குமரிக்கண்ட ஆய்வில் புதிய ஊக்கம் பிறந்தது. குமரிக் கண்ட ஆய்வு மாநாடுகள் பலவும் நடை பெற்றன. ஆனால் அவை அனைத்திலும் ஏற்கனவே பழந்தமிழ் இலக்கியங் களில் கூறப்பட்டுள்ளவையும் ஐரோப்பிய அறிஞர்கள் கூறிய கருத்துகளும் தாம் தொகுத்து வழங்கப்பட்டன.

குமரிக்கண்டக் கோட்பாட்டை எதிர்ப்பவர்களின் முதன்மையான கருத்து, குமரிக்கண்டம் முழுகியதாகக் கூறப்படும் நிகழ்ச்சி, உலக நிலப்பரப்பெல்லாம் ஒரே தொகுதியாக இருந்த கோண்டுவானாக் கண்டம் பல்வேறு கண்டங்களாகப் பிரிந்ததேயாகும்; அவ்வாறு பிரிந்த போது உலகில் உயிரினமே தோன்றவில்லை என்பதாகும். ஆசியக் கண்டத்திற்கும் இந்தியாவுக்கும் இடையில் முதலில் கடல் இருந்தது; பின்னர் இந்தியா வடக்கு நோக்கி நகர்ந்து சென்று ஆசியாவுடன் மோதி இன்றைய இமயமலை உருவாகியது. நிலங்கள் கடலில் முழுகுவதுமில்லை புதிதாகத் தோன்றுவது மில்லை; கண்டப் பெயர்ச்சிகளே நடைபெறுகின்றன. அடியார்க்கு நல்லார் உரையில் கடல்கொண்ட குமரிக் கண்டத்தின் நீளம் 700 காவதம் எனக் கூறப்படுகிறது; ஆனால் நிலநடுக்கோட்டிலிருந்து புவியின் தென்முனைவரை யுள்ள தொலைவு ஏறக்குறைய 10 ஆயிரம் அயிரமாத்திரிதான்; ஒரு காவதம் 10 கல்கள் (மைல்கள்) என்ற கணக்கில் 11,280அயிரமாத்திரி ஆகிறது என்பவை பிற மறுப்புக் கருத்துகள்.

புவிஇயங்கியல், புவியியல் கோணங்களிலிருந்து முன்வைக்கப்படும் இந்த மறுப்புக் கருத்துகளுடன் வரலாற்று வரைவியல் கோணத்திலிருந்தும் குமரிக்கண்டக் கோட்பாட்டை மறுக்கிறார்கள். குமரிக்கண்டக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று மூலங்களைக் கொண் டிருக்கவில்லை. இலக்கியச் சான்றுகள், தொன்மங்கள், செவிவழிச் செய்திகள் போன்றவை வரலாற்றுக் கருப்பொருள் ஆகா. வெறும் சொல்லாய்வு கொண்டு குமரிக் கண்டக் கோட்பாட்டை நிலைநிறுத்த முயன்ற பாவாணரின் கருத்துகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்கின்றனர். தொல்பொருட்கள், கல்வெட்டு அகழாய்வுக் சான்றுகள் போன்றவை தாம் ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்று

கூறுகின்றனர். இவர்களது கூற்றுகளை ஆய் வோம்.

உலக நிலப்பரப்பெல்லாம் ஒரே கண்ட மாக இருந்த நிலையைக் கோண்டுவானாக் கண்டம் என்ற பெயரில் நிலஇயங்கியலாளர் குறிப்பிடுகின்றனர். கோண்டுவானா என்பது காண்டவனம் என்பதன் திரிபு. வட இந்தியாவில் இப்போதும் வாழும் கோண்டு எனும் இனத்தவர் வாழும் பகுதி என்பது இதன் பொருள். மகாபாரதத்தில் கண்ணனும் அர்ச்சுனனும் காண்டவனத்தை எரித்த செய்தி கூறப்படுகிறது. இந்தப் பெயர் அந்தக் கண்டத் துக்கு ஏன் சூட்டப்பட்டது என்பது ஒரு கேள்வி. அத்துடன் ஒரே கண்டமாக நிலப்பரப்பு இருக்கும் போதே அங்கு மக்கள் அதாவது தமிழர்கள் தோன்றிவிட்டனர் என்று குமரிக் கண்டக் கோட்பாடு எப்போதும் கூறவில்லை. அத்துடன் கண்டங்கள் உடைவதும் நகர்வதும் ஒரே நாளில் அல்லது நொடியில் தொடங்கி முடிந்துவிட்ட நிகழ்வல்ல, இன்றும் தொடரும் ஒரு நிகழ் முறையாகும். இவர்கள் கோண்டு வானாக் கண்டம் என்று குறிப்பிடும் ஒரே நிலப்பரப்பு பகுதிகளாக உடைந்து பெயர்ந்து கொண்டிருந்த போது உயிர்வகைகளும் மனிதனும் தோன்றியபின் நிகழ்ந்த கடற்கோள் களில் சிலவற்றையே தமிழ் இலக்கியங்களும் பிறவும் பதிந்து வைத்துள்ளன.

குமரிமாக் கடலில் குமரிக் கண்டத்தின் ஒரு பகுதி முழுகிய செய்தியைத் தமிழ், சமற் கிருத, பாபிலோனிய, ஊத இலக்கியங்கள் பதிந்துள்ளதைப் போன்று உலகின் பல பகுதிகளிலும் கடற்கோள்கள் நிகழ்ந்த தாக இலக்கியப் பதிவுகளும் தொன்மங்களும் செவிவழிச் செய்திகளும் உள்ளன. அட் லாண்டிக் மாவாரியில் இருந்த அட்லாண்டிசு என்ற ஒரு கண்டம் முழ்கியதைப் பற்றிக் கிரேக்க அறிஞர் அரிட்டாட்டில் பதிந்துள்ளதாக அலெக்சாந்தர் கோந்திரதோவ் தம் மூவாரி களின் புதிர்கள் நூலில் குறிப்பிட்டுள்ளார். அது போல் பசிபிக் பெருங்கடல் எனப்படும் அமைதி மாவாரியில் பல்வேறு தீவுகளில் உள்ள இது போன்ற கடற்கோள் செய்திகளை ஐரோப்பியக் கடலோடிகள் சென்ற நூற்றாண்டுகளில் அங்கு வாழ்ந்த மக்களிடமிருந்து அறிந்து பதிந்துள்ள னர். இந்தப் பின்னணியில் மனித வரலாறு, புவிஇயங்கியல், கடலியல் போன்ற துறை களில் ஆய்வு செய்வோர் ஒரு கருத்தை எடுத் துரைக்கின்றனர். அதாவது உலகின் பல்வேறு பகுதிகளில் பதியப்பட்டுள்ள கடற்கோள்கள் நிகழ்ந்த போது உலகில் மனித இனம் தோன்ற வில்லை; எனவே இந்தச் செய்திகள் நம்பத் தகுந்தவையல்ல என்பதாகும். அதே நேரத்தில் நேர்மையுள்ள சில ஆய்வாளர்கள் கடற் கோள்கள் பற்றிய செய்திகளுக்கும் அது நிகழ்ந்ததாகப் புவி இயங்கியலாளர்கள் கணித்துள்ள காலத்துக் கும் ஓர் இடைவெளி இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்கின்றனர். இந்த இடைவெளி சுருங்கி வருகிறதென்றும் சுட்டிக் காட்டுகின்றனர். இமயமலையின் தோற்றம் குறித்த காலக் கணிப்பு 75 கோடி ஆண்டுகளி லிருந்து 20 கோடி ஆண்டுகளாகக் குறைந் திருக்கிறது. அதேபோல் காலக்கணிப் பில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப மேம்பாடு களினாலும் புதிய புதிய தொல்பொருட் சான்றுகளாலும் மனிதனின் தோற்றக் காலப் ஓரிலக்கம் ஆண்டுகளிலிருந்து 21/2 கோடி ஆண்டுகள் என்று முன்தள்ளிப் போயுள் ளது. அப்படியிருக்க, இன்னும் உரிய துல்லியத்தை அடையாத காலக் கணிப்பையும் உலக முழுவதுமுள்ள தொல்பொருட் சான்றுகளை ஒன்றுவிடாமல் ஆய்ந்து விட்டோமென்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையிலும் நேர்மையான ஆய்வாளர்கள் என்ன செய் திருப்பர்? எழுத்துச் சான்றுகளை, அதாவது இலக்கியச் சான்று களையும் தொன்மங்கள் தரும் செய்திகளையும் செவிவழிச் செய்தி களாகப் பதியப்பட்டிருப்பவற்றையும் அடிப்படை வரலாற்றுத் தரவுகளாக வைத்துக் கொண்டு முரண்படும் காலக்கணிப்பை மேலும் துல்லியமாக்குவதுடன் புதிய தொல் பொருட்களைத் தேட வேண்டும் என்று கூறி யிருப்பர். மாறாக, பல பத்தாயிரம் ஆண்டு களுக்கு முன் உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் சொல்லி வைத்துக் கொண்டு ஒரே வகையான பொய்யை, தாங்கள் காணாத கற்பனையைச் சொல்லி வந்திருக்கிறார்கள்

என்றோ இலக்கியங்களில் பதிந்து வைத்திருப்பார்கள் என்றோ ஒரு வரலாற்றாய்வாளர் கருதுவாராயின் அவரது மனநலம் தான் நம் ஆய்வுப் பொருளாக வேண்டும்.

கண்டப்பெயர்ச்சிக் கோட்பாடு முதன் முதலில் வைக்கப்பட்ட போது அதற்கு எதிராக ஒரு கோட்பாடு முன்நிறுத்தப் பட்டது. கண்டப் பெயர்ச்சிக் கோட்பாட்டினர், உலகில் கண்டப் பெயர்ச்சிகள் தாம் நிகழ்கின்றன, கடற்கோள்களோ, புதிய நிலப்பரப்பு கடலிலிருந்து மேலெழுவதோ நிகழ்வதில்லை என்றனர். எதிர்த்தரப்பினர் கண்டப் பெயர்ச்சிகளே நிகழவில்லை, அனைத்தும் கடற்கோள்களும் புதிய பரப்புகள் தோன்றுவதும்தாம் என்றனர். இன்று ஒரு சரியான முடிவுக்கு நில வியங்கியலாளர்கள் வந்துள்ளனர். கண்டப் பெயர்ச்சியும், அதன் விளைவாக, புவிப்பந்தினுள் இருக்கும் மக்மா எனும் குழம்பின் மீது ஏற்படும் அழுத்த விசையில் ஏற்படும் மாற்றங்களினால், உயர எழும்பும் நிலப்பகுதிகள் திடீரென்று அமுங்குவதுடன், கடலினுள் ஆழத்தில் இருக்கும் நிலப்பகுதி மேலெழும் புவதும் ஆகிய இரண்டும் ஒன்றன் விளைவாக மற்றொன்றும் ஒன்றன் காரணமாக மற்றொன்றும் இயங்கியலாக நிகழும் என்கின்றனர். அதாவது, உலகில் மிக உயரமானதும் நாள்தோறும் உயர்ந்து கொண்டிருப்பதுமான இமயமலை திடீரென்று ஒரு நாள் தன் பாரத்தையே தாங்க முடியாமல் புவிப்பந்தி னுள்ளிருக்கும் குழம்பினுள் புதையுண்டு போகக் கூடும், குமரி மாக்கடலில் இலக்கத் தீவுகள் வழியாகத் தென்வடலாகச் செல்லும் கடலடி மலைத்தொடருக்குக் கிழக்கிலும், ஆத்திரேலியா, இந்தோனேசியத் தீவுகள் ஆகியவற்றுக்கு மேற்கிலும் உள்ள உலகின் ஆழம் மிகுந்த கடற்பகுதியிலுள்ள நிலம் மேலெழவும் கூடும்: இந்த உண்மைகளை அறியாமலோ அறிந்தும் மறைத்தோ இந்த "ஆய்வாளர்கள்" தங்கள் "முடிவுகளை" வெளியிடுகின்றனர்.

அடியார்க்கு நல்லார் கூறும் 700 காவதங்கள் இன்றைய அளவு முறையில் எத்தனை கற்கள் அல்லது அயிரமாத்திரிகள் என்று பார்ப்போம். காவதத்திற்கான வாய்ப்பாடு தெளிவாகவே உள்ளது. அதைப் பார்ப்போம்:

2 சாண் = 1 முழம்

12 முழம் = 1 சிறுகோல்

4 சிறுகோல் = 1 கோல்

55 கோல் = 1 கூப்பிடுதூரம்

4 கூப்பிடுதூரம் = 1 காவதம்

- சான்று: அபிதான சிந்தாமணி

ஒரு சாண் என்பது 9 அங்குலம், அதாவது 3/4 அடி. அதன்படி ஒரு காவதம் = 15840 அடிகள் = 15840/5280 (ஒருகல்) = 3 கல். துல்லியமாக இது 3 x 1.61 = 4.85 அயிர மாத்திரி. எனவே 700 காவதம் என்பது 2100 கல்கள் தாம், அதாவது 3381 அ.மா.தான். 'ஆய்வாளர்கள்" "கண்டுபிடித்து"க் கூறுவது போல் 7000 கல்கள் அல்லது 11270 அ.மா. அல்ல. தம் அறியாமையையே மூலதனமாகக் கொண்டு செயற்படும் "ஆய்வாளர்கள்" இரக்கத்துக்குரியவர்கள்.

இனி, வரலாற்றுக் கருப்பொருள்கள் பற்றிய கேள்விக்கு வருவோம். எந்த வரலாற்றுச் செய்திக்கும், அகழ்வாய்வுச் சான்று தான் இறுதியானது என்று அடித்துச் சொல்கிறார்கள். அப்படியாயின் எகிப்து, மெசப்பொடோமியா, சிந்துவெளி, பிற ஆசிய, தென்னாப்பிரிக்க, ஆப்பிரிக்கக் கண்டங்களில் வெளிப்பட்டுள்ள அகழாய்வுச் சான்றுகள் உலகின் மிக முகாமையான நாகரிகங்களின் வரலாறு பற்றிய புதிர்களை விடுவித்திருக்க வேண்டுமே! மாறாக அவை புதிய புதிய புதிர் மூட்டைகளையல்லவா அவிழ்த்துவிட்டிருக்கின்றன! கல்வெட்டுகளின் நம்பகத்தன்மை என்ன? தம் முன்னோர்களின் அருஞ்செயல்களைத் தம் செயல்கள் போன்று மன்னர்கள் பொறித்து வைக்கவில்லையா? ஒரே போரில் தாமே வென்றதாக இரு தரப்பாரும் கூறுகின்ற பொறிப்புகள் இல்லையா? செப்பேடுகளில் போலிகள் இல்லையா? தொல்பொருட்கள், அகழாய்வுக் களங்கள், செப்புப்பட்டயங்களை வைத்துப் பட்டியல் தான் போட முடியுமேயொழிய அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு வரலாறு எழுத முடியாது. மனித இனத்தோற்றம், மக்கள் குழுக்களின் உரைகள், குமுக இயங்கியல் ஆகியவை குறித்த ஒரு

குறிப்பிட்ட மெய்யியலை அடிப்படையாக வைத்துத் தமக்குக் கிடைக்கும் பல வகைப்பட்ட தரவுகளை இணைத்தும் ஒப்பிட்டும் முடிவுகளை எய்தித்தான் வரலாறுகள் எழுதப்படுகின்றன. எனவேதான் வரலாற்று வரைவை நடுமெய்யியல் நடைமுறை என்கின்றனர் வரலாற்று அறிஞர்கள்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலக வரலாற்றையும் இந்திய வரலாற்றையும் எழுதப் புகுந்த ஆய்வாளர்கள் தங்களுக்குக் கிடைத்த பருப்பொருள் சான்றுகளுடன் நம்மிடமுள்ள தொன்மங்கள், செவிவழிச் செய்திகளையும் கணக்கில் கொண்டுதான் எழுதினர். அவர்களது கடும் முயற்சியும் ஊக்கமும் போற்றத்தக்கன. அதே நேரத்தில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிப்பட்ட சிந்துவெளி நாகரிகத் தடங்கள் அதுவரை முடிந்து போனவையாய்க் கருதப்பட்ட இடங்களில் புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன. முரண்பட்ட நலன்களைக் கொண்டோர் எதிரெதிரான விடைகளைத் தர முயன்று கொண்டுள்ளனர்.

எனவே அகழாய்வு என்பது பல்வேறு வரலாற்றுக் கருப்பொருட்களில் ஒன்று தானே தவிர அதுவே அனைத்துமன்று. அகழாய்வுகள் இன்றியே ஒரு காலத் தொடர்ச்சியில் குமரிக் கண்டத்தின் நிலக்கிடப்பு, மக்களின் வரலாறு, பண்பாட்டு வளர்ச்சி நிலைகள், பின்னடைவுகள், வீழ்ச்சிகள் என்று தடம்பிடித்து விட முடியும்.

வரலாற்றுக் கருப்பொருட்களைப் பற்றிய இன்றைய கருத்தோட்டங்களின் பின்னணியில் ஓர் உலக அரசியல் உள்ளது. இன்றைய வரலாற்று வரைவின் முன்னோடிகளான ஐரோப்பிய நாடுகளுக்கும் அவை அடிமைப்படுத்தியிருந்த ஆசிய, ஆப்பிரிக்க, தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கும் நீண்ட

உலகப் பெருமொழிகளும் அவற்றைப் பேசுவோர் எண்ணிக்கையும்

உலகத்தில் சற்றொப்ப மூவாயிரமொழிகள் பேசப்பட்டு வருகின்றன என்று பிரெஞ்சுக் கழகம் (French Academy) கணக்கிட்டுள்ளது. ஆனால் அதற்குமேலும் சில ஆயிர மொழிகள் பேசப்பட்டு வருகின்றன என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்கள் பத்தாயிரம் வரை மொழிகள் இருக்கலாம் என்றும் கருதுகின்றனர். இம் மொழிகள் உலக மக்கள் தொகையினரால் சரியாகப் பகிர்ந்து பேசப்படுவதில்லை. மொழியின் உயிர்த்தன்மை அதைப் பேசும் மக்களைப் பொருத்து அமைகிறது. மொழிக்கும் அதனைப் பேசுவோருக்கும் இடையே உள்ள பிணைப்பு தற்செயலானது அன்று. உலக மக்கள் தொகையில் 95 விழுக்காட்டு மக்கள் 100க்கும் குறைவான மொழிகளைப் பேசி வருகின்றனர். அதிகப்படியான பேசும் மக்களைக் கொண்ட மொழி சீனம். இதை 80 கோடி மக்கள் பேசி வருகின்றனர். இது உலக மக்கள் தொகையில் சற்றொப்ப 20 விழுக்காடு ஆகும். இரண்டாம் இடத்தை ஆங்கிலம் பெறுகிறது. 30 கோடி மக்கள் இம் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உலக அளவில் இரண்டாம் மொழியாகப் பேசும் மொழியில் அதிகப்படியான எண்ணிக்கையினரைக் கொண்டுள்ளது இம்மொழி. இதைச் செய்தி பரிமாற்றத்திற்கு அதிகப்படியானோர் பயன்படுத்தி வருகின்றனர். மூன்றாம் இடத்தில் இசுப்பெயின் மொழி இருக்கிறது. 22.5 கோடி மக்கள் தாய்மொழியாக இதனைக் கொண்டுள்ளனர். இம்மொழி பேசுவோர் ஐரோப்பா, தென் அமெரிக்கா ஆகிய இடங்களில் அதிகமாக உள்ளனர். இந்த மொழியைப் பேசுவோர் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வருகிறது. உருசிய நாட்டில் 18.4 கோடி மக்கள் உருசிய மொழியைப் பேசிவருகின்றனர். இது உலகத்துப் பெரும் மொழிகளுள் ஒன்றாக இருந்து வருகிறது. சற்றொப்ப 12 மில்லியன் மக்கள் அரபிமொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். ஐரோப்பாவில் 10 கோடி மக்கள் செருமன் மொழியைப் பேசுகின்றனர். பிரான்சு, ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, வட அமெரிக்க நாடுகளில் பிரெஞ்சு மொழி 7.5 கோடி மக்களால் பேசப்படுகிறது. ஞால முதன் மொழியாம் நம்தமிழ் 7 கோடித் தமிழர்களால் பேசப்படுகிறது.

- ஆல்

வரலாற்றுப் பின்னணிகள் உண்டு. முன்பு நாம் குறிப்பிட்டது போல் வரலாற்றை அறிவதற்கான முயற்சியில் சிறிது சிறிதாக இருட்டிலிருந்து வெளிச்சத்தை நோக்கி முன்னேறினர். இந்த வெளிச்சத்தைப் பெறுவதற்குப் பேசுகின்ற வரலாற்றுக் கருப் பொருட்களான மனிதர்களின் நினைவிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் பல்வேறு வடிவங்கள் பதியப்பட்டுள்ளவையான இலக்கியங்கள், தொன் மங்கள் என்பவற்றோடு பழங்கால அடையாளங்கள், தொல் பொருள்கள், அகழாய்வுகள், கல் வெட்டுகள், செப்பேடுகள், மக்களிடையில் இடம்பெற்றுள்ள மரபுகள், பழக்க வழக்கங்கள் என்று அவற்றின் வடிவங்களும் வகைகளும் எண்ணற்றவையாயிருந்தன. ஆனால் அவற்றை ஆய்ந்து பொருள் கொள்வதில், நாம் மேலே குறிப்பிட்டது போல், அவர்கள் அறிந்தும் அறியாமலும் தங்களைப் பெருமைப்படுத்தும் நோக்கமும் புகுந்து கொண்டது. அவர்கள் தொடங்கி வைத்த பணியை, அவர்கள் கையாண்ட உத்திகளுடன் அவர் களால் அடிமைப்படுத்தப்பட்ட மக்களும் தங்கள் சொந்த வரலாற்று வரைவுத் தொடர்பாகக் கையாளத் தொடங்கினர். இந்த நிகழ்முறை தொடர்ந்தால் தங்களை உயர்த்திக் காட்டியிருக்கும் நிலைமை மாறிவிடும் என்ற அச்சம் ஐரோப்பியருக்கு உருவாகியிருந்த நிலையில் உலகின் மேலுள்ள மேலாண்மை ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குப் பெயர்ந்தது. அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்களுக்கென்று தனியாகச் சொந்த வரலாறு கிடையாது. அவர்களுடைய குடியேற்ற வரலாறு எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் பெருமைப்படுவதாக இல்லை: அவர்கள், பேணிவரும் உழைப்பும் பண்பாடும் தங்கள் தாய்மண்ணாகிய இங்கிலாந்தின் பிடியிலிருந்து தங்களை முழுமையாக விடுவித்துக் கொண்டதுடன் பிறநாடுகள் கடைப்பிடிக்கத்தக்க ஒரு கூட்டாட்சியைப் பரந்த ஒரு நிலப்பரப்பின் மீது நிறுவியதையும், அந்த நாட்டின் வளங்களை நன்கு பயன் படுத்தியும் புதுப்புது பொருளியல் அரசியல் உத்திகளைப் பயன் படுத்தித் தங்களை எவரும் புறங்காண முடியாத ஆற்றலாக வளர்ந்ததும் மரபுகள் என்பனவற்றை உடைத்தெறிந்து அனைத்துத் துறைகளையும் இடைவிடாமல் புதுப்பித்து வரும் அவர்களது புதுமை நாட்டமும் அவர்களது சிறப்புகள்.

இந்தப் பின்னணியில் தங்கள் மேலாண்மைக்குள் அடங்கிய ஏழை நாடு வரலாற்று உணர்வு வளர்வதையோ வரலாற்று வரைவு முழுமை பெறுவதையோ அவர்கள் விரும்பவில்லை. அதனால் மிகப் பழைமை வாய்ந்த வரலாறுகளைக் கொண்ட ஏழை நாடுகளின் வரலாற்றுக் கருப்பொருட்களான தொன்மங்கள், இலக்கியங்கள், செவிவழிச் செய்திகள், மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்ற அனைத்தையும் வரலாற்றுப் பருப்பொருள் என்ற வகையில் கொச்சைப்படுத்தத் தலைப்பட்டனர். மக்களிடம் வழங்கிவரும் கதைப் பாடல்களில் நிகழ்த்துவோனின் பங்கு என்ற ஒன்றுக்கு அதற்கு உண்மையில் உள்ள ஆற்றாமையை விட அளவுக்கு மீறிய முதன்மையைக் கொடுத்து, இக்கதைப் பாடல்கள் வரலாற்றுக் கருப்பொருட்கள் என்ற வகையில் நம்பத்தகாதவை என்று நிறுவ முயல்கின்றனர். இலக்கியங்களிலுள்ள கதைகளைக் குறிப்பிட்ட 32 துணுக்குகளாகப் பிரித்து அத் துணுக்குகளின் வரிசைகள்தாம் அனைத்து இலக்கியங்களி லுள்ள கதையும் என்று நிறுவ முயல்கின்றன. ஆனால் இவர்களது இந்த உத்தி தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்துக்கும் பொருந்தி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிறுதெய்வங்களையும் அவற்றை வழிபடும் மக்களையும் தொட்டுவரும் வரலாற்றிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்புவதற்காகவே "விளிம்பு மக்களின் பண்பாடு" என்ற ஒன்றை உருவாக்கி அவற்றைக் காட்சிப் பொருளாக்கி வைத்துள்ளனர். மக்களிடையில் தொழில் - வேளாண்மை தொடர்பான நம்பிக்கைகளையும் அவற்றில் கடைப்பிடிக்கப்படும் பொருள்புரியாத மரபுகளையும் நாம் தடம்பிடியாதிருப்பதற்காகவே மந்திரச் சடங்குகள், வளமைச் சடங்குகள் என்று மொட்டையாகப் பெயர் சூட்டி நம்மைத் திசை திருப்புகிறார்கள். மொழியியலில் ஒப்பியன்

மொழியியலும் வரலாற்று மொழியியலும் எழுத்தும் இலக்கணமும் வாய்க்கப்பட்ட மொழிகளுக்குரியவை. அவை இல்லாத எண்ணற்ற மொழிகளுக்கு எழுத்தும் இலக்கணமும் அமைப்பதற்குப் பயன்படுவது வண்ணனை மொழியியல். வண்ணனை மொழியியலைக் கையாண்டு ஒரு மொழிக்கு எழுத்தும் இலக்கணமும் வகுத்த பின் அவற்றின் மீது நின்று கொண்டு அம்மொழி யின் ஒப்பியன் மொழியியல்பையும் வரலாற்றையும் வரை யறுக்க முடியும். “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே” என்ற தொல்காப்பிய நூற்பா ஒப்பியன் மொழியியலுக்கும் அதிலிருந்து உருவாகும் வரலாற்று மொழியியலுக்கும் அடித்தளமாக விளங்கும் சொற்பிறப்பியலை நோக்கி நம்மை நிறுத்து கிறது. அதே நேரத்தில் எல்லாச் சொல்லும் இடுகுறியே எனும் நன்னூல் வாய்பாடு அன்றைய காலக் கட்டத்தில் தமிழக அரசியல் குமுகியல் சூழல்களில் தமிழுக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சுட்டி நிற்கிறது, ஏனென்றால் இந்த வாய்பாடு வண்ணனை மொழியியலின் அடிப்படைக் கோட்பாடாகும். சோவியத் நாட்டிலும் பிறநாடுகளிலும் வழங்கும் எழுத்தும் இலக்கணமும் இல்லா எண்ணற்ற மொழிகளுக்கு அவற்றை வகுத்துத் தரு வதற்கு இருபதாம் நூற்றாண்டில் மறுபிறவி எடுத்தது வண்ணனை மொழியியல்; அதை அப்படியே தமிழுக்கும் கையாள வேண்டு மென்கின்றனர் நம்மவரில் சிலர்.

இவற்றோடு இருத்தலியம், அமைப் பியம், இற்றையியம் (நவீனத்துவம்) பின் இற்றையியம் போன்ற புதிய கோட்பாடுகளும் வரலாற்றுக் கருப்பொருளாகத் தக்க தரவுகளின் பயன் பாட்டைத் தடுக்கும் முயற்சிகளாக உள்ளன. இந்த உண்மைகளைப் புரியாமலும், புரிந்தும் மறைத்தும் “கற்றறிந்த” பல “அறிஞர்கள்” களமாடுகின்றனர். இவர்களில் பலர் வல்லரசு கள் தரும் பணத்துக்காகச் செயற்படும் எளிதில் விலையாகும் “அறிஞர்கள்”. சிலர் இப்புதிய கருத்துகள் உண்மையான அறிவியல் அணுக லின் உத்திகள் என்று நம்பி “உதவி”களை ஏற்றுச் செயற்படுவோர். பெரும்பாலோர் தாம் அவ்வப்பொழுது, அந்த நொடிவரையுள்ள அறிவியல் செய்திகளை விரல் நுனியில் வைத்துள்ளோம் என்று காட்டிப் பெருமை பாராட்டிக் கொள்வதற்காகவே அக்கருத்து களைப் பரப்புவோராகச் செயற்படுகின்றனர். தமிழ் மீதும் தமிழகம் மீதும் தமிழக வரலாற் றின் மீதும் உண்மையான பற்றும் ஆர்வமும் கொண்ட பலர் இந்தக் கருத்துகளின் நோக்கத் தையும் விளைவுகளையும் புரிந்து கொள்ளா மல் சிந்திக்க மறந்தவர் களாய், தம்மாலும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க முடியும் என்ற தன்னம்பிக்கை யற்றவர்களாய்த் தமக்குச் சொல்லப்பட்ட அல்லது இப்போது புழக்கத்திலிருக்கும் கருத்துகளில் தவறு உள்ளது என்று உணர்ந்தாலும் அவற்றை எதிர்த்துப் புதிய ஒரு கருத்தை எடுத்து முன் வைக்கும் சிந்தனைத் துணிவும் நெஞ்சத் துணிவும் அற்று இருக்கின்றனர். நம்மிடம் அளவுக்கு மிஞ்சிய சிந்தனைச் சோம்பல் உள்ளது: குமரிக்கண்டக் கோட்பாட்டை நிலை நிறுத்த நாம் கையாளும் கருப்பொருட் களைப் பற்றி இவர்கள் கூறும் திறனாய்வு களை நாம் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

இனி, பாவாணரின் முயற்சிகளை, வெறும் சொல்லாய்வை மட்டும் வைத்துக் கொண்டு குமரிக்கண்ட வரலாற்றை எழுதிய தாகக் கூறுகின்றனர். இது உண்மையல்ல. ஏற்கனவே இருந்த குமரிக்கண்டக் கோட் பாட்டுக்கு மொழியியலில் சான்றுகள் காட்டி வலுச் சேர்த்தார் என்பதுதான் உண்மை. ஆனால் இவ்வாறு உண்மைக்குப் புறம்பான காரணங்களைக் கூறி மறுக்கும் “அறிஞர்கள்” சொல் ஒற்றுமை தவிர வேறெதுவும் இல்லா மல் மாக்சுமுல்லர் வகுத்த ஆரிய “இன”க் கோட்பாட்டைத் தலைமேல் வைத்துத் தாங்கள் கொண்டாடு வதை மறந்து விட்டனர். ஒரேயொரு அகழ்வாய்வுக்களமோ வேறு எந்தவகைப் பருப்பொருள் சான்றோ இன்றி வெறும் சொல் ஆய்வு அடிப்படையில் இன்று நின்றுகொண்டிருக்கும் வரலாற்று மாயக் கோட்பாடு ஆரிய இனக் கோட்பாடுதான். அத்துடன் மொழியடிப்படையில் மாக்சு

முல்லர் காட்டிய உறவுகள் தமிழ் மொழியின் வெளிச்சத்தில் பார்க்கும் போது பொய்யுறவு களாகிப் போனதை எல்லாம் அறிந்த இந்த "அறிஞர்கள்" அறியார்கள்.

ஓமரின் இலியட்டுக் காப்பியத்திலுள்ள செய்திகள் மீது நம்பிக்கை வைத்த ஒரு செருமானியர் தானே பொருள் திரட்டித் தன் சொந்த முயற்சியால் நண்ணிலக் கடலை ஆய்ந்து பண்டைய கிரீட் தீவையும் அதில் வளர்ச்சியடைந்திருந்த நாகரிக மேம்பாட்டையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். அதாவது முதலில் இருந்த இலக்கியத் தடயங்களையெல்லாம் ஆய்வுக்குட்படுத்தி இறுதியில் தான் அவர் கடலகழாய்வில் இறங்கினார். அதைப் போல் குமரிக் கண்டத்தின் நிலக் கிடக்கை உள்ளிட்ட அனைத்துச் செய்திகளையும் இலக்கியங்கள் தொன் மங்கள் முதலிய மூலங்களிலிருந்து திரட்டி ஒரு சட்டத்தை வரைந்து விட்டு இறுதியில் தான் கடலகழாய்வில் ஈடுபட வேண்டும்.

உலகிலுள்ள பழம்பெரும் நாகரிகங்களில் மட்டுமல்ல, அமைதிவாரியில் சிதறிக் கிடக்கும் மனிதர் வாழும் சின்னஞ்சிறு தீவுகளில் கூட ஏராளமான தொன்மக் கதைகள் உள்ளன. ஆனால் உலகின் பழம் பெரும் நாகரிகமென்று நம்மால் பெருமை பொங்கக் கூறப்படும் தமிழ் நாகரிகத்துக்கு மட்டும் குறிப்பிடத்தக்க தொன்மப் பதிவுகள் இல்லை. கழக இலக்கியங்களில் அடியும் முடியும் இன்றித் துணுக்குகளாகக் கிடக்கும் சில தொன்மச் சிதறல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் காணப்படும் சில திட்டவட்டமான தொன்மச் செய்திகளையும் தவிர, தமிழில் வேறெதுவும் இல்லை. அதே நேரத்தில் குமரிக்கண்டம் பற்றித் தமிழில் உள்ள செய்திகளை விட விரிவான செய்திகள் மச்சபுராணம், வாயு புராணம், வால்மீகி இராமாயணம் போன்ற சமற்கிருத நூல்களில் உள்ளன. தொல் காப்பியத்தில், ஐந்நிலங்களில் நெய்தல் நிலத் தெய்வமாகிய வருணனும் மருதநிலத் தெய்வ மான இந்திரனும் விரிவாகப் பேசப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் சோழர்களுக்கும் இந்திரனுக்கும் உள்ள நெருக்கமான உறவும் பாண்டியர்களுக்கும் அவனுக்கும் உள்ள பகைமையும் கூறப்பட்டுள்ளன. சேரனும் அவனது வழியில் வந்த அதியனும் இந்திரனிடமிருந்து கரும்பைப் பெற்று வந்து தம் நாட்டில் பயிரிட்டனர் என்ற செய்தி கழக இலக்கியங்களில் பதிவாகியுள்ளது. சேரன் நெல்லையும் கொண்டு வந்தது தெரி கிறது. இந்தக் கரும்பும் நெல்லும் தமிழகத்துக் குரிய வகைக் கரும்பிலிருந்தும் நெல்லிலிருந்தும் வேறுபட்டதாக இருந்திருக்கக்கூடும். கரும்பு மிகுதியாக விளையும், நெல்லின் மிகுதியால் சாலித்தீவு என அழைக்கப்படும் சாவகம், சுமத்திராத் தீவுகளில் ஒன்றில்தான் இந்திரன் வாழ்ந்திருக்க வேண்டுமென்று பாவாணர் கூறுகிறார். அங்குதான் இந்திரனின் ஊர்தியாகக் கூறப்படும் வெள்ளை யானை வாழ்கிறது என்ற கூடுதல் சான்றையும் அவர் தருகிறார். அப்படியானால் இந்திரனைப் பற்றி விரிவாகக் கூறும் வேதங்களுக்கும் சமற்கிருத இலக்கியங்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள உறவு யாது? வேத மொழி, சமற்கிருதம் ஆகியவற்றுக்கும் தமிழுக்கும் உள்ள உறவு யாது? இக் கேள்விகளுக்கு நாம் விடை கண்டேயாக வேண்டும். பாவாணர் வேர்ச் சொல் ஆய்வு மூலம் 20 நூற்றுமேனி சமற் கிருதச் சொற்கள் தமிழ் வேர்களைக் கொண்டவை என்று கூறியுள்ளார். பாவாணர் வழியில் சொல்லாய்ந்த புலவர் இளங்குமரன் போன்றோர், பாவாணர் சமற்கிருதச் சொற்கள் என்று விலக்கிய பல சொற்களைத் தமிழ்ச் சொற்கள் என்று நிறுவியுள்ளனர். வடக்கு எனப் பொருள்படும் ஊசி எனும் சொல் கப்பலில் திசை காட்டப் பயன்படும் காந்த ஊசி காட்டும் வடக்குத் திசைக்கு வந்துள்ளது தெளிவு. கழகப் பாடல்களில் ஊசி எனும் சொல் கையாளப் பட்டுள்ள பாடல்கள் வானியல் செய்திகளைக் கூறுபவை என்பது குறிப்பிடத்தக்கது. அதுபோல் நடு என்பதைக் குறிக்கும் அரை எனும் பெயர்ச்சொல் வினைச் சொல்லாகும் போது அரைத்தல் என்ற செயலைக் குறிப்பிடுகிறது. அரைத்தல் என்பதற்குத் தமிழிலுள்ள வேறு சொற்கள் மத்தித்தல், மசித்தல் என்பவையாகும். எனவே நடு என்பது

மத்தி என்ற சமற்கிருதச் சொல்லாகியுள்ளது. மசித்தல் என்ற சொல் மெசோ எனும் கிரேக்கச் சொல்லாகியுள்ளது. இவ்வாறு எண்ணற்ற சமற்கிருதச் சொற்கள் தமிழி லிருந்து உருவாக்கப்பட்டுள்ளன. இந்த உத்தி ஒருசொல் பல்பொருள் என்பதாகும். இதை ஆங்கிலத்தில் Homophone என்பர். சொந்தம் என்று பொருட்படும் சொ-சொம் என்ற சொல்லி லிருந்து சுயம் என்ற சொல்லும் சு முன்னொட் டுள்ள எண்ணற்ற சமற்கிருதச் சொற்களும் உருவாக்கப்பட்டுள்ளன. நற்றாய், நல்லெண் ணெய் போன்ற சொற்களில் வரும் நல்ல என்ற சொல் சொந்தமான, முதலாவதான என்ற பொருள் கொண்டது. எனவே சொந்தம் எனும் பொருட்படும் சு எனும் முன்னொட்டை நல்ல எனும் பொருளில் கொண்டுள்ள சமற்கிருதச் சொற்களும் பல உள்ளன. சதுரம் □, சட்டம் □, அட்டம் □ என்ற வடிவங்களில் வரும் கோடுகளின் எண்ணிக்கையை வைத்து நான்கு, ஆறு, எட்டு ஆகிய சமற்கிருத எண்களின் பெயர்கள் பெறப்பட்டுள்ளன. இவையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது சமற்கிருதம் ஒரு முழுச் செயற்கை மொழி என்பது மட்டுமல்ல; முற்றிலும் தமிழிலிருந்து உருவாக்கப்பட்டது என்பதும் புரியும். எனவே தமிழர்களின் தொல் வரலாற்றைத் தமிழர்களே சமற்கிருதத்தில் எழுதி வைத்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

மக்களிடையிலிருந்து உருவான வாணி கர்களும் தொழில்நுட்பங்களும் தொடங்கி வைத்த குழூஉக் குறிகள் பின்னர் ஒட்டுண்ணி களான பூசாரிகளிடையிலும் ஆளும் வகுப்பு களிடையிலும் வழிபாட்டுக்கும் ஆட்சிக்கும் ஆன மொழியாக வளர்ச்சி பெற்றதே சமற்கிருத மொழியின் தோற்றம் என்று கொள்ள வேண்டும். பிறர் அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக வாய்வழியாக, எழுதாக்கிளவியாக நிலவிவந்த செய்திகள் நிலைத்து நிற்பதற்காக, பொருள் புரியா விடினும் ஓசை பிசகாமல் ஓதல் தான் அத்ய யணம் எனும் பூசகர்களின் அல்லது வேதி யர்களின் பணி.

சமற்கிருத இலக்கியங்களுக்கும், தமிழ் இலக்கியப் பதிவுகளுக்கும் உள்ள ஒரு தொடர்பைப் பார்ப்போம்.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

உலகப் பொது ஆட்சி

ஒன்றிய நாட்டினங்களிலும் (UN) பல குறைகளும் பிரிவினையும் இருத்தலாலும், போரையும் மக்கள் பெருக்கத்தையும் தடுக்கும் வழியின்மையாலும், உலக முழுதும் ஒரே ஆட்சி ஏற்படல் இன்றியமையாததாம்.

மக்கள் எல்லாரும் ஓரினம் என்றும் உலக முழுதும் ஒரு மாபெருங் குடும்பம் என்றும் ஒப்புக்கொண்டு ஒவ்வொருவரும் தம்மை உலகக் குடிமகனார் (World-Citizen) என்று ஒத்த உடன் பிறப்பாகக் கருதி ஒழுகுதல் வேண்டும்.

நியூயார்க்கையே அரசிருக்கையாகக் கொண்டு ஒன்றிய நாட்டினங்கள் அமைப் பகத்தை உலகாளுமன்றமாக (International Parliament) மாற்றி, எல்லா நாடுகளையும் அதன் உறுப்பாக்குதல் வேண்டும்.

நாடாட்சிகளில் காவல் துறையின்றிப் படைத்துறை இராது. போர் அடியோடு ஒழிக்கப்படும். உலக முழுதும் ஒரே காசுத்திட்டமும் ஓரியல் அளவை வகைகளும் ஏற்படும். இனவெறி, குலவெறி, மதவெறி, மொழிவெறி, நாட்டுவெறி முதலிய எல்லா வெறிகளும் அடியோடு ஒழிக்கப்படும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று உலக முழுவதையும் ஒரே நாடாகக் கொள்ளுதல் வேண்டும்.

- பாவாணர்

என்பது புறநானூற்றின் முதற்பாடலின் முகாமையான பகுதி. உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. இவர் முதற்கழகத்தைச் சேர்ந்தவர் என்று குறிக்கப் பட்டுள்ளது. எனவே, உதியஞ் சேரலாதனும் முதற்கழகக் காலத்தைச் சேர்ந்தவன் என்பது பெறப்படுகிறது.

பாண்டவர்களும் கவுரவர்களும் போர் செய்த களத்தில் இரு பக்கத்துப் படை களுக்கும் உதியஞ் சேரலாதன் சோறிட்டான் என்று இதுவரை இப்பாடல் வரிகளுக்குப் பொருள் கூறப்பட்டு வருகிறது. இருபெரும் படைகள் போரிடும்போது அவற்றுக்கு உணவு வழங்குவதற்கு அப்படைகளை நடத்துவோரே ஏற்பாடு செய்வதுதான் வழக்கம். அப்படி யிருக்க, கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் (முதற்கழகக் காலத்தில்) வாழ்ந்த ஓர் அரசன் இமயத்தின் அடிவாரத்திலிருக்கும் போர்க் களத்துக்குச் சென்று போரிடும் படைகளுக்குச் சோறிட வேண்டிய தேவை என்ன? இன்றைய சேரநாட்டில் அவன் இருந்ததாகக் கொண் டாலும் இதற்கு விடை கூறுவது கடினம். ஆனால் பாடலைக் கவனமாகப் படித்தால் கிடைக்கும் பொருள் வேறாகும். ஐவராகிய பாண்டவரைப் பகைத்துப் போர்க்களத்தில் இறந்தொழிந்த நூற்றுவருக்கும் பெருஞ்சோறு வழங்கினான் என்பதுதான் இவ்வரிகளின் பொருள். அதாவது, போரில் இறந்தவர்களுக் கான நீத்தார் கடன்பற்றி இப்பாடல் குறிக்கிறது. கவுரவர்களுக்கு நீத்தார் கடன் வழங்குவ தாயின் சேரனுக்கும் கவுரவர்களுக்கும் உள்ள உறவு யாது? அவர்கள் அவனது முன்னோர்கள் என்பது தவிர வேறென்ன இருக்க முடியும்? மாமூலனார் தன் அகத்துறைப் பாடலொன்றில் உதியஞ்சேரலாதன் தன் முன்னோர்களுக்குப் பெருஞ்சோறு கொடுத்த நிகழ்ச்சியை ஓர் உவமையாகக் கையாண்டுள்ளார். இவ்வாறு சேரமன்னர் களின் முன்னோர்களைப் பற்றிய ஒரு தடயம் கழக இலக்கியங்களில் புதைந்து கிடக்கிறது. இதைத் தடம்பிடித்துச் சென்றால் சமற்கிருத இலக்கியமாகிய மாபாரதத்தின் கதையின் மூலக்கருவினுள் நம்மைக் கொண்டு சேர்க்கிறது.

சமற்கிருத இலக்கியங்களில் பாரதம் என்ற நிலப்பரப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தடம்பிடித்தால் அது ஒரு கண்டம் என்றும் அது நான்கு பகுதிகளாக ஓரிடத்திலும் ஒன்பது பகுதிகளாக இன்னோ ரிடத்திலும் கூறப்பட்டுள்ளது. உலக நிலப் பரப்பு 7 தீவுகளாகவும் 9 கண்டங்களாகவும் குறிக்கப்பட்டுள்ளது. பாரதம் எனப்படும் நாவலந்தீவு நிலநடுக்கோட்டை ஒட்டி வடக் கிலும் தெற்கிலும் பரந்து கிடந்ததாகக் கூறப் படுகிறது. அங்கு ஓடிய ஆறுகள், கிடந்த மலைகளின் பெயர்கள் அனைத்தும் இன்று இந்தியாவில் உள்ளவற்றின் அதே பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளன. கங்கை ஆற்றின் பெயர் அவற்றில் இல்லை என்பது குறிப் பிடத்தக்கது. பல ஊர்களின் பெயர்களும் அவ்வாறே. இன்று குமரி மாக்கடல் இருக்கும் பகுதியில் இருந்த கடல் மட்டத்தைவிட உயர்ந்த ஒரு மட்டத்தில் பிற கடல்கள் இருந்ததாகவும் அவற்றுக்கிடை யிலிருந்த நிலத்தில் ஏற்பட்ட ஓர் உடைப்பால் அல்லது தோண்டப்பட்ட ஒரு வாய்க் காலால் அக்கடலைச் சுற்றியிருந்த நிலப்பகுதி மூழ்கிய தாகவும் பதிவுகள் உள்ளன. விண்ணிலிருந்து வீழ்ந்த ஒரு பொருளால் ஒரு பெரும் பள்ளம் தோன்றியதாகவும் குறிக்கப் பட்டுள்ளது. கதிரவனின் தேர்ச் சக்கரத்தால் அப்பள்ளம் ஏற்பட்டதாகத் தொன்ம வடிவில் இந்நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

முதல் கழகக் காலத்தில் பாண்டியர் களின் தலைநகரான தென்மதுரைக்கு முன்பு இராவணனின் தலைநகரான இலங்காபுரி தமிழர்களின் தலைநகராக இருந்திருக்கிறது. (இராவணனுக்கு 29 தலைமுறைகளுக்குப் பிற்பட்டவன் இராமன் என்பது சமற்கிருத இலக்கியங்கள் தரும் செய்தி. இராவணனும் இராமனும் வரலாற்று மனிதர்களாக இருக்க லாமாயினும் அவர்களுக்குள் போர் நிகழ்ந்த தாகக் கூறப்படுவது கற்பனை என்று தெரி கிறது) இலங்காபுரி 23.5° தெற்கு நேர் வரையில் (அட்சரேகையில்) அதாவது சுறவ (மகர)த் திருப்பத்தில் இருந்திருக்கிறது. இதன் வழியே ஓடிய நிரைவரை (தீர்க்க ரேகை) இலங்கை - உச்சையினி மை வரை (Meridian) என

அழைக்கப்பட்டுள்ளது என்பது பஞ்சாங் கங்கள் எனும் ஐந்திறங்கள் தரும் செய்தி யாகும். இன்று கிரீன்வீச்சு மைவரையிலிருந்து இடங் களையும் அவற்றின் நேரங்களையும் கணக் கிடுவது போல் இலங்காபுரி - உச்சையினி மை வரையிலிருந்து தமிழர்கள் கணக்கிட் டிருப்பது அவற்றிலிருந்து தெரிகிறது. உச்சை யினியும் ஏறக்குறைய 23.5 வடக்கு நேர் வரையில் அதாவது கடகத் திருப்பத்தில் உள்ளது. கிரீன்வீச்சு மைவரையிலிருந்து கணக்கிட்டால் உச்சையினி 75° கிழக்கில் உள்ளது. ஈழத்தீவு ஆகிய இன்றைய இலங்கை அதிலிருந்து 4° கிழக்கில், அதாவது 79° கிழக்கு நிரை வரையில் இருக்கிறது. எனவே ஐந் திறங்கள் கூறும் இலங்காபுரி வேறு என்பது உறுதியாகிறது. இது தவிர நிரட்சலங்கை என்று ஒரு புள்ளியையும் ஐந்திறங்கள் கூறுகின்றன. அக்கமில்லாத, அதாவது 0° நேர்வரையிலுள்ள இலங்கை என்பது இதன் பொருள். 0° நேர்வரை என்பது நிலநடுக் கோடு தான். இவ்வாறு குறைந்தது 3 இலங்கைகள் இருக்கின்றன. உச்சையினி வழியாக ஓடும் நெடுக்குக் கோடு இன்று டியூகோ கார்சியா தீவு, இலக்கத் தீவுகள் ஆகியவற்றின் அடியில் தென்வடக்காகவும் பல பக்கவாட்டுக் கிளை களுடனும் கிடக்கும் ஒரு கடலடி மலைத் தொடராகக் கிடக்கிறது. நிலநடுக்கோட் டிலும் மகரக் கோட்டிலும் இரு கிளை மலைகள் செல்கின்றன. இதனை இலங்கை திரிகூட மலைச்சரிவில் அமைந்துள்ளது என்று சமற்கிருத நூல்கள் குறிக்கின்றன.

கி.மு.10,000 ஆண்டளவில் இறுதிப் பனி உருகுதல் முடிவுற்றதாக நில இயங்கிய லாளர்கள் கூறுகின்றனர். இன்றைய கரிம முறைக் காலக்கணிப்பு 30,000 ஆண்டுகள் வரை துல்லியமாக இருப்பதாகக் கூறப்படு வதால் இதை நாம் நம்பலாம். இந்தப் பனி உருகுதலின் போது 500 அடி வரை கடல் மட்டம் உயர்ந்தது என்றும் கூறுகின்றனர். உலகத் திணைப் படத்தைப் பார்த்தால் இலங்கை - உச்சையினி நேர்க்கோட்டில் கிடக்கும் கடலடி மலைத் தொடர் 600 அடி ஆழத்துக்குட்பட்டது என்பது தெரியவரும். இந்த மலைத் தொடர் மட்டுமின்றி உலகின் பிற பகுதிகளிலும், குறிப்பாகப் புவிப்பந்தின் தென் அரைக் கோளத்தில் கடல் நடுவிலும் கண்டங்களை ஒட்டியும் இதே ஆழத்துக் குட்பட்ட கடலடி நிலப்பரப்புகளைக் காணலாம். சமற்கிருத இலக்கியங்களில் இந்த நிலப்பரப்புகளைப் பற்றியும் அங்கு வாழ்ந்த மக்களைப் பற்றியும் அவர்களில் சிலரது வரலாற்றுச் செய்திகள் பற்றியும் தொன்மை வடிவிலான செய்திகள் உள்ளன.

கடையெழு வள்ளல்கள் பற்றிக் கழக இலக்கியங்கள் விரிவான செய்திகளைத் தருகின்றன. ஆனால் தலையெழு, இடை யெழு வள்ளல்களைப் பற்றி நாம் பொது வாகச் சிந்திப்பதில்லை. கடையெழு வள்ளல்கள் தமிழர்களாக இருப்பதால் தலையெழு, இடையெழு வள்ளல்களும், தமிழர்களாகத் தான் இருக்க வேண்டும். கவுரவர் பக்கத்தில் நின்று போர் செய்த அக்குரன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். அவனது வள்ளன்மை யுடன் உதியஞ் சேரலனது வள்ளன்மையை ஒப்பிட்டுப் பேசுகிறது பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்று. கவுரவர் பக்கம் நின்று போரிட்ட கர்ணன் சிசுபாலன் ஆகியோரும் இடையெழு வள்ளல்கள் பட்டியலில் இடம் பெற்றுள் ளோரே. இந்த உண்மை கவுரவர்களுக்கும் சேரர்களுக்கும் உள்ள உறவை உறுதிப் படுத்துவதுடன் பிற வள்ளல்களையும் நம்மால் இனம் காணமுடியும் என்ற நம்பிக் கையை ஏற்படுத்துகிறது. இந்த இரு பட்டியல்களிலு முள்ள வள்ளல்களில் பெரும்பாலோர் திருமாலின் தோற்றரவுகளால் கொல்லப்பட்ட வர்கள் என்பது இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி.

இராவணனின் இலங்காபுரியில் தமிழர்களின் தலைநகரம் இருந்த காலத்தில் தான் சுறவம் (மகரம்) தொடக்கமாக உள்ள ஆண்டு முறை உருவானது. பின்னர் நிலநடுக் கோட்டிலிருந்த தென்மதுரைக்குத் தலை நகரம் மாறியபோது அதற்கு நேர் மேலே கதிரவன் வரும் மார்ச்சு 21 அன்று மே மாதத்தில் ஆண்டுப் பிறப்பு வைக்கப்பட்டது. மதுரை மூழ்கி கபாடபுரம் தலைநகரான போது அதற்கு நேர் மேலே கதிரவன் வரும்

நாளான ஏப்பிரல் 14ஆம் நாளுக்கு ஆண்டுப் பிறப்பு மாறியது. மாதத்தின் பெயரும் சித்திரை என்றானது. இந்த மாற்றத்தினால் திசம்பர் 21இல் வரவேண்டிய மகரப்பிறப்பு சனவரி 14இல் தை மாதப் பிறப்பாக மாறியது. இந்த மாதப்பிறப்பே சூலியர் சீசர் உரோமர்களுக்கு வகுத்துக் கொடுத்த மாதப் பிறப்பாகும். கிரிகோரி என்ற போப்பரசர் செய்த திருத்தத் தால்தான் 14 நாட்கள் முன்கூட்டி கிறித்துவ மாதப்பிறப்பு வைக்கப்பட்டது. சூலியர் சீசர் தன் ஆண்டு முறையை எகிப்தி யரிடமிருந்து பெற்றார். எனவே எகிப்தியர்கள் இரண்டாம் கழகக் காலத்தில்தான் இங்கிருந்து குடி பெயர்ந்தனர் என்று தெரிகிறது.

சமற்கிருத இலக்கியங்களிலுள்ள செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கு நாம் உடனடியாகக் கற்க வேண்டியதில்லை. அந்நூல் களிலுள்ள செய்திகளுடன் தமிழ் நூல்களி லுள்ள செய்திகளையும் இரு பெரும் தமிழறி ஞர்கள் 20ஆம் நூற்றாண்டுத் தொடக் கத்தில் தொகுத்துத் தந்துள்ளனர். ஈழத்தைச் சேர்ந்த கதிரைவேற்பிள்ளை தொகுத்த தமிழ்மொழி அகராதியும் ஆ. சிங்காரவேலு முதலியார் தொகுத்தளித்துள்ள கலைக் களஞ்சியமாகிய அபிதான சிந்தாமணியும் இச்செய்திகளைத் தருகின்றன. ஒரே பெயர் கொண்ட மனிதர்கள் இடங்களைப் பற்றிய செய்திகளை ஒன்றாகத் தொகுத்துத் தந்திருப்பதில் தொன்மக் கற்பனை கள் போன்ற குறைபாடுகள் இருந்தாலும் இதைப் பிரித்து நாம் உரிய வகையில் முயன்றால் செய்திகளை வரிசைப் படுத்த முடியும்.

குமரிக்கண்டத் தமிழர்களின் அறி வியல், தொழில் நுட்பம், நுண்கலைகள், நிகழ்த்து கலைகள் பற்றிய செய்திகள் ஐந்திறங்களில் மட்டுமல்ல, கோயில் நடை முறைகளை விரித்துரைக்கும் ஆகம நூல்களிலும் பல்வேறு துறை சார்ந்த சமற்கிருத நூல் களிலும் புதைந்து கிடக்கின்றன. இவை அனைத்திலுமிருந்து துல்லியமான செய்திகளைத் தெரிந்து கொள் வதற்கு மூலநூல்களை நேரடியாகப் படித்துப் பொருள் தெரிந்து கொள்ளுமளவுக்கு ஒரு கட்டத்திலேனும் நாம் சமற்கிருத மொழியறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குமரிக்கண்ட ஆய்வைப் பற்றிய இந்தக் கட்டுரையை முடிக்கும் முன் 20ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் வாழ்ந்த இன்னொரு பேரறிஞரைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. தமிழ்ச் சிறுகதை மன்னன் என்று புகழப்படுகின்ற புதுமைப்பித்தனின் தந்தை யாகிய வே.சொக்கலிங்கம் பிள்ளைதான் அவர். கந்த புராணத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கி மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப் பாவில் கிடைக்கும் வரலாற்றுச் செய்திகள், தொன்மங்கள், செவிவழிச்செய்திகள், வீர வரலாறுகள் என்று அனைத்தையும் ஆய்வு செய்து The Origin of European Peoples and States என்ற நூலின் முதல் மடலத்தை 1930களில் வெளியிட்டவர். இரண்டாம் மடலத்தின் மூலப்படியும் அவர் திரட்டி வைத்திருந்த நூல்களும், திருநெல்வேலியி லிருக்கும் மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரி நூலகத்தில் உள்ளதாகத் தெரிகிறது. அவ் விரண்டாம் மடலத்தை வெளியிடுவதற்கான தொகையையும் அவர் விட்டுச் சென்றிருப்ப தாகத் தெரிகிறது. குலக்குறி எனப்படும் தோற்றக்குறியைத் தடம்பிடித்து அவர் மேற் கொண்டுள்ள அணுகலும் உழைப்பும் ஒப்பற்றவை. அவை குமரிக்கண்ட மக்களின் பரவலைத் தடம் பிடிக்கப் பேருதவியாயிருக்கும்.

இவ்வாறு கிடைக்கும் அனைத்துச் செய்திகளையும் திரட்டி வரிசைப்படுத்திய பின்பு நாம் கடலகழாய்வு பற்றிச் சிந்தித்தால் போதும்.

1964ஆம் ஆண்டு உலகப் புவியியல் ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அப்போது அமெரிக்காவும் சோவியத் நாடும் உலகக் கடல்களை எல்லாம் ஆய்வுசெய்தன. கிடைத்த தடயங்களை வைத்து எழுதப் பட்டதே சோவியத்தைச் சேர்ந்த அலெக் சாண்டர் கோந்திரத்தோவ் எழுதிய "மூவாரி களின் புதிர்கள்" என்ற நூல். அமெரிக்கர்கள் சில கட்டுரைகளை எழுதினார். அவற்றில் குமரிக்கண்டம் என்ற ஒன்று இருந்திருப்பதற் கான தடயங்கள் உள்ளதாகவும் கடலகழ் வாய்வினால் உறுதிப்பட்டாலொழிய அதை

அறுதியிட்டுக் கூறமுடியாதென்றும் கூறினர். அதனைத் தொடர்ந்து குமரி மாக்கடலை அகழாய்வு செய்ய வேண்டுமென்ற வேண்டு கோள்கள் தமிழகத்தில் எழுந்தன. ஆனால் இருபெரும் வல்லரசுகளின் நோக்கமும் குமரி மாக்கடலிலும் உலகின் பிற கடற்பரப்பு களிலும் கிடைக்கும் கனிமப் பொருட்களை இனம் காண வேண்டுமென்பதே. அத்துடன் கடலகழாய்வு என்ற பெயரில் வல்லரசுகளின் கப்பல்கள் குமரிமாக் கடற்பகுதியில் சுற்றித்திரியவும் கடலைச் சுற்றியிருக்கும் நாடுகள் மீது உளவு வேலை செய்யவும் தேவைப்பட்டால் அந்நாடு களை மிரட்டி வைக்கவும் கடலகழாய்வு என்ற சாக்குப் போக்கு பயன்படும் என்று அவை நினைத்தன. ஆனால் இந்திய அரசு அதற்கு இடம் கொடுக்க வில்லை. இன்று வல்லரசுப் போட்டியில் சோவியத்து நாடே இல்லாது போய்விட்டதும் எந்தச் சாக்குப் போக்கும் தேவையின்றியே அமெரிக்கக் கப்பல்களை எந்தக் கட்டுப்பாடுமின்றிக் குமரிமாக் கடற் பரப்பிலும் தமிழகத் துறைமுகங்களிலும் சுற்றிவர விட்டிருக்கிறது இந்திய அரசு. இந்த நிலையில் கடலகழாய்வு வேண்டுகோள் என்ற வகையில் தமிழகத்தின் கரையைத் தொடர்ந்து கிடக்கும் குமரிமாக் கடலின் கடலடியை இந்த உலக வல்லரசின் கையாளாகச் செயற்படும் ஒன்றிய நாடுகளவையின் (ஐ.நா.) கீழ்ச் செயற் படும் எந்த அமைப்பும் ஈடுபடுவது நீண்டநாள் நோக்கில் தமிழகத்துக்கு நல்லதல்ல. அத்துடன் தங்களால் அடிமை நிலையில் வைக்கப்பட் டிருக்கும் ஏழை நாடுகள் வரலாறற்றுப் போவதே நம் வல்லரசாகிய நலன்களுக்கு உகந்ததென்று செயற்படும். அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் இந்த ஆய்வை மேற் கொண்டால் நமக்கு உளவியல் வலிமையை அளிக்கும் எந்தவொரு முடிவையும் முன் வைக்கமாட்டா என்பது உறுதி. அவர்கள் வைக்கும் முடிவுகளைச் சரிபார்க்கவோ போராடி மாற்றவோ பொருளியல் - அறிவியல், அரசியல் வலிமை இன்று நமக்கு இல்லை. எனவே, நாம் இரண்டு திசைகளில் நம் ஆற்றல்களைத் திருப்ப வேண்டும். குமரிக் கண்டத்தின் அனைத்துக் கூறுகளை யும் பற்றி உலகெங்கும் திரட்டப்பட்டிருக்கும் செய்தி களிலிருந்து முடிவுகளை எய்தும் பெரும் பணியை உடனடியாகத் திட்டமிட வேண்டும். அதேநேரத்தில் குமரிமாக்கடலில் அகழ்வாய் வதற்குத் தேவையான பொருளியல் -அறிவியல் - தொழில் நுட்பவியல் - அரசியல் வலிமையை எய்துவதற்கான கடும் முயற்சியிலும் உடனடி யாக இறங்க வேண்டும். உலகில் முதன்முதலில் இன்றைய நிலையிலும்கூட மனித இனம் எய்தியிராத ஓர் உயர் நாகரிகத்தைப் படைத்துக் கடலுக்குள் காவு கொடுத்து விட்டு அதன் எச்சங்களை நம் பண்பாட்டில் சுமந்து கொண்டிருக்கும் நாம் நினைத்தால் இது கடினமான பணியல்ல. துணிந்து சிந்திப் போம்; துணிந்து செயற்படுவோம்! தாழ்வு மனப் பான்மை, தோல்வி மனப்பான்மைகளை விட்டொழிப்போம்! தன்னம்பிக்கை யையும் ஊக்கத்தையும் வளர்த்துக் கொள்வோம். பாவாணர் கடைப்பிடித்த கொள்கையில் விட்டுக் கொடுக்காத பண்பை ஒவ்வொருவரும் எய்துவோம்! பாவாணரின் கனவை நனவாக்கு வோம். வெற்றி உறுதி.

ஆறடி வளர்ந்த நல்ல ஆண்மையர் தோற்றம் விஞ்சும்
மாறனோ ஆரன் தானோ மற்றெனின் சேரர் கோனோ
வீறுடன் நீண்மே லாடை வீசுகை முழந்தாள் தோய
ஏறுபோல் நிமிர்ந்து செல்லும் இலக்குவ னாரைக் காணோம்.

செந்தமிழ்ப் புலவன் என்கோ சிறந்தவா சிரியன் என்கோ
செந்திற ஆய்வன் என்கோ செழுந்தமிழ் காத்தோன் என்கோ
இந்தியை எதிர்த்து வேலை இழந்தசெல் சிறையன் என்கோ
முந்துதொல் காப்பி யத்தை மொழிபெயர்த் தீந்தோன் என்கோ.

- பாவாணர்

தனித்தமிழைப் போற்றிடுக!

● பாவலர் அருள்செல்வத்துரை, திருவெறும்பூர்.

மோருக்கு முன்வடிவம் தயிரும் பாலும்
முத்துக்கு முன்வடிவம் இப்பி; வான
நீருக்கு முன்வடிவம் முகிலாம்; வட்ட
நிலவுக்கு முன்வடிவம் பிறையாம்; வாழைத்
தாருக்கு முன்வடிவம் அடுக்குப் பூவாம்
தமிழ்ச்சொல்லின் முன்வடிவாம் மூலச் சொல்லின்
வேருக்குள் ஆய்ந்தறிந்து வெற்றி கண்டார்
வேறெவர் நம் பாவாணர் ஒருவர் தாமே!

சூரியன் தமிழ்ச்சொல் சொலித்தலும் தமிழ்ச்சொல்
சுவடியும் நடனமும் தமிழே
ஆரியன் அறியான், மந்திரம் தமிழ்ச்சொல்
அதிகமும் பகவனும் தமிழே
பூரியும் மதமும் மாதமும் மதியும்
பொத்தகம் பொக்கசம் இவையும்
வேரினைப் பிடித்தால் தமிழெனத் தெரியும்
வேட்கபா வாணரின் தெரிவே!

எதுவெங்கே எக்கேடோ கெட்டுப் போனால்
எமக்கென்ன என்றிருந்தால் இடுப்பில் கட்டும்
புதுவேட்டி சற்றேதான் நெகிழும் போது
பொள்ளென்று தாம் உருவிக் கொண்டு மேலும்
இதுநாங்கள் உங்களுக்குத் தந்த தென்பார்
இருக்கின்றார், நாம்வாளா விருக்கின் றோமே!
எதுதான்நம் கடனென்று தெரிந்து கொள்ள
இருக்கும்பா வாணர்நூல் எல்லாம் கற்பீர்!

காசென்றால் யார்யார்க்கும் கையெ டுப்பார்,
கால்விழுந்து வணங்குதற்கும் வரிசை நிற்பார்
நீசென்றால் உன்பின்னே நானென் பாராய்
நெடுங்காலம் அடிமைகளாய் ஆகிப் போனார்
மாசென்று விலகாமல் இழிந்தோர் காலில்
மலர்தூவி வணங்குகிறார் இவரை யெல்லாம்
தூசென்று துடைத்தெறிந்து தூய்மை பேணும்
துவளாத பாவாணர் இயக்கம் தானே

தமிழ்காக்கும் பணியொன்றே தன்தோள் மேலே
தான்தூக்கித் தனியாளாய்ப் போட்டுக் கொண்ட
அமிழ்தாகச் சுவைக்கின்ற பணியாம் என்றே
அயராமல் ஒருநாளும் ஓய்வும் இன்றித்
தமிழ்நூல்கள் அடுக்கடுக்காய் இயற்றித் தந்த
தன்னேரில் லாஆய்வுக் கதிரோன் நம்மைத்
தமிழ்காக்க வழிநடத்தும் தலைவன் ஆகத்
தனித்தமிழைப் போற்றிடுக தலைமேற் கொண்டே!

நீங்காத அணியாம்

• பாவலர் சி. இறையரசன், சிதம்பரம்

பாவாணர் பைந்தமிழ்த்தாய் பண்ணுதவப் 'புதல்வர்'
பாருக்குள் தமிழன்தான் முதல்வனென்ற முதல்வர்!
காவான தமிழாய்வில் காழ்ப்புற்ற உளத்தார்!
கவின்தமிழே முதல்மொழியென் றாய்ந்துரைத்த வளத்தார்!
நோவான வடமொழியின் வல்லாண்மை கரைத்தார்!
நுண்தமிழின் வேர்ச்சொல்லைப் புதுமுறையில் உரைத்தார்!
பாவாணர் என்றாலே தனித்தமிழ்தான் சிரிக்கும்!
பழுத்தபுகழ் அவர் உருவே வடநெறியை எரிக்கும்!

தென்குமரி முதல்மாந்தன் தொட்டிலென வரைந்தார்!
திக்கெட்டும் இது, எட்டத் தோள்தட்டி விரைந்தார்!
பின்குழறும் மொழிபிறக்கும் முன்தமிழே பிறந்து,
பேருலகில் மூப்பேறிப் பிறங்குதென்றார் சிறந்து!
இன்றுலவும் உலகமொழி இயன்றபல படித்தே
எழில்வேர்ச்சொல் பல வடித்தார் எழும் உணர்வில் துடித்தே!
நின்றொளிரும் தொன்தமிழே ஆரியத்தின் அடியாய்
நெறியாய்வால் உரைத்துயர்ந்தார் நெடுமலையின் முடியாய்!

மறைமலைக்குப் பிறங்கடையாய் மொழிகாக்க எழுந்தார்!
மணித்தமிழே செல்வமென மனைவறுமை விழுந்தார்!
நிறையுலவும் தனித்தமிழில் நேரலவிக் கலந்தார்!
நீளாய்வால் ஒப்பியல்நூல் தந்துநலிந் துலந்தார்
பிறைநிலவாய் உலகத்தமிழ்க் கழகமொன்று படைத்தும்
பெருந்தமிழில் கலந்தவட பிழைதூற்றித் துடைத்தும்
நிறைமணியாய்த் தமிழ்மணியைச் செய்துயர்ந்த மணியாம்
நெடுந்தமிழ்க்குத் தேவநேயர் நீங்காத அணியாம்!

வடமொழியும் பிறமொழியும் வந்துகலந் தேறி
வளத்தமிழைச் சிதைத்தகர வழிப்பதற்குச் சீறி,
மடமொழிகள் பட்டழிய மதியாய்வால் நூறி
மங்காமல் வாழ்கின்றார் மனம்நிறைய ஏறி!
விடமொழியாம் சமற்கிருதம் விளைத்தபெருங் கேட்டை
வீழ்த்தியதே பாவாணர் தனித்தமிழின் பாட்டை!
தொடவழிக்கும் கலைனைய வடநெறியை வீழ்த்தத்
தொழும்பன்னூல் செய்தளித்தார் தொல்தமிழர் வாழ்த்த!

கரைபுரளும் வெள்ளமெனக் கருத்துமழை கொட்டி(க்)
களங்கரையின் விளக்கமெனக் காலத்தால் எட்டி;
நுரைபுரளும் நெடுமீசை நுண்தமிழ்க்காய்த் துள்ள
நோற்றதமிழ்த் தாயவளும் இவர்பிறப்பால் துள்ள!
வரைபுரளும் நெடுமேனி வண்டமிழாய் மின்ன!
வாழ்நாளைத் தமிழாய்வும் வறுமையுமே தின்னத்
தரைபுரளும் புகழ்தொட்டுப் பாவாணர் வென்றார்!
தனித்தமிழாய்த் தமிழ்த்தாயாய் எம்நெஞ்சில் நின்றார்!

தமிழ் திரவிடத்தின் தாய்

முனைவர் இரா.கு.ஆல்துரை

பாவாணரின் மொழிக் கோட்பாட்டின் முப்பெருந்தன்மைகளுள் ஒன்றான தமிழ் திரவிடத்திற்குத் தாய் என்பது ஆரியத்திற்கு மூலம், ஞால முதன் மொழி ஆகிய இரண்டிற்கும் அடிப்படையாய் அமையும் திறத்தது. சமற்கிருதத்தின் ஐந்து நிலைகளாகத் தென் திரவிடம் (வடுகு), வடதிரவிடம் (பிராகிருதம்), கீழையாரியம், வேதமொழி, சமற்கிருதம் என அவர் குறிப்பிடுவதில் முதன்மையாக அமையும் திரவிடத்திற்குத் தமிழின் தாய்மையைக் காட்டுவது அடிப்படை. ஞாலமுதன் மொழியாம் இயன்மொழியினின்று திரிந்த திரிமொழிகளை விளக்குவதற்குத் தமிழின் திரவிடத் தாய்மை அடிப்படை. ஞால முதன்மொழியை நிறுவுவதற்குப் பெருமளவில் மொழியியல் சார்ந்த செய்திகளையே நாடவேண்டியிருக்கிறது. அவ்வகையில் திரவிடத் தாய்மையை ஆராய்வது ஞால முதன்மொழித் தன்மையை உறுதிப்படுத்து வதற்கு உறுதுணையாய் அமையும்.

தமிழ் பழமையான மொழி. வளமையான மொழி, வேர்ச்சொற் களைத் தாங்கி நிற்கும் மொழி, பெருநிலப்பரப்பில் பேசப்பட்ட மொழி என்னும் நாற்பெருந்தன்மைகளின் அடிப்படையில் அது திரவிடத்திற்குத் தாயாய் விளங்கும் தன்மையை விளக்கலாம்.

காலப்பழமை

திரவிடக் குடும்ப மொழிகளுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகள் மட்டும் இலக்கிய வளமுடையன. எஞ்சியவை பேச்சு மொழியாக இருந்து வருகின்றன. பேச்சு மொழிகளாக இருப்பனவற்றின் பழமையை அறியப் பதிவு எதுவும் கிடைப்பதில்லை. இலக்கியம் அமைந்த நான்கு மொழிகளும் வெவ்வேறான கால வரலாறு களைக் கொண்டுள்ளன. இந் நான்கு மொழிகளுள் தமிழ் மிகப் பழமையான இலக்கியங்களைக் கொண்டுள்ளது. கிடைத்துள்ள இலக்கியங்களுள் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். தொல்காப்பியம் திரவிட மொழிகளில் காணப்படும் தொன்மையான நூல் என்னும் தகுதியைப் பெற்றுள்ளது. இது ஒரு இலக்கண நூலாக இருப்பதால் இதற்குமுன் பல இலக்கியங்கள் இருந்துள்ளன என்பது வெளிப்படை. அதற்குமுன் பல நூற்றாண்டுகள் பேச்சு மொழியாய்த் தமிழ் இருந்துள்ளது.

தொல்காப்பியர் காலத்தில் மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு போன்ற திரவிட மொழிகள் எதுவுமே உருவாகவில்லை. தொல்காப்பியம் குறிப்பிடும் திசைச்சொற்கள் தமிழின் கிளை வழக்குச் சொற்களே. அவை அன்று புரிந்து கொள் தன்மையினவாக இருந்தன. அக்கிளை வழக்குகள் பின்னர்த் தனித்தனி மொழிகளாக உருப்பெற்றன. (இசுரயேல் 1973 : 351-4)

"திசைச்சொல் என்பன செந்தமிழ் நிலத்து வழங்காது கொடுந்தமிழ் நிலங்களில் மட்டும் வழங்கிய திருந்திய சொற்களும் சொல் வழக்குகளுமே... முற்காலக் கொடுந்தமிழ்களே பிற்காலத் திரவிட மொழிகள் என்றறிதல் வேண்டும்" (பாவாணர் 1968 : 2,3) "இலக்கணம் நிரம்பிய சிறந்த வழக்கான தமிழ் செந்தமிழ். அது திரிந்தது கொடுந்தமிழ்" (பாவாணர் 1944 : முன். 9) "கொடுந்தமிழ்ச் சொற்கள் செந்தமிழ் நாட்டைச் சூழப் பல திசையிலும் வழங்கின மையின் திசைச் சொற்களெனப்பட்டன" (பாவாணர் 1944 : முன்.10). செந்தமிழும் கொடுந் தமிழும் சேர்ந்தது தமிழாதலால் தமிழல் திரவிட மொழிகளெல்லாம் பழைய கொடுந்தமிழ்களே. (பாவாணர் 1944 : முன்.22)

கிறித்துவிற்குமுன் தமிழிலன்றித் திரவிட மொழியெதிலும் இலக்கியம் உருவாகவில்லை. (பாவாணர் 1967 : 36) திரவிட மொழிகளில் இலக்கியங்கள் தோன்றிய காலங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவற்றின் இலக்கியங்களுக் கான முயற்சிகள் முறையே கி.பி.3, 5, 12ஆம் நூற்றாண்டுகள் அளவில் நடந்துள்ளன என்பர். (குசலப்ப கவுடா 1972:78). திரவிட மொழி யிலக்கியங்களை இந்த அளவிற்கு முன்கொண்டு சொன்றாலும் தமிழின் இலக்கியக் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக நீண்ட கால இடை வெளி இருப்பதைக் காணலாம். இது தமிழின் பழமையைத் தெற்றெனக் காட்டுகிறது.

மொழி வளர்ச்சி வரலாற்றில், தாய் மொழியினின்று பிரிந்து தனிமொழியாக வடிவம்பெறும் நிலையை அபபிரம்ச நிலை என்பார்கள். மலையாள இலக்கண ஆசிரிய ரான இராசராச வர்மா கி.பி.14ஆம் நூற்றாண் டின் நடுப்பகுதி வரை மலையாள மொழி இந்த அபபிரம்ச நிலையைத் தாண்டவில்லை என்கிறார். இக்காலத்தை அவர் கரிந்தமிழ்க் (தமிழ்ச்சிதைவு) காலம் என்று கூறுகிறார். (குஞ்ஞன் பிள்ளை 1970 : 218). இதுபோன்று திரவிட மொழிகள் அனைத்தும் தனித்தனி மொழிகளாக வடிவம் பெறும் நிலையின வாகச் சில காலம் இருந்துள்ளன. பின்னரே அவை தனித்தனி மொழிகளாக ஆகியுள்ளன.

தமிழல்லாத பிற திரவிட மொழி களில், இலக்கிய நடைக்கும் பேச்சு நடைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் காட்டிலும் தமிழில் இலக்கிய நடைக்கும் பேச்சு நடைக்கும் இடையே காணப்படும் மிகுதியான வேறுபாடு, தமி ழின் சொல்வளம், செந்தமிழின் பல்வேறுவகைப்பட்ட இலக்கண வடிவங்கள், இன்றைய திரவிட மொழிகளைக் காட்டிலும் பழந்திரவிட மொழிகள் தமி ழோடு பெருமளவில் ஒத்துவருவது, திரவிட மொழி களில் காணப்படும் வேர்ச்சொற்களும் சொல்லுருவங்களும் தமிழ்ச் சொற்களின் சிதைவுகளாய் இருப்பன. பழந்தமிழில் குறைந்த அளவே வடசொல் இருப்பது, அவ்வடசொற்களும் உருமாற்றி வழங்குவது ஆகியவற்றைத் தமிழின் தொன்மைக்குச் சான்றுகளாகக் காட்டுவார் கால்டுவெல் (1856 : முன். 81-83)

இன்றும் பச்சமலையாளம், அச்ச கன்னடம், அச்ச தெலுங்கு ஆகியவற்றைப் பார்த்தால் அவற்றுக்கும் தமிழுக்கும் இடையே உள்ள தொடர்பு புலனாகும். அதிலும் அவற்றின் பழமையான நிலை தமிழுடன் நெருக்கத் தொடர்பினைக் காட்டு கின்றன.

வளமை

தமிழின் சொல்வளத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது தமிழுக்குரியதென்று கருதப்படும் சொற்களுடன் தெலுங்கு, கன்னடம் முதலிய திரவிட மொழிகளுக் குரியதென்று கருதப்படும் சொற்களையும் கொண்டுள்ளது என்பார் கால்டுவெல் (1856 : முன்.82). வழக்கிழந்த சொல்லுருவங்கள், ஆட்சியிழந்த சொல்லாக்க முறைகள், முரண் பட்ட மரூஉ முடிபுகள் ஆகியவற்றின் கருவூல மாகத் தமிழ் திகழ்வதையும் அவர் குறித்துள் ளார். திருந்திய திரவிட மொழிச் சொற்கள் இருப்பன போன்றே திருந்தாத் திரவிட மொழிச் சொற்களையும் தமிழ் கொண் டுள்ளது. இவ்வாறான சொற்களைக் கொண் டும் வரலாற்றை ஆராய்ந்துள்ளார் பாவாணர். சான்றுக்குத் தமிழ்நாட்டில் இன்றுள்ள மலை வாழ் இனத்தாருள் மிகப் பழமையான

வர்களாகக் கருதப்படும் துடவர் கீழிருந்து மலைமேல் சென்றவர் என்பதை 'மேக்' என்று அவர்கள் மேற்குத் திசையை அழைப்பதினின்று விளக்குவதைக் காட்டலாம். தமிழ்நாட்டில் மேற்குத்திசை மேட்டி னையும் கிழக்குத்திசை தாழ்வான பகுதியையும் குறிக்கின்றன. ஆனால் மலையுச்சியில் வாழும் துடவருக்கு மேல்திசை மேடாக இல்லை. இருந்தாலும் அவர்கள் மேற்குத் திசையை 'மேக்' என்று அழைக் கின்றனர். (பாவாணர் 1967 : முன்.12)

துடவமொழியை ஆராய்ந்த எமனோ (1965 : 18) மொழியியல் அடிப்படையில் துடவ மொழி முன்னை - தமிழ் (Pre - tamil) மொழி யுடன் தொடர்புடையது என்றும் தமிழி லிருந்து பிரிந்த காலம் முதல் துடவர் நீலமலை யில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் குறிப்பிடு வார்.

நன்கு வளர்ந்த குமுகாயத்தில் இயல் பாகவே சொற்கள் நேரிதாகவும், சொற் பொருள் நுணுக்கமான கருத்துகளைத் தெரிவிக்கும் வகையிலும் அமைந்திருக்கும். அவ் வகையில் தமிழில் நுண்ணிய கருத்துகளைத் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ள சொற்கள் அதன் வலிமையைத் தெற்றென தெரிவிக்கின்றன.

திரவிட மொழிகளிலுள்ள சொற்கள் தமிழ்ச் சொற்களினின்று பொருள் திரிந்தன வாகவும், வடிவு திரிந்தனவாகவும் இருப்பன வற்றைக் காட்டுவார் பாவாணர். திரவிட மொழிகளில் நிலவும் புதுச் சொற்களும் தமிழில் மறைந்த வேர்ச் சொற்களைக் கொண்டனவாக வும் மறையா வேர்ச்சொற்களைக் கொண்டன வாகவும் காட்டுவார் அவர். இவ்வகையில் ஏறக்குறைய திரவிட மொழிகளிலுள்ள சொற்கள் அனைத்திற்கும் தமிழில் இனச் சொற்கள் இருக்கின்றன.

தமிழின் வளம் பலதுறைகளிலும் சிறந்து காணப்படுவதை விளக்கியுள்ளார் பாவாணர். குறிப்பாகத் தம் சொல் லாராய்ச்சிக் கட்டுரை கள் என்னும் நூலில் ஒருபொருட் பன்மொழி கள் பலபொரு ளொரு சொற்கள் போன்றன மிக்கிருப்பனவற்றைக் காட்டியுள்ளார். திரவிட மொழிக் குடும்பத்தில் பிற மொழிகளைக் காட்டிலும் தமிழ் வளமையுடன் இருக்கிறது. இது இதன் தாய்த் தன்மையை நிறுவுவதற்கு ஏற்றதாக இருக்கிறது. அதுவும் தமிழில் ஒரு பொருட் பன்மொழிகளாக இருப்பன திரவிட மொழி களில் தனிச்சொற்களாக வழக்கில் இருப்பன தமிழின் திரவிடத் தாய்த்தன்மை யைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

வேர்ச்சொல்

எமனோவும் பரோவும் தொகுத்த திரவிடச் சொற்பிறப்பு அகரமுதலியில் வேர் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட 4570 சொற்பகுப்புகளுள் 3250-க்கும் மேற்பட்ட சொற்பகுப்புகளில் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது திரவிட மொழிக் குடும்பத் தில் பெரும்பான்மையான சொற்களின் வேர்மூலங்களைத் தமிழ் தாங்கி நிற்பதைக் காட்டுகிறது. இந்தச் சொற்பிறப்பு அகரமுதலி இன்றைய மொழியியல் அடிப்படையில் வேர்ப்பகுப்புச் செய்து அதற்கேற்பச் சொற் பகுப்புகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறில்லாமல் பாவாணர் காட்டும் வேர் அடிப்படையைப் பொருத்திப் பார்த்தால் தமிழ்ச் சொற்கள் இடம் பெறாத எஞ்சிய சொற்பகுப்புகளுள் பெரும்பான்மையான வற்றிற்கும் தமிழ் வேர்மூலத்தைக் காட்டலாம்.

திரவிடக் குடும்பத்தில் வேர் அடிப் படையில் தமிழ் பெற்றுள்ள முதன்மையான இடத்தைக் காட்டும் வகையில் இவ்வகர முதலியில் தமிழ்ச் சொற்கள் முதலாவதாகக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்ச்சொல் இடம் பெற்றுள்ள பெரும்பான்மையான பதிவு களில் வேர் அடிப்படையில் தொடர்புடைய தமிழ்ச் சொற்கள் காட்டப்பட்டுள்ளன. இது தமிழ்ச் சொற்கள் குடும்பங் குடும்பமாகவும் கூட்டங் கூட்டமாகவும் இயங்குகின்றன என்னும் பாவாணரின் (1949 : 109) கூற்றை உறதிப்படுத்து வதாக இருக்கிறது.

"திரவிட மொழிக்குழுவினுள் பிற மொழிகளைக் காட்டிலும் தமிழ் மூல மொழியுடன் நெருக்கத் தன்மை கொண் டுள்ளது. அது திரவிட வேர்களின் பழமை யான வடிவங்களைத் தக்க வைத்துள்ளது.

தென்னிந்திய மொழிகளை ஆராய அதனைப் பற்றி அறிவது தேவையாகும்" (பிரெளன் 1905 : முன். 4).

பாவாணர்தம் ஆய்வு தமிழல்லாத பிற திரவிட மொழிகளிலுள்ள திரவிடச் சொற்கள் அனைத்துக்கும் தமிழில் வேர்காட்டஇயலும் என்பதை வெளிப்படுத்தியது. அம்மொழி களில்உருவான புதுச்சொற்களையும் மறைந்த வேர்ச்சொல்லை உடையன (எ-டு: தெலுங்கு அம்மு=வில்), மறையா வேர்ச்சொல்லை உடையன (எ-டு : தெலுங்கு அள் (~~காது~~) = அடுகு) எனவகைப்படுத்துவார் (1944 : முன் 11). இதில் மறைந்த வேர்ச்சொல்லை மீட்டுருவாக்கம் செய்துள்ள நிலையையும் காண் கிறோம்.

"திரவிடக் குடும்ப மொழிகளுள் முதன் முதலில் திருந்திய தன்மை எய்தியது தமிழ். சொல்வளம் மிக்க மொழி இது. டூமைத் தன்மை பலவற்றை உள்ளடக்கிய மொழி இது. ஆகையால் திரவிடக் குடும்ப மொழிகளுள் தலைமை இடத்தில் வைத்துக் கணக்கிடும் தன்மை கொண்டது" என்பார் கால்டுவெல் (1856 : முன்.6)

திரவிடக் குடும்ப மொழிகளுள் முதலா வதாக வைத்து எண்ணத்தக்க வகையில் அமைந்த மொழி தமிழ். திரவிடக் குடும்பத்தின் மூலக்கூறுகளில் பெரும் பாலானவற்றைத் தக்க வைத்துள்ளது தமிழ் என்றும் பிற திரவிட மொழிகள் எல்லாம் அதிலிருந்து திரிபுற்றன என்றும் கருதப்படுகின்றன. தமிழில் அடங்கி யுள்ள அளவுக்குப் பொதுத் திரவிடத் தன்மை பிற திரவிட மொழிகளில் இல்லை என்பது உறுதி என்கிறது இந்திய மொழிகளின் அளவீடு (கிஇசுடென் கோனோ 1906 : 283).

இதுபோன்ற அறிஞர் பெருமக்களின் கூற்றுகள் திரவிட மொழிக் குடும்பத்தின் மூல வேர்களைத் தமிழ் தாங்கி நிற்கிறது என்பதை விளக்குகின்றன.

பெருநிலப்பரப்பு

கடல்கோள், இனப்பெருக்கம், நாடு காண் விருப்பம் போன்ற காரணங்களால் இயல்பாய்த் தோன்றிய தமிழ் பல்வேறு மொழிகளாகத் திரிந்தன என்பார் பாவாணர். இன்றைய நிலையில் தமிழ் வேங்கட மலைக்குத் தெற்கே, மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே, வங்கக் கடலுக்கு மேற்கே இந்துமாவாரியின் வடக்கே உள்ள நிலப் பரப்பில் வழங்குகிறது.

"பனிமலை தோன்றாத முதற்காலத்தில் நாவலந்தேய முழுவதும், தொல்காப்பியர் காலத்தில் வேங்கடத்திற்கும் (தெற்கே யமிழ்ந்துபோன) குமரி மலைக்கும் இடை யிலும் வழங்கிவந்து தற்போது வேங்கடத் திற்கும் குமரிமுனைக்கும் இடையில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் மைசூர்ச் சீமைக்கும் கிழக்கில் வழங்கி வருவது தமிழ்மொழியாம்" (1944 : முன்.3) என்று காலந்தோறும் தமிழ் வழங்கிய இடங்களைக் குறிப்பிடுவார் பாவாணர்.

திரவிட மொழிகளுள் ஒன்றான பிராகுவி பலுசித்தானத்தில் வழங்கி வருவதை யும், வட இந்தியாவில் பல திரவிட மொழிகள் இன்றளவும் இருப்பனவற்றையும் காட்டி திரவிடம் பெருநிலப்பரப்பில் பேசி வந்துள் ளதைப் புளூம் பீல்டு (1966: 70), இசுடென் கோனோ (1906: 81, 278), சுனீதி குமார் சாட்டர்சி (1965 : 8), இலேமன் (1966 : 13), மெக்கால்பின் (1981 : 6) போன்ற அறிஞர்கள் குறித்துள்ளனர்.

முன்னர்க் கொடுந்தமிழ் நிலங்களாக இருந்தன இன்றைய திரவிட மொழி நிலங் களாக இருக்கின்றன (பா:வாணர் 1968 : 3). கடல் கொண்ட தென்னாட்டை எடுத்துக் கொண் டாலும், இன்றைய இந்திய நாட்டை எடுத்துக் கொண்டாலும் தமிழ் வழங்கிடம் முன்னர் பெரிய நிலப்பரப்பாய் இருந்தது. இது தமிழின் திரவிடத் தாய்மைப் பண்பைக் காட்டுவதற் குரியதாக இருக்கிறது.

பெயர்

தமிழுக்குத் தமிழ் என்னும் பெயர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே அமைந்துவிட்டது. இன்றுவரை இம்மொழி யின் பெயர் தமிழ் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. வெவ்வேறு காலகட்டங்களில், தமிழிலிருந்து தனியான மொழிகளாகப்

பிரிந்தவை தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்றாற் போன்று பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. இதில் இரண்டு தன்மைகள் குறிப்பிடத்தக்கனவாக இருக்கின்றன. ஒன்று திரவிட மொழிகளை நோக்க தமிழ் நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. இரண்டாவதாகத் தமிழ் என்றே தொடர்ந்து வழங்கி வந்துள்ளது இதன் தாய்மைப் பண்பைக் காட்டுகிறது. அதாவது இதிலிருந்து பிரிந்த மொழிகள் வெவ்வேறு பெயர்களைத் தாங்கி இருக்க இது அதே பெயருடன் விளங்குகிறது.

தாய்

குடும்ப மொழிகளுள் காலத்தால் பழமையானதும் வளமையானதுமாக விளங்கும் மொழியை மற்ற மொழிகளுக்குத் தாய் என்று குறிப்பிடுவது இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலும் உண்டு. அங்கு இலத்தீன மொழியிலிருந்து உரோமன்சு மொழிகள் அனைத்தும் பிறந்தன என்று கொள்ளப்படுகிறது. பிறகு இலத்தினும், உரோமன் மொழிகளும் சேர்ந்து இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்றழைக் கப்படுகிறது. (இலேமன் 1966 : 6,7). அதேபோல் திரவிட மொழிகள் அனைத்தும் தமிழினின்று பிறந்தன என்று கொள்வதே சரியானது. ஆங்கு இலத்தீனும் உரோமன்சு மொழிகளும் சேர்ந்த இந்திய - ஐரோப்பியக் குடும்பம் என்றாவது போல் தமிழும் திரவிட மொழிகளும் சேர்ந்து ஒரு மொழிக்குடும்பம் எனக் கொள்ள வேண்டும். இம்மொழிக் குடும்பத்திற்குத் தான் பாவாணர் தமிழியம் எனப் பெயரிட்டார். தமிழும் திரவிட மொழிகளிலுள்ள திரவிடக் கூறுகளும் சேர்ந்தது தென்மொழி (1968 : 1) என்று தமிழியத்திற்கு ஒருமுந்து நிலையையும் காட்டியுள்ளார்.

தமிழ், திரவிடம் என்னும் இரு சொற்களும் முற்றிலும் வேறுபட்ட சொற்களாகத் தோன்றினாலும், பிறப்பால் தொடர்புடையனவாக நான் கருதுகிறேன்; அவை இரண்டையும் ஒன்றாகவே கருதுகிறேன் என்பார் கால்டுவெல் (1856 : முன்.8) இக்குடும்பத்தார்க்குத் திரவிடம் என்று தனிப்பெயர் வழங்கி இருந்தாலும் தமிழை முதன்மையாகக் கொண்டு இக்குடும்பத்தைக் கால்டுவெல் பார்த்துள்ளதை இது காட்டு கிறது.

இன்று திரவிட மொழிகள் பேசும் பகுதிகள் முன்னர்த் தமிழ் பேசும் பகுதிகளாக இருந்துள்ளதும், தமிழ் வளமையான மொழியாக இருப்பதும், திரவிடச் சொற்களின் வேர்மூலங்களைக் கொண்டிருப்பதும், மிகப்பழமையான மொழியாக இருப்பதும் தமிழின் திரவிட தாய்த் தன்மையைக் காட்டுகின்றன. இதனைத் தமக்கேயுரிய பாங்கில் தமிழ் என்னும் பெயர் திரவிட மாகத் திரிந்தது போலவே தமிழாகிய மொழியும் பிற திரவிடமாய்த் திரிந்தன (1944 : முன்.9) என்று குறிப்பிடுவார் பாவாணர்.

கருவி நூல்கள்

குஞ்ஞன் பிள்ளை, இளங்குளம், பண்டைய கேரளம், தமிழ்ப் புத்தகாலயம், 1970.

பாவாணர், திரவிடத்தாய், கழகம் (1964), முதற்பதிப்பு 1944.

பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், கழகம் (1992), முதற்பதிப்பு 1949.

பாவாணர், தமிழ் வரலாறு, கழகம் (1990), முதற்பதிப்பு 1967.

பாவாணர், வண்ணனை மொழி நூலின் வழுவியல், காட்டுப்பாடி 1968.

Bloomfield, Language/ Motilal Banarsidass, New Delhi (1996), First Published 1935.

Brown, C.P. Dictionary Telugu -English AES, New Delhi (1980) First Published 1905.

Burrow, T.,T. Emeneau, M.B., A Dravidian Etymological Dictionary (Revised) Munsiram Manoharlal, New Delhi (1998), First Published 1984.

Caldwell, R, A Comparative Grammer of the dravidian or South Indian Family & Language, AES, New Delhi (1987), First Published 1856.

Emeneau M.B. India and Historical grammar, Annamalai univeristy 1965.

Isreal M. The Treatment of Morphology in Tolkappiyam Madurai University 1973.

Kushalappa Gowda, The other side of comparative dravidian, Third Seminar on dravidian linguistics. Annamalai Univerisity (Eds. S. Agesthialingom, S.V. Shanmugam), 1972.

Lehman Winfred, Historical Linguistics, An Introduction Oxford IBH. 1966.

Sten Konow, Linguistic Survey of India Vol IV (Ed. Grierson, G.A.) Calcutta, 1906.

ஓர் உடல் ஆவர்!

● பாவலர் ம. முத்தரசு

ஏட்டிற் கடங்கா தெழுத்திற் கடங்காது
பாட்டிற் கடங்காது பாவாணர் சீர்எழுதத்
தூவல் எடுத்தேன்; தொடர்ந்து வரும் சொல்லடுக்குக்
காவலரண் செய்தாள் தமிழ்.

நோய்களுக்குள் ளேவிழுந்து நொந்த தமிழினத்தின்
தாயாய்த் தவமிருந்து ஓயா துறங்காது
கண்விழித்துக் காத்தவரே பாவாணர்; தாம்பிறந்த
மண்விழித்துக் கொள்ள அவர் பட்டதுயர் கேட்டால்

கல்லும் கதறியழும்; புல்லும் புலம்பியழும்
கொல்லும் வறுமையிலும் மாற்றார் கொடுமையிலும்
வெல்லும் தமிழென்றே வீறுபெற வாழ்ந்திருந்தார்.
முல்லைத் தமிழ்மணக்கும் மூச்செல்லாம் ஆராய்ச்சி!

சொல்லுக்குச் சொல்லழகு கோலோச்ச வீற்றிருந்தார்.
கல்லான பாறையிலும் கன்னித் தமிழ் வளர்த்தார்.
கொட்டம் அடித்து வெறும் கும்மாளம் போட்டுத்தம்
பட்டம் பதவிகளால் வாழ்ந்து தமிழ்க்கேடு

சூழ்ந்தவரைக் கண்டு சுடுநெருப்பாய்க் கொந்தளித்தார்.
ஆழ்ந்த புலமையினால் யார்க்கும்தலைவணங்கா
வேந்தரே பாவாணர்; தன்மானப் பண்ணையவர்.
''மாந்தன் பிறந்தமுதல் மண்ணே தமிழ்நாடு.''

''பூவாய் விரிந்த இதழ் தித்திக்கத் தேன்சிந்தி
நா, வாய் வழிந்து நடந்தஎழிற் செந்தமிழே
மூத்த முதல்மொழியாம்'' என்று வரலாற்றுக்
கூர்த்த மதிக்கொடியை ஏற்றி அறிவுநலம்

வாயாப் புலவர்க்கு வாயாப்(பு) அறைந்துரைத்தார்.
ஆய்வுப் புலக்களத்தின் ஆதிப் புரட்சியிது.
உள்ளம் வெளுத்திருக்கும்; மேனி கருத்திருக்கும்
வெள்ளம்போல் பேச்சுவரும்; வெல்லம் தலைகவிழும்.

பிள்ளைமனம் துள்ளிவரும்; சாலை வழிநடந்தால்
தெள்ளு தமிழ் வேந்தர் பீடு நினைவுவரும்.
ஆரியர்தம் கூற்று தமிழர்க்குக் கூற்றென்று
கூறி முரசறைந்த நக்கீரர் பாவாணர்.

தாய்த்தமிழ் நன்செய் தரம்கெட்டுப் போகாமல்
ஓய்வற்றுப் பாடுபட்ட ஓரேர் உழவரவர்.
யார்வரினும் உண்மையினை நேருக்கு நேர்நின்று
கூறிநிலை நாட்டும் குறிஞ்சிக் கபிலரவர்.

கோடி அறிஞரொன்று கூடிநிறை வேற்றாத
ஏடு களைவழங்கும் பல்கலைக் கூடமவர்.
பொய்யாய்க் குழிபறிக்கும் வையா புரிகளுக்கும்
மெய்யாய் வழிகாட்டும் மேதைதான் பாவாணர்.

ஒப்புவமை இல்லாத ஒப்பியலா? வேர்ச்சொல்லா?
சொற்பிறப்பா? தொல்காப்பியக் குறிப்பா? அப்பப்பா!
இத்தனைக்கும் வித்தாய் இருந்தநம் பாவாணர்
முத்தமிழ் மூதறிஞர் தாம்.

"பாவாணர் - இசையும் படைப்பும்"

முனைவர் இ. அங்கயற்கண்ணி,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

நூற்றாண்டு காணும் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் சிறந்த இலக்கிய இலக்கண அறிஞர். சிறந்த சொல் ஆராய்ச்சியாளர். தமிழே உலக முதன் மொழி என்ற கோட்பாடுடையவர். இக் கொள்கையை மக்களிடம் எடுத்துச் செல்ல இசையை ஒரு கருவியாகப் (ஊடகமாக) பயன்படுத்தி யுள்ளார் என்று கூறலாம். இவ்வகையில் பாவாணரையும் அவர்தம் இசைப் படைப்புகளையும் இசை அணுகுமுறையில் காண்பது பொருந்தும். பள்ளிப் பருவத்திலேயே பாடல் புனையும் பாங்குடையவராக இருந்ததால் "கவிவாணன்" என்னும் பட்டத்தைப் பெற்றார். இலக்கிய இலக்கணப் புலமையிலும், எழுத்திலும், பேச்சிலும் வல்லவராய் விளங்கினார்.

பாவாணரின் இசைப் பயிற்சி

பாவாணர் முறையான இசைப் பயிற்சிப் பெற்றிருந்தார் என்பதை அவர்தம் வாயிலாகவே அறியலாம்.

"நால்வகை இசைக் கருவிகளும் என்னிட முள. ஒவ்வொரு வகையிலும் ஒன்றேனும் ஓரளவு இயக்குவேன்" என்று எழுதுகின்றார் பாவாணர்.

நால்வகை இசைக்கருவிகளாக யாழ், குழல், தோல், உறை ஆகியவற்றைக் கூறலாம். இவற்றுள் தோல் என்பது மிருதங்கம் என்றும், உறை என்பதைக் கஞ்சிராவாகவும் கொள்ளலாம்.

பாவாணரின் இசை ஆசிரியராக, மன்னார்குடி யாழ்ப்புலவர் இராசகோபால ஐயர் என்பவர் இருந்துள்ளார் என்று அறிய முடிகிறது. இம் முறையான இசைப் பயிற்சியைக் கொண்டு இசையரங்குகள் - இசை நிகழ்ச்சிகள் ஏதேனும் நடத்தினாரா என்பதற்குரிய சான்று கிடைக்கவில்லை.

பாவாணர் கொண்டிருந்த இசையறிஞர்கள் தொடர்பு

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திலிருந்த பாவாணர் திரட்டு நூல்களுள் இசை நூல்களும் காணக் கிடைக்கின்றன. அவற்றுள் பின்வரும் நூல்களை அந்தந்த இசை நூலாசிரியர்களே கையொப்பமிட்டுப் பாவாணருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

1. கருணாமிருத சாகரம் - தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
2. பாணர் கைவழி எனப்படும் யாழ் நூல் - ஆ.அ.வரகுணபாண்டியன்-அன்பளிப்பு 24-4-1950.
3. பழந்தமிழ் இசை - இராவ்சாகிப் கு.கோதண்டபாணி பிள்ளை - அன்பளிப்பு 29-4-1959.
4. திருப்புகழ் நூறு- டி.ஏ. சம்பந்த மூர்த்தி ஆசாரி-அன்பளிப்பு தேதி இல்லை.

5. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனை பொருள் விளக்கம் - கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை- அன்பளிப்பு 17-5-1966.

6. ஆரம்ப சங்கீத சுவரபோதினி இரண்டாம் பாகம்-மு. கிருஷ்ணபிள்ளை-பழைய புத்தகக் கடை முத்திரை.

7. பூர்வீக சங்கீத உண்மை - எம்.கே.எம். பொன்னுசாமிப் பிள்ளை.

தா. பொன்னுசாமி பிள்ளை, புஸ்தக வியா பாரம், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப் பள்ளி.

பாவாணர் கையொப்பம் மட்டும் காணப்படுகிறது.

ஆக, தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் மகன் வரகுணபாண்டியன், கு. கோதாண்டபாணிப் பிள்ளை, டி.ஏ. சம்பந்தமூர்த்தி ஆசாரி, கீழ் வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மு. கிருஷ்ண பிள்ளை, எம்.கே.எம். பொன்னுசாமிப் பிள்ளை ஆகிய இசையறிஞர்களுடன் பாவாணர் தொடர்பு கொண்டிருந்தார் என்பதை அறிய முடிகிறது. இவர்களது நூல்களைப் படித்துத் தம்முடைய இசையறிவை வளர்த்துக் கொண்டுள்ளார் எனக் கருதலாம். மேற்கண்ட நூல்களில் காணப்படும் பாடல்களின் இசை யின் தாக்கம் பாவாணரிடம் இருந்துள்ளதை அறியலாம்.

பாவாணரின் இசைப் படைப்புகள்

பாவாணரின் படைப்புகளுள் இசை நூல்களாக நான்கு நூல்கள் படைத்திருப்பதைக் காண முடிகிறது. அவையாவன.

1. கிறித்தவக் கீர்த்தனம்.
2. சிறுவர் பாடல் திரட்டு.
3. இசையரங்கு இன்னிசைக் கோவை.
4. இசைத் தமிழ்க் கலம்பகம்.

கிறித்தவக் கீர்த்தனம்

இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1981ஆம் ஆண்டு வேதாகம மாணவர் பதிப்பாக வெளி யிடப்பட்டுள்ளது. இதில் இயற்பாக்கள் 25-ம், இசைப்பாக்கள் 50-ம் உள்ளன. சிலப்பதிகார வரிப் பாடல்கள், தேவாரப் பண், திருப்புகழ் வண்ணம், திருவருட்பா அமைதி ஆகியன வெல்லாம் இசைக் கீர்த்தனங்களுடன் இதில் இடம் பெற்றுள்ளன.

சிறுவர் பாடல் திரட்டு

இந்திய கிறித்தவ இலக்கியக் கழகத்தால் 1925இல் வெளியிடப்பட்டது. 29 பாடல் களைக் கொண்டது இந்நூல். ஒவ்வொரு பாட்டுக்கு மேலும் மெட்டு குறிக்கப்பட் டுள்ளது. இந்நூல் 32 பக்கங்களால் ஆயது. "இசைப் பித்தனாக இருந்த என்னை இறைவன் மாற்றினான்" என்று பாவாணர் பிற்காலத்தில் கூறுதற்கு அமைந்த முற்பட்ட இசைச்சான்று இந்நூல் எனத்தகும் என்பார் பேராசிரியர் இளங்குமரனார்.

இசையரங்கு – இன்னிசைக் கோவை

முகவை மாவட்ட உலகத் தமிழ்க் கழகம் வெளியிட்டது. பறம்பக்குடியில் அச்சிடப் பட்ட ஒரு இச்சிறு நூல் 1969இல் வெளிவந்தது. இச் சுவடியில் கடவுள் வாழ்த்து முதலாக மங்களம் ஈறாக சுமார் 34 பாடல்கள் உள்ளன. இவை இசையோடு இசையரங்கில் பாடு வதற்கேற்ற பாடல்களின் தொகுப்பு எனலாம்.

இசைத் தமிழ்க் கலம்பகம்

பாவாணர் இசைப் படைப்புக்களுள் அதிக எண்ணிக்கை கொண்ட பாடல்கள் அடங்கிய பகுதி இதுவாகும். இந்நூல் 1966 இல் நேசமணி பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூல் பாயிரம், காப்பு, இசையாசிரிய வணக்கம், தமிழ் ஏத்து ஆகிய செய்யுள்களை முதலாகக் கொண்டு தொடங்குகிறது. இந்நூல் கடவுள் வணக்கம் கொண்டு தொடங்குகிறது. இந்நூல் கடவுள் வணக்கம் தொடங்கி மங்களம் ஈறாக 305 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. ஒவ்வொரு பாடலும் அந்த பாடலின் கருத்துக்கேற்பதலைப்புடன் விளங்குகின்றது. இவை தமிழ், தமிழகம், தமிழர், ஆரியம், ஆங்கிலம், இந்தி எதிர்ப்பு, மேலும் தம்மைப் பாதித்த நிகழ்வுகள் ஆகிய வற்றை உள்ளடக்கமாகக் கொண்டு விளங்குகின்றன.

இசைத் தமிழ்க் கலம்பகப் பாடல்களை

(i) பாடல்களின் கருத்து அடிப்படையில்

(ii) பாடல்களின் அமைப்பு அடிப்படையில்

(iii) பாடல்களின் இசை அடிப்படையில்

என்றிவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துக் காணலாம்.

இனி, இசை அடிப்படையில் வகைப் படுத்தக்கூடிய பாடல்கள் ஒரு சிலவற்றை ஆராயலாம்.

பாவாணர் தாமே இசையமைத்துத் தந்தவை

இதில் 15 பாடல்கள் உள்ளன. இவற்றில் மெட்டு இல்லாமல் பண் மற்றும் தாளக் குறிப்பு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பாவாணர் தாமே இசையமைத் திருக்கலாம். அவற்றுள் ஒருசில பாடல்கள் வருமாறு :

1. எங்கும் நிறைந்த பொருளே - பந்துவராளி - முன்னை
2. சிலப்பதிகாரமும் செந்தமிழ் வீறும் - வசந்தா - முன்னை
3. தானே தனக்குவமை -காப்பி -முன்னை
4. வடமொழி வந்த வழி - பியாகு - முன்னை
5. ஆரியம் நன்று - சிந்துபைரவி - ஒற்றை

பியாகு, காப்பி, சிந்துபைரவி, கானடா போன்ற இராகங்கள் இப்பாடல்களில் கையாளப்பட்டுள்ளன. இந்த இசையமைப்பு இன்றைக்கு நமக்குக் கிடைக்கப் பெற வில்லை.

பாவாணரின் மாணாக்கர்களுள் அவர் தம் மொழிக்கொள்கைகளைப் பரப் பக்கூடிய மாணாக்கர்களும், சொல்லாராய்ச் சியிலும், வரலாற்றாராய்ச்சியில் ஈடுபடக்கூடிய மாணாக் கர்களும் இருந்துள்ளனரே யன்றி அவர்தம் இசையை, பாடல்களின் இசையமைப்பை அறிந்து கொள்ளவோ, சுரதாளக் குறிப்பு எழுதிப் பதிவு செய்யவோ அல்லது ஒலி நாடாவில் பதிவு செய்யவோ இதுவரை யாரும் முன்வராதது பெருங் குறையே. அதனால் பாவாணர் பாடல்களின் மூல இசை வடிவங்கள் நமக்குக் கிடைக்க வில்லை.

புகழ்பெற்ற மெட்டுகளில் அமைந்த பாடல்கள்

இவ்வரிசையில் கீதம், ஜதிசுவரம், கீர்த் தனை, கிருதி, தேவாரம், திருப்புகழ் முதலான இசை உருப்படிகளின் அமைப்பி லான பாடல்கள் அடங்கும்.

புரந்தரதாசர் இயற்றிய "லம்போதர லகுமிகரா" என்ற பிரபலமான கீதத்தை அடியொற்றி, "அன்பே வடிவெனும் அறவா" என்ற தமிழ்க் கீதத்தை கடவுள் வாழ்த்தாகப் பாவாணர் இயற்றியுள்ளார். இதற்குரிய பண் - மலகரி. தாளம் : ஈரொற்று என்ற குறிப்புடன் இக் கீதம் அமைந்துள்ளது. இப்பாட்டு இசை மாணவர்க்கென்றே இயற்றப்பட்டது. தனித் தமிழ்ப் பாட்டை விரும்புவார் இதைப் பாட லாம் என்ற குறிப்புடன் இப்பாடல் தரப்பட் டுள்ளது.

"ரார வேணு கோபா பாலா" என்ற பிரபலமான ஜதிசுவர மெட்டு அமைப்பில், "ஆடுவோம் கோலாட்டம் வாரும்" என்ற கோலாட்டப் பாடல் ஒன்று பாவாணரால் இயற்றப்பட்டுள்ளது.

கீர்த்தனை, கிருதி முதலான அமைப்பில் தியாகராச சுவாமிகளின் பலரறி கிருதிகளின் மெட்டில் பல பாடல்களைப் பாவாணர் இயற்றியுள்ளார்.

பட்டணம் சுப்பிரமணிய ஐயர் இயற்றிய புகழ்பெற்ற கீர்த்தனைகளாகிய, "கோரின வர மொஸடு மைய" (இராமப்ரியா - ரூபகம்) "ப்ரோவ சமய மீதே" (கௌரி மனோகரி. ஆதி) "வரமுலொசகிப் ரோசுடனு" (கீரவாணி - ரூபகம்) போன்ற கீர்த்தனைகளின் மெட்டு களில் முறையே, "பேரிலும் தமிழ் இனிமை தங்கும்", "எந்த நாளுமே ஏமாறும் நாளோ", "பொது மொழி எதுவும்" முதலான பாடல் களை பாவாணர் இயற்றியுள்ளார்.

மேலும், மைசூர் லிங்கராஜ் அர்ஸ் இயற்றிய ச்ருங்கார லஹரி (நீலாம்பரி. ஆதி) என்ற கீர்த்தனை மெட்டில் "தென்பாலி முகமே" என்ற பாடலை இயற்றியுள்ளார். மேலும் சுத்தானந்த பாரதியின் "எப்படிப் பாடினரோ" (ஆபேரி. ஆதி) என்ற கீர்த்தனை மெட்டிலும், அருணாசலக் கவிராயரின், எனக்குன் இருபதம் என்ற கீர்த்தனை மெட் டிலும், பாவாணர் பாடல்கள் இயற்றி யுள்ளார்.

மேலும் தேவாரம், திருப்புகழ், திருவருட்பா முதலான பலரறி பாடல்கள் மெட்டிலும், நாட்டுப்புற மெட்டுகளின் கும்மி, குறத்தி, ஆனந்தகளிப்பு முதலான மெட்டுகளிலும் தேசியப் பாடல்கள் மெட்டிலும், திரைப்பட இசை மெட்டிலும் பாவாணரின் பாடல்கள் காணக் கிடைக் கின்றன.

முடிவுரை

பாவாணரை முழுமையாக அறிந்து கொள்ள அவர் தம் இசைப்பாடல்கள் துணை புரிகின்றன. பாவாணர் தம் கொள்கைகளை - கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்ல இசையை ஒரு பரப்புரை ஊடகமாகப் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. இதனைச் செவ்விசைப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், நாட்டுப்புற இசைப் பாடல் மெட்டுகள், திரையிசைப் பாடல் மெட்டுகள் என்றிவ்வாறு இசையின் அனைத்து பரிமாணங்களையும் கையாண்டு தம் பரப்புரையை நிறைவேற்றியுள்ளார். ஆகவே பாவாணர் விரும்பிய இசைகளை மக்களிடையே கொண்டு செல்வதன் வாயிலாகப் பாவாணரை முழுமையாக வெளிப்படுத்த முடியும். இதற்குரிய வழிமுறைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. பாவாணர் பாடல்கள் ஒலி நாடாவில் வெளிவராத நிலையில் பாவாணர் பாடல்கள் அடங்கிய ஒலி நாடா ஒன்று வெளியிட ஆவன செய்தல்;
2. பாவாணர் குறிப்பிட்டுள்ள மெட்டுகளில் இன்றைக்கு அறிய முடியாத மெட்டுகளை அம் மெட்டுகள் அறிந்த பாடத் தகுந்தோரைக் கொண்டு ஒலிப்பதிவு செய்ய வேண்டுவது இன்றியமையா பணியாகும்.
3. பாவாணர் பாடல்களைச் சுரதாள குறிப்புடன் வெளியிட ஆவன செய்தல்;
4. இசை நிறுவனங்கள், இசைப்பள்ளி கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் இப்பாடல்களைச் சேர்க்க ஆவன செய்தல்.
5. பாவாணர் யாத்துள்ள இசை தொடர் பான தனித் தமிழ்க் கலைச் சொற்களை மாணவர்களிடையிலும், இசை அறிஞர்களிடையிலும் அறிமுகப்படுத்துதல்.
6. பாவாணர் வழி நிலையில் இசை அகரமுதலி தொகுத்தல்.
7. பாவணர் ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ள இசைக் கட்டுரைகள், நூல்கள் ஆகிய வற்றைத் தேடித் தொகுத்துப் பதிப்பிக்க ஆவன செய்தல்.

கேசவக் கிருட்டினனே ஏசுக்கிறித்து

கிரேக்க நாட்டில் என்றேனும் தமிழ் வழங்கிய தென்பதற்கோ தமிழர் வாழ்ந்திருக்கிறார் என்பதற்கோ ஒரு சான்றும் இன்மையானும்; தமிழ்ச் சொற்களும் தமிழர் பழக்க வழக்கங்களும் கிரேக்க நாட்டில் மட்டுமன்றி உலகத்திற் பல இனத்தாரிடையும் காணப்படுவதாலும்; கிரேக்க நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு திரவிட மொழியும் வழங்காமையானும்; தெர்மிலர் என்னும் சொல்லைத் திர-இல்-அர் என்று பிரித்து, 'கடற்கரையில் குடி கொண்டவர்' என்று பொருள் கூறுவது, கேசவக் கிருட்டினனே ஏசுக் கிறித்து என்று சொல்வதொக்கு மாதலானும்; ஒரே சொல்லின் ஒருபுடை ஒப்புமைபற்றி ஒரு நாட்டாரை ஐயாயிரம் கல் தொலைவிற்கப்பாற்பட்ட வேறொரு நாட்டினின்று வந்தவராகக் கொள்வது, மொழிநூன் முறைக்கு முற்றும் முரணான தாகலானும்; தோற்றம் முதல் இது வரைப்பட்ட வளர்ச்சி நிலையெல்லாம் தொடர்பாகக் காட்டிக்கொண்டு தொன்று தொட்டுத் தென்னாட்டிலேயே தமிழ் வழங்கி வந்திருத்தலானும்; கிரேக்க நாட்டு மூலக் கொள்கை மிகத் தவறானதென்று கூறி விடுக்க.

- பாவாணர்

புனைகதையும் தனித்தமிழும்

புலவர் தி.நா.அறிவுஒளி, மறைமலைநகர்

தனித்தமிழ் என்றால் தூயதமிழ் எனப் பொருளாகும். புனைகதை அல்லது புதினம் என்பது அயல்நாட்டார் தொடர்பால் அரும்பியது என்பர். இக்கருத்து ஏற்றத்தக்க தன்று.

குறிஞ்சிப்பாட்டு, சிலப்பதிகாரம், தகடூர் யாத்திரை, பெருங்கதை, திருத் தொண்டர் மாக்கதை, சிந்தாமணி என்பனவும் புனைகதைகளே. அவை பாட்டுநடையில் உள்ளன. மேனாட்டினர் உரைநடையில் புனைகதை யாத்தமையால் பெரும்பாலோர் அக்கதைகளைப் படிக்க நேர்ந்தது.

தனித்தமிழன்பர்கள் பாட்டு, சொல்லாய்வு, கட்டுரை ஆகியவற்றில் காட்டும் ஆர்வத்தை நாடகம், இசை ஆகியவற்றிலும் கதை வடிவ முயற்சிகளிலும் காட்டுவதில்லை எனப் பலர் கருதுவர்.

தனித்தமிழியக்கம் கண்ட பேரறிஞர் மறைமலையடிகளார் புனைகதை எழுதுவதிலும் சாகுந்தல நாடகம் மொழி பெயர்ப்பதிலும் ஈடுபட்டு வழிகாட்டினார். ஆயின் அவர்க்குப் பின்வந்த தனித்தமிழ் புலவர்கள் அவர் காட்டிய வழியை மறந்து பிறவற்றில் ஆர்வம் செலுத்தினர். மற்ற துறைகளும் வேண்டியதே. அதுபோல் புனைகதைத் துறையும் வேண்டியதே.

புனைகதை பல வகையினவாம். 1. குமுகாயப் புனைகதை 2. வர லாற்றுப் புனைகதை 3. நகைச்சுவைப் புனைகதை 4. அறிவியல் புனைகதை 5. சிறுவர் புனை கதை 6. குறிக்கோள் புனைகதை 7. அங்கதப் புனைகதை 8. குறைமைப் புனைகதை 9. செலவுப்புனைகதை 10. கலையியற் புனைகதை என்பனவாம்.

மேலைநாட்டார் இவ்வாறன்றி 'இயங்கள்' அடிப்படையில் வகைப் படுத்துவர். அவற்றைத் திறனாய்வு நூல்கள் விரிவாக விளம்பியுள்ளன.

புனைகதையுள் 1. குறுங்கதை 2. சிறு கதை 3. நெடுங்கதை எனப் பிரிவுகள் வடிவ அளவை நோக்கி அமைந்துள்ளன.

திரு. வி.க. புனைகதைகளை இலக்கியமாகக் கருதவில்லை. தொல்காப்பிய உரையிலேயே கதைகள் வந்துள்ளமையை அவர் மறந்தார் போலும்! திரு. மகிழ்நன் (க.ப.சந்தோசம்), நகைச்சுவைக் கதைகள் எழுதினார். மு.வ.வின் கதைகள் நல்ல தமிழில் அமைந்தன. ஆயின் புலவர் எசுஎசுஅருணகிரி நாதர் கதைகள் வரைந்துள்ளார். சிறுவருக்காக, 'மழலை அரும்புகள்', 'ஒளிக் கதைகள்' என இரு நூல்கள் வந்துள்ளன.

தனித்தமிழ்ப் புனைகதையில் நெடுங் கதையாக தி.நா. அறிவுஒளி 'வாழ்வு' என்ற படைப்பை அளித்துள்ளார். சிறுகதைகள் இரண்டு தொகுதிகளும், வரலாற்றுக் கதையாகக் 'கயல்விழி', 'புதுவிடியல்' என்பனவும் மலர்ந்துள்ளன. பெண்ணெழுச்சிப் புனைகதையாக கனிமொழி, புதினம் வெளிவந்தது.

இத்துறையில் க.தமிழமல்லன் முதலியவர்கள் முயன்று வருகின்றனர். வருங்காலத்தில் தனித் தமிழன்பர்கள் பலவகைத் துறைகளிலும் முயல வேண்டும். புனைகதைக்காக இலக்கண நூற்பா இல்லை. இக்குறையை நீக்க நான் நூற்பா புனைந்தேன். அதனைக் காண்க.

"புனைகதை என்பது ஒருநல் கருவைப்
புனைந்து மொழிவ தாகும் என்பர்.
பொய்யைப் புனைவது புனைகதை யன்று
மெய்யொரு பாலாய் விளங்க அழகொடு
மெய்யுள் ளுறுத்து நற்றமிழ் நடையால்
நவில்வது தானே புனைகதை யாகும்
புவியில் வாழும் பொதுமாந் தரைத்தம்
இலகும் பண்போ வியமாய் இயம்பிக்
கற்றோர் சுவைக்கும் சுவைநயம் இணைத்து
மற்றோர் சுவைக் கதைமிக விளம்பி
எழுதும் திறனே இனிதாம்
வழுவில் தனித்தமிழ் ஆட்சி வளர்த்தே"
"புதினம் என்பது புகலுங் காலை
புதுமைக் கற்பனை, புலமை வளத்துடன்
புதிய கருத்துகள் பண்பாட் டாண்மை
பதிந்த கலைக்கதை பரபரப் போடும்
நிகழ்ச்சித் தொடர்பும் நெஞ்சில் நாட்டும்
மகிழ்ச்சி சுவைத்த மனத்தை மலர்த்தும்
தகுதி மயக்கம் நயத்துடன் உணர்த்தும்
கதைவழி உணர்வைக் கலைமெய்ப் பாட்டுடன்
விதைக்கும்; மாந்தர் வினையை, முதலை,
உலகியல், சூழ்நிலை, உளவியல், யற்கை
புலனுணர் வெதிர்வினை அவலம், புதிர்வினை
தெளிவுறத் தீட்டும் தெள்ளிய நடையில்
களிப்புடன் பலப்பல உணர்ச்சிக் கடல்களைக்
கற்பவர் உளத்தில் பொங்கச் செய்யும்
நற்பண் போவிய நன்னெறி காட்டும்.
ஆடவர் மகளிர் அடிக்கடி தம்மை
நாடகர் மான மாற்றிக் கொள்ளும்
கூடு விட்டுக் கூடு பாயும்
மனநிலைக் கூத்தெலாம் மருளற உணர்த்தும்
இனநலம், மன்பதை இயக்க மாற்றம்
வனப்பார் சுவையில் வடிக்கும், மக்கள்
இவற்றால் எய்தும் வாழ்வியல் தாக்கம்
இதுவெனத் தெளிக்கும் பொதுவாழ் வமைப்பில்
தவற்றை நலத்தைச் சார்பினை விளக்கும்
அறிவில் விருந்தாய் அகத்தின் மருந்தாய்ச்
செறிவும் ஆண்மையும் செம்மையும் ஊட்டும்.
ஊட்ட மருந்தாய் ஊக்கந் தருந்தாய்
வாட்டம் போக்கும் வாழ்க்கை ஓவியம்
முயற்சியை வளர்க்கும் முற்போக் கமைக்கும்
அயர்ச்சி யோட்டும் ஆண்மைப் படைப்பே.
இயல்பு நவிற்சியில் இயற்கை வாய்மையை
அயன்மை யின்றி அருங்கா தலிபோல்
மானடன் உணர்வை மலர்த்தும் நுண்கலை.
இயக்கம் இயக்கும் இந்நாள் உலகின்
கால வண்ணம் கழலும் உணர்வை
ஞால வளர்ச்சியை உணர்வின் எழுச்சியை
அறிவதன் நுணுக்கம் ஆகம வாய்மையை
வகுத்துக் காட்டும் வரலாற் றிலக்கியம்
தொகுத்துணர் வமுதைச் சுவைக்கத் தருவது
வாழ்க்கைத் திறனாய் வாழும் கலையே
வாழ்வின் நுட்பம், வளப்பம் நுட்பம்
வாழ்க்கை யாற்றல் மாண்புகள் மரபு
வாழ்வின் வனப்பு வண்ணம் பன்முக
வாழ்வின் இனிமை உண்மை, வடிவம்
வாழ்வின் வீழ்ச்சி, சிக்கல் முரண்பா
டெல்லாம் இயம்பும் வளமார் புனைகதை.
இனவளம் மணவளம் உயிர்வளம் இவற்றை
நனவில் நடப்பதாய் நம்ப வைக்கும்
எண்வகை மெய்ப்பா டிசைக்கும் நுண்கலை
பண்ணிசை நடையில் எண்ணத் துள்ளே
வெள்ளமாய்ப் பாய்ச்சும்! கொள்ளை யுணர்வுங்
கொள்கைக் கோபுரம்; குறிக்கோள் நாட்டும
வியப்பில் நெஞ்சைத் திளைக்கச் செய்யும்.
நயஉரை நடையோ வியமாய் வாழ்வின்
இயலுரை யாடல் தூய தமிழில்
ஆழம், அகலம், உயரம், நீளம்
ஊழனக் காட்டும் உள்ளத் தழுக்கை
ஒருங்கே ஓட்டும் நட்பில் கலையே
கலைவள எழுத்துக் கலையிது
மலைவளம் எனவுயர் மாண்புடைத் தாமே.

பாவாணர் மதவியற் கொள்கை

பாவலர் பரணன், திருவெறும்பூர்

பாவாணர் அவர்கள் ஒப்புயர்வற்ற ஓர் ஊழிப் பேரறிஞர். தமிழர்கள் தொல்காப்பியர். திருவள்ளுவரோடு ஒப்பவைத்து எண்ணி மதிக்கத்தக்க பெரும்புலவர். தமிழ்மொழி, இனம், நாடு ஆகியவற்றின் மீது அடர்த்துள்ள வலக்காரமிக்க வல்லாண்மையுள்ள பகையை அடையாளங்காட்டித் தம் அறிவாண்மைத் திறத்தால் தமிழர் எழுச்சி யுறுமாறு ஒளிப்புலன் பாய்ச்சிய செஞ் ஞாயிறு.

தமிழ், தமிழரின் பன்முகச் சிறப்புகளைப் பாரிற்குணர்த்த, கானல் நீரனைய, தாக்கணங்கன்ன வடமொழியைக் கண்டு மயங்கிநின்ற உலக மொழிநூல், மாந்தநூல் ஆய்வாளர்களுக்கு உண்மை நிலையை யுணர்த்தி, வழித்தடங்காட்டித் தொன்முது தமிழின் சிறப்பு முழுதும் வெளிப்படுமாறு விளக்கியுரைத்துத் தமிழெனும் உண்மை ஒளியின் பக்கம் திருப்பி விட்டவர் மொழி மூதறிஞர் பாவாணர் அவர்கள்.

தம் பல்துறை அறிவுத் திறத்தாலும், ஆராய்ச்சி வன்மையாலும் தமிழின் முதன்மை, தலைமை தமிழ நாகரிகப் பண்பாடுகளின் சிறப்பு, தமிழர் மதத்தின் மேன்மை ஆகியவற்றைத் துலக்கமுற விளக்கிக் காட்டியவர் பாவாணர். அதன்வழி தமிழ் மறுமலர்ச்சிக்கும், இனமுன்னேற்றத்திற்கும், உலகக் கூட்டுடைமைக்கும் தேவையான கருத்துச் செறிவுமிக்க கருவிநூற்களைப் படைத்தளித்த மொழியின மேம்பாட்டு மூலவர் பாவாணர்.

தமிழரின் மொழி, இன, நாகரிகப் பண்பாடு மற்றும் சமயம் என்னும் நான்கன் வரலாற்றையும் நன்கு துருவியாராய்ந்து பலப்பல உண்மைகளை உலகிற்குக் காட்டிச் சென்றுள்ளார்கள். அவற்றுள் பாவாணரின் மதவியற் கொள்கைகளையும், கடைப்பிடிகளையும் மட்டும் இங்குக் காண்போம்.

1940-ல் 'ஒப்பியன் மொழிநூல்' வெளிவருமுன்பே, தமிழர் மதம் பற்றிய தெளிவான முடிவிற்குப் பாவாணர் அவர்கள் வந்து விடுகின்றார்கள். அப்பொழுதே தமிழர் மதம் பற்றித் தனிநூல் எழுத வேண்டு மென்னும் குறிக்கோளுடையாராய்த் தெரிகின்றார். பின்னர் 1972-ல் 'தமிழர் மதம்' என்னும் நூலை வெளியிடுகின்றார். பின்பு, 1978-ல் வெளியிட்ட மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை என்ற நுலிலுங்கூடத் தமிழர் சமயம் பற்றிப் பேசி உலகக் கூட்டுடைமைக்(கு) அஃதுகந்த(து) என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

தமிழர் மதம் பற்றிய கருத்துகளை ஒப்பியன் மொழிநூல் (1940), Primary Classical Language of the World (1966), பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும் (1966), தமிழ் வரலாறு (1967), வடமொழி வரலாறு (1967), இந்தியால் தமிழ்

எவ்வாறு கெடும் (1968), திருக்குறள் தமிழ் மரபுரை (1969), தமிழர் வரலாறு (1972), தமிழர் மதம் (1972), மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை (1978), தமிழிலக்கிய வரலாறு (1979) என்னும் நூல்களில் பதிவு செய்துள்ளார்.

வரலாற்றுக் கெட்டாத் தொன்முது பழங்காலந் தொட்டு மேம்பட்டு வந்த தமிழரின் அகக்கரண வளர்ச்சி நிலை, பகுத்தறி வோடு பொருந்திய சிந்தனைப் போக்கு, கி.பி.1500 போல் நாவலந் தேயத்தும் புகுந்த ஆரியரால், அவரின் புரைமலிந்த கருத்துகளால் தடம் மாறிச் சிதைந் ததை வரலாற்றடிப்படையில் மொழியாய்வு, சொல்லாய்வுகளைக் கொண்டு பாவாணர் நிறுவிக்காட்டும் திறம் வியந்து போற்றத்தக்கது. அவருடைய நூலுத்தி தனிச்சிறப்பு வாய்ந்த, வேறெவர்க்கும் வாய்க்காத ஒன்று.

அவர் பிறப்பால் கிறித்தவராயினும், தமிழர் மதம் பற்றிய கருத்து வெளிப்பாடு களுக்கு அது தடையாக நின்று தடுக்க அவர் இடங் கொடுக்கவில்லை.

இன்னுஞ் சொல்லப் போனால் பண்டைத் தமிழர்களின் மேம்பட்ட கடவுள் சமயக் கொள்கையால் கவரப்பட்டு 1940க்கும் முன்பே திருவள்ளுவர் நெறியான கடவுட் சமயக் கொள்கையராக மாறி, இறுதிவரை கடவுட் சமயத்தாராகவே வாழ்ந்திருந்தார் என்பது அவர் நூல்களாலும், வாழ்க்கையாலும் அறிய முடிகின்றது.

குமரிக்கண்டத் தமிழனே உலகில் முதன்முதல் கடவுள் உண்மையைக் கண்டவன் என்பது பாவாணர் கருத்து. பண்டைத் தமிழர் தம் அகக்கரண வளர்ச்சி நிலைகளுக்கேற்பச் சிறு தெய்வ வணக்கம், பெருந்தேவ வணக்கம், கடவுட் சமயம் என்னும் ஒன்றினொன் றுயர்ந்த மூன்றன் நெறி நின்றார் தமிழர் எனப் பாவாணர் விளக்கு கின்றார்.

சிறு தெய்வ வணக்கம் தொன்று தொட்டு இன்றுவரை நம் நாட்டுப்புற மக்களிடம் (சிற்றூர்வாணரிடம்) நின்று நிலவுகின்ற உள்ளார்ந்த வணக்க வழக்க மாகும்.

பெருந்தேவ வணக்கம் என்பது பண்டு ஐந் திணைக்கும் தனித்தனிப் பெருந்தேவ வணக்க மாகத் தொடங்கி யிறுதியில் குறிஞ்சிக்குரிய சேயோன் வணக்கமாகிய சிவனியமாகவும் (சிவமதம்) முல்லைக்குரிய மால் வணக்கமாகிய மாலியமாகவும் (திரு மால்) தமிழர் மதங்களாக நிலைபெற்றன.

ஆரியர் மதத்துறையில் தமிழரை அடிமைப்படுத்தித் தங்கள் முத்திருமேனிக் கொள்கை, சடங்குகள், மொழி ஆகிய வற்றைத் தமிழரிடையே புகுத்தித் தமிழரின் அறிவியன் முறைப்பட்ட அடிப்படைக் கூறுகளை யெல்லாம் தாங்கள் எடுத்துக் கொண்டு தமிழ், ஆரியத் தெய்வங்களின் இணைப்பைச் செய்து மதப்பித்தங் கொண்டவராக நம் மூவேந்தரை யும், அவர் வழி மக்களையும் ஏமாற்றிப் பிறப்பால் தாங்கள் உயர்ந்தவர்கள் என்றும், தம்மொழி தேவமொழி அதுவே கடவுட்கு கந்தமொழி யென்றுங் கூறித் தமிழரைத் தலையெடுக்க வொட்டாது, குமுக நிலையில் மிகத் தாழ்த்திவிட்ட கரவுகளைப் பாவாணர் தம் 'தமிழர் மதம்' என்னும் நூலில் தெளிவு படுத்தியுள்ளார். 'மாந்தன் புற நாகரித்திலும் சிறந்தது அக நாகரிகம். அதன் விளைவே பல்வேறு பண்பாட்டறிவியல்கள். அவற்றுள் தலைமையானது மதவியல் அல்லது மெய்ப் பொருளியல் என்றே மேலையராலும் கருதப்பெறுகின்றது' என்றும்,

"தமிழன் அரும்பாடுபட்டுக் கண்ட மதத்தை ஆரியனதெனின் ஆரியனுக்குயர் வும், தமிழனுக்குத் தாழ்வும் ஏற்படுவதோடு உறைத்த மதப்பற்றுள்ள தமிழனுக்கிருக்கும் ஆரிய அடிமைத்தனம் இரும்புத்தனமாக இறுகவே செய்கின்றது. அதனால், ஆரியன் சுரண்டலும் அதிகரிக்கின்றது" என்றும் "ஊர், பேர், காலம், இடம், வண்ணம், வடிவம், பால், பருவம் முதலிய வரையறையின்றி, எங்கும் நிறைந்து எல்லார்க்கும், எல்லாவற்றிற்கும் பொதுவாய், எல்லாம் வல்லதாய், என்றும் மாறாதிருக்கும் பரம் பொருளை உள்ளத்தில் அகக்கண்ணாற் கண்டு தொழுது முக்கரணத் தூய்மையுடன் ஒழுகுவதே கடவுட் சமயம்" என்றும் மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யன்று என்பதை மிக அழுத்தமாக வலி யுறுத்தியும் 'தமிழர் மதம்' என்னும் நூலில்

குறிப்பிடுகின்றார். அந்நூல் நிறைவில் தமிழ் மக்களும், மதத்தலைவரும் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளைக் கூறித் தமிழ்நாட்டில் வழங்கும் எல்லா மதமும் தனித்தமிழ் போற்ற வேண்டும் என்றும், உருவிலா வழிபாட்டை மக்களிடையில் புகுத்த வேண்டுமென்ற வேண்டுகோளையும் வெளியிடுகின்றார்.

தமிழிலக்கிய வரலாற்றில் மூவர் தேவாரத்தையும், திருவாசகத்தையும், அருணகிரியாரின் திருப்புகழ் வண்ணங்களையும் புகழ்ந்து எழுதுகின்ற பாவாணர், தமிழர் மதம் என்னும் நூலில் அவர்களைப் பற்றிக் குறிப் பிடாமல், கடவுட் சமயக் கொள்கையரான திருவள்ளுவர், தாயுமானவர், பட்டினத்தார், வள்ளலார் ஆகியோரையே குறிப்பிட்டு எழுதுகின்றார்.

பாவாணரும், பாவாணரால் தம் மொழியியற் கொள்கைத் தலைவராகக் குறிக்கப்பட்டுப் போற்றப்பட்ட மறைமலையடிகளாரும், பாவாணரால் பெரிதும் மதிக்கப்பட்ட கா.சுப்பிரமணியனாரும், தமிழரின் மதவியற் கொள்கை பற்றி நூல் செய்துள்ளனர். அடிகளாரும், தமிழ்க் கா.சு. அவர்களும், உருவ வழிபாட்டை ஏற்றுக் கொண்ட சைவசமய நெறியாளர்கள். ஆனால் அவர்களைவிடவும் கடவுட் சமயக் கொள்கை யுடைய பாவாணரின் 'தமிழர் மதம்' புகட்டும் பாடம் தமிழர்கள் உள்வாங்கிக் கொண்டு ஒழுகத்தக்க பெற்றியது.

பாவாணரால் பெரிதும் மதித்துக் குறிப்பிடப்படுகின்ற அறிவர் திருமூலரும் முற்றளவாக ஆரிய ஆகமக் குறியீடுகளை விட்டொதுங்கி வரமுடியாநிலையில் நிற்க, பாவாணர் அவர்கள் சிவனிய, கடவுட் சமயக் கொண்முடிபுகளை முற்றளவாகத் தமிழ்ப் படுத்தி, ஆரியத்தை அறவே புறந்தள்ளித் தமிழ மதம் அகங்கொள்ளுமாறு செய்கின்ற பாங்கு தமிழரின் நெடிய சமய வரலாற்றில் ஓர் அரிய மீட்புப் பணியாகும். அவர் தமிழரின் மொழி மீட்பராக மட்டும் வரவில்லை. சமய மீட்பராகவும் வந்தார் எனப்பெருமை பேச வைக்கும் பெற்றியது.

பிறப்பால் கிறித்தவரான பாவாண ருக்கு, அவர்தம் குழந்தைப் பருவத்தில் நேர்ந்தது போன்ற பெற்றோர் இழப்பு நேர்ச்சியும், ஆங்கிலக் கிறித்துவக் குருமாரான தோக்கசு, எங் போன்ற பெருமக்களின் உதவியால் கல்விக்கண் திறப்பும், இடையில் இரண்டொரு பள்ளிகள் தவிர அடுத்தடுத்துத் தொடர்ந்து கிறித்துவப் பள்ளிகளில் பணிவாய்ப்பும் கிடைத்தது போல் வேறெவர்க்கும் வாய்த் திருப்பின் மிக ஈடுபாட்டோடு அவர் கிறித்துவ மதக் கோட்பாட்டினின்றும் விலகாமல், மிக ஆழமாகப் பற்றுக்கொண்டு பிணைத்துக் கொண்டிருப்பர். ஆனால் எப்பொழுதும் தம்மாய்வாற் கண்டவற்றைப் பிறருக்கு உரைப்பதைத் தானும் கடைப்பிடியாகக் கொண்டொழுகும் குணங்கொண்ட பாவாணர் அவர்கள் கடவுட் சமயக் கொள்கையாற் கவரப்பெற்று இறுதி வரை கடவுட் சமயக் கொள்கை யராக வாழ்ந்து நிறைந்தார் என்பதே உண்மை.

பாவாணர் வாழ்க்கை வரலாற்றில், பாவாணர் பிறப்பால் கிறித்தவர் என்பதும், 1932இல் கிறித்தவக் கீர்த்தனைகள் பாடினார் என்பதும், 1936இல் பிறந்த தம் இரண்டாம் மகனுக்குச் சிலுவையை வென்ற செல்வ ராயன் எனப் பெயரிட்டார் என்பதும், முன்பே குறிப்பிட்டது போல கல்வி வாய்ப்பும், பணிவாய்ப்பும் கிறித்துவ நிறுவனங் களால் கிடைக்கப் பெற்றார் என்பதுங் கொண்டு அவரைக் கிறித்துவ மதத்தார் என்று குறியீடு செய்துவிட முடியாது.

பாவாணர் ஓர் இலக்கணப் பித்தர் மட்டுமல்லர். மாபெரும் இசைப்பித்தருங் கூட. அவர் எழுதி வெளிவந்த செறிந்த ஆய்வு நூல்கட் கிடையில் பாட்டு நூல்கள் ஐந்து வெளிவந்துள்ளன. சிறுவர் பாடல்திரட்டு, கிறித்தவக் கீர்த்தனம், செந்தமிழ்க் காஞ்சி, இசையரங்கு இன்னிசைக் கோவை, இசைத் தமிழ்க் கலம்பகம் என்பவை யவை.

இலக்கிய இன்பத்திலும், இசை இன்பத்திலும் தோய்ந்த இயல்பான படைப்பாற்றல் உள்ளவர்கட்குத் தாம் தோய்ந்தவற்றைப் போல் ஆக்கிக் காட்டுவதில் ஈடுபாடு உண்டு என்பதை நம் பண்டைப் புலவர்கள் பலர், அவர்தம் முன்னோர் கைக்கொண்ட பாட்டை,

யாப்பைக் கொண்டு புதிய கருத்துகளைப் பாவாணர் அவர்களும் சிலம்பின் ஆய்ச்சியர் குரவைப் பாட்டில், அதன் இசையில் தோய்ந்த தால் அதன் சாயலில் தேவ குமாரனைப் பாடும் பாடல்களையும், சென்னி குளம் அண்ணா மலையாரின் காவடிச்சிந்தில் சிந்தை தோய்ந்த தால் சிலுவைச் சிந்தும் எனக் கிறித்தவக் கீர்த்தனைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

ஒரு படைப்பாளிக்குப் படைப்பாற்றல் உந்திக் கிளறும்போது, அவன் ஏற்கனவே தோய்ந்த பொருளில், நிகழ்ச்சியில், அல்லது அவன் உள்ளத்தைத் தாக்கி நெகிழக் கசியச் செய்த நிகழ்வுகளைப் புதிய படைப்பாக வெளிப்படுத்துவான். அந்த வகையில் எழுந்ததே கிறித்தவக் கீர்த்தனைப் பாடல்களும், ஏசுவின் சிலுவைப்பாடும் பாவாணரின் அருளுள்ளத்தில் தோற்றிய அழுத்தமே சிலுவையை வென்ற செல்வராயன் என்ற பெயர் வைப்புமென்க.

1940இல் இருந்து தொடர்ந்து வெளி வந்து கொண்டிருந்த ஆராய்ச்சி வெளிப் பாடுகளும், அவரின் வாழ்க்கை நெறிப்பாடு களும், அவர் ஒரு தெளிந்த 'கடவுட் சமயத்தார்' என்பதையே காட்டி நிற்பனவாம். பாவாணர் அவர்கள் விரும்பிப் பலவிடங்களிற் குறிப்பிடு கின்ற

"எண்ணிற்கு மெட்டா விடங்காலந் தேங்காவி
கண்ணிற்கோ எட்டுங் கனப்பொருளாம் – வண்ணிக்கக்
கூடாம லன்றோ குறித்தார் கடவுளென
நாடாம லுண்டென நம்பு"

என்ற அவரின் வெண்பாப் பொருளே அவரின் சமயச் சால்புணர்த்தும் சான்றெனக் கொள்ளத்தக்கதாம்.

காலமெலாம் வாழ்வார்!

எத்தனையோ மொழியறிந்த பாவா ணர்தாம்
எழுதுவதும் பேசுவதும் தூய்த மிழ்தான்!
முத்தனைய பழமொழிகள் உவமைப் பூக்கள்
மொய்த்துமணங் கமழும்நடை அவர்ந டைதான்!
எத்திசையின் தமிழ்வழக்கும் அவரைப் போலே
எவர்அறிந்தார்? கருவியிசை நான்கும் வல்லார்!
தித்திக்கும் பன்னூறாம் இசைப்பா டல்கள்
தீட்டிஇசைத் தமிழ்க்குவளம் கூட்டி நின்றார்!

இருபதாம் நூற்றாண்டுத் தமிழி யக்கம்
இவர்உழைப்பால் செழித்ததுதான்! இந்திப் போர்க்கே
எருவாகப் பலநூல்கள் இயற்றித் தந்தார்;
இயக்கத்தில் தமைஈடு படுத்திக் கொண்டார்;
வரும்எதிர்ப்பை வரவேற்றார்; வறுமைத் துன்பம்
வாட்டுகின்ற நிலையினிலும் மானம் காத்தார்!
கரும்பொன்பா வாணர்ஓர் இயக்க மாகக்
கனிதமிழ்வாழ் காலமெலாம் வாழ்வார், வாழ்வார்!

முனைவர் இரா. இளவரசு

பாவாணர் கதைகள்

பாவலர் முல்லைவாணன், சிங்கை

ஊண் உடை எச்சம உயிர்க்கெல்லாம் வேறு அல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு (1012)

உணவு உண்கையும் உடை அணிகையும் உறங்கல் செய்கையும் இணை விழைக்கையும் இடமும் பொருளும் காலமும் நேரமும் வேறுவேறு பிரிவாய் நேர்ச்சி நேரல்களைப் பொறுத்து மாறுபட நிற்பது மாந்த உயிர்கள் மட்டில் பொதுவாயினவெனினும், அவ்வுயிர்கள் உயிர்ப்புற்றுப் பெருமை பெறுவது உள்ளத்தே நாணமென்னும் நல்லொளிச் சிறப்பொன்றாலேயாம்.

அந்நாணச் சிறப்புக்கு அணிகலனாகத் திகழ்ந்தவர்தாம் தேவநேசக் கவியரசராகத் சிறப்புற்றுப் பைந்தமிழ்ப் பாகரான பாவாணர்.

வடமொழி வரலாறும், தமிழ் வரலாறும் தமிழர் மதமும், தமிழ் இனமொழி நாட்டை மீட்டெடுக்கும் நீரகக்குண்டுகளாக ஆக்கித்தந்தவர் அவர்.

எண்நான் மொழியும் இயல்பும்
கிளைப்பும் இவர்வழியும்
பண்நான் அறிவும் பழந்தமிழ்
மீட்பும் பரிதியென
நுண்மாண் நுழையும் பகைக்கூற்
றழிப்பும் நுவலரிய
பண்பான் இணையும்பா வாணர்
படைப்புகள் பார்நிலையே

என்பதற்கொப்ப, அவரது படைப்புகள் தமிழெதிர்நின்ற பகைவெள்ளத்தை மடைமாற்றிய பொருண்மைக்குப் பெருமை சேர்த்தவை.

தாமே தமிழ்காப்போர் எனவும் தமிழறிஞர் எனவும் பறைசாற்றிய பலரும் மொழிமானம் கெடுத்து இனமானம் தடுத்து நாட்டு மானம் நலித்துச் சூழநின்ற காலத்துத் தன்மானத்தோடு உயிரோம்பிய தகைமையாளர், பாவாணர் ஒருவரே.

அவர் தூக்கி நிறுத்திய ஏணிகளில் ஏறிக்கொண்டு மரத்தையே கூர்பார்க்கும் அன்பர்களுக்காகவும் நாம் வருந்தவே வேண்டியுள்ளது.

காட்டுப்பாடி விரிவகத்தில் கோடைக்கடுமையில் பூத்துண்டை நனைத்து அரைப்பிழியலாக்கித் தலைமுதல் போர்த்துக் கொண்டு அந்த வளிப்பதன் (A.C.) கற்பனை இன்பத்தில், ஆராய்ச்சி மழை பொழிந்தவர் பாவாணர்.

வாராது வந்து வாய்த்த அருமணி போல் கருதி, எருதந்துறைப் பல்கலைக் கழக அகரமுதலியைத் தழுவிக் கிடந்தும் மகிழ்ந்தும் வருவோர் போவோரிட

மெல்லாம் வாய்மணந்துப் பேசியும் அவற்றைக் கழிவின்றித் தந்த கழகப் பெருமையை நன்றி மறவாது கழன்றும் அதுபோல் தமிழுக்கும் ஆக்கம் செயக் கனிந்து நின்றவர், பாவாணர். தமது ஒளிப்படம் நேர்காணல் போன்றவற்றில் - இதழ்களில் வெளியிடப்பெற்றுப் பலரும் பார்க்க நேர்ந்தால் - பழைய புத்தகக் கடைக் காரர்கள், எட்டணா புத்தகத்தை நாலணா கேட்டவர் இவர்தாம் எனக் கண்டு கொள்வா ரென அஞ்சி ஒளிப்படமே எடுத்துக் கொள்ளாத பெருநாணம் உடையவர் அவர்.

பாவாணரை ஏற்றுக்கொண்ட தென் மொழி - அவர் கருத்துகளால்தாம், உலக மெலாம் உலாப் போந்தது. பாவாணரது படைப்புகள் உண்மையும் உரிமையும் தன்னம் பிக்கையும் கொண்டிருந்தமையால் தாம், அவரைத் தாய்த்தமிழகம் கண்டுகொள்ளும் முன்னரேயே மலேசியப் பாவாணர் மன்றம் பரிந்தணைத்துக் கொண்டது. சிங்கப்பூர் மாதவி இலக்கிய மன்றம் போன்றவை முதல் தாய் மொழியை விழாக்காலப் பரிசு நூலாக்கி மகிழ்ந்தன.

பாவாணர் நூற்றாண்டு விழாக்குழு - பாரிட்புந்தர், குவாலாலும்பூர், மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மலேசியத் திராவிடர் கழகம், மலேசியத் தமிழ் நெறிக் கழகம், திருவள்ளுவர் நற்பணி மன்றம், திருக்குறள் மன்றம், தமிழ் எழுத்தாளர் பேரவை, தமிழ் இளைஞர் மணி மன்றம் முதலானவையும், சிங்கப்பூர்த் தமிழர் சீர்திருத்தச் சங்கம், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் கழகம், சிங்கப்பூர்த் தமிழர் இயக்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், சிங்கப்பூர்த் தமிழவேள் நாடக மன்றம், சிங்கப்பூர்த் தமிழ்ப் பாட மேம்பாட்டுக் கழகம், சிங்கப்பூர்த் தமிழ்மொழிப் பண் பாட்டுக் கழகம் முதலியவையும், இன்று நல்ல தமிழைப் பாடப் புத்தகங்களிலும் வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ், கிழமை, திங்களிதழ்களிலும், பேச்சுரை களிலும், முட்டுப்பாடின்றித் தூய்தமிழ் வளர்ச்சியிலும் இனக்காப்பிலும், நாடு மீட்பிலும் கருத்தூன்றிச் செழித்திருப்பதற்குப் பாவாணர் கருவி களையே கையெடுத்துள்ளன என்பது, முக்கால உண்மையாகும்.

இவ்விரு நாடுகளில் மட்டுமல்லாது, ஏனைய தமிழுறவு நாடுகளிலும் தமிழ் வளர்ச்சியும் இனமலர்ச்சியும் நாட்டு உரிமை யும் உண்மையாக வளர்ந்துள்ள தெனில், அவை பாவாணரின் பங்களிப்பேயன்றி வேறன்று.

பாவாணர் வழித்தடத்தில் மலேசியத் திரு கா.முருகையனார், திரு இர.திருச் செல்வம் ஈழத்துப் பூராடனார் (கனடா) முதலிய பெருமக்கள், தமிழ்ச் சொல்லாக்கத்தில் திளைத்துக் கருவிநூல்களைப் படைத்து வருகின்றனர். கணினி முதலிய துறைகளில் முழுமைப்படுத்தப் பெற்ற சொல்லாக்க அகரமுதலிகள் இன்னும் செறிவாய்த் தோன்றியபாடில்லை. இ,ஊ,கு - முதலிய வற்றுள் இ,கு மேற்சுழித்தும் ள-கரத்தைச் சிறிதாக்கியும் எழுத்துச் சீர்திருத் தத்தைக் கொளக்கூறியவர் பாவாணர். இப்பொழுது கைசலிக்கப் பெரியாரைப் பேணுகிறோம். வழக்கம் பழக்கமாகிவிட்ட பின்னர்ச் சீன, சப்பான், இந்தி மொழிகள் முதலியவற்றின், எழுத்துருகளைக் கவனங் கொள்ளாத கணினி அமைப்பால், இன்று செருப்புக்கேற்ற காலை உருவாக்கிக் கொண்டு இடர்ப்படுகின்றோம். கணினிச் சொல்லாக்க அறிஞர்கள் பெரும்பாலும் பொறியறிவு பெற்றவரேயன்றி மொழியறிவு பெற்றவரன்று. மொழியறிஞரும் கூடச் சொல்லாக்கத் துணைக் கருவிகளைக் கூர்மைப்படுத்தாது வெளிப்படுத்தும் வல்லுநர் களே எனலாம்.

தமிழை மீட்கவும் தமிழரைத் தெளிய வும் தமிழ்நாட்டைப் புரியவும் பாவாணர் நமக்களித்த ஊற்றுக்கண்கள், என்றும் அறை போகாதவை.

புதிய சொல்லாக்கங்களும் புதிய இலக்கண நெறிவகுப்பும் தமிழை மேலும் வளப்படுத்தும். அவற்றை ஒருங்கிணைத்துச் செய்ய அறிஞர்கள் முற்படுவார்களாக. அதுவே பாவாணர் நூற்றாண்டுக்குப் பயன் சேர்ப்பதாகும்.

பாவாணர் என்னும் பனிமலையின் சீர்பெருக
நாமுழைப்ப தென்றும் நலம்.

"திராவிட இயக்கமும் பாவாணரும்"

பொன் மாறன், மதுரை

'தமிழே ஞாலத்தின் முதன் மொழி'; 'மாந்தன் பிறப்பிடம் மறைந்த குமரிக்கண்டமே'; என்ற கருத்துகளைக் கூறிய மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். அவர் காலத்துப் புலவர்களும் தமிழ்ப் பேராசிரியர்களும் தமிழ் மொழியை வடமொழியோடு ஒப்பிட்டுப் பேசித் தாழ்த்தி வந்தனர். இத்தகைய போக்கினைத் தகுந்த சான்றாதாரங் களுடன் மறுத்துரைப்பார் யாரும் இல்லாத நிலையில், தமிழ்மொழி ஆராய்ச்சியைத் துவக்கிய பாவாணர் தம் நுண்மாண் நுழைபுலனாய்வால் 'ஒப்பியன் மொழி நூல்' இயற்றி வெளியிட்டபோது கரந்தை தமிழ்ச்சங்கப் புரவலாராயிருந்த தமிழவேள் த. வே. உமாமகேசு வரம் பிள்ளை அவர்கள் மதிப்புரை வழங்கியது அன்றைய நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

'வட மொழியாளர் கொள்கைகளை யெல்லாம் பிய்த்தெறிந்து, தமிழ் மொழி முதல் முதன்மையுடையதென்றும், அது ஒப்புயர்வில்லாத் தனி மொழியென்றும், தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும் வடமொழியும், வடமொழியாளரும் கடப்பாடுடையரென்றும் திரு. பாவாணர் தம் நூலில் நிலை நாட்டியுள்ளார்'. (ஒப்பியன் மொழி நூல் மதிப்புரை - 'தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளை')

திராவிட இயக்கக் கோட்பாடுகளான ஆரிய எதிர்ப்பு, வடமொழி, இந்தி எதிர்ப்பு, பேராயக்கட்சி எதிர்ப்பு முதலியவற்றில் அரசியல் குமுகாயத் தளங்களில் திராவிட இயக்கத் தலைவர்கள் பணியாற்றியபோது, மறைமலை யடிகளாரின் வழியில் முழுவதும் மொழித் துறையில் ஆரிய, வடமொழி, பேராய எதிர்ப்புப்பணியில் ஈடுபட்டதோடு 35-க்கு மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழ்மொழியைப் பாதுகாக்கும் படைக் கலன்களாக வெளியிட்டு தமிழ் மொழியின் சிறப்பைத் தமிழரும், உலகத்தாரும் உணருமாறு செய்தார்.

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எழுதித் தமிழ் தனித் தியங்கும் ஆற்றலுடையது என்று நிறுவிய கால்டுவெலாருக்குத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலியன கிடைக்கப்பெறவில்லை. எனவே அவரும் மாறு பாடான செய்திகளை எழுதினார் என்று கூறிய பாவாணர் தமிழே திராவிட மானது என்று எடுத்துக் காட்டினார்.

தமிழம் - த்ரமில(ம்) - த்ரமிள(ம்) - த்ரவிட(ம்) என்னும் வடிவுகளை முறையே நோக்கின் தமிழம் என்பதன் திரிவே திராவிடம் என்பது புலனாம். ஆயினும் கால்டுவெலார் இயற்கைக்கு மாறாகத் திராவிடம் என்னும் சொல்லே தமிழ் என்று திரிந்ததாக முடிவு செய்தார். ஆயின் மொழியறிஞர் கிரையர்சன் இதை மறுத்து தமிழம் என்பதே திராவிடம் என்பதன் மூலம் என்று நாட்டினார். ('திரவிடத்தாய்' : பக்கம் - 8)

பேராயக்கட்சி (காங்கிரசு), இந்திமொழி இவையெல்லாம் தமிழ்மொழி, தமிழ்நாடு தமிழர்க்கெல்லாம் எதிரானது என்பதைத் தம் கருத்தாக வெளியிட்டவர் திருமிகு. பாவாணர். 'வண்ணனை மொழி நூலின் வழுவியல்' (பக் : 58) என்ற நூலில் பேராசிரியர் தெ. பொ. மீ. பற்றிக் கூறியபோது 'இவர் பேராயக் கட்சி சார்ந்தவர், பேராயத்தைச் சேர்ந்ததினாலேயே இவர் இதுவரை இந்தியை எதிர்த்ததில்லை; இந்தியை ஏற்பவர் உண்மையான தமிழன்பராயிருக்க முடியாது' என்று உறுதிபடக் கூறினார்.

தம்முடைய அனைத்து நூல்களிலும் தமிழின் முதன்மையான, சிறப்பை அதன் ஆற்றலைத் தன் மொழியாராச்சித் திறத்தால் நிறுவிய பாவாணர் அவ்வப்போது தமிழ் இயக்கத்திற்கு மாறாக இயங்குவோரை எச்சரிக் கின்றார். தமிழின் மேன்மைக்குப் பயன்படு வாரையெல்லாம் குறிப்பால் உணர்த்துகிறார்.

'நயன்மைக்கட்சி' (Justice Party) எத் துணை கைதூக்கினும், மொழி நூலாராய்ச்சி எத்துணை உண்மை வெளிப்படுத்தினும் பெரியார் எத்துணை எச்சரிக்கினும், மறை மலையடிகள் எத்துணை வழிகாட்டினும் ..... தமிழர் விழிப்புணர்வு பெறவில்லையே என்று கூறுகிறார். ('தமிழர் வரலாறு' - முகவுரை)

1968இல் திருச்சியில் 'உலகத் தமிழ்க் கழகம்' என்ற இயக்கத்தைத் துவங்கி தலைமை தாங்கி நடத்தினார்; அன்றைய துவக்க விழாவில் தமிழ்க்கடல் மறை மலையடிகளாரின் மகனார் மறை. திருநாவுக்கரசரையும், பெரியாரின் தன்மான இயக்கத்தினராகிய புலவர் பொன் னம்பலனாரையும் வரவேற்றுப் பேசினார்.

தமிழாசிரியராகப் பணியாற்றியபோது 1937இல் முதல்இந்தி எதிர்ப்புப் போரை மையமாகக் கொண்டு 'செந்தமிழ்க்காஞ்சி' நூல் வெளியிட்டார்; இந்தி எதிர்ப்புக் கிழமை கொண்டாடினார்.

1955இல் பெரியார் ஈ. வெ. ரா தலைமை யில் நடைபெற்ற சேலம் தமிழ்ப் பேரவை, பாவாணரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி 'திராவிட மொழி நூல் ஞாயிறு' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1968இல் 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' என்னும் நூல் இயற்றி வெளி யிட்டார்.

1974இல் தி. மு. க. தலைமையில் நடந்த தமிழக அரசால் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களால் 'செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகரமுதலி'த் திட்ட இயக்குநராகப் பணி யமர்த்தம் செய்யப்பட்டார்.

1979ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் அவர்களால் 'செந் தமிழ்ச்செல்வர்' என்னும் சீரிய விருது தமிழ் நாட்டரசால் வழங்கப்பட்டது.

மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் தம் மொழியாராய்ச்சித் திறத்தால் தமிழின் ஒப்புயர்வற்ற மேம்பாட்டுத் தன்மையை விளக்கியவர். அதற்கு உறுதுணையாக விளங்கிய திராவிட இயக்கத்தின் பால் பற்றுக் கொண்டவர்.

வானத்து மீனுக்கு வன்தூண்டில்

இந்து ஐரோப்பிய மொழிகளின் அடிப்படை தமிழே. அவற்றின் கொடுமுடியே சமற்கிருதம். ஆகவே, ஐரோப்பிய மொழியமைப்பின் அல்லது வரலாற்றின் திறவுகோல் தமிழிலேயே ஆழப்புதைந்து கிடக்கின்றது. இதைக் கண்டுபிடிக்கும்வரை மேலையர் மொழியாராய்ச்சி யெல்லாம் *விழலுக்கு நீரிறைத்தலும் வானத்து மீனுக்கு வன்தூண்டில் இடுதலுமேயாகும்.*

- பாவாணர்

பாவாணரின் மாந்தநேயம்

தா.அன்புவாணன் வெற்றிச்செல்வி

பாவாணரின் தமிழ்வாழ்வு பலர் அறிந்ததே! அத் தமிழ் வாழ்வில் பாவாணரின் மாந்தநேய வாழ்வும் பின்னிப் பிணைந்திருந்ததென்பதை எண்ணி மகிழ்வோம்!

நேயம் - நேசம்

தமிழ் 'நேயம்' வடமொழியில் 'நேசம்' ஆகி 'நேசன்' என்பது பிறந்தது. 'நேசம்' என்னும் பெயரும் தமிழில் (!) வழங்கும் அளவிற்கு 'நேயம்' என்பதோ 'நேயன்' என்பதோ வழங்கவில்லையே!

நேயம் மாந்தனோடு சேர்ந்தால் மாந்தநேயம்! மாந்தர்க்கு இது வெறுப்பிற்குரியதுமன்று; விருப்பிற்குரியதுமன்று; பொறுப்பிற்குரிய தாய்ப் போற்றப்பட வேண்டுவதாம்.

சொல்லும் செயலும் ஒன்றே!

பாவாணர் மாந்தநேயம் போற்றினார். சொல்லும் செயலும் ஒன்றா யிருப்பதில் ஒருசிறிதும் தவறாத பாவாணர் தம் வாழ்வில் மாந்தநேயம் போற்றினார்.

" தமிழர்கள் அனைவரும் தமிழ்ப் பெயரே தாங்கல் வேண்டும்." என்ற பாவாணர், தம் மக்களுக்கும் தம்மோடு தொடர்புகொண்டோர்க்கும் இனிய தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார். தாம் கிறித்தவரா யிருந்தும் தமிழ்ப்பெயரே சூட்டி, தமிழர் தமிழ்ப் பெயர் தாங்கலில் தமது மதம் கூடக் குறுக்கிடத் தேவையில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்; கிறித்தவரும் இசுலாமியரும் பிறரும் தமிழ்பேசும் தமிழராயின் தமிழ்ப் பெயர் தாங்கலே, தமிழ்ப்பெயர் சூட்டலே தகும் என்பதையும் விரிவுபடுத்தினார்.

தமிழர் எழுத்தும் பேச்சும் நடைமுறையும் தமிழாய் - தனித்தமிழாய் விளங்கவேண்டும் என்று விரும்பியறிவித்தார். தம் வாழ்நாள் முழுதும் தாமே வாழ்ந்து வழிகாட்டினார்.

"தமிழைப் பேணார் தமிழர் ஆகார்" என்று சொன்ன பாவாணர் தமிழைப் பேணித் தம் வாழ்வையே தமிழ் வாழ்வாய்த் தந்தார்.

மாந்தத் தன்மை

மாந்தத் தன்மை யென்பதே 'மனிதாபிமானம்' ஆம், அதுவே மாந்தநேயம். தந்தை பெரியார் கூறுவார் :

"தன்னலத்தையும் தன்மானத்தையும் (மானாபிமானத்தையும்) விட்டு எவன் ஒருவன் தொண்டாற்றும் பணியை வாழ்வாகக் கொண்டிருக்கிறானோ, அவன்தான் மற்ற உயிரிகளில் (ஜீவப்பிராணிகளில்) இருந்து வேறுபட்ட மாந்த (மனித)த் தன்மை கொண்ட மாந்தனாவான்."

மேலும் மாந்தனின் முதல் கடமையாகப் பெரியார் கூறுவார் :

"இந்த நாட்டில் மாந்தன் (மனிதன்) மற்றோர் மாந்தனால் இழிவாய்க் கருதப்படு கிறான் என்பதை ஒரு மாந்தன் உணருவானா னால், அவனுக்குக் கடுகளவு தன்மானம் (சுயமரியாதை) இருக்குமானால், அவன் மாந்த இழிவைப் போக்கத்தான் முதலில் பாடுபடு வான்."[2]

பாவாணர், ஒரு மாந்தனை இன்னொரு மாந்தன் இழிவு செய்வதைக் கண்டு கொதித் தெழும் மாந்தத் தன்மை நிறைந்தவராகவே விளங்கினார்.

மறை. திருநாவுக்கரசு அவர்கள் பாவாண ரைப் பார்த்து, மறைமலையடிகள் வரலாற்றில் பாவாணரைச் சிறப்பித்து எழுதியிருப்பதாகவும், 'அரிசன்' என்று குறித்திருப்பதாகவும் சொல்லிச் செல்கிறார். அதுகேட்டு வெகுண்டெழும் பாவாணர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் வ. சுப்பையா அவர்களுக்கு 27.10.1960இல் கடுமையாக ஒரு மடல் எழுது கிறார். அம் மடல் முழுதுமே 'மறை. திருநாவுக் கரசு' என்பதை 'மடைத் திருநாவுக்கரசு' என்றே சுட்டுகிறார். அத்துடன் அவரை உயர் திணை யில் சுட்டாமல், அஃறிணை போன்று சொன் னது, என்றது, இழிவுபடுத்தியுள்ளது என்றே குறிப்பிடுகிறார். எனில், பாவாணர் சீற்றத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். சிறியவரை யும் மதிக்கும் பண்பாளர் பாவாணர் எழுது கிறார் :

"எத்துணைச் சிறந்த புலவர் வயிற்றிற், புலிக்குப் பிறந்த பூனை போலத் தோன்றி யுள்ளது மடைத் திருநாவுக்கரசு! நான் அரிசனு மல்லேன்; அரசனுமல்லேன். குலமற்ற தமிழன்."[3] என்று ஆணித்தரமாய் அறையும் பாவாணர் உள்ள நிலைமை உரைக்கிறார்.

"இன்று வழக்கில் இருக்கும் பிறப்புப் பற்றிய குல(சாதி), வேறுபாடு ஆரியரால் புகுத்தப்பட்டது. இதைத் தமிழ் மறையாகிய திருக்குறளும் சிவ மறையாகிய திருமந்திர மும் கண்டிக்கின்றன. மறைமலையடிகளும் 'சாதி வித்தியாசமும் போலிச் சைவரும்' என்ற நூலெழுதினார். மடைத் திருநாவுக்கரசு சேர்ந்துள்ள பேராயக் (Congress) கட்சியும் குலமற்ற கூட்டரவை யுண்டுபண்ணுவதாகச் சொல்கின்றது. தொழில் பற்றிய வகுப்பு வேறுபாடே நாடுகளில் காணப்படுகின்றது. இங்கும் ஆரியர் (பிராமணர்) வருமுன் அப்படித்தான் இருந்தது. அம் முறைப்படி நான் அந்தணர் வகுப்பில் பார்ப்பனர் என்னும் உட்பிரிவினன். தாங்கள் வணிக வகுப்பில் புத்தக வணிகர் என்னும் உட்பிரிவினர். ஆயினும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஆயிரத்தெட்டுக் குலங்களாகத் தமிழர் இனம் பிரிந்து சின்னபின்னமாகச் சிதைந்து வலியற்று ஆரியராலும் அயலாராலும் நலிவுற்று கிடப்ப தாலும் மேலும் நலிவுறுத்த இந்தி வந்து கொண்டிருப்பதனாலும் வேற்று மைகளை யெல்லாம் விலக்கித் தமிழரையெல்லாம் ஒன்றுபடுத்தி மீண்டும் ஒரு நாட்டினமாக (Nations) அமைப்பதே தக்கதாம். தமிழரெல் லாம் ஓரினமென்று வரலாறு மொழிநூல் மாந்தநூல் ஆகிய மூன்றும் ஒருங்கே முழங்கு கின்றன."[4]

மேலும், பாவாணர் சினம் எவ்வாறு வெளிப்படுகிறது, பாருங்கள்.

"இன்றிருக்கும் தமிழரெல்லாருள்ளும் உயர்ந்தவனாக என்னைக் கருதுகின்றேன். தாழ்த்தப்பட்டவன் என்று தமிழ்ச் சொல்லால் குறிப்பதே தவறு. அதிலும் தவறு வடவர் ஒருவர் (காந்தி) புனைந்த அரிசன் (ஹரிஜன்) - மால்மகன் என்னும் வடசொல் லாற் குறிப்பது."[5]

என்று சொல்லும் தமிழ்த்தந்தை பாவாணர் என்ன செய்ய வேண்டுமென்றும் சினம் தீராமல், குணம் மாறாமல் கூறுகிறார் :

"தந்தையார் வரலாற்றைத் தவிர வேறொன்றும் எழுதத் தெரியாத மடைத் திருநாவுக்கரசை உடனே அழைத்து இம் முடங்கலைக் காட்டுக. மறைமலையடிகள் வரலாற்றில் என்னைப் பற்றிய பகுதியைக் கிழித்தெறிக. மடைத் திருநாவுக்கரசால் எனக் கொரு புகழும் வேண்டியதில்லை. என் தொண்டை இரண்டோராண்டில் உலகறியும். என்னைப் பற்றிய பகுதியைக் கிழித்தெறிய இயலாவிடின் அரிசன் என்று குறிப்பிட்டுள்ள தொடர் முழுவதையும் காரச்சு மையால் மறைத்துவிடுக. இனிமேற் செலவாகும் படிகளி லாவது திருத்தியிருக்கட்டும். இது எளிதாக இயல்வதே."[6]

இதேபோல், தாழ்த்தப்பட்டவர் என்று பிறர் சொல்வதினும், தாழ்த்தப்பட்ட மக்களே தம்வாயால் தாழ்த்தப்பட்டவன் என்று சொல் லிக் கொள்வது தம்மைத் தாமே தாழ்த்துவ தாகும் என்றும், தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்க்கென்று தனிவிடுதிகள் இருப்பதை யும் பாவாணர் கண்டிக்கிறார். பொது விடுதி களிலேயே இவர்களும் தங்கு வைக்கப்பெற வேண்டும் என்றும் விரும்புகிறார்.

தோட்டி வேலை

தோட்டிகளுக்குத் தெருக்கூட்டுதல், குப்பை வாரிக்கொண்டு போய்க் கொட்டுதல், விளக்கேற்றல், பறையறைந்து விளம்பரஞ் செய்தல் போன்ற துப்புரவுப் பணிகளே யிருத்தல் வேண்டும்; நரகல் எடுக்கும் வேலை கூடாது என்று கடிவதோடு, ஒழிக்கும் வழியை யுங் கூறுகிறார் பாவாணர் :

"மாந்தன் நரகலை மாந்தனே வாரிச் சுமக்கச் செய்வது, நாகரிக மனிதனுக்கும் நாகரிக அரசிற்கும் கடுகளவுந் தகாது. ஒவ்வொரு வீட்டிலும் அடிப்புச் (Flush - out) சலக்கப் புரையே யன்றி எடுப்புச் சலக்கப்புரை யிருத்தல் கூடாது."[7]

பாவாணருடைய மாந்தநேய விருப்பம் இப்போது நிறைவேறி வருவது மகிழ்விற் குரியது. இப்போது கட்டும் புது வீடுகளிலும் பொதுக் கழிப்பறைகளிலும் அடிப்புச் சலக்கப் புரையே அமைக்கப்படுகிறது.

சோறும் சாதமும்

1958இல் கோவையில் நிகழ்ந்த சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில், 'தமிழ் மொழியில் கலைச் சொல்லாக்கம்' என்ற தலைப்பில் உரையாற்றியபோது பாவாணர் உரைத்தது :

"சென்னையிலே ஒருமுறை நானும் சுப்பையா பிள்ளையும் இருந்தபோது திருநெல் வேலியிலிருந்து 'நான் சைவ வேளாளன்' என்று தம்மைப் பெருமையாகச் சொல்லிக் கொள்பவர் ஒருவர் வந்தார். சாப்பிட்டு வந்ததும் 'என்ன ஐயா நன்றாகச் சாப்பிட்டீர்களா?' என்று கேட்டேன். 'சாதம் நன்றாக இருந்தது' என்றார். 'சோறு' என்று சொல்லுங்களேன்' என்றேன். 'சோறு என்று சொல்லுதற்கு, நான் என்ன பள்ளு பறையா?' என்றார். அப்போது நான் 'பள்ளு பறையன் தான் சோறு உண்பதா? அப்படியானால் நீர் வேறு உண்ணும்' என்றேன். ஆகவே, தமிழன் இப்படித் தன்னைத் தாழ்த்தி வைத்திருக் கிறான். இஃது ஒன்றே போதும், தமிழ் தாழ்த்தப்பட்டது, தமிழர் தாழ்த்தப்பட்டனர் என்பதற்கு." (தென்மொழி 1 : 10)

மாந்தநேய உணர்வால்.....

தாழ்த்தப்பட்டவர்களும் தாழ்த்தப் பட்டார் என்ற சொல்லும் தொடர்ந்து இருக்கக்கூடாது; ஒரு காலத்திற்குப்பின் அவ்விழிவு மறைந்தொழிய வேண்டும் என்று விரும்புகின்றார் பாவாணர் :

"தாழ்த்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட வரென்று காலமெல்லாம் சொல்லிக் கொண் டிருத்தல் கூடாது. அதுவே ஒரு குலப் பிரிவினையாகும். பத்தாண்டு முடிந்தபின், தாழ்த்தப்பட்டோர் ஏனையர் போல் தாழ்த்தப்படாதவராய்த் தம் முயற்சியா லேயே வாழ்தல் வேண்டும்."[8]

"அரசு செய்யவேண்டிய தெல்லாம், மானத்தொடு தன் முயற்சியால் வாழ்வதற்குத் தடையாயுள்ள இழிவை வேரறுப்பதே."[9]

'தமிழர் கடைப்பிடித்துவந்த சிறந்த அறம்கூட இக்குலப் பிரிவினையால் தடைப் படும் என்கிறார் பாவாணர் :

பல குடும்பங்கள் கெட்டழிவதால், கிண்டிக் குதிரைப் பந்தயத்தையும் பரிசுச் சீட்டையும் நிறுத்தவேண்டு மென்கிறார் பாவாணர். இவை அரசு நடத்துவதாலும், இதனால் வரும் வருமானத்தை நற்பணிக்குப் பயன்படுத்துவதனாலும் நல்வினையாகா; சூதாட்டே என்றும் கடிந்துரைக்கிறார்.

தெய்வப் படிமைக்குப் படைக்கும் பொருள்கள் மக்கட்குப் பயன்படுவதா யிருத்தல் வேண்டும் என்னும் பாவாணர், "குடங்குட மாய்ப் பாலைக் கொட்டுவதும் கலங்கலமாய் நெய் வார்த்து மலைவிளக் கெரிப்பதும் மன்னிக்கத்தகாத பொருளாட்சிக் குற்றமாகும்."[10] என்றும் கண்டிக்கிறார்.

குலப்பிரிவினை யொழியவும், அறி வாற்றலிற் சிறந்த மக்களைப் பெறவும் கலப்பு மணங்கள் பெருக வேண்டும் என்று சொல் கிறார் பாவாணர். ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலை தோன்றாதது பாவாணரை இரக்கங் கொள்ளச் செய்கிறது :

"தமிழர் நாகரிகமும் பண்பாடும் அடைந்து பல்லாயிரம் ஆண்டுகளாகியும், இன்னும் பெண்டிர் சமன்மை ஏற்படாதது பெரிதும் இரங்கத் தக்கதே."[11]

"பெண்டிர் நுகர்ச்சிப்பொருள் நிலைமை யினின்று வாழ்க்கைத் துணை நிலைமைக்கு இன்னும் முற்றும் உயர்த்தப்பட வில்லை."[12]

தீயோரை நல்வழிப்படுத்துதற்குப் பாவாணர் கூறும் வழிமுறைகள் இதுவரை யாரும் எண்ணிப் பார்க்காததும் ஏற்றுச் செயற் படுத்தின் பயன் மிக்கதும் ஆகும்.

"பொதுவாக, வேலையின்மையாலும் வினையின்மையாலும் நேர்ந்த உணவின் மையே களவிற்குங் கொள்ளைக்குங் கரணியமாயிருத்த லால், கள்வர்க்கு ஒற்றர் வேலையும் கொள்ளைக் காரருக்குப் படைத் துறை வேலையும் கொடுப்பின், ஓரளவு நிலைமை திருந்தலாம்."

"இனி, கள்ளக்காசுத் தாளடிப்பாரை யும், கள்ளத்தனமாகத் துமுக்கி (Gun), சுழலி (Revolver) முதலியன செய்வாரையும் பொறி யாக்கத் தொழிலிற் பயிற்றின் சிறந்த பொறி வினைஞராகவோ புதுப்புனைவாளராகவோ தலையெடுக்கலாம்."[13]

பிராமணர் செய்த கேடுகளைக் கடுமை யாகச் சாடி வெளிப்படுத்தும் பாவாணர், அவர்கள் நன்மை செய்திருப்பின் பாராட்டவும் தயங்குவதே இல்லை.

சூரிய நாராயண சாத்திரியார் என்ற பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றி வைத்துக் கொண்ட அவரைத் 'தனித் தமிழ்த் தொண்டைத் தொடங்கி வைத்தவர்' என்று பாராட்டுகிறார்.

தம் வரலாற்று நூலால் தமிழின் பெருமையைக் காத்த (T.) சேச ஐயங்கார், (P. T.) சீனிவாச ஐயங்கார், (V. R.) இராமச்சந்திர தீட்சிதர் மூவரையும் 'வரலாற்று நூல் தொண் டர் மூவர்' என்று பாராட்டுகிறார் பாவாணர்.

உ. வே. சா. அவர்களையும் அவர் செய்த அருந்தொண்டிற்காகப் பாராட்டத் தயங்க வில்லை. ஆயின், அவர்க்கோ அவரின வுணர்வே மேலோங்கி யிருந்தது என்ற உண்மையும் பாவாணர் உணர்ந்ததேயாம்!

தமிழ் நாட்டில் பிராமணர் - பிராமண ரல்லார் என்று பிரித்து வேறுபடுத்தும் பான்மை கூடாது; தமிழர் - தமிழரல்லார் என்றே பார்க்கவேண்டும் என்றும் தெரிவிக்கிறார் பாவாணர்.

மேலும், பிராமணர் தமிழை உண்மை யாகப் போற்றுவாராயின் தமிழ்நாட்டில் தமிழரொடு உடன்பிறப்புப் போல் கூடி வாழலாம் என்றும் திறந்த மனத்துடன் கூறுகிறார் பாவாணர்.

மன்னார்குடியில் அவர் பணியாற்றிய 'பின்லே கல்லூரி'யின் வளர்ச்சி சுருங்க, இளங்கலை (B. A) வகுப்பு நின்று, பின்னர் இடைநிலை (Intermediate) வகுப்பும் நின்று உயர் நிலைப் பள்ளி நிலைக்குச் சுருங்கியது. கல்லூரியில் இருந்த முதுவர்கள் கீழே இறங்க, இளையர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு செல்ல வேண்டிய நிலையில் கோபால கிருட்டிணர் என்பார் இருந்தார். அவர் வேலையின்றி மனைவி மக்களொடு தவிப்பார் என்று பாவாணர் உள்ளம் எண்ணி வாடி உருகியது. கோபால கிருட்டிணர் குடியிருந்த வீடும் மழையால் இடிந்திருந்தது. தாம் வெளியேறி னால், அவர் அங்கேயே பணியாற்றலாம் எனக் கருதி அப் பிராமணர்க்குதவ இத்தமிழர் தாமே முன்வந்து வெளியேறினார். வளமாய் வாழ்வாரும் வேலையை விட்டுக் கொடுப்பாரோ! பாவா ணரின் அப்போதைய நிலை கடன் கழுத்தை யிறுக்கும் நிலை; மூன்று மாதத்தில் 100 உருபா கடன் ஒழியுமானால் பேருதவியா யிருக்கும் எனப் பிறரை எதிர்பார்த்திருந்தநிலை!

இவ்வாறு பாவாணரின் மாந்தநேயப் பண்புகளையும் படைப்புகளையும் சொல்லிக் கொண்டே போகலாம். நாமும் பெறுவோம் தமிழ்த்தந்தை பாவாணரின் தமிழ் வாழ்வும் மாந்தநேயமும்!

---

1. குடிஅரசு 14-4-1945.
2. குடி அரசு 3-5-1936.
3. பாவாணர் கடிதங்கள். பக். 100.
4. பாவாணர் கடிதங்கள். பக். 101 - 102.
5. பாவாணர் கடிதங்கள். பக்.102
6. பாவாணர் கடிதங்கள். பக்.102-103.
7. மண்ணில் விண்_ பக்.80.
8. மண்ணில் விண்_ பக். 131.
9. மண்ணில் விண்_ பக்.132.
10. மண்ணில் விண். 139.
11. தமிழர் திருமணம். 67.
12. தமிழர் திருமணம். 68.
13. மண்ணில் விண் _ 144.

“தமிழ் வாழ்வோர்”

● புலவர் இறையன், திருச்சி

முப்பொழுதும் தூயதமிழ் மூச்சாகி வாழ்ந்த செம்மல்
எப்பொழுதும் வேற்றுச்சொல் ஏற்காதார்! - தப்பெழுதும்
மாற்றினை ஒப்புநோக்கும் மாண்நூலால் ஓடவைத்தார்!
நூற்றாளும் பாவாணர் நாட்டு!

ஆண்டு கி.மு. ஐம்பதி னாயிரத்தின் முன்வளர்ச்சி
ஈண்டுதமிழ் மாந்தப் பிறந்தகம்என்! - தோண்டுபுகழ்
மாண்டுவிழா மாண்குமரி மீட்டாய்வுப் பாவாணர்
தூண்டுநிலாத் தொல்லாய்வர் சுட்டு!

தென்மொழியும் தொன்மொழியும் தூயதமிழ் நன்மொழியும்
வன்மொழியும் வாழ்வார் முதன்மொழியும் - உன்மொழிதான்
சொன்மொழிச்சீர் பாவாணர் ஆய்வுமொழி சொல்லியெழின்
மென்மொழிச்சீர் மேலோங்கும் மீண்டு.

‘தேவமொழி’ என்றுசொலித் தீங்குசெய்ச மற்கிருதக்
கூவமொழி கூட்டுவித்தார் கொல்வடக்கர்! - தாவலினால்
தாம்தமிழர் தாழ்த்தப்பட் டாரெனும்பா வாணர்போல்
நாம்எழுதல் வாழ்வுக்கு நன்று.

தாழ்த்தினார் தம்மொழியைத் தாழ்ந்து தழுவியதால்
வீழ்த்தினார் வல்வடக்கர் வீதியினில்! - ஆழ்த்தினார்
வேரறுக்க ஆர்த்தெழுவீர் வெல்வமெனும் பாவாணர்
சீரேறிக் கூர்ந்தெழுவீர் சேர்ந்து!

தம்மின் இனமானம் தாங்கு மொழிமானம்
இம்மி அளவுந்தான் இல்லாமல் - எம்பெயரா?
எம்பிப் பெயர்தமிழில் ஏற்றபாவா ணர்போலும்
நெம்பிச் சிறப்புறுவீர் நீடு!

பிறனில் விழைவினன் பீடகன்று வீழ்வான்
அறனில் ஒழுக்கனாய் ஆவான்! - மறனில்
மனத்தானா மாண்மொழியன்? மீட்புபா வாணர்
இனத்தானாய்த் தானெழுவீர் ஈண்டு!

இல்லறத்தை இன்தமிழில் ஏற்றல் இழுக்காமோ?
நல்லறத்தை நம்மொழியும் நல்காதா? - தொல்லறத்தான்
தூற்றும் வழிதுலங்கல் சீராமோ? பாவாணர்
போற்றும் மொழிவிளங்கல் பூப்பு!

தேவாரம் கேளாச் செவியனா தென்னிறைவன்?
பூவாரம் பூந்தமிழின் பொன்னாரம்! - நாவார
நல்ல தமிழ்பாடி நில்லென்னும் பாவாணர்
வல்ல வழிமுறைமை வாழ்த்து!

ஒட்டி உறவாடி ஊர்கெடுக்கும் ஆரியத்தை
வெட்டி நறுக்கா விடுதலையால் - ஒட்டா
தமிழர் விடுதலையென் றார்க்கும்பா வாணர்
அமிழா வழிவிழித்தல் அன்பு.

மொழிமூலப் பண்டாரம் நம்பாவாணர்!

● பாவரிமா இளஞ்சித்திரன்

நமக்கொருவர் பாவாணர் நமதுதமிழ்
தொன்மையினை நாட்ட வந்தார்!
நமக்கெதிராம் ஆரியத்தின் நரம்பறுத்தார்;
அதனுயிரின் நச்செ டுத்தார்
நமக்கிருந்த மொழிப்பகையை நாம்முடிக்கக்
கிடைத்திட்ட நம்கைப் போர்வாள்!
நமக்கரணாம்! இருவிழியாம் நமதுகள
நாயகனாம்! நமக்கா சானே!

உலகமுதல் தாய்மொழியாம் ஒண்டமிழாம்
நமதுமொழி! உண்மை ஈதை
நிலவுமொழி அறிஞரிடை நிறுவியவர்
பொய்களினை நெருப்பில் இட்டார்!
குலவுதமிழ் மாமலையாம் கொள்கைநிறை
மறைமலையார்; குரிசில் தந்த
அலகிலொளி மொழிஞாயி(று) அவர்தாம் நம்
பாவாணர்! ஆசான் ஏறே!

மொழிமானம் தமிழ்மானம் முன்னெடுத்து
வாழ்ந்திருந்த முனைவர் ஐயா!
பழியாகி, உட்பகையாய்ப் பைந்தமிழ்க்குக்
களையான பதர்க்கூட் டத்தை
ஒழியாத சொல்லாய்வாம் உலைக்களத்தில்
போட்டெடுத்துத் துவைத்த வேழம்!
இழிவாகி, மற்றவர்க்கு விலையாகி
ஏளனமாய் இருந்த தில்லை!

வறுமையிலும் கொள்கைகளில் வளைந்துகொடா
மனத்திண்மை! மழயா உள்ளம்!
சிறுமைக்குணம் இல்லாத செம்மாந்த
பீடுநடை! புலமைத் தேக்கம்!
உறுமொழிகள் கருவூலம்! மொழிமூலப்
பண்டாரம்! ஊறு செய்நம்
அறுகுடிலர், அரைகுறைகள் வாயடங்க
எழுந்ததமிழ் அறிஞர் ஏறாம்!

முழங்குகடல் கொண்டுவிட்ட முதல்நிலந்தான்
குமரிநிலம்; முதலாம் மாந்தன்
வழங்குதமிழ் வழக்கினொடு வாழ்ந்தநிலம்
அதுவேயாம்! வரலாற் றுண்மை
பழங்குடிஎம் தமிழ்க்குடியே; பாராண்ட
பெருங்குடியே! பாரீர்! என்று
முழங்கியவர்; யார்க்குமதை உணர்த்தியவர்!
பாவாணர் முனைவர் ஏறே!

தன்னியக்கப் போராளி; தகுநூல்கள்
தமிழ்க்களித்த தமிழே றன்னார்!
பொன்மயக்கம் இல்லாத, பொருள்மயக்கம்
இல்லாத புலவர் ஏறு!
தென்மொழிக்குச் சிறப்பாசான்; பெருஞ்சித்திர
னாராசன்! உ.த.க., கண்டார்!
தென்தமிழ்க்கே இவரேற்றம்; தென்தமிழால்
இவர்க்கேற்றம்! நமக்கும் ஏற்றம்!

பாவாணருடன் நான்

கல்லை பெருஞ்சித்திரன்

தமிழகம் ஆரியத்தாக்கத்தால் கிளர்நிலைப் படலக் காலத்தில் அன்றிலிருந்து இன்றுவரை மொழிஞாயிறு பாவாணரைப் போல் ஓர் ஒப்பற்ற மொழிப் பேரறிஞர் தோன்றவில்லை என அறுதியிட்டுக் கூற முடியும்.

அன்னவரைத் தென்மொழி மூலமாக மடல்வழித் தொடர்பு கொண்டு இறுதியாகத் திருச்சி தேவர் மன்றத்தில் சந்தித்ததிலிருந்து என் திருமணத் திற்கு வருகை தந்ததுவரையும் மாநாட்டு மேடையில் சந்தித்தது வரையும் மிக அன்போடும், பண்போடும் இன்முகத்தோடும் பழகினார் என்றால் மிகையில்லை.

பாவாணர் பேச்சு எனக்குப் பல நிகழ்ச்சிகளில் நீங்கா நினைவை உண்டாக்கியுள்ளது. திருச்சி மாநாடு இரவு 10 மணியளவில் முடிந்து ஆட்சிக்குழுக் கூட்டம் நடைபெற உள்ள நேரத்தில் அங்கு ஓர் அன்பர் மின்விளக்கு இணைத்துக் கொண்டிருந்தார். அப்போது பாவாணர் அங்கு வந்தார், சடனாக முடியுங்கள் என்றேன் நான். அதற்கு ஐயா அவர்கள் சடனாக என்பது "சடன்லி" எனும் ஆங்கிலச் சொல்லின் திரிபு. ஐயா அவர்கள் அதற்குச் "சடுதி" என்று தமிழில் கூறவேண்டும், என்று பட்டென்று கூறினார்கள்.

திருச்சி நேர்முகச் சந்திப்பிற்குப் பிறகு மடல்வழித் தொடர்பு கொண்டு இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் எனும் அவர் எழுதிய நூலை 75 வரைக்கும் வாங்கி எங்கள் பகுதியில் விற்றுக் கொடுத்ததில் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. என் திருமணத்திற்குத் தாங்கள் கட்டாயம் வரவேண்டும் என்று மடல் விடுத்தேன். பல மடல்கள் வாயிலாக என்னை நன்கு புரிந்த பாவாணர்-அவர்கள் நீர் என் மகன் போல் இருப்பதால் கட்டாயம் திருமணத்திற்கு வருவேன் என மடல் விடுத்தார். அதேபோல் என் திருமணத்தைத் தலைமை ஏற்று நடத்திக் கொடுத்தார். உடன் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் பொத்தாணம் பெட்டி முருகனும் வந்திருந்தனர்.

மணம் முடித்து மறுவீடு சென்று நண்பகல் 12 மணி அளவில் திரும்பி வந்து அவர்களுக்குப் பகல் உணவு பரிமாறப்பட்டது. சாப்பிட்டுக் கொண்டிருந்த ஐயா அவர்களும், பாவலரேறு அவர்களும் என்னைப் பக்கம் அழைத்து ஏன் தம்பி? இந்த வறுவல் மீன்வறுவலா எனக் கேட்டனர். அதற்கு நான் சேப்பக் கிழங்கில் மீன் வறுவல் போல் செய்து விடலாம் சமயற்காரர் கூற நானும் சரியென்றேன். அதைக் கேட்ட அவர்கள் உண்மை யிலேயே மீன்வறுவல் போல் உள்ளது எனக் கூறிப் பாராட்டினார்கள். அவரும் நானும் அன்று ஓர் கமுக்க ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

பின் 2 மணியளவில் "காட்டுப்பாடி" திரும்பினார்கள். காட்டுப்பாடி சென்ற பாவாணர் அவர்கள் நீங்கள் வழிச் செல விற்குப் போதிய பணம் கொடுத்து விட்டீர்கள். நான் என் இல்லத் திருமணத்திற்கு வந்ததாக நினைத்தே வந்தேன். மேலும் எனக்குப் பணம் அனுப்ப வேண்டேன் என மடல் விடுத்தார் கள். அதன் பிறகு எனக்கு எழுதும் மடலெல் லாம் எங்களை மக்கள் போல் நினைத்து எழுதி வந்தார்கள். மணத்தால் நீங்கள் கணவன் மனைவி. மனத்தால் நீங்கள் மக்கள் என மடல் விடுத்தார்கள்.

பறம்புக்குடி மாநாடு தொடங்கியபின் காலை 11 1/2 மணியளவில் மாநாட்டுப் பந்தல் சென்றேன். ஐயா பாவலரேறு குடும்பத்தாரு டன் சேர்ந்து பக்கத்தில் அமர்ந்தேன். அப் போது அம்மா தாமரை அவர்கள் தம்பீ நீங்கள் பாவாணர் ஐயாவைப் பார்த்துவிட்டு வந்து இங்கு அமருங்கள். அவர் உங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார் எனக் கூறி என்னை மேடைக்கு அனுப்பிவிட்டார்கள். அனை வருக்கும் வணக்கம் கூறிய என்னைப் பாவா ணர் தன் இருக்கைக்குப் பக்கத்திலேயே காலை நிகழ்ச்சி முடியும்வரை அமர்த்திக் கொண் டார்.

அன்று மாலை திருக்குறள் தமிழ்மரபுரை வெளியீட்டு விழாவில் அந்த நூலை ஏலத்தில் எடுத்ததில் அவருக்குச் சற்று மனக்குறை. மறுநாள் தங்கியிருந்த வீட்டில் குன்றக்குடி அடிகளாரை இன்னும் காணவில்லை எனப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் சரியான நேரத்திற்கு மேடைக்கு வருவார் எனக் கூற மற்றவர் ஒருவர் அவர் அரசியலில் உள்ளார் எனக் கூறினார். அதற்குப் பாவாணர் அவர்கள் அன்று "துறவிக்கு வேந்தன் துரும்பு" இப்போது "வேந்தனுக்கு துறவி துரும்பு" எனக் கூறியதும் அனைவரும் சிரித்துவிட்டோம்.

பின்பு சரியான நேரத்தில் பட்டிமன்றம் நடந்தேறியது.

அவ்வப்போது எங்களுக்கு அறிவுரை களும், ஆறுதலும் எழுதி வாழ்க்கையில் மிகவும் தெம்பாக நடையிடுங்கள் என்று எழுதினார். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுத்த வேளையில், புலவர் ஒருவர் கடலோரப் பகுதிகளில் மூவாயிரம் சொற்களைத் தொகுத்து அனுப்பினார். அதில் ஒரு சொல்கூடச் சேர்க்கவில்லை எனவும் ஐயா வாயிலாகக் கேட்ட எனக்கு நீங்கள் எழுதிய ஐந்து சொற்களில் ஒரு சொல் மட்டும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதுதான் "சொரிவாய்" என்ற சொல் என்றார்.

எங்களைக் குடும்ப உறுப்பினராக நினைத்துக் கொண்ட அவர் எங்களுக்குப் பல வகையில் அறிவுரைகள் கூறினார். கொஞ்சம் தொகையை பேரக் குழந்தை களுக்கு வைப்பகத்தில் இட்டு வையுங்கள் என எழுதினார். அவர் எழுதிய மடல்கள் ஏறத்தாழ 40-க்கும் மேலிருக்கும்.

வரவு - செலவுத் திட்டம்

ஒரு புதிய நாடாயின், பட்டறிவு இன்மையால் ஆண்டுதோறும் புதுவரியிடலாம்; ஒரு செல்வ நாடாயின், சிறந்த பணி செய்ய மேன்மேலும் புதுப்புது வரியிடலாம்; இந்தியா போன்ற எளிய நாட்டில் ஏற்கெனவே வரிப்பளு மிகுந்திருக்கும் போது, மேன்மேலும் வரிசுமத்துவது சரியன்று.

அஞ்சல் துறையில் உருப்படிகளின் விலையையும் இருப்புப் பாதைத் துறையில் சீட்டுக் கட்டணத்தையும், வணிக முறையில் உயர்த்திப் பேரூதியம் பெறுவது அரசிற்குத் தகாது. அரசு பொதுமக்கட்குத் தொண்டு செய்யத் தோன்றியதே அன்றிப் பெரும்பொருள் ஈட்ட ஏற்பட்டது அன்று.

– பாவாணர்

செவ்வியல் மொழி தமிழ்

முனைவர் மலையமான், சென்னை

செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து "செவ்வியல்" என்ற சொல் உருவானது, செம்மை என்பதற்கு, செப்பம், செவ்வை, நற்சீரடைதல், ஒழுங்குபடுத்தல், என்று தமிழ்மொழி அகராதி பொருள் தருகிறது. பெருமை, நேர்மை, ஒற்றுமை, தூய்மை, அழகு ஆகிய பொருள்களைத் தமிழ் லெக்சிகன் கூறுகிறது.

ஆங்கிலத்தில் 'கிளாசிக்கல்' என்பதற்குத் தமிழில் செவ்வியல் என்று அறிஞர்கள் அறிவிக்கின்றனர். தரமுடைமை, (முதல் தரம்) மீ உயர்வு, இலத்தீன்-கிரேக்கக் கலை, பண்பாடு சார்ந்த, இம்மொழிகளின் தரம் கொண்ட, எளிமையான, சீர்மையான, ஆகிய பொருள்களை ஆக்சுபோர்டு அகரமுதலி, கிளாசிக்கல் என்ற சொல்லுக்குரிய பொருள்களாகக் கூறுகிறது. கிரேக்க, இலக்கியத் தொன்மை உடைய இந்த இலக்கியங்களின் மாணவனான, இலக்கியம், இசை ஆகியவற்றில் மிகவும் உயர்ந்த நிலை கொண்ட தூய்மையான, செப்பம் செய்யப் பெற்ற பண்படுத்தப்பட்ட, கட்டுப்பாடு கொண்ட முதலிய பொருள்களைச் சேம் பர்ஸ் அகரமுதலி அறிவிக்கின்றது. பெருமைக்குரிய பிரித்தானியக் கலைக்களஞ்சியமும் அதன்கிளையான சிறப்புடைய அமெரிக்கக் கலைக்களஞ்சியமும், உயர்தரமுடைய பண்டைய செவ்வியல் இலக்கிய முறையைப் பின்பற்று கின்ற, பழம் கிரேக்க, இலத்தீன் இலக்கியம், கலை ஆகியவற்றைச் சார்ந்த ஆகிய பொருள்களைத் தருகின்றன. கி.மு.500 முதல் கி.மு.300 வரையிலுள்ள காலக் கட்டத்தில் பிறந்த கிரேக்க இலக்கியங்கள், நாடகங்கள், காப்பியங்கள், கவிதைகள் ஆகியனவே. செவ்வியல் இலக்கியங்களாக ஏற்றுப் போற்றப்படுகின்றன.

கி.மு. 70 முதல் கி.மு. 78 வரையிலான காலக் கட்டத்தில் உருவான இலத்தின் இலக்கியங்களே செவ்வியல் இலக்கியங்கள் எனப்படுகின்றன. மேலைநாட்டுக் கலைக்களஞ்சியங்களும், பார்வை நூல்களும் பழம் கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களை மட்டுமே, செவ்வியல் இலக்கியங்களாகச் சுட்டிக் காட்டிப் பெருமை தேடிக்கொள்கின்றன. அவை, ஆசிய நாடு களிலுள்ள தொன்மையும் இலக்கிய வளமும் கொண்ட மொழிகளைச் செவ்வியல் மொழிகளாகக் கூற முற்படவில்லை. ஆனால், மேலைநாட்டு அறிஞர்கள் தமிழ் உள்ளிட்ட தொன்மையான மொழிகளைச் செவ்வியல் மொழிகளாக ஒப்புக்கொள்கின்றனர். சமற்கிருதம், பெர்சியன், அரபி ஆகியவை செவ்வியல் மொழிகளாக உரைக்கப்படுகின்றன. சீனம், ஏபிரேயம் ஆகியவையும் செவ்வியல் மொழிகளாகச் சிலரால் கூறப்படு கிறது. ஆங்கிலம், பிரெஞ்சு, உருசியம் ஆகிய அண்மைக்கால மொழிகளின்

ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குரிய இலக்கியங்கள், செவ்வியல் இலக்கி யங்களாக உரைக்கப்படுகின்றன.

செவ்வியல் என்பதற்குத் தரப்பட்ட பல்வேறு பொருள்களில், "கிரேக்க, இலத்தீன் இலக்கியத்தைச் சார்ந்த" என்ற ஒன்றைத் தவிர, மற்ற அனைத்தும் தமிழுக்கு முற்றிலும் பொருந்தும். மற்ற எல்லாத் தகுதிகளும் தமிழுக்கு உள்ளன.

இங்கு ஒரு செய்தியை எண்ணிப் பார்க்க லாம். தமிழகத்திற்கும் கிரேக்கத்திற்கும் பண்டைக் காலத்தில் நல்லுறவு இருந்தது. கிரேக்க மரக்கலங்கள் இங்குப் "பொன்னோடு வந்து கறியொடு பெயர்ந்தன" என்று பட்டினப் பாலை கூறும். கிரேக்கர் இம்மண்ணில் அன்று யவனர் என்று கூறப்பட்டனர். அவர்களில் சிலர் மன்னனின் மெய்க்காவலர்களாகப் பணி புரிந்தனர். தமிழ்நாட்டிற்கு வந்த இத்தாலிய பெஸ்கி, "வீரமாமுனிவராகி" தமிழில் காப்பியம் - தேம்பாவணி - இயற்றினார். உறுப்பு முடம்பட்ட கிரேக்க நாட்டு மேர்கஸ் இங்கே மோசியானார். பின்பு அவர் முட மோசி எனப்பட்டார். அவர் தங்கியிருந்த யவனச்சேரி, ஏணிச்சேரி எனத் திரிந்தது, எனவே அவர் ஏணிச்சேரி முடமோசி என் றழைக்கப்பட்டார் என்ற கருத்தும் உண்டு. (இது ஆய்வுக்குரியது) கிரேக்க மொழி ஆயிரத் திற்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று மொழியியல் அறிஞர் ஞானகிரி நாடார் ஆய்ந்து உரைத் திருக்கிறார். கிரேக்கத்திற்கும் தமிழுக்கும் தமிழகத்திற்கும் இருந்த உறவை இவை நினைவுபடுத்துகின்றன.

தமிழின் தொன்மைக்கு இன்று வாழ் கின்ற தொல்காப்பியமும் மறைந்த அகத்தியம், அவிநயம், ஐந்திரம் போன்ற நூல்களும் சான் றாக அமையும். சிந்துவெளி அகழ் வாய்வும், வரலாற்று முறையில் தமிழின் - தமிழரின் - தொன்மையை அவனிக்கு அறிவிக்கும். சென்ற ஆண்டில், குசராத் மாநிலத்தை ஒட்டியுள்ள காம்பே வளைகுடாவில் கடலடியில் - சிந்து வெளி நாகரிகத்திற்குரிய நகரம் ஒன்று தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்குக்கிடைத்த மரத்துண்டின் காலம் கி.மு. 7000 என்று அறிவியல் ஆய்வு கூறுகிறது. இதன்படி பார்த்தால், அந்தக் கடலடிச் சிந்து வெளி நாகரிகம் கி.மு. 7000-க்கு உரியது. அது எகிப்திய, சுமேரிய நாகரிகத்திற்கும் முந்திய தாகிறது. அதாவது இன்று கிடைத்துள்ள - வரலாற்றின் முதன்மைத் தொன்மைக்குரிய - தொல்பொருள் அகழ்வாய்வு தமிழினத்திற்கு உரியது என்ற பெருமையை அது அளிக் கின்றது. (ஆனால் சிந்து வெளிக்கு முற்பட்ட சரஸ்வதி நாகரிகத்திற்கு அது உரியது என்ற கற்பனைக் கட்டுக்கதையோடு அதை இணைப்பதற்கு மைய அரசின் அமைச்சர் ஒருவர் முயற்சி மேற்கொண்டுள்ளார்). 'தமிழே உலகின்' முதன்மையான செவ்வியல் மொழி என்று மொழிஞாயிறு பாவாணர் முரசறைந்துள்ளார். தமிழே உலகின் முதல் மொழி என்ற உண்மையை "வையகம் ஈன்றதொன் மக்கள் உளத்தினை கையினால் உரை காலம் இரிந்திடப் பைய நாவை அசைத்த பசுந்தமிழ்" என்று பெரும் புலவர் நீ. கந்தசாமிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். இப்படி நூலாலும் வரலாற்று ஆய்வுச் சான் றாலும் தமிழின் தொன்மையை உணர முடிகிறது.

மீ உயர்வு, செவ்வியன்மைக்குப் பாதை அமைக்கும். மா வலிமை கொண்ட எர்குலிசு, தன் தோள் கொண்டு இந்த உலகைத் தாங்குகின்றான் என்பது செவ்வியல் காலக் கிரேக்கத்தின் கருத்து. ஆதிசேடன் என்ற பாம்பு தாங்குகிறது, என்பது இந்தியப் புராணத்தின் முடிவு. ஆனால் அரும்பண்பு கொண்டிருப்பவர் வாழ்வதால்தான், இந்த ஞாலம் அழியாமல் இருக்கிறது என்பது புறநானூற்றுப் பாவலர் ஒருவரின் எண்ணம்.

உண்டால் அம்ம இவ்உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே: முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர், அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!

(புறம் 182)

என்ற இந்தப் பாடல் தமிழின் மீஉயர்வுக்குச் சிறு சான்றாக இலங்குகிறது.

தமிழ், மரபைப் போற்றிப்புரந்தது புதியன புகுதலும் பழையன கழிதலும் நடந்தாலும் மாற்றங்கள் மரபுக்கு உட்பட்டே இம்மண்ணில் அமைந்தன. தொல்காப்பியம் சொன்ன களவும் கற்பும், இன்றும் நடைமுறையில் இலைமறைகாயாக உள்ளன.

பொதுமைப் பண்பையும் பழந்தமிழ் இலக்கியங்கள் போற்றின; புறத்தில் வரும் செவியறிவுறூஉப் பாடல்கள் பொதுமைப் பண்புகளைப் பாருக்குப் பறைசாற்றிய பெருமைக்கு உரியவை. இன்றும் போற்றுதற்கும் உரியவை.

நிலைபேறு உடைமையும் செவ்வியல் சிறப்பின் முக்கியக் கூறு ஆகும். “படைப்பு பல படைத்து” என்று தொடங்கும் புறப்பாட்டு. குழந்தையின் செயற்பாடுகளை அழகாகக் கூறும். அந்தச் செயற்பாடுகள் இன்றும் உள்ளவை; அவை என்றும் நிலையானவை.

பாடலின் வடிவமும், அவற்றின் பொருளும் செவ்வியல் தன்மைக்கு வழி வகுக்கும். ஆதியில் தோன்றிய ஆசிரியப்பாவும், அதன் பின்வந்த வெண்பாவும் கலியும் வஞ்சியும் அவற்றின் இனமான துறை, தாழிசை விருத்தம் போன்றவையும்தமிழ்ப்பாடலின் வடிவத்தைத் தரணிக்கு அறிவிக்கும். உலகின் மிகவும் சிறு வடிவப்பா ‘ஐக்கூ’ என்பர் சிலர். அதையும் வெற்றிகொண்டது குறள்பா என்ற குறு வெண்பாட்டு. ‘சிற்றில நற்றூண் பற்றி’ என்ற புறநானூற்றுப் பாட்டு சிறியது. ஆனால் அது கூறும் கருத்து மிகஉயர்ந்தது.

இப்படிப்பட்ட செவ்வியல் தன்மையின் அடிப்படைகளைக் கொண்ட தமிழ், செவ்வியல் சிறப்புக்கு உரியது என்பதை உலகின் சிந்தனைச் செல்வர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அன்றைய வின்ஸ்லோ முதல், இன்றைய ஜார்ஜ் ஹார்ட் வரை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் மைய அரசுக்கு மட்டும் இன்னும் மனம் வரவில்லையே!

தமிழ்த் தாத்தா

ஆர்த்தபகை வெல்லும் அணிகள் பலதந்து
சீர்த்த புகழ்நிறுத்தும் செந்தமிழர் பாவாணர்
கூர்த்த புலமையராய்க் கொள்கை அரிமாவாய்ப்
போர்த்த இருளகற்றும் பொற்கதிரோன் பாவாணர்
ஞால முதல்மொழி நந்தமிழே என்றுரைத்தும்
மூலத் தமிழே திரவிடத்தின் தாயென்றும்
ஆரியத்தின் மூலம் அதுவே எனவுரைத்தும்
பூரியரின் வாயடைக்கப் பூட்டறைந்தார் பாவாணர்
தென்குமரிக் கண்டமதே மாந்தன் பிறந்தகமாம்
செந்தமிழும் ஆங்கே பிறந்ததென்றார் பாவாணர்
முன்னை மொழிகாக்க மூத்த குடிகாக்கத்
தன்னை அழித்த தகையாளர் பாவாணர்
செந்தமிழே வாழ்வாய்த் திகழ்ந்ததனால் பாவாணர்
நந்தமிழ்த் தாத்தா நவில்.

— முனைவர் ந. அரணமுறுவல்

ஆய்வுலகச் செம்பரிதி

• முனைவர் கடவூர் மணிமாறன்

பள்ளிகளில் கல்லூரி அரங்கில் நல்லோர்
பலரொருங்கே திரண்டிருந்த அவையில் மன்றில்
வெள்ளமெனத் தமிழியக்கக் கருத்தைப் பாய்ச்சி
விளைச்சலினைக் கண்டவர்பா வாணர் அன்றோ?
துள்ளிவந்த வடமொழியின் இந்திப் பேயின்
துடுக்கடக்கிச் செம்மாந்த தமிழைக் காத்தார்!
அள்ளவொணாப் பொற்குவியல் ஆனார்! நாட்டை
அருந்தமிழைப் புதுக்கிமொழி மீட்சி தந்தார்!

தனித்தமிழ்க்கே உரமூட்டி மரமாய் ஆக்கித்
தாய்த்தமிழை வாழ்வித்தார்! பெருமை சேர்த்தார்
கனிச்சாறாய்ப் பற்பலவாம் பனுவல் ஆக்கிக்
களங்கமிலாப் புகழ்சேர்த்தார்! தமிழைச் சூழ்ந்த
நனிதுயரை வல்லிருளை நாளும் போக்கி
நயத்தகுசீர் ஆய்வுகளால் மோதி நின்ற
பனிமூட்டம் விலகிடவே பாதை தந்தார்,
பாவாணர் பைந்தமிழன் அறிஞர் ஆனார்!

வேர்ச்சொல்லின் ஆய்வினிலே திளைத்தார்! யார்க்கும்
விளங்காத தெரியாத சொற்கட் கெல்லாம்
கூர்த்தமதி நுட்பத்தால் எடுத்துக் காட்டால்
குறிப்புரையால் விளக்கத்தால் தெளிவை நல்கி
ஆர்த்தெழுந்தார் அரிமாவாய்! தமிழே என்றும்
அனைத்துலகில் முதன்மொழியாம் என்றார்! போற்றும்
சீர்த்திமிகு முதல்மாந்தன் தமிழன்! அன்னோன்
சீர்குமரிக் கண்டத்தில் பிறந்தோன் என்றார்!

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர் எல்லாம்
உயர்தனிச்செம் மொழியான தமிழைப் போற்றி
நலம்சேர்க்கும் நாட்டத்தை வளர்த்தார்! தாமோ
நல்குரவால் தளைப்படினும் வீறு கொண்டே
பலருவக்கும் மொழித்தொண்டில் முதன்மை பெற்றார்!
பகலிரவு பாராமல் மொழிகள் கற்றே
நிலமருங்கில் ஆய்வுலகில் நிலைத்து நிற்கும்
நெடுவானச் செம்பரிதி நிலவாய் ஆனார்!

தண்டமிழின் விடுதலையை உயிர்மூச் சாகத்
தம்வாணாள் இறுதிவரை வாழ்ந்தார்! யாண்டும்
எண்டிசையும் புகழும்திருக் குறளின் மாண்பை
இனியதமிழ் மரபுரையை எடுத்துச் சொன்னார்.
பண்டிருந்த பன்னரிய தமிழி னத்தார்
பண்பாட்டு நாகரிகச் சிறப்பை எல்லாம்
விண்டுரைத்த பாவாணர் போல நாட்டில்
வேறெவரும் உள்ளாரோ? விளம்பு வீரே!

புதுவையில் தமிழியக்கம்

முனைவர் அ. அறிவுநம்பி,
புதுவைப் பல்கலைக்கழகம்

மொழி என்பது கருத்துகளைச் சுமக்கும் கருவி என மட்டும் நினைப்பவர்கள் உணர்வற்ற எந்திரங்கள். மொழியே வாழ்வு எனக் கருதுவாரால் தான் உலகம் இயங்குகின்றது. ஒரு மானுடனை அடையாளப்படுத்த ஏதுவாயமைவது மொழிதான். மொழிவழி இனமும், இனவழி நாடும் பேசப்பெறும். மொழிக்கு ஏற்படும் ஏற்றங்கள் பிறமொழியாளர்களால் வாரா. மொழியை உயிராய்க் கருதுவாரால்தான் மொழியும், மொழிபேசும் இனமும், இனங்கூடிய நாடும் வளரும்; உயரும். தமிழ் மொழியின் பழமை, காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லவியலாத பழமையாய்க் கருதப்பெறுகின்றது. 'இமயத்தின் எல்லைகண்ட எந்தமிழ்' எனப் புகழுமாறு அதன் பெற்றிமை பரந்தது; விரிந்தது. தமிழுக்கு நலிவுண்டாக்கப் பகைவர் செயற்பட்ட காலங்களில் தமிழின் நலங்காக்கத் தமிழியக்கம் உருவாயிற்று. 'தமிழியக்கம்' என்றவுடன் நினைவில் எழுபவர்கள் மறைமலையடிகளும் பாவேந்தரும். 'தமிழியக்கம்' என்ற தலைப்பில் நூலெழுதி,

"ஆடல் தரும் செந்தமிழே
அன்பே, தீமை
செய்யத்தான் நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைத்
தீர்க்க எண்ணும்
மெய்யைத்தான் நினைக்கையிலே
நெஞ்சு பதைக்கும் விளக்க
வாய் பதைக்கும்"

எனக் குமுறி நின்றவர் பாவேந்தர் பாரதிதாசன். அவர்பிறந்த மண்ணில் தமிழியக்கம் நடைபெற்ற சூழலை ஓரளவு சுட்டிக் காட்ட இவ்வெழுத்துரை முயல்கின்றது.

பாரதிதாசனின் பாடல்கள் எழுப்பிய தாக்கம் புதுவையில் பலமாற்றங்களைக் கொண்டுவந்தது. மாந்தப் பெயர்கள், சாலைகளின் பெயர்கள், அங்காடிகளின் பெயர்கள் தமிழ்மயமாக மாறிடும் சூழல் எழுந்தது. தமிழின் ஏற்றத்தைத் தம் படைப்புகளில் பலரும் எடுத்து மொழிந்தனர், பாவேந்தருடன் வாழ்ந்த வாணிதாசன், புதுவைச் சிவம், மு.த. வேலாயுதனார், துரைவடிவேலனார் போன்றாரின் பங்களிப்புகள் கருதத்தக்கன. அவர்களின் அடிச்சுவட்டில் தனிமனிதர்களும், இலக்கிய அமைப்புகளும் பங்குபணி புரியக் களங்கள் விரிந்தன. மாணவர், ஆசிரியர், குடும்பத்தார், வணிகர் என எந்தப் பிரிவையும் விடாமல் பாவேந்தர் தம் தமிழியக்கத்தில் சுட்டிக் காட்டியதன் வெளிப்பாட்டைப் புதுவையின் திசைகள்தோறும்

காணமுடிந்தது. விடுதலையை ஒட்டிய இச் சூழல் தமிழின் ஏற்றத்திற்குத் துணைநின்றது. புதுவை முத்தமிழ்ச்சங்கம், புதுவைத் தமிழ்ச் சங்கம், தனித்தமிழ்க் கழகம், புதுவை மாநில முத்தமிழ் வளர்ச்சிக்கழகம், இளங்கோவடிகள் மன்றம், குறள்நெறி மன்றம், தமிழ்த் தென்றல் திரு.வி.க. இலக்கிய மன்றம், இலக்கியக் கூடல், தமிழ்க் காவற்குழு, இலக்கணச்செம்மல் சுந்தரகுமாரனார் நினைவுக்கூடம், பாரதி சிந்தனைப் பேரவை, பாவலர் பண்ணை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழ்ப்பணி இயக்கம் போன்றவை கூட்டியக்கச் செயற் பாட்டில் பணிபுரிந்த சில அமைப்புகள். தத்தம் தேவை, நோக்கம் இவற்றிற்கேற்ப இவை மக்களிடையே தமிழ் பரப்பவும், தமிழ்நலங் காக்க வேண்டிய வழி முறைகளைக் கூறவும் முனைந்தன. எழுத்து, பேச்சு இரண்டிலுமாக இந்த அமைப்புகளின் பணிகள் தொடர்ந்தன. அமைப்புகளில் சில பற்பல காரணங்களால் நிலைக்க இயலாமல் குலைவுற்றன. சில மட்டும் செயல்பட்டு வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர் களை இருவகையினராகப் பிரிந்துக்காட்டு கிறார் 'புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி' என்ற நூலின் ஆசிரியர் சு. தில்லைவனம். பழைய 'பண்டித' மரபினர் ஒருவகையினர். பிறர் பாரதி, பாரதிதாசன் மரபைப் பின்பற்றிய புத்தியக்கக் கவிஞர்கள் (ப. 133). சாரம் பு.அ. பெரியசாமிப்பிள்ளை, பங்காருப் பித்தர், ஆ.திருவேங்கடம் பிள்ளை, 'தமிழ்மகவு' ஏட்டை நடத்திய வி.துரைசாமி முதலியார், உ.வே. சாவின் மாணவருள் ஒருவராய வி.மு. சுப்பிரமணிய ஐயர் போன்றாரின் எழுத்தாக் கங்கள் நல்ல தமிழர்களையும், தமிழறிஞர் களையும் உருவாக்கின. தமிழ் என்பதை முன்நிறுத்தும் பாவலர்களாகச் ச. சிவப்பிர காசம், சொ. சிதம்பரம், அரிமதி. தென்னகன். புதுவைச் சிவம் ஆகியோர் முன்நிறுத்தப் பெறுகின்றனர். கல்வித்துறையில் இருந்த படியே தமிழ் வளர்த்த இவர்களில் சிலருடைய படைப்புகள் நினைந்து நினைந்து ஏத்தத் தக்கன. முனைவர் இரா. திருமுருகன், ம.இலெ. தங்கப்பா, தமிழவேள், முதுகண்ணன், கல்லாடன், காரை இறையடியான், சுந்தரஞ் சண்முகனார், சு.குப்புசாமி, மன்னர் மன்னன், பி.எல்.சாமி, தேவிதாசன், அ. பசுபதி, சிவ. கண்ணப்பா போன்றாரின் பணிகள் நிரல் படுத்தப்பெற்றுக் கணக்கிடப் பெறவேண்டி யவை. இவர்களின் முயல்வுகள் தமிழின் எழுச்சிக்குக் காரணங்களாயின. இன்றும் இவர்களில் பலர் ஆற்றிவரும் தொண்டுகள், வேலைகள், முயல்வுகள் குறிக்கத்தக்கன வாகவே அமைந்துள்ளன.

எட்டயபுரத்தான், பாவேந்தர் காலங் களைத் தொடர்ந்து இதழ்கள் பல தமிழுக்கு முன்னுரிமை தந்தன. தமிழ்முரசு, தமிழ்ச் செல்வி, தமிழணங்கு போன்ற இதழ்களின் பெயர்களே அவற்றின் முழுமையான மொழிப்பற்றைப் பறைசாற்றும். மாராப்பூ, 'அச்சுக்கு வாரா அருந்தமிழ்' என்ற பகுதியை வெளியிட்ட 'தமிழன்பன்' இதழ், விருந்து, குயில் தேனருவி-நெய்தல், போன்றவை குறித்துக்காட்டப் பெறவேண்டிய இதழ்கள். பொதுச் செய்திகளுடன் தமிழின் அருமைப் பாட்டை வெளிக் கொணரும் பகுதிகளைப் பல இதழ்கள் அமைத்துத் தந்தன. தமிழின் பலகோணங்களை எடுத்துரைப்பதற்காகவே சில இதழ்கள் வெளிவந்தன. இவற்றின் விளைவால் எழுத்துலகில் தமிழுக்கு உயர்வு கிடைத்தது. இந்தத் தடத்தில் புதுவையில் இன்றும் இதழ்களின் தமிழ்ப்பணி முழு வீச்சுடன் நடைபெற்று வருகின்றது. தெளி தமிழ், வெல்லும் தூயதமிழ், நற்றமிழ் போன்றவை போற்றத்தக்க பணிகளை வழங்கி வருகின்றன. பாரதி, புதுவையின்குரல் ஊற்று போன்ற ஏடுகளும் ஓரளவு தமிழுக்குப் பங்காற்றிவருகின்றன.

தமிழ்க் காப்பு நடவடிக்கைக் குழு எனும் அமைப்பின் பணி கருதத்தக்கது.

"கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்யும்"

நோக்குடன் அறப்போர்களை இக்குழு நிகழ்ச்சி வருகின்றது. அரசு அலுவலர்கள் தமிழில் கையாளப்படும் ஆணையை அரசு போற்றாமையைக் கண்டித்து, அரசு வழங் கிய, 'தமிழ்மாமணி' விருதினை அரசிடமே

திருப்பிவழங்கிய முனைவர் இரா. திருமுருகன், தமிழில் பிறமொழிக் கலப்பை நீக்கக் கோரும் பேராசிரியர் தங்கப்பா, நாகி, சீனு. இராமச் சந்திரன், கோ. புகழேந்தி, திருவேங்கடம், அரங்கநாதன், திராவிடப் பேரவையின் கருத்தாளர் நந்திவர்மன் போன்றாரின் அன்றாடப் பணிகள் தமிழ்மய மானவை. அதனைப் போலப் பாவாணருக்கு விழா எடுப்பது, 'புதுச்சேரியின் ஆட்சிமொழி தமிழே' என்று நூல் எழுதியும் அரசுக்கு மடல் எழுதியும். பங்காற்றிவருவது போன்றவற்றில் தம்மைக் கரைத்துக்கொள்ளும் தமிழமல்லன், அ. பசுபதி போன்றாரின் ஏற்றமிகு பணிகள் கருதப்பெற வேண்டியவை. அரிமதி தென்னகன், சேதுமுருகபூபதி, செந்தமிழர் இயக்கத் தமிழ்மணி, கோ. பாரதி, முதுகண்ணன், கல்லாடன், இலக்கியன், சாயபு மரைக்காயர், பட்டாபிராமன், பரமகேது, கா. வில்லவன் போன்ற அன்பர்களை உள்ளடக்கிய நீண்ட பெயர்ப்பட்டியல் இன்றைய புதுவை மண்ணுக்குத் தமிழுரம் சேர்ப்போரின் பட்டியலாகும். இராவணன் பெயரிலான பகுத்தறிவுக் கழகம், ஈழத் தமிழர்களுக்காகப் பட்டினிப் போர் நடத்திய கா.கா.தே.கா அமைப்பு, தமிழ் மன்னர் வரலாறுகளை நூல்களிலிருந்து எடுத்ததைக் கண்டிக்கும் திராவிடப் பேரவை, தமிழ் நூல்களை அறிமுகப்படுத்தியும் வேறு பணி புரிந்தும் உதவும் சுந்தரஞ்சண்முகனார் அறக் கட்டளை போன்றவை கருதத்தக்கவை. பாவேந்தர் காணவிரும்பிய தமிழகத்தைக் கருதியே இவை செயல்புரிந்து வருகின்றன. தமிழ்மொழி, இனம் இவற்றை முன்நிறுத்தும் நூல்களைப் படைத்துவரும் புதுவைப் பல்கலைக்கழக தமிழியல் துறையின் முன்னைத் தலைவரும், நெல்லை மனோன் மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான முனைவர் க.ப.அறவாணன் நாடறிந்த தமிழன்பர். தமிழியல்துறையின் பேராசிரியரான அறிவு நம்பி புதுவைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவையின் உறுப்பினராக இருந்தபோது, பல்கலைக்கழக இலச்சினையில் 'ஒளிபரவ' என்ற தமிழ்ச் சொற்களை இணைக்கும் முன்வரைவு கொண்டுவரப்பெற்று நடைமுறைப்படுத்தப் பெற்றுள்ளது. (அதற்குமுன் தமிழ்ச் சொற்கள் ஏதுமின்றி, ஆங்கிலம், பிரஞ்சு, வடமொழிச் சொற்கள் மட்டுமே இலச்சினையில் இருந்தன). இப்பணிகளும் நினையத்தக்கன.

நூற்றுக்கு நூறு விழுக்காடு புதுவையில் தமிழ் மணக்கிறது எனச் சொல்வது பொய்யுரையாகும்; கற்பனையுமாகும். வலுவான பகைவர்கள் இல்லை என்பது ஓரளவு உண்மை. எனினும் வற்புறுத்தல் அல்லது பன்முறைகூறும் நெருக்கடியைக் கருதியே வணிக நிறுவனங்கள் தமிழில் பெயர்ப் பலகை வைப்பது, முகவரிச் சிட்டை அமைப்பது என மாறியுள்ளன. இயல்பான தமிழார்வம் இல்லாமல் இல்லை. ஆனால் அதன் வீச்சு நெடியதாயில்லை. தனித்தமிழ் வளர்க்க முனையும் தமிழன்பர்கள் ஒருங்கிணைந்து பணிபுரிவதில்லை. நெல்லிக்காய் மூட்டையை நினைவுபடுத்தும் வண்ணம் சிதறுண்டுள்ளனர் என்பது கசப்பான உண்மை. எனினும் பன்முறை எண்ணிப் பார்க்க வேண்டிய தமிழ்ப்பணிகளைத் தனிமனிதர்களும், இதழ்களும், அமைப்புகளும் நடத்தி வந்தமையையும் நடத்தி வருவதையும் காலம் பதிவு செய்து வருகின்றது. எனவே, புதுவையின் தமிழியக்கம் நெஞ்சுயர்த்திப் பேசும்வண்ணம் நடைபோடுகிறது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

பொறியறிஞனும் மொழியறிஞனும்

ஒரு பொறியறிஞன் ஒரு பொறியில் இல்லாத உறுப்பைக் கண்டு கொள்வது போன்றே, ஒரு மொழியறிஞனும் அம்மொழியில் இறந்துபட்ட சொற்களிற் சிலவற்றை அவற்றொடு தொடர்புள்ள பிறசொற்களின் துணைகொண்டு அறியவியலும்.

- பாவாணர்

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - பாவாணர்

அசைத்தல் : குரலில் ஏற்ற இறக்கத்தோடு சொல்லுதல். (அசையழுத்தம் கொடுத்துச் சொல்லுதல்).

அறிவித்தல் : மற்றொருவர் அறிந்துகொள்ளச் சொல்லுதல்.

அறைதல் : பலர்க்கும் கேட்குமாறு உரக்கச் சொல்லுதல்.

இசைத்தல் : கோவைபடப் பொருத்தமறிந்து சொல்லுதல்.

இயம்புதல் : இசைக்கருவி இயக்கிச் சொல்லுதல்

இழித்தல் : இழிவுகூறுதல்.

உரைத்தல் : அருஞ்சொல்லுக்கு அல்லது செய்யுட்குள்ள உண்மைப்பொருளைச் சொல்லுதல்.

உளறுதல் : ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லுதல்.

என்னுதல் : ஒரு செய்தியைச் சொல்லுதல்.

எண்பித்தல் : மெய்யென்று நிரூபித்துச் சொல்லுதல்.

ஓதுதல் : காதிற்குள் மெல்லச் சொல்லுதல்.

கதைத்தல் : பலபடப் பொதுச் செய்திகளைச் சொல்லுதல்.

கத்துதல் : குரலெழுப்பிச் சொல்லுதல்.

கரைதல் : அழுது சொல்லுதல்.

கழறுதல் : கடிந்து சொல்லுதல். (கடிதல் - கண்டித்தல்)

கிளத்தல் : இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்லுதல்.

கிளத்துதல் : குடும்ப வரலாறு சொல்லுதல்.

குயிலுதல் : குயில்போல் இன்குரலில் சொல்லுதல்.

குயிறல் : கூப்பிட்டுச் சொல்லுதல்.

குயிற்றல் : நன்கு பதியுமாறு இழைத்துச் சொல்லுதல்.

குழறுதல் : நாத் தடுமாறிச் சொல்லுதல்.

குறிப்பிடுதல் : ஒன்றையே குறிப்பாகச் சொல்லுதல்.

கூறுதல் : கூறுபடுத்திச் சொல்லுதல்.

கொஞ்சுதல் : செல்லமாகப் பேசுதல், மழலை பேசுதல்.

கொழித்தல் : குற்றம் கூறுதல், பாராட்டிச் சொல்லுதல், ஆராய்ந்து சொல்லுதல்.

கொளுத்துதல் : மனங்கொள்ளுமாறு அறிவுசொல்லுதல்.

சளசளத்தல் : வீணாகப் பேசுதல்.

சாற்றுதல் : பலரறியச் சொல்லுதல்.

சிதர்தல் : பரக்கச் சொல்லுதல்.

சுட்டுதல் : குறிப்பாகச் சுட்டிச் சொல்லுதல்.

செப்புதல் : வினாவிற்கு விடைசொல்லுதல்.

திக்குதல் (தெற்றுதல்) : விட்டுவிட்டுச் சொல்லுதல் - பேசுதல்.

திட்டுதல் : வசை சொல்லுதல்.

தூற்றுதல் : பிறர்பழி சொல்லுதல்.

தேற்றுதல் : ஆறுதல் சொல்லுதல், தெளியப்படுத்தச் சொல்லுதல்.

தெருட்டுதல் : ஒருவர்க்குத் தெளிவுபடுத்திச் சொல்லுதல்

தெரித்தல் : ஆராய்ந்துகாட்டிச் சொல்லுதல்.

நவிலுதல் : நாவினால் ஒலித்துப் பயிலுதல்.

நுதலுதல் : ஒன்றைச் சொல்லித் தொடங்குதல்.

நுவலுதல் : நூலின் நுண்பொருள் சொல்லுதல்.

நொடித்தல் : கதை சொல்லுதல்.

நொடுத்தல் : விலைசொல்லுதல்.

பகர்தல் : பண்டங்களைப் பகுத்து விலை சொல்லுதல்.

படித்தல் : திரும்பத்திரும்பச் சொல்லுதல். படித்துப் படித்துச் சொல்லுதல்.

பரசுதல் : பலபடப் புகழ்ந்து சொல்லுதல்.

பலுக்குதல் : சொற்களை ஒலித்தல் (உச்சரித்தல்)

பறைதல் : மறை (இரகசியம்) வெளிப்படுத்திச் சொல்லுதல்.

பன்னுதல் : நுட்பமாய் விரித்துச் சொல்லுதல்.

பனுவுதல் : செய்யுளிற் புகழ்ந்து சொல்லுதல்.

பிதற்றுதல் : பித்துப் பிடித்தவனைப் போல் பேசுதல்.

புகலுதல் : விரும்பிச் சொல்லுதல்.

புலம்புதல் : தனக்குத்தானே சொல்லுதல்.

பேசுதல் : ஒருமொழியிற் சொல்லுதல்.

பொழிதல் : இடைவிடாது சொல்லுதல்.

போற்றுதல் : ஒருவரின் பெருமையைச் சொல்லுதல்.

மறுத்தல் : மற்றொருவர் பேச்சுக்கு மறுப்ப சொல்லுதல்.

மன்றாடுதல் : தன்குறையைச் சொல்லி அறம் வேண்டுதல்.

மாறுதல் : உரையாட்டில் மாறிச் சொல்லுதல்.

மிழற்றுதல் : மழலைபோல் இனிமையாய்ச் சொல்லுதல்.

முழங்குதல் : உறுதிபட ஓங்கிச் சொல்லுதல்.

மொழிதல் : சொற்களைத் திருத்தமாகச் சொல்லுதல்.

வலித்தல் : ஒன்றையே உறுதிபடச் சொல்லுதல். அதாவது வற்புறுத்தல் - வலியுறுத்தல்.

விடுதல் : மெள்ள வெளிவிட்டுச் சொல்லுதல்.

விதத்தல் : சிறப்பாய் எடுத்துச் சொல்லுதல்.

விரித்தல் : விரிவாக எடுத்துச் சொல்லுதல்.

விள்ளுதல் : வெளிப்பட்டுச் சொல்லுதல்.

விளக்குதல் : குறிப்பிட்ட ஒன்றைத் தெளிவாக்கிச் சொல்லுதல்.

விளத்துதல் : ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுத் திட்டவட்ட மாகச் சொல்லுதல். (எ-டு : புள்ளிவிளத்தம்)

விளம்புதல் : ஓர் அறிவிப்பைச் சொல்லுதல்.

பாவாணரின் மாணவர் இலக்கணக் கொடை

முனைவர் பி. தமிழகன்

பாவாணர் பதினேழாம் அகவையில் ஆசிரியப் பணியைத் தொடங்கியவர். ஓராண்டு நடுநிலைப் பள்ளியிலும், இருபத்திராண்டு உயர்நிலைப் பள்ளிகளிலும், பன்னீராண்டு கல்லூரியிலும் நுவலாசிரியராய் விளங்கினார். நுவலாசிரியர் பணியில் பெற்ற பட்டறிவு நூலாசிரியராக்கியது. மாணவர்களுக்கெனப் பல நூல்களை எழுதினார்.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்ட இலக்கண நூல்களுள் நமக்குக் கிடைப்பவை ஐந்து நூல்களே. அக்காலத்தில், ஆங்கில இலக்கணமும் நன்னூலும் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப் பட்டன. அரசின் பாடத்திட்டத்தை ஒட்டி 'மாணவர்க்கு விளங்க வைத்தல்' என்னும் நோக்கம் பற்றி இலக்கண நூல்களை எழுதினார்.

அ. இயற்றமிழ் இலக்கணம்

திருச்சி, புத்தூர் ஈபர் கண்காணியார் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும்போது 1934இல் 4, 5, 6ஆம் படிவங் (Form)களுக்குப் பயன்படும் வகையில் இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலில் காணப்படும் கருத்துகள் இக்காலத்து 8, 9, 10ஆம் வகுப்புகளுக்குப் பெரிதும் பொருத்தமுடையன.

நான்காம் படிவத்திற்கு எழுத்தியல், சொல்லியல், புணரியல் ஆகியனவும், ஐந்தாம் படிவத்திற்கு இவற்றோடு யாப்பியல், அணியியல் ஆகியனவும், ஆறாம் படிவத்திற்கு இவற்றோடு பொதுவியலும் சேர்த்துத் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே, நன்னூல் நூற்பாக்களும் காட்டப் பட்டுள்ளன. ஒவ்வொரு படிவத்துக்கும் தரும் இலக்கணக் கருத்துகளுக்குத் தனித்தனியே தொடர் எண் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூலில் உள்ள எடுத்துகாட்டுகள் சிறந்தவை; அவற்றுள் சில இன்றும் தொடர்ந்து காட்டப்படுவன. திசைச் சொல்லுக்கு விளக்கம் தரும்போது பண்டையிலக்கணப்படி இருந்த திசைச் சொற்களையும், செந்தமிழ்நாடு சூழ்ந்த பன்னிரு நாடுகளில் வழங்கும் சிறப்புச் சொற்களையும் காட்டி விட்டு, 'பதநீரைத் தெளிவு' என்பது வடாற்காட்டுச் சொல், 'பதநீரைப் பனஞ்சாறு' என்பது சென்னை நாட்டுச் சொல் முதலியனவாகக் காட்டுவதன் மூலம் பாவாணர் தமிழ் நாட்டுப் பகுதிகள் அனைத்தின் வழக்குகளையும் அறிந்துள்ளமை அறியலாம். அணியியலில், தமிழில் உள்ள அணிகளுக்கு இணையான வடமொழி அணிப்பெயரையும் சுட்டியுள்ளார். இந்நூல் மாணவர்க்கேற்ற எளிமையும், தெளிவும் கொண்டிலங்குவது.

ஆ. கட்டுரைக் கசடறை என்னும் வியாச விளக்கம்

இந்நூலில் அக்கால வழக்காற்றுக் கேற்ப, A Guide to Tamil Composition for Schools & Colleges என ஆங்கிலத் தலைப்பு முதலிலும் தமிழ்த்தலைப்பு பின்னரும் நூற்பெயராக அமைந்துள்ளது.

இந்நூலும், எழுத்தியல், சொல்லியல், சொற்றொடரியல், அணியியல், வியாசவியல் ஆகிய ஐந்து பகுதிகளையுடையது. பெருந் தலைப்பு, உள்தலைப்பு, சில சொற்கள் ஆகியன தமிழிலும், ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. தற்கூற்று - Direct Speech, அயற்கூற்று - Indirect Speech, பற்றாட்டு - Hobby, ஒலிவிளம்பி - Radio முதலியன. றகர ரகரச் சொற்கள், ளகர ழகரச் சொற்கள், வழூஉச் சொற்கள், மரூஉச் சொற்கள், பல்வடிவச் சொற்கள், ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல் பட்டியல் முதலியன பாவாணர் அகர முதலி அறிவு நிரம்பப் பெற்றிலங்கியவர் என்பதைக் காட்டுகின்றன. வியாசவியல் என்னும் கட்டுரைப் பகுதியில் உள்ள, கட்டுரைப் பொருள், குறிப்புச் சட்டகங்கள் ஆகியன பாவாணரின் பல்துறை அறிவைப் பறைசாற்றுவன.

இ. கட்டுரை வரைவியல் என்னும் இடைத்தரக் கட்டுரை இலக்கணம்

'கட்டுரைக் கசடறை' என்னும் நூலே கட்டுரை வரைவியல்..... என்னும் இப்பெயரில் 1940இல் வெளிவந்தது. அதனால், பல திருத்தங்களும், பல புதுச்சேர்க்கைகளும் பெற்று விளங்கியது.

"ஆறாம் படிவ மாணவர் கூட ஆறாம் வகுப்பு மாணவர் போன்றே பிழை மலிய எழுதுகின்றனர். அவருடைய கட்டுரைகளை ஆசிரியர் கைவலிக்கவும், மனஞ்சலிக்கவும் ஓயாது திருத்தித் திருத்தி ஒழிவு நேரத்தையெல்லாம் ஒழிப்பினும் அம்மாணவரது அறிவு திருத்தாமையின் அவ்வாசிரியர் உழைப்பெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போல் வீணாகின்றது" (பக் - V) என்னும் முகவுரைப் பகுதி பாவாணரின் உள்ள குமுறலைத் தெற்றெனப் புலப்படுத்தும்.

முன்னூலுள் இடம் பெற்ற ஆங்கிலச் சொற்கள் இந்நூலுள் குறைந்துள்ளன. நேர்க்கூற்று, நேரல் கூற்று முதலியன. பல திருத்தங்கள் பெற்றுள்ளன. கட்டுரைத் தலைப்புகளும், குறிப்புச் சட்டகங்களும் இருநூலுக்கும் வேறுபட அமைந்துள்ளன. வருணனை - வரணனை; போரின் நன்மை, தீமை - போரின் தீமை, கிராம வாழ்க்கை - நாட்டு வாழ்க்கை முதலியன. பின்னிணைப்பில் உள்ள கட்டுரை திருத்தும் முறை இற்றைத் தமிழாசிரியர்களுக்கு வேண்டுவது. வடசொல் - தென்சொல்; இந்துத்தானிச் சொல் - தமிழ்ச் சொல்; ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல் ஆகிய பட்டியல்கள் இடம் பெற்றுள்ளன. இவை, மாணவர் கட்டுரை எழுதும்போது பிற மொழிச் சொற்களைக் களைந்து தமிழ்ச் சொற்களைப் பெய்து எழுதவேண்டும் என்னும் பாவாணர் உள்ளத்தைக் காட்டுவன.

ஈ. உயர்தரக் கட்டுரை இலக்கணம் – முதற்பாகம்

"தமிழிலக்கண வறிவைப் பொறுத்த மட்டில் உயர்நிலைப் பள்ளி மாணவரும் கல்லூரி மாணவரும் பெரும்பாலும் ஒரே தரத்தின ராயிருத்தலால் அவ்விருவருக்கும் பொதுவான தமிழ்க் கட்டுரை பற்றிய செய்திகள்" இந்நூலுள் தரப்பட்டுள்ளன. ஆயினும் இந்நூல் சிறப்பாகக் கல்லூரி மாணவர்க்கு உரியதாக 1950இல் எழுதப்பட்டது; தொடரியல் பற்றியது; தொடர் வகைகள், வாக்கியம் (Sentence), கிளவியம் (Clause), தொடர்மொழி (Phrase) ஆகியவற்றின் இலக்கணம், வகைகள், வடிவுகள், மாற்றங்கள், பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இந்நூல் பெரும்பாலும், 'ரென்னும் மார்ட்டினும் (Wren and Martin) இணைந்தியற்றிய ஆங்கில விலக்கண நூலைத் தழுவியே சென்னை அரசியலார் வகுத்த தமிழ்க் கட்டுரையிலக்கணப் பாடத் திட்டத்தைத் தழுவி வரையப்பட்டுள்ளது'.

உ. உயர்தரக் கட்டுரை இலக்கணம் – இரண்டாம் பாகம்

இந்நூல், மரபியலும், கட்டுரையிலும் கொண்டதாக 1951இல் வெளிவந்தது. 'இவ்விலக்கண நூல் கட்டுரைக்கென்றே எழுதப் பெற்றதாகலின் கட்டுரைப் பாகுபாடு முதன் முறையாக முழுநிறைவாகச் செய்யப்பெற்று, பதினான்கு போலிகை (மாதிரி)க் கட்டுரைகளுடன்' அமைக்கப்பட்டுள்ளது.

இருவகை வழக்கியல், பண்புப்பெயர்கள், மரபுப் பெயர்கள் ஆகியனவும், இசைக் கருவி, உண்டி, மழை, சினை ஆகியவற்றின் வினைகளும், ஒருபொருட் பலசொற்களும், இணைமொழிகளும், மரபுத் தொடர்மொழிகளும் கொண்டதாக மரபியல் அமைந்துள்ளது. கட்டுரைகளில் தள்ளவேண்டிய குற்றங்கள், கொள்ள வேண்டிய குணங்கள், பாகியமைப்பு, கடித வகைகள், கதை வரைவு, கட்டுரை வரைவு, சுருக்கி வரைதல், பெருக்கி வரைதல், பொழிப்புரை வரைதல் ஆகியன கொண்டதாகக் கட்டுரையியல் அமைந்துள்ளது.

இந்நூலுள் உள்ள, 'தமிழன் பிறந்தகம், என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையும், 'கம்பர் இராமாயணம்' என்னும் நோட்டக் கட்டுரையும்,'காலம் போற்றும் அமெரிக்கர்' கட்டுரையும் தனித்துச் சுட்டத்தக்கன.

பிற இலக்கண நூல்கள்

'கட்டுரைக் கசடறை' நூலின் இறுதியில் 'இந்நூலாசிரியரின் ஏனை நூல்கள்' என்னும் பட்டியலுள், 1. வழக்கின் மரபு, 2. கட்டுரைக் களம், 3. விகுதிவிளக்கம், 4. இலக்கண வழுக்கள் ஆகிய இலக்கண நூல்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல்கள் இன்று நமக்குக் கிடைக்குமாறில்லை. இந்நூலைப் பற்றிய செய்திகளும் அறிய இயலவில்லை.

பொதுவியல்புகள் : அக்கால மாணவர் தமிழ், ஆங்கிலப் புலமையுடையவராதற்கு இருமொழிச் சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பாவாணரால் தமிழாக்கம் பெற்ற நல்ல தமிழ்ச் சொற்கள் இன்றும் வழக்கில் தொடர்கின்றன. எ - டு : தூக்கி - (Lift), காசோலை (Cheque), தொலைக்காட்சி (Television), மேலாளர் (Manager), பிறைக்கோடு (Bracket) முதலியன. கட்டுரை வரைவியலில் கட்டுரைப் பொருள், வகை, சட்டகம் முதலியன காட்டப்பட்டுள்ளன. ஆனால் உயர்தரக் கட்டுரை இலக்கணம் IIஇல் பல போலிகைக் கட்டுரைகள் தரப்பட்டுள்ளன. பாவாணரின் தனித்தன்மையைக் காட்டும் கட்டுரைகள் பல உள.

இந்நூலுள், இருநூற்றுக்கும் மேற்பட்ட பழமொழிகளும், எழுபத்தெழுவர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் பதிவாகியுள்ளன. எடுத்துக்காட்டுகளில் மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், உ. வே. சா, சேலம் அ. இராமசாமிக் கவுண்டர் முதலியோரைப் போற்றியுள்ளமை பாவாணரது பெரியோரைப் போற்றும் பண்பைக் காட்டும்.

முடிவுரை

பாவாணரின், மாணவர் இலக்கண நூல்கள், மாணவர் மட்டுமின்றித் தமிழறிவு பெற நாட்டமுடைய அனைவரும் கற்கத்தக்க அடிப்படை நூல்களாம். தமிழாசிரியர்க்கு உறுதுணை நூல்களும் ஆகும்.

தமிழ் ஞாயிறு!

– புலவர் வெற்றியழகன்

உமியெனத் தன்னையே ஊதிடுங் கேட்டை ஒழித்திடவே
தமிழ்மகள் தக்க தலைவனைத் தேடித் தவித்திருந்தாள்!
தமிழ்ச்சுடர் காக்கவே தக்க சிமிழாய்த் துடித்தெழுந்தார்
தமிழ்ஞாயி றாகிய தேவநம் நேயர் தமிழ்நிலமே!

வடமொழிச் சொல்களே வண்டமிழ்ச் சொல்லென வாய்மலர்ந்தோர்
குடரினைக் கீறிக் குலைத்தவர் பாவாணர் கூற்றெனவே!
கடலாய்ப் பிறசொற் கலப்பினை நீக்கிக் களையெடுத்தார்!
இடரெலாம் நீங்கியே இன்று மகிழ்ந்தனள் இன்றமிழே!

உலக மொழிக்கே உயிர்மொழி யாகும் உயர்தமிழே!
வளமார் மொழிக்கெலாம் வேர்ச்சொலா யுள்ளது வண்டமிழே!
விளங்கும் மொழிக்கெலாம் மூலம் நமது வியன்றமிழே!"
துலக்கினார் பாவாணர் தூய்மைநற் றொண்டால் துடித்தெழுந்தே!

மூவாத் தமிழை மறைத்த கறையை முனைந்தழித்த
பாவாணர் போன்றோராற் பைந்தமிழ் வாழ்ந்திடும் பாரினிலே!
தீவாம் வடமொழி நீக்கித் தமிழ்க்கலம் தூக்கினரே
நாவார மக்கள் நனிமிகப் போற்றுவர் நானிலமே!

ஓண்டவந்த பிடாரி...

இலங்கையில் இடர்ப்படும் மக்கள் பெரும்பாலுந் தமிழராயிருத்தலின், அவர்கள் உரிமையைப் பேணிக்காத்தற்கு, அங்குள்ள இந்தியத் தூதாண்மைக் குழுத்தலைவர் (Head of the Indian Embassy) இனப்பற்றுள்ள தமிழராக வேயிருத்தல் வேண்டும்.

ஆங்கிலர் நீங்கும்வரை யாழ்ப்பாணம் தனிநாடாக இருந் தமையால் அந்த நிலைமை மீளவேண்டும்; இன்றேல், தமிழும் சிங்களத் தோ டொத்த ஆட்சி மொழியாதல் வேண்டும். இதற்குக் கரணியங்கள்:

1. இலங்கை ஒருகாலத்தில் தமிழகத்தொடு சேர்ந் திருந்தமை.
2. சிங்களர் கி. மு. 550இல் அல்லது 534இல் வங்கத்தினின்று வந்த வந்தேறிகளின் வழியின ராயிருத்தல்.
3. கி.பி. முதல் நூற்றாண்டிற் கரிகால் வளவன் பன்னீராயிரம் சிங்களரைச் சிறைபிடித்து வந்து காவிரிக்குக் கரை கட்டினமை.
4. யாழ்ப்பாணம் ஒரு தமிழ யாழ்ப்பாணனுக்கு மானியமாக விடப்பட்டதென்னுங் கதை பொய்யாயிருப்பினும், யாழ்ப்பாண விடுதலை அதன் குடிவாணர் பிறப்புரிமை யாயிருத்தல்.
5. யாழ்ப்பாணம் என்னும் பெயர் தூய தமிழ்ச் சொல் லாயிருத்தல்.
6. யாழ்ப்பாணியர் அனைவரும் தூய தமிழரா யிருத்தல்.
7. ஆங்கிலர் காலம்வரை யாழ்ப்பாணம் சிங் களத் தொடர் பின்றித் தற்சார்பு (Independent) நாடாயிருந்தமை.
8. யாழ்ப்பாணம் தமிழ்நாட்டிற்கு மிக அணித் தாயிருத்தல்.
9. சிங்களம் சிறு திரிமொழியாயும் தமிழ் உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழியாயு மிருத்தல்.
10. தமிழ் முதற்கண் இலங்கையின் மூவாட்சி மொழிகளுள் ஒன்றாக ஒப்புக் கொள்ளப்பட் டிருந்தமை.

மக்கள் பெருக்கத்தாலும் நாகரிக வளர்ச்சி யாலும் அறிவியல் முன்னேற்றத்தாலும் ஒவ் வொரு நாட்டிலும் மக்கட் கலப்பு ஏற்பட்டுள் ளது. அறியாமை மிகுந்த நாடுகளிலும் தொழில் வளர்ச்சி இல்லாத நாடுகளிலும், அறியாமையை அகற்றவும் தொழில்களைத் தோற்றுவிக்கவும், ஒருகாலத்தில் அயல்நாட்டாரைப் பல நாடுகள் ஆவலோடு அழைத்தன; அன்பாக வரவேற்றன. அயல்நாட்டார் தாம் குடிபுகுந்த நாட்டைப் பிறந்த நாடுபோற் பேணி, அல்லும் பகலும் முக்கரணத்தாலும் அரும்பாடுபட்டு நாட்டை வளம்படுத்தி முன்னேறச் செய்தனர். ஆயின், கருமம் முடியும்வரை காலில் விழுந்து கும் பிட்டுக் கருமம் முடிந்தபின் காலை வாரி யடித்தாற் போல், பல தலை முறையாகப் பதிந்து குடியூன்றித் தம் முன்னோரையெல் லாம் முற்றும் மறந்துபோன குடும்பத்தாரை யும், கொள்ளையடித்தும் கொன்றும் உயிர் தப்பியோடிப் போகச் செய்தும், உரிமைகளைப் பறித்தும், தம்மை வாழ்வித்தவரின் வழியினரை வெளியேற்றி விட்டனர். இவ்வகையில் எல்லை யில்லாக் கொடுமைக்கு ஆளானவர் இலங்கைத் தமிழரும் காழக (பர்மா)த் தமிழரும். ஒரு நாட்டிற் பன்னீராண்டு தொடர்ந்து குடியிருந்த வர்க்கெல்லாம் குடியுரிமையுரியதாகும். அவரை நாட்டைவிட்டகற்றுவது நாகரிக அரசிற் குரியதன்று.

தமிழ்நாட்டிலும் பல வெளிநாட்டினர் குடியேறியுள்ள னர். அவர்களை யெல்லாம் வெளியேற்றின், தமிழ்நாட்டு மக்கட் டொகை மிகக் குறையும். வேலையில்லாத் திண்டாட்ட மும் நீங்கும். ஆயின், மாந்தன் தோன்றியது முதற் பண்பட்டு வந்த தமிழ்நாடு அப் பழிவினை செய்யாது.

தமிழ்நாட்டிற்குக் கோன்மை (sovereign - ty) இருந்திருப்பின், அநாகரிக அரசுகளுடன் எதிர்த்துப் போராடித் தமிழரின் உரிமையைக் காத்திருக்கும். இந்திராகாந்தி யம்மையார் இலங்கைத் தலைமை மந்திரினியார் சிரீமாவோ பண்டார நாயகின் விருப்பத்திற்கிணங்கி, இலக் கக்கணக்கான இந்தியரை நாடுதிருப்பச் செய்து கொண்ட ஒப்பந்தம் சரியானதன்று. இந்தியக் குடியேறிகளின் குடியுரிமையைக் காவாதத னால், யாழ்ப்பாணத் தமிழரின் நாட்டுரிமை மொழியுரிமைகளும் தாக்கப்பட்டுவிட்டன.

இலங்கையரசின் அட்டூழியத்தைக் கண் டித்துத் தமிழ் நாட்டுச் சட்டசவையிலேனும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் படல் வேண்டும். ஏற்கெனவே இலங்கையினின்று நாடுதிருப்பப் பட்டவரும், இலங்கையிற் காத்துக்கொண்டிருப் பவரும், பல வகையிடர்ப்பாட்டுள் திண்டாடிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இதை ஆய்ந்து, அவர்களை ஏந்தான வாழ்வு படுத்த ஒரு குழுவை இந்திய அரசு ஏற்படுத்துதல் வேண்டும்.

இலங்கையை எளிதாக வென்றடக்கிய பண்டைப் பாண்டியருஞ் சோழரும் முன்னோக் கின்றி நடந்து கொண்டதனால், ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்துகின்றது.

- பாவாணர்

குமரிக்கண்டத் தமிழரின் வானியல் மேதைமை

வெள்ளுவன், திருநெல்வேலி

தமிழன் பிறந்தகமும், பழம்பாண்டி நாடுமாகிய குமரிக்கண்ட நிலப்பரப்பு கடல் கொண்டு மூழ்கிப் போனமையால் தொல்பொருள் சான்று (Archaeological Evidence) இன்று அறவே இல்லாதாயிற்று. ஆனால் அகச்சான்றாக குமரிக்கண்டம் பற்றிய குறிப்புகள் நமது இலக்கியங்களில், தொன்மங்களில் குறிப்பாக வானியல் நூல்களில் நிறையவே காணக் கிடக்கின்றன. அவற்றை நுணுகி ஆய்ந்து வெளிக் கொணர்வதே நம் பணியில் தலையாயது. அவ்வாறு ஆய்ந்து வெளிக்கொணரப்படும் உண்மைகள் பாவாணரின் உயிர்க் கொள்கையான குமரிக்கண்டக் கோட்பாட்டிற்கு வலுச் சேர்க்கும்.

தொல்காப்பியம் கி.மு.7ஆம் நூற்றாண்டு நூலேயாயினும் அதிலே சொல்லப்பட்டுள்ள செய்திகள் கி.மு.50ஆம் நூற்றாண்டிற்கும் முந்தினவை யாகும் என்று பாவாணர் குறிப்பிடுகிறார்.

இன்று தமிழ்நாட்டில் வழங்கும் கணிய நூல் குமரி நாட்டிலேயே தமிழரால் முற்றும் அறியப்பட்டுவிட்டது. ஏழு கோள்களும், இருபத்தேழு நாண்மீன்களும், ஓர் ஆண்டு வட்டத்தையமைக்கும் பன்னிரு திங்கட்குரிய பன்னீரோரைகளும் தமிழர் கண்டவையே. இன்று உலக முழுவதும் வழங்கி வரும் ஏழு கோட் பெயர்களைக் கொண்ட ஏழு நாட்கிழமை யமைப்பு தமிழரதே. குமரிக் கண்டத்தில் பன்னீரோரைப் பெயர்களே பன்னிரு மாதப் பெயர்களாய் வழங்கி வந்தன. ஆரியர் வந்தபின் அவை நாட்பெயர்களாக மாற்றப்பட்டு விட்டன என்று பாவாணர் தமது வடமொழி வரலாறு (பக்98-99) என்ற நூலில் குறிப்பிடுகிறார். வானியலில் குமரிக் கண்டத் தமிழர் பெற்றிருந்த அறிவும், செறிவும் இன்று நம்மை வியப்புறச் செய்கின்றன.

காலக்கணிப்பு கதிரவன் இயக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது என்பது வெளிப்படை. ஒருநாள் என்பது கதிரவன் எழுவதை வைத்தே கணக்கிடப் படுகிறது. கதிரவன் தோற்றத்திற்கு முந்தைய வைகறைப் பொழுதை 'கடைநாட் கங்குல்' என்று கூறுதலால் இதனை யறியலாம்.

ஒரு கிழமை (வாரம்)யும் கதிரவனைக் கொண்டே தொடங்குகின்றது. ஏழு நாட்களைக் கொண்ட இக்கிழமையின் முதல்நாள் ஞாயிற்றுக் கிழமைதான். பிறநாட்களின் பெயர்களும் கோள்களின் பெயராலே அழைக்கப்படுகின்றன.

மாதங்களின் தொடக்கமும் கதிரவனை அடிப்படையாகக் கொண்டதே. வான்மண்டலத்தில் அமைந்துள்ள ஓரை வட்டத்தின் ஒவ்வோர் ஓரையிலும் கதிரவன் இடம்பெறும் காலம் ஒரு மாதமாகும். ஒவ்வொர் ஓரையிலும் கதிரவன் புகும் நாளே அம்மாதத்தின் முதல்நாள். கதிரவன் இயக்கம் கடகத் திருப்பத்திலிருந்து (Tropic of cancer) தெற்கு நோக்கிச் செல்லும் தென்செலவு (தக்கிணா யனம்), சுறவத் திருப்பத்திலிருந்து (Tropic of Capricorn) வடக்கு நோககிச் செல்லும் வட செலவு (உத்தராயணம்) என இருவகைப்படும்.

இச்செலவின்போது வரிசையாக ஒவ்வொரு ஓரையையும் சராசரி 30 நாட்களில் கடந்து நிலநடுக்கோட்டை (Equator) மேழம், துலை ஓரைகளின் வழியாகக் கடக்கிறது. இவ்வாறான ஒரு சுற்றே ஓராண்டு எனக் கணக்கிடப்படுகிறது. ஞாயிற்று இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப் படும் ஆண்டுமுறை 'கதிராண்டு' (சௌர மானம்) எனப்படும். திங்கள் இயக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு கணக்கிடப்படும். ஆண்டு முறை 'மதியாண்டு' (சாந்திர மானம்) எனப்படும். முகமதிய ஆண்டு முறை மதியாண்டாகும்.

ஆண்டின் தொடக்கத்தைக் கணக்கிட ஒரு வழிமுறையைக் கையாண்டு வந்தனர். கதிரவன் வான்உச்சிக்கு வரும் நாளைச் சிறப் பாகக் கொள்ளும் வழக்கம் தமிழரிடையே உள்ளது. இதைப் பல பண்டை இலக்கியங் களும் நமக்குக் காட்டுகின்றன.

'விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோல் குறிநிலை வழுக்காது குடக்குஏர்பு
ஒருதிறம் சாரா வரைநாள் அமையத்து
நூல்அறி புலவர் நுண்ணிதின் கயிறுஇட்டுத்
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து'

(நெடுநல்வாடை - 73 - 78)

தமிழர்கள், கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளைச் சிறப்பாக்கக் கருதினர் என்பதை இப்பாடல் வரிகள் நமக்குப் புரியவைக்கின்றன.

குமரிமாக்கடலில் (இந்து மாவாரி) சுறவத் திருப்பம் தாண்டியும் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது என்பது பற்றித் தொன்மங்களும், கிரேக்க உரோமானிய வரலாற்று அறிஞர்களின் குறிப்புகளும் சொல்லுகின்றன. இதுபற்றித் தமிழரின் காலக்கணிப்பு நூல்களிலும் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

பாவாணர் தனது குமரிக்கண்டக் கோட்பாட்டை நிறுவச் சொல்லாய்வையே முதன்மையாகப் பயன்படுத்தினார். குமரிக் கண்ட நிலப்பரப்பு, கடல் கொண்டு மூழ்கிப் போனமையால் கல்வெட்டுச் சான்று, அகழ் வாய்வுச் சான்று போன்றவற்றுக்கு வாய்ப் பில்லாது போயிற்று. எனவே தமிழ்ச் சொல் லாய்வின் வழியே கிடைத்த பல செய்திகளை அவர் தம் குமரிக்கண்டக் கோட்பாட்டை நிறுவ சான்றுகளாகப் பயன்படுத்திக் கொண் டார். அதுபோன்றே வானியல் குறிப்புகள் வழி கிடைக்கும் செய்திகளும் அவரின் குமரிக் கண்டக் கோட்பாட்டை நிறுவ வலுவான சான்றுகளாகித் துணை நிற்கின்றன.

கதிரவன் இயக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு காலம் (Time) கணிக்கும் முறையில் ஒரு சொல் 'லங்கோச்சயினி மத்திய ரேகை' என்பதாகும். இந் நாட்களில் நாம் பயன் படுத்துகிற 'கிரீன்விச் மைவரை' (Green which meridian)யை ஒத்த ஒரு மைவரையே இது. இதே மைவரை 'யாமியோத்தரரேகை' என்ற பெயரிலும் குறிப்பிடப்பட்டு வந்ததாக ஆபிரகாம் பண்டிதர் தமது 'கருணாமிருத சாகரம்' என்ற புகழ் பெற்ற நூலில் குறிப்பிட் டுள்ளார். 'யாமி' என்ற சொல்லுக்குத் தெற்கு என்று பொருள் கூறுகிறது நா. கதிரைவேற் பிள்ளையின் 'தமிழ் மொழி அகராதி'. 'உத்தரம்' என்ற சொல்லுக்கு வடக்கு என்று பொருள் கூறுவார் பாவாணர். எனவே யாமி + உத்தரம் எனப்புணர்ந்து 'யாமியோத்தரம்' என்ற சொல் பிறக்கிறது. தென்வடல்கோடு என்பதே இதன் பொருள்.

தெற்கே இலங்கையையும் வடக்கே உஞ்சை (உச்சயினி)யையும் இணைக்கிற மை வரையே (meridian) இலங்கோச்சயினி மத்திய ரேகை. இன்றைய உஞ்சை நகர், நிலநடுக் கோட்டிற்கு வடக்கே கடகத்திருப்பத்தில் நேர்வரை (Latitude) 23° - 11' யிலும், கிரீன்விச் மைவரைக்குக் கிழக்கு நிரை வரை (Longtitude) 75° - 41' யிலும் அமைந்துள்ளது. வடக்கே கடகத் திருப்பத்தில் அமைந்துள்ள உஞ்சை நகரின் நேர்வரையில் தெற்கே சுறவத் திருப்பத்தில் தான் இலங்கை இருந்திருக்க வேண்டும். ஆகவே சுறவத் திருப்ப இலங்கையையும், கடகத்திருப்ப உஞ்சையையும் இணைக்கிற கோட்டையே 'இலங்கோச்சயினி மைவரை' அல்லது 'தென்வடல் கோடு' (யாமி யோத்தர ரேகை) எனக் குறிப்பிட்டுள்ளனர். (கதிரவனின் வட, தென் செலவுகள் சுறவத் திருப்பத்திற்கும் கடகத்திருப்பத்திற்கும் இடையே நிகழ்கின்றன என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.)

ஆனால் இன்று 75° - 41' நிலவரையில் தெற்கே சுறவத் திருப்பத்தில் நிலப்பகுதி எதுவும் இல்லை. குமரிமாக் கடலே பரந்து விரிந்து காணப்படுகிறது. கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியே இந்த இலங்கையாய் இருத்தல் வேண்டும். இந்நாள்

கிரீன்விச் மைவரைக்கு மூலமும் இந்த 'இலங்கோச்சயினி மைவரை'யே.

சுறவத்திருப்பக் குமரிக்கண்ட நிலப் பகுதியில் தமிழர்கள் வாழ்ந்த காலத்தில் சுறவத்திருப்பத்தில் கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளான சுறவத்திங்கள் முதல் நாளை ஆண்டின் தொடக்கமாகக் கொண்டனர். கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளைச் சிறப்பாகக் கொள்வது தமிழர் மரபு. அன்று தான் கதிரவனின் வடசெலவும் தொடங்கும். அச்சுறவ முதல் நாளிலே கதிரவனைப் போற்றிப் பொங்கல் விழா கொண்டாடுவதும், அப் பொங்கல் நன்னாளையே 'புதுநாள்' என்று கூறுவதும் சுறவ முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டதின் எச்சங்களே.

சுறவத்திருப்பக் குமரிக்கண்ட நிலப் பகுதி கடற்கோளால் அழிந்தபின் வடக்காக நகர்ந்து நிலநடுக் கோட்டில் தென் மதுரையைத் தலைநகராகக் கொண்டு வாழத் தொடங்கினர். தென்மதுரையில் கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளான மேழ விழுநாளை ஆண்டுத் தொடக்க மாகக் கொண்டனர்.

தென் மதுரையும் கடல் கோளுக்கு உட்பட்டபின் கபாடபுரம் தலைநகராக இருந்த காலத்தில் கபாடபுரத்தில் கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளுக்கு ஆண்டுத் தொடக்கம் மாற்றப்பட்டது. அதைத்தான் நாம் இன்று தமிழ்ப் புத்தாண்டு என்றும் சித்திரை விசு என்றும் கொண்டாடி வருகிறோம்.

மேழவிழுவிற்கும் (கதிரவன் மேழ ஓரைக்குள் புகும் நாள்) கபாடபுரத்தில் கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளுக்கும் 23 நாட்கள் இடைவெளி உண்டு. இதனால் தான் கதிரவன் நிலநடுக் கோட்டில் வரும் நாளான மார்ச்சு 21 ஆம் நாளுக்கு 23 நாட்களுக்குப் பின்பே தமிழ்ப் புத்தாண்டான சித்திரை விசு ஏப்பிரல் 14ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்த 23 நாட்கள் வேறு பாட்டினாலேயே கதிரவன் தனது வடசெலவைத் தொடக்கும் நாளான திசம்பர் 21ஆம் நாளுக்குப் பகரம் சனவரி 14ஆம் நாளைத் தைப் பொங்கல் என்று கொண் டாடி வருகிறோம்.

தமிழர்கள் கபாடபுரத்தில் குடியேறிய பின்னரே எகிப்து நாட்டுக்குக் குமரிக்கண்ட மக்கள் குடிபெயர்ந்தனர். அங்கு அவர்கள் இலங்கையில் தமிழர்கள் தலைநகர் இருந்த தன் எச்சமாகத் தை மாதத்தில் ஆண்டுப் பிறப்பு கொண்ட ஆண்டு முறையைக் கடைப்பிடித் தனர். இந்த ஆண்டு முறையை அடியொற்றி உருவாக்கப்பட்டதே கிறித்தவ ஆண்டு முறை. கி. பி. 1582 வரை கிறித்தவ ஆண்டுப் பிறப்பும் தை மாதப் பிறப்பும் ஒரே நாளில் இருந்தன.

கி. பி. 1582ஆம் ஆண்டு கிரிகோரி என்ற போப்பரசர் அக்டோபர் 5ஆம் நாளை 15ஆம் நாளாக மாற்றியமைத்தார். இந்த மாற்றத் திற்குப் பின்னர் தான் தை மாதப் பிறப்பிற்கும் கிறித்தவ ஆண்டுப் பிறப்பிற்கும் இடையே யான இன்றைய இடைவெளி ஏற்பட்டது. போப்பரசர் செய்த இந்த மாற்றத்தை ஐரோப் பிய நாடுகள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஏற்றுக் கொண்டன. இறுதியாகக் கி. பி. 1752இல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இயற்றப் பட்ட ஒரு சட்டத்தின் வழி இங்கி லாந்திலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் நடைமுறைக்கு வந்தது.

கதிரவன் இயக்கத்திற்கும் ஐந்திரக் (பஞ்சாங்கம்) கணிப்பிற்கும் இடையான 23 நாட்கள் வேறுபாட்டைப் பல அறிஞர்கள் பல்வேறு காலக் கட்டங்களில் சுட்டிக் காட்டி, அந்த வேறுபாடு களையப் படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர். இதுபற்றிப் பாரதியார் தனது 'பஞ்சாங்கம்' என்ற கட்டுரையில் "இப்போது தை மாதப் பிறப்பை உத்தராயனத்தின் தொடக்கமாக நாம் நினைப்பது தவறு. மார்கழித் திங்கள் 8ஆம் தேதியே உத்தராயனம் தொடங்கி விடுகிறது. அன்றே சூரியன் தனது தெற்கெல்லையி லிருந்து வடக்குநோக்கிப் புறப்பட்டு விடுகிறது. 'வசந்தவிசு'வானது மேழராசியின் தொடக்கத் திலிருந்த காலத்தில் உத்தராயனம் தைமாதப் பிறப்பன்று தொடங்கிற்று. அதற்கப்பால் கணக்குத் தவறிவிட்டது. மேற்குறித்த வேறு பாடு ஏற்பட்டு இப்போது பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டதால் புண் ணியக் காலங்கள் 20, 22 நாட்கள் பின்னால் சென்று, நியமங்களுக்கும், பிரத்யட்சத்துக்கும் விரோதமாயிருக்கின்றன. அயன விசுக்களை நேராகத் தெரிந்து பஞ்சாங் கத்தில் ஆண்டுப் பிறப்பைச் சரியான நாளில் வைத்தால் பருவக்கணக்கு நேராகும்." என்று குறிப்பிடுகிறார். இதுபோல் பாலகங்காதர திலகர் தன்னுடைய 'ஒரயன்' என்ற ஆங்கில நூலில் "இதற்கு முன் அயனங்கள் மாறினதில்

உத்தராயன, தட்சணாயன புண்ணியக் காலங் களை நம்முன்னோர்கள் மூன்று தடவைக்குக் குறையாமல் சரியான காலங்களில் நேரும்படி மாற்றி வைத்துக் கொண்டார்கள்" என்று எழுதுகிறார்.

இந்த 23 நாட்கள் வேறுபாடு ஏற்பட்ட பின் மாதங்களின் பெயரை ஓரைகளின் பெயரால் குறிப்பிடுவதில் குழப்பங்கள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக ஏப்பிரல் 14ஆம் நாள் பிறக்கிற மாதத்தை மேழ மாதம் என்று குறிப்பிடும் போது, கதிரவன் மேழ மாதம் 8ஆம் நாளே மேழ ஓரையைக் கடந்து விடை ஓரைக்குள் புகுந்துவிடுகிறது. எனவே கதிரவன் இயக்கத்திற்கும், கதிரவன் இயக்கத்தின் அடிப் படையில் அமைந்த ஓரைமாதப் பெயர் களுக்கும் பொருத்தமில்லாமல் போய்க் குழப்பமாகி விடுகின்றன. இந்தக் குழப்பத்தைப் போக்குவதற்கே ஏப்பிரல் 14ஆம் நாளை ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டபின் மேழ மாதத்தை, மேழ ஓரையில் வெள்ளுவா (பவுர்ணமி) நிகழும் நாண்மீனின் பெயரால் குறிப்பிடத் தொடங்கினர். இது போன்றே ஏனைய ஓரைப் பெயர் மாதங்களும் நாண் மீன்களின் பெயரால் குறிப்பிடப்பட்டன.

எனவே சித்திரை முதல் நாள் (ஏப்பிரல் 14) தொடங்கும் ஆண்டு முறையும் குமரிக் கண்டத் தமிழர்களின் வானியல் மேதைமையில் தோன்றிய ஒன்றேதான். உலக முழுமைக்கும் காலக்கணிப்பு முறையை அறிமுகப்படுத்திய பெருமை குமரிக்கண்டத் தமிழர்க்கே உரியது என்பது இவற்றிலிருந்து உறுதியா கிறது.

மேழ விழுநாளில் (மார்ச்சு 21ஆம் நாள்) தொடங்கிய ஆண்டுப் பிறப்புக் கொண்டாட் டத்தின் எச்சமே பங்குனி மாத வெள்ளுவா வான பங்குனி உத்தரம். உத்தர நாள் முருகன் கோயில்களில் தமிழகம் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தென் மாவட்டங்களில் குலத் தெய்வ வழிபாடாக, சிறுதெய்வ வழிபாடாக அனைத்து மக்களா லும் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வட நாட்டில் ஒலிப் பண்டிகை, காமன் எரிப்பு, சமண சமயத்தினரின் மகாவீரர் பிறப்புநாள் என்று பல வடிவங்களில் இந்நாள் கொண் டாடப்படுகிறது.

கிறித்துவ மதத்தினர் கொண்டாடி வரும் 'ஈஸ்டர் ஞாயிறு' எனப்படும் உயிர் மீட்சித் திருநாள் குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்படுவ தில்லை. உயிர் மீட்சித் திருநாள் குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட நாளில் கொண்டாடப் படுவதில்லை. உயிர் மீட்சித் திருநாளைத் தீர் மானிப்பதற்கான வாய்பாடு (Formula) கிறித்துவச் சமயத் தலைமையினரால் நெறிப் படுத்தப்பட்டுள்ளது. அந்நெறி முறை 'மார்ச்சு 21ஆம் நாளிலோ அதைத் தொடர்ந்தோ வரும் வெள்ளுவா(பவுர்ணமி)வுக்கு அடுத்த ஞாயிற்றுக் கிழமையில் உயிர் மீட்சித் திருநாள் கொண்டாடப்பட வேண்டும்' என்பதாகும்.

தென்மதுரைத் தமிழர்களால் புத்தாண் டாகக் கொள்ளப்பட்ட மேழவிழு நாள் (மார்ச்சு 21) பல்வேறு வடிவங்களில் பல்வேறு மக்களால் இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

கபாட புரமும் கடலாற் கொள்ளப் பட்டபின் மேலும் வடக்காக நகர்ந்து மணவூரைத் தலைநகராகக் கொண்டு வாழத் தொடங்கினர். மணவூர் தற்போதைய கொற்கை என்பர். மணவூரில் கதிரவன் வான் உச்சிக்கு வரும் நாளில் தொடங்கும் ஆண்டு முறையை அவர்கள் புகுத்தவில்லை. அடிக்கடி ஆண்டுப் பிறப்பில் மாற்றங்கள் செய்வதால் குழப்பம் ஏற்படும் என்று எண்ணியிருக்க லாம். ஆனால் கதிரவன் மணவூரில் வான் உச்சிக்கு வரும் நாளான சித்திரை 10ஆம் நாளை - அந்நாளின் சிறப்பை மறவாமல் - சிறப்பு நாளாகக் கொண்டு விழா எடுத்து வந்தனர். இன்றும் கொற்கை, மற்றும் சில தென் மாவட்ட ஊர்களில் சித்திரை 10ஆம் நாள் விழா சிறப் பாகக் கொண்டாடப் படுகிறது.

பாவாணர் கூறியது போல் தமிழன் தான் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு ஆவணம் போல் உதவுவது தொல்காப்பியம் ஒன்றே என்பதோடு குமரிக் கண்டத் தமிழர் களின் வானியல் மேதமையையும் ஓர் ஆவண மாகக் கொள்வோம். அது பாவாணரின் குமரிக் கண்டக் கோட்பாட்டை நிறுவ வலுவான சான்றாகித் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

நம் நாடு
நம் ஏரு

நந்தன் வழி

சமுதாய அரசியல் மாதமிருமுறை

ஆசிரியர் : நா.அருணாசலம்

With Best Compliments

C.P. SPINNING MILLS

Palani

With

Best

Wishes

SKAP BALAKRISHNAN
Nishakishan Spinning Mills (P) Ltd.,
Prathikaaranpatti,
Andippatti.

தமிழியக்கம் நடத்தும்
மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்
நூற்றாண்டு நிறைவுவிழா
சீரோடும் சிறப்போடும் நிகழ்ந்திட
வாழ்த்துகள்

அனிதா பதிப்பகம்

88/63, பட்டர்வொர்த் சாலை, திருச்சிராப்பள்ளி - 620 002.

முனைவர் வே.முத்துலட்சுமி

நல் வாழ்த்துகள்

தூயமரியன்னை தொடக்கப்பள்ளி
தூய மரியன்னை உயர்நிலைப்பள்ளி

பள்ளிவிடை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

இவண்,

தாளாளர், ஆசிரியர்கள், ஆசிரியைகள்,
மாணவ - மாணவியர்



With Best Compliments from

MADURA STEEL INDUSTRIES (P) LTD.,

Collectorate Post, Dindigul - 624 004.
Phone : 461926, 461478, 461479 *Fax :* 0451 - 460251
Email : madurasteel@satyam.net.in

Manufacturers of :

Steel and alloy steel castings from 5 kgs to 750kgs single piece for valves, railway, I.C.F., Defence, cement factories, sugar Factories, fertilizers, earth Moving Equipments, Hydraulics Application, Mines, Thermal and all Engineering Industries.

Our Foundry has got the following Approvals:

A. Well-known by Indian Boiler Regulation - 1950.
B. ISO : 9001 - 2000 Certificate - By RWTUV
C. Engineers India LT (EIL) - Approved
D. National Power Corporation (NPC) - Approved

With Best Wishes

G.V.G. PAPER MILLS

Palani



பாவாணர்
நூற்றாண்டு நிறைவு
விழா வெற்றிபெற
நல்வாழ்த்துகள்

மயிலை சீனியார் குடும்பத்தினர்

ஆ.சண்முகம், ம.அழகம்மாள், ஆ.கணபதி, ம.அன்புமணி, ச.கோப்பெருங்கோ,
ச.மலர்சுடர், க.கோதைநாயகி, க.உலகேசுவரன், க.பிரியதரிசனி

ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை சீனி.வேங்கடசாமி அறக்கட்டளை

45, காரணீசுவரர் கோவில் தெரு, மயிலை, சென்னை - 600 004.

ஆந்திரா - மும்முடிவரம் பாலயோகீசுவரர்.
பிறப்பு : 22.3.1930.
உணவின்றிக் குண்டலினி யோகியாய்த் தவத்தில் இருந்து சமாதி நிலை எய்தியது : 22.6.1946 லிருந்து 19.7.1985 வரை

அருள்மிகு மும்முடிவரம் பாலயோகீசுவரர்
சித்த மருத்துவத் தொண்டு மையம்

கீழ்க்கண்டவைகளுக்குக் கடும்பத்தியம் இல்லாத முறையில் நாடிபார்த்துக் குருவருளை நினைந்து செயல்படும் அனுபவ மூலிகை மருத்துவம் :

சர்க்கரை மிகுதி - (மதுமேகம்) குருதி அழுத்தம் - கொலஸ்ட்ரால் (கொழுமை மிகுதி) - மூலம் - இரத்தமூலம் - புண்மூலம்
அல்சர் - (குடற்புண் - வயிற்றுப்புண் - ஆறாத புரைஓடிய புண்கள் -
தொழுநோய்ப் புண்கள்,
தொண்டையடைப்பான், காதுவலி,
சைனஸ் (மூக்குப்பீனிசம் - மூக்கடைப்பு);
சிறுநீரகத்தில் கற்கள்

எமது மருத்துவத்தில் மனநிறைவு பெற முதல் பத்து நாட்களுக்கு மருந்து இலவசம். இம்மருந்தில் நம்பிக்கை கண்டபின் தொடர்ந்து ஏற்க விரும்பினால் மருந்திற்குக் குறிப்பிட்ட கட்டணம் ஏதும் இல்லை. நோய் நீங்கி நலம் ஆனோர் விரும்பி அனுப்பும் அறங்கள் ஏற்கப்படும். இது ஒரு கைம்மாறு கருதா மருத்துவப் பணி.

மயிலை. மகாவில்வம் (ஆ.சண்முகம்)
பரம்பரைச் சித்த மருத்துவர், மயிலை. சீனி. வேங்கடசாமி இல்லம்
45, காரணீசுவரர் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொ.பேசி. : 4986015

பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா
வெற்றிபெற நல்வாழ்த்துகள்

'எண்என்ப ஏனைஎழுத்து என்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு' - திருவள்ளுவர்

'பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது'
குத்தகை குறித்த உலகப்பன் பாட்டு - பாவேந்தர்

எண் என்பது உண்மை புலனாக உதவுகிறது என்று அனைவரும் அறிவோம். விதிமுறைகள்படி எண் - எழுத்தைப் பின்பற்றும் அரசு நிலை பெற்றிட ஆசிரியர்களும் சான்றோர்களும் செயல்படப் பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழாவில் வாழ்த்தும்.

அன்பன்
நா.மு.நீதிமுத்து மணல்,
நிறுவனர், எண் - எழுத்து ஏற்பு இயக்கம்,
4, சீனு - சிங்காரச் சோலை, முசிறி - 621 211.
☎ 04326 - 60288

'தமிழியக்கம்' நடத்தும்
பாவாணர் நூற்றாண்டு நிறைவுவிழா
இனிதே நிகழ இனிய வாழ்த்துகள்

மருத்துவர் கோ.இராசமாணிக்கம்
(பொது மருத்துவம்)

மருத்துவர் செல்வம் இராசமாணிக்கம்
(மகப்பேறு மருத்துவம்)

கல்கி மருத்துவமனை

கருமண்டபம், திருச்சிராப்பள்ளி - 620 001
தொலைபேசி : 482 272

மணிவாசகர் பதிப்பகத்தின்

தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

6000 - பக்கங்கள் - 15 தொகுதிகள்

திருக்குறள் - தொகுதி I	75.00
திருக்குறள் - தொகுதி II	65.00
திருக்குறள் - தொகுதி III	100.00
திருக்குறள் - தொகுதி IV	75.00
இலக்கியம் - தொகுதி V	75.00
இலக்கியம் - தொகுதி VI	100.00
சமய இலக்கியம் - தொகுதி VII	80.00
சமய இலக்கியம் - தொகுதி VIII	100.00
சமய இலக்கியம் - தொகுதி IX	75.00
சமயம் - தொகுதி X	90.00
சமயம் - தொகுதி XI	100.00
சமயம் - தொகுதி XII	115.00
பொது - தொகுதி XIII	90.00
பொது - தொகுதி XIV	90.00
பொது - தொகுதி XV	90.00

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

நல்வாழ்த்துகளுடன்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

இளநிலை பட்ட வகுப்பு - தமிழ்ப் பாடநூல்கள்

பொருளியல்

1.	தமிழ்நாட்டுப் பொருளாதாரம்	56.00
2.	பன்னாட்டுப் பொருளியல்	85.00
3.	இந்தியப் பொருளாதார வளர்ச்சி - I	28.00
4.	இந்தியப் பொருளாதார வளர்ச்சி - II	49.00
5.	பேரினப் பொருளியல் - I	18.00
6.	பேரினப் பொருளியல் - II	35.00
7.	நுண்ணினப் பொருளியல்	37.00
8.	பொருளாதாரச் சிந்தனை	58.00
9.	நிதியியற் பொருளாதாரம்	45.00
10.	பொதுப் பொருளாதாரம் - I	38.00

வணிகவியல்

11.	கணக்குப் பதிவியல் - I	41.00
12.	நிறுமக் கணக்கியல்	74.00
13.	வாணிப அமைப்பு	96.00
14.	பொருட் பண்பியலும் ஒலியியலும்	41.00

இயற்பியல்

15.	இயற்பியல் துணைப்பாடம் - I	30.00
16.	வெப்ப இயல் வெப்ப இயக்கவியல் புள்ளியிய விசையியல்	31.00
17.	இயற்பியல் துணைப்பாடம் - II	35.00
18.	ஒலியியலும் நிறமாலையியலும்	36.00
19.	எண்ணிலக்க எலெக்ட்ரானியல்	44.00

விலங்கியல்

20.	தண்டுடைய விலங்குகள் - I	39.00
21.	தண்டுடைய விலங்குகள் - II	35.00
22.	முதுகெலும்பற்றவை - I	41.00
23.	முதுகெலும்பற்றவை - II	58.00
24.	விலங்கியல் துணைப்பாடம் - II	34.00
25.	பரிணாமம்	55.00
26.	விலங்கியல் துணைப்பாடம் - I	52.00
27.	விலங்கு உடற்செயலியல்	35.00

வேதியியல்

28.	கனிம வேதியியல் - I	23.00
29.	கரிம வேதியியல் - I	23.00
30.	இயற்பு வேதியியல் - III	24.00
31.	விசையியலும் சார்பியலும்	(அச்சில்)
32.	கரிம வேதியியல் - II	60.00

தாவரவியல்

33.	தாவரவியல் துணைப்பாடம் - II	90.00
34.	தாவரப் புவியியல்	70.00
35.	தாவரத் திசு வளர்ப்பு	70.00
36.	நுண்ணுயிரியியல்	60.00
37.	பாக்டீரியாவியல்	50.00
38.	தோட்டக்கலையும் தோட்டவியலும்	40.00
39.	தாவர உயிர் தொழில் நுட்பவியல்	70.00
40.	தாவர சூழியல்	150.00
41.	தாவரக் கருவியல்	110.00
42.	தாவர நோயியல்	60.00
43.	பூஞ்சையியல்	(அச்சில்)
44.	தாவர வாழ்வியல்	80.00

பிற சிறப்பு வெளியீடுகள்

1.	Akananuru - Translation - Vol. I	125.00
2.	Akananuru - Translation - Vol. II	175.00
3.	Akananuru - Translation - Vol. III	110.00
4.	Selected Poems of Bharathidasan	150.00
5.	Literature without walls (Studies in Comparative Literature)	110.00
6.	பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர்	500.00
7.	தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி I	400.00
8.	தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி - II	400.00
9.	தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி - III	400.00
10.	தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி - IV	240.00
11.	தமிழ் இலக்கியத்தில் நாட்டிய வரலாறு	75.00
12.	Thiruvanaikkovil Temple - A Study	400.00
13.	இயல்பியல் கலைச்சொல் தொகுதி	125.00
14.	Information Bulletin	50.00

நூல்களுக்குத் தக்க கழிவு உண்டு

நூல்கள் கிடைக்குமிடங்கள்

- பதிப்புத்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை மற்றும் கிளைகள்

தமிழியக்கச் சார்பில் நடைபெறும்
பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு
உளம்கனிந்த வாழ்த்துகள்

திரு இரஞ்சனா குழுமம்

(SRI RANJANA CORPORATION)

8, காமராசர் தெரு, (விளக்குத்தூண் அருகில்)

மதுரை.

மனமார்ந்த
வாழ்த்துகளுடன்

திருநிறை மகாலட்சுமி நகைக்கடை

(SRI MAHALAKSHMI JEWELLERY)

35, சின்னக்கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி - 620 002.

தரமான தங்க நகைகள், வெள்ளிப் பொருள்கள்
வாங்கச் சிறந்த இடம்

McADAMS CHEMICAL MFG. Co.,

70-B, Viralimalai Road, Edamalaipattipudur,
Tiruchirapalli - 620 012.
Tamil Nadu, India.

Tel : 0091 - 431 - 471 421, 471 611
Fax : 0091 - 431 - 471 008
E-mail : mcadamschem@yahoo.com

Manufacturer of

TIGER BRAND

ANIMAL GLUE

TECHNICAL GELATINE

to be used in

Safety Matches, Coated Abrasives,
Sand Papers, Gum Tapes, Book Binding,
Printer Roller Composition etc.

பாவாணர்
நூற்றாண்டு விழா
சிறக்க வாழ்த்தும்

பொறிஞர்
க.பெரியாண்டார்

கண்ணன் பல்பொருள் அங்காடி,
இராம் வணிக வளாகம்,
துறையூர்ச் சாலை,
பெரம்பலூர் - 621 212.
தொலைபேசி :
77441, 75686, 77599, 76596.

பாவாணர் வழி நிற்போம்!

விழாச் சிறக்க வாழ்த்தும்

பவானி துணியகம்

38, அஞ்சலகத் தெரு,
&
பவானி மணிப்பொறி அங்காடி,
34, அஞ்சலகத் தெரு,
பெரம்பலூர்.

பாவாணர் வழியில் பைந்தமிழ்
காப்போம்

பாவேந்தர் இலக்கியப் பேரவை

தலைவர் :
கவிச்சிட்டு வேல். இளங்கோ,
க.மு.கல்.இ.

செயலாளர் : புலவர் செம்பியன்

துணைச் செயலாளர் :
புலவர் தமிழ்நேயன்

இணைச் செயலாளர்கள் :
முனைவர் பொன்னொளியன்,
புலவர் சிற்றரசு

'பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனால் ஏது பயன்'
- பாவாணர்

20 ஆண்டுகளுக்கு மேலாக
ஒளிப்படத் துறையில்
வெற்றிநடைபோடும்

007 ஒளிப்பட நிலையம்,
காமராசர் பேருந்து நிலைய மாடி,
பெரம்பலூர் - 621 212.

உரிமையாளர் :
மு.இமயவரம்பன், க.மு.

பேசி : 04328 - 76007, 79185
கைபேசி : 98424 28007

நல்வாழ்த்துக்கள்

அருள்மிகு மாரியம்மன் மேனிலைப் பள்ளி

சமயபுரம்

செயலர் :

திரு. கூ. இரா. இராசா சண்முகவேல், அறி.இ., ச.ம.

கூத்தூர்ப் பண்ணையார்.

திருச்சிராப்பள்ளி, கலைஞர் கருணாநிதி நகர் அருகில்
தரமான வீட்டுமனைகள் வழங்கும் புகழ்மிக்க நிறுவனம்

ஆனந்தா முகமைகள்
(ANANTHA AGENCY'S)

396, இந்திரா காந்தி தெரு, கலைஞர் கருணாநிதி நகர்
திருச்சிராப்பள்ளி - 620 021.
பேசி : 459783, 98430 - 45978

குறிப்பு :

வீடுகள், வீட்டு மனைகள் விற்க, வாங்க எங்களை நாடுங்கள்!
பயன்பெறுங்கள்.

மொழியே இனமக்கள் முன்னேற நல்ல
வழியாம் அதனை வளர்க்கப் – பழியாய்த்
தமிழயரத் தாழ்ந்தான் தமிழன்காண் முன்போல்
தமிழுயரத் தானுயர்வான் தான்

– பாவாணர்

மொழிஞாயிறு
தேவநேயப் பாவாணர்
நூற்றாண்டு நிறைவுவிழா சிறக்க
நெஞ்சுநிறைந்த வாழ்த்துகள்

ந. குஞ்சிதபாதம்

தென்னகக் கருவிகள் பணியகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை.

With Best Compliments from

Sangeeth Textiles Limited

Shri Mookambiga Spinning Mills Limited,

C.A.V. Cotton Mills Limited,

Shri Vasudeva Textiles Limited,

Sangeeth Finance (TN) Limited,

Akshaya Vidyalaya Matric Hr. Sec. School - Dindigul.

Corporate Office :
2/167, Ellapalayam Post, Pogalur - 641 697.
Annur, Coimbatore District. (Tamil Nadu)

Telegram: Sangeettex
Telephone : Coimbatore : 0422 - 654101 *Annur :* 04254 - 62277, 62344

With Best Compliments from

L.S.MILLS LIMITED,

SHRI SARVESH COTTON MILLS LIMITED

(ISO 9002 Certified companies)
Manufacturers of Combed and Carded Cotton Yarn

Regd. Office:

L.S. Mills Premises, Madurai Road,
Theni - 625 531. Tamilnadu.

Phone : 52741 (3 lines) *Fax :* 91-4546 - 52742
E-Mail : ismills@md3.vsnl.net.in

திருச்சி, தமிழியக்கம் காணும்

மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா

இனிது சிறக்க நல்வாழ்த்துக்கள்

செல்லம் பதிப்பகம்

29, 9ஆவது நிழற்சாலை,
அசோக் நகர், சென்னை - 600 083.
தொலைபேசி : (044) 4898366

செல்லம் கெமிக்கல்ஸ்

613, அரசமரத் தெரு,
ஆம்பூர் பேட்டை,
வாணியம்பாடி - 635 751.
(வேலூர் மாவட்டம்)
☎ (04174) 25927, 32957

தொலை வரி : **'Selchem'** *மின் அஞ்சல் :* **sellam@vsnl.net**

மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

மெய்யப்பன் தமிழாய்வக வெளியீடுகள்

முனைவர் க. அமிர்தலிங்கம்	
சங்க இலக்கியக் களஞ்சியம்	200.00
புலவர் வே. அண்ணாமலை	
சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் (2 தொகுதிகள்)	150.00
முனைவர் ந. சுப்புரெட்டியார்	
தமிழ் பயிற்றுமுறை	150.00
பி.எஸ். ராமையா	
மணிக்கொடி காலம் (சாகித்திய அகாதமி பரிசு பெற்றது)	75.00
ஏ. வி. சுப்பிரமணியம்	
தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி	60.00
புலவர் இரா. இளங்குமரன்	
தமிழிசை இயக்கம்	50.00
க. ரத்னம் (தர்ஸ்டன்)	
தென்னிந்திய மானிட இனவியல்	90.00
கா. அப்பாத்துரை	
தென்னாட்டுப் போர்க்களங்கள்	125.00
இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு	40.00
முனைவர் ச. அகத்தியலிங்கம்	
இந்திய மொழிகள் - I	70.00
முனைவர் ச. சுபாஷ்சந்திரபோஸ்	
சொல்லியல் ஆய்வுகள்	40.00
மயிலை சீனிவேங்கடசாமி	
மறைந்துபோன தமிழ் நூல்கள்	75.00
பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்	75.00
கிறித்துவமும் தமிழும்	25.00
பி. எம். சுந்தரம்	
மங்கல இசை மன்னர்கள்	100.00
நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் (10 தொகுதிகள்)	750.00

முனைவர்
கா.கோ.வேங்கடராமன்

(வேந்தர் வேந்தன்)

அவர்களின் நூல்கள்

	நூற்பெயர்		விலை
1.	தமிழ் இலக்கிய வரலாறு (2001)	ரூ.	80
2.	இலக்கண வழிகாட்டி (2001)	ரூ.	40
3.	சிந்தாமணி யாப்பு	ரூ.	75
4.	காப்பிய நடையியல்	ரூ.	100
5.	சீவக சிந்தாமணியின் வடிவமும் நடையும்	ரூ.	60
6.	தொல்காப்பியத்தமிழ் (2000)	ரூ.	100
7.	ஒளிக்கீற்று (2000)	ரூ.	50
8.	கந்தவனக்கலம்பகம் (இருப்பு இல்லை)		
9.	இலக்கணக் குறிப்பும் பொதுக் கட்டுரையும் (இருப்பு இல்லை)		

கலையக வெளியீடு
கனிமொழி பதிப்பகம்

193 - எச், கண்டர் பள்ளிக் குடியிருப்பு,

பரமத்தி வேலூர் - 638 182, நாமக்கல் மாவட்டம்.

பாவாணர்

நூற்றாண்டு விழா வெற்றிபெற

வாழ்த்துகள்

82

ஆண்டுகளாகத்

தமிழின் பெருமையை நிலைநாட்டும்

மறைத்திரு மறைமலையடிகள்

மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்

முதலிய பேரறிஞர்களின்

நூல்களை வெளியிட்டு வரும்

ஒரே பதிப்பகம்

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த

நூற்பதிப்புக் கழகம், லிட்.

522, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.

திருநெல்வேலி, திருச்சி, மதுரை,
கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர்.

12 LITRES

25 LITERS



20 LITERS

இன்சுவை

100% நுண்ணுயிர் அகற்றித் தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர்

INSUVAI

100% Pure Packaged Drinking Water

1. Reverse Osmosis முறையில் membrane தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உடலுக்கு ஊறு விளைவிக்கும் தேவையில்லாத வேதிப்பொருட்கள் நீக்கப்பட்டது.
2. Ozone Gas செலுத்தி Micro organism எனப்படும் நுண்ணுயிர் நீக்கித் தூய்மைப்படுத்தப்பட்டு, Shelf - Life உறுதி செய்யப் பட்டது.
3. Ultraviolet கதிர்வீச்சினைப் பயன்படுத்தி உடலுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய நுண்கிருமிகள் அனைத்தும் முழுவதும் நீக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.

இன்சுவை (INSUVAI)

100% தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர்.

இன்சுவை நீர் பிறந்த குழந்தை முதல் வயது முதிர்ந்தவர் வரை அனைவருக்கும் ஏற்றது.

பெற்றிடுவீர் இன்சுவை குடிநீர்!
அதுவே குடும்பப் பாதுகாப்புக் கவசம்!

உங்கள் தேவைக்குத் தொடர்பு கொள்க:

M.B.C. Pvt. Ltd.,

30, காலனி மெயின் ரோடு, கிராப்பட்டி,
திருச்சிராப்பள்ளி - 620 012.
Tel : 0431-471 421 Mobile : 98424 - 70 744

A Trust in Jewellery

SUNDARA MAALIGAI JEWELLERS, A/C

163, Big Bazaar, Thiruchi - 8.
Phone : Shop - 704158,
House - 700631

916 KDM Gold Jewels with Sun Seals are available.

மொழிஞாயிறு
திரு. ஞா.தேவநேயப் பாவாணர்
அவர்களின்
நூற்றாண்டு நிறைவு விழா சிறக்க
நல்வாழ்த்துகள்

என வாழ்த்தும்

நா.செயராமன்,
பல்மருத்துவர்,
பல் மருத்துவமனை,
832, கீழ அரசர் வீதி,
புதுக்கோட்டை - 1.
பேசி : இல்லம் - 66060,
மருத்துவ மனை - 20061.

தமிழ்ஞாயிறு
திரு. ஞா.தேவநேயப் பாவாணர்
அவர்களின் நூற்றாண்டு
நிறைவு விழாச் சிறப்புற
அமைய
நெஞ்சு நிறைந்த
நல்வாழ்த்துகள்

என வாழ்த்தும்

சீனி.சின்னப்பா
மகாராசா பேக்கரி,
மார்த்தாண்டபுரம்,
புதுக்கோட்டை - 1,

Hearty Felicitations

GOLD SOAP COMPANY
6-1-125 C, Ammayanayakkanur,
Kodai Road - 624 206.

For Super Whiteness
Triple Power
Detergent Cake

With Best Compliments

Royal Furniture

22, Madural Road, Thiruchirappalli - 620 008. Phone: 702225, 700620

Authorised Dealers for

Kurl - on - Mattresses
Duroflex - Mattresses
MM Foam - Mattresses
Nilkamal - Fibre Chairs
Classic - Synthetic Carpets
Ralli Fans
Royal T.V. Trolleys
Khaitan Fans
Lakshmi Wet Grinders
Amirtha Table Top Grinders

and

Steel and Wooden Furniture

Computer Table, MRF Coated Furture

With Best Wishes

Anjuga Real Estate
Anjuga Rani Paradise

North Raja Street, Pudukkottai.
Phone : 04322/23975

Plots are available on easy instalments and ready cash.

பாவாணர் நூற்றாண்டு விழாமலர் சிறக்க வாழ்த்துகள்!

வயல்வெளிப் பதிப்பகம்
புலவர் ந.சுந்தரேசனார் ஆராய்ச்சி நூலகம்

இடைக்கட்டு, உள்கோட்டை (அஞ்சல்)
கங்கைகொண்ட சோழபுரம் (வழி)
அரியலூர் மாவட்டம் - 612 901.
பேசி : 04331 - 47478, 04172 - 67331

உரிமை : **பொன்மொழி இளங்கோவன்**

மொழிஞாயிறு பாவாணர்
நூற்றாண்டு விழாமலர் சிறக்க வாழ்த்துகள்!

சனதா மளிகை
சனதா அழகுப்பொருள் அங்காடி

உள்கோட்டை (அஞ்சல்), கங்கைகொண்ட சோழபுரம் (வழி)
அரியலூர் மாவட்டம் - 612 901. பேசி : 04331 - 47241, 47291

உரிமை : **சிங்கார மாணிக்கம்**

முகவர் : **தினமணி, தினமலர், தினத்தந்தி, தினகரன்**

★ ★ ★ ★ ★

Compliments from a Five Star Institution imparting learning with quality and creativity

Bishop Heber College

Tiruchirappalli - 17

INDIAN INSTITUTE OF CATERING TECHNOLOGY & HOTEL MANAGEMENT

(Recognised by the Government of Tamilnadu)

No: 22, Shivaji Nagar, Near Membalam, Thanjavur - 613 001.
Tel. : 04362 - 332567 / 355525 Fax : 04362 - 332567
E.Mail : IICTHM@hotmail.com

Admission Notice - X Batch - 2002 - 2003

S.No.	Courses Offered	Eligibility
1.	Combined Three Years Course in Hotel Management & Catering Technology	10th Std/S.S.L.C./ Matriculation (H.Sc./10+2 Std. Preferable)
2.	One year Craft Course in: a. Food & Beverage Production b. Food & Beverage Service c. House Keeping d. Bakery & Confectionery	10th Std / S.S.L.C./ Matriculation
3.	Front Office Operation	H.Sc./10 + 2 Std./ Matriculation

No Donation! ***No Capitation!*** ***100% Placement!***

Special Features: ★ 1993 - 2001 Batch Diploma All Students are Placed As Management Trainee Positions in Various Prestigious Star Hotels ★ Training & Placement in Leading Star Category Hotels. Both in India & Abroad. ★ 100% Employment Opportunity Assured. ★ We have 100% Placement Records For Our All Previous Batch Students Since 1993. ★ Special Tuition For French & Hindi Languages. ★ Applications of Hotel Management Computer Packages ★ Spot Admission Available.

HOSTEL FACILITY AVAILABLE FOR MEN & WOMEN SEPARATELY

Prospectus and Application forms can be obtained by sending Demand Draft of Rs. 100/- drawn in Favour of the Director, IICTHM, Payable At THANJAVUR.

For Admission and other Details Contact: The Director / Principal

N.GANESAN, M.Com., M.Phil., (Ph.D.)
Director

A Job in Your Hand Join Immediately

With Best Compliments from

ESKAY GROUP OF COMPANIES

1. **Aruna Packaging Industries**
   No. 292, Old Mahabalipuram Road,
   Sholinganallur, Chennai - 600 119.
   Phone : 4502325 / 26 / 27 / 28
   Managing Partner : **A.Kumaraswamy**

2. **Eskay Design**
   No. 6 & 8, (Old # 25/26), Cenotaph First St.,
   Teynampet, Chennai - 600 018.
   Phone : 4357905 / 4362396
   Fax : 4321420
   Chief Architect : **K.Shiva Shankar**

3. **Eskay Home Collections Pvt. Ltd.**
   No. 784, Anna Salai, Nandanam,
   Chennai - 600 035.
   Phone : 4340944 / 4320165 / 4361079

4. **Eskay Cartons Pvt. Limited**
   No. 292, Old Mahabalipuram Road,
   Sholinganallur, Chennai - 600 119.
   Phone : 4502324 / 4502325 / 4502326

With Best Compliments From :

Special Features :

- 95 aesthetically decorated rooms - 20 airconditioned rooms
- Telephone & Television Facilities
- Credit Card & Safety Locker Facilities
- Airconditioned Chitras Restaurant (Veg. - Non. Veg)
- Sunrise A/c - Permit Room
- Madhavi Hall (Accomodates 150 members)

Allied Companies:

Chitra Complex
Chitra Traders, Tanjore Road. Tiruchi.
Chitra Traders, Lalgudi & Purathakkudi

Mr. C.Thangavel Udayar
Managing Director
Hotel Chitra (P) Ltd.,

மொழிஞாயிறு பாவாணர்
நூற்றாண்டு விழா இனிதே நிகழ
உளங்கனிந்த வாழ்த்துகள்!

இவண் :

நல்லாசிரியர்
ம.தர்மலிங்கம், எம்.ஏ. (ஆங்கிலம்),
எம்.ஏ. (வரலாறு), எம்.எட்.
செயலாளர்
கோகலே நல்கைபெறு
நடுநிலைப்பள்ளி
உளரக்கரை அஞ்சல்,
முசிறி வட்டம்
திருச்சி மாவட்டம் - 621 214.

தி.சிவானந்தம், எம்.ஏ., பி.எட்.
தலைமையாசிரியர்

கயல்வி நல்கைபெறு
தொடக்கப்பள்ளி,
சூரம்பட்டி அஞ்சல்,
முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம் - 621 208.

உயர்ந்த தரம்! இனிய சுவை!

ஹோட்டல் ஸ்ரீ பவன்

100, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 34.
தொலைபேசி : 8282176

குளிர் சாதன வசதி உண்டு

தந்தூரி, சைவ உணவு வகையில்
சிறந்த சுவையுடன் உயர் தரமாக
பரிமாறப்படும்

திருமணம், இல்லத்து விழாக்களுக்கு ஆர்டரின் பேரில்
சிறந்த முறையில் சப்ளை செய்து தருகிறோம்.

வாருங்கள்! சுவைத்துப் பாருங்கள்!
தரமோ உயர்வு! விலையோ குறைவு!

With
Best Wishes

Siva Offset Printers

(Printers and Binder)

18/1, Thathaiyangarpettai Road,
Musiri - 621 211.
Phone : 04326 - 62247

பாவாணர் வழியில்
பைந்தமிழ் காப்போம்!

பாவேந்தர் இலக்கியப் பேரவை

பெரம்பலூர்.

தலைவர் :
கவிச்சிட்டு வேல் இளங்கோ

செயலாளர் :
ஓவியச் செம்மல் சி. முகுந்தன்

பொருளாளர் :
புலவர் செம்பியன்

துணைச் செயலாளர் :
புலவர் தமிழ்நேயன்

இணைச் செயலர்கள் :
முனைவர் பொன்னொளியனார்,
புலவர் சிற்றரசு

தமிழியக்கம் நடத்தும்
பாவாணர் நூற்றாண்டு நிறைவுவிழா
சீருற நிகழ வாழ்த்துகள்

மாருதி வன்பொருள்கள், கருவிகள்

(MARUTHI HARDWARES & TOOLS)

83, மதுரைச் சாலை, திருச்சிராப்பள்ளி - 620 008.

தரமான இரும்பு, பித்தளை முதலியவற்றாலான வன்பொருள்கள்,
வண்ணங்கள், கருவிகள் அனைத்தும் மொத்த விற்பனை விலைக்கே வழங்கும்
நம்பிக்கையான நிறுவனம்

உரிமையாளர் : க. முத்துக்குமார்

பதிவு எண் 3480591 ☎ 0431/541911

இலால்குடி மாநகரில்

மக்கள் பணியில் 20 ஆண்டுகள்

தரமான, தூய்மையான மளிகைப் பொருள்கள்

வாங்கச் சிறந்த நிறுவனம்

ரத்னா மளிகையகம்

(RATHNA STORES)

சிறுதையூர், இலால்குடி.

உரிமையாளர் : பி.செல்வராசு

St. Mary's Matriculation School

(Govt Recognised : R.C. No. 3543/E/99)

Salem Main Road, No. 1, Tollgate, Bikshandarkoil. Phone : 591 528

From LKG, UKG to 10th Standard

Admission Started ***No Donation***

Special Features of the School

- Computer Education
- Yoga, Gymnastics, Karate
- Playway Method for LKG
- 100% Pass in 10th Standard
- Best Vehicle Facility
- Experienced Teachers
- Semester System

St. Mary's Education Trust

Bikshandarkoil

கல்லூரித் தோற்றம்
14.10.1992

கல்லூரித் தொலைபேசி எண்
04362 - 352971

''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி

கபிலர் நகர், வெண்ணாற்றங்கரை, தஞ்சாவூர் - 613 003.

''தாமே பயின்ற தமிழ்ப் பேராசான்
.... யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர்''

ஆக விளங்கிய நாட்டார் ஐயா அவர்கள் கி.பி. 1921இல் தம் முப்பத்தேழாம் அகவையில் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவத் திட்டமிட்டார்கள். அக்கல்லூரி நிறுவத் தந்தை பெரியார் அவர்கள் உருபா 50/- நன்கொடை தர ஒப்புதல் தந்து கையொப்பமிட்டார்கள், என்பது தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

கி.பி. 1944இல் நாட்டார் ஐயாவின் வாழ்வு நிறைவடைந்தது. அவர் புகழுடம்பு பெற்ற 48 ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 1992இல் நாட்டார் ஐயாவின் கனவு நனவாகியது. நாட்டார் ஐயா நிறுவ விரும்பிய திருவருள் கல்லூரி என்னும் பெயருடன் அவர் பெயரையும் சேர்த்து நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் தனித் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்று தஞ்சாவூரில் 14.10.1992இல் தொடங்கப்பெற்றது.

- *+2 வகுப்பில் தேர்ச்சிபெற்றோர் புலவர் வகுப்பில் சேரலாம்*
- *புலவர் பட்டயம் பெற்றோர் எம்.ஏ.(தமிழ்) வகுப்பில் சேரலாம்.*
- *புலவர் பட்டயம் பெற்றோர் ஒரத்த நாட்டிலுள்ள அரசு கல்வியியல் கல்லூரியில் ஐந்து திங்கள் தமிழாசிரியர் பயிற்சிபெற்று உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரியலாம்.*

மகளிருக்கு விடுதி வசதி உண்டு.

தஞ்சாவூர்
21.4.2002

இங்ஙனம்
பேராசிரியர் பி.திருமுதுகுன்றம்
முதல்வர், மேலாண்மை அறங்காவலர்

We wish Paavaanar's Centenary Celebration a Grant Success

Thanthai Hans Roever College

Perambalur

(Affiliated to Bharathidasan University, Tiruchirapalli)

(Run By St. John Sangam Trust)

U.G. Courses:

1) B.Sc., Computer Science
2) B.Sc., Industrial Electronics
3) B.Sc., Physics
4) B.Sc., Mathematics
5) B.Sc., Micro-biology
6) B.Sc., Bio-chemistry
7) B.C.A. (Bachelor of Computer Application)
8) B.Lit.,
9) B.Sc., Information Technology
10) B.B.A.,
11) B.Com.,

Evening College:

1) B.Sc., Computer Science
2) B.Sc., Microbiology
3) B.Sc., Biochemistry
4) B.C.A.

P.G. Courses:

1) M.Sc., Computer Science
2) M.Sc., Micro-biology
3) M.Sc., Bio-chemistry
4) M.S., Information Technology
5) M.Com.,
6) M.B.A.
7) M.S., Cyber Technology
8) M.C.A.
9) M.S.W. *
10) M.Sc., Physics *
11) M.Sc., Bio-Technology *
12) M.Phil., *
13) P.G. Diploma in Bio-Informatics
14) PG Diploma in Actual Science

Evening College :

1) M.Sc., Computer Science (Two seds)
2) M.Sc., Micro-biology

* *Subject to Affiliation*

Separate Hostel for Boys & Girls

Bus Facilities are available from Tholudur, Ariyalur, Thuraiyur, Veeraganur.

Computer Education for all Course Students

Prof. V.Ganesan,
Principal

Dr. K.Varadharaajen,
Chairman

மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு விழா
சிறக்க நெஞ்சார்ந்த வாழ்த்துகள்

விழாக்கால சவளி, பட்டு, உடனணி ஆடை வகைகள்,
அனைத்துப் பள்ளிச் சீருடைகள் மலிவாக...

திரு குமரன் துணியகம்

(SRI KUMARAN TEX)

32, திருச்சி சாலை,
துறையூர்.
தொலைபேசி : 04327 / 22881

பார்த்திபன் பதிப்பகம்

ஏ–12, எல்.ஐ.சி.காலனி, திருச்சிராப்பள்ளி – 620 021.

முனைவர் கி. இராசா எழுதியவை

தொல்காப்பியமும் இலக்கியவகை வளர்ச்சியும்	ரூ.	150.00
புறநானூறு (திணை – துறைப் பதிப்பு)	ரூ.	150.00
வேர்ப்பலா (கட்டுரைத் தொகுப்பு)	ரூ.	30.00
இலக்கியவகைத் திறனாய்வு	ரூ.	35.00
இலக்கிய வகைமை ஒப்பாய்வு (கிரேக்க – சங்க இலக்கிய ஒப்பீடு)	ரூ.	50.00
ஒப்பிலக்கிய நோக்கு (ஒப்பிலக்கியக் கட்டுரைகள்)	ரூ.	20.00
அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி	ரூ.	25.00
ஆய்வு நெறிமுறைக் குறிப்புகள்	ரூ.	20.00
இதழியல்	ரூ.	50.00
மக்கள் தகவல் தொடர்பியல் – அறிமுகம்	ரூ.	60.00
The Burning Urn (Studies ub Tamil Poetry)	ரூ.	65.00

அண்மை வெளியீடு :

தமிழர் இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய வரலாற்றைச் சூழல் உணர்வுடன் - காலமாற்றம், அரசியல் மாற்றம், ஆட்சி மாற்றம் ஆகியவை தமிழர் இலக்கியத்தில் ஏற்படுத்திய விளைவுகளை இந்நூல் சொல்கிறது. வழக்கமான பகுதிகளோடு 'புலம்பெயர் இலக்கியங்கள்' இணையத் தமிழ் ஆகியவை புதிய பகுதிகள். விவர அட்டவணைகள், சுவைக் குறிப்புகள் ஆகியவை அரிய தகவல்கள். **விலை : ரூ. 90/-**

Phone : 761609

Available all Medicine Surgical and General Items

M/s. Vasavhi Medical & General

C-94 No.1, Fort Station Road,

Thillai Nagar, Trichy - 18.

Working Hours :

8.00 a.m. to 10.30 p.m.

தமிழியக்கம்

(தமிழ்ப் பருவ இதழ்)

''புதியதோர் உலகம் செய்வோம்'' என்ற முழக்கத்தை உயர்த்திப் பிடித்து, மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டுத் தொடக்கவிழா முதல் மீண்டும் தடம் பதித்துள்ளது தமிழியக்கம்.

தமிழ் - தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் கோலோச்சுவதற்கு மாறாக அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

தமிழன் - தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் கோலோச்சுவதற்கு மாறாக அடிமைப்பட்டுக் கிடக்கிறான்.

தமிழனைத் 'தமிழனாக' அடையாளம் காட்டவேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழன் இழந்ததை மீட்க, இருப்பதைக் காக்கத் தமிழியக்கம் தொடர்ந்து குரல் கொடுக்கும். தமிழியக்கம் சுமக்கவேண்டிய சுமை ஏராளம். தமிழர்களைத் தோள்கொடுக்க அழைக்கிறோம்.

தமிழர்களே!
இதழ் உறுப்பினராகுங்கள்! உறுப்பினராக்குங்கள்!
நன்கொடை தாருங்கள்! தரச்செய்யுங்கள்!
புரவலர் ஆகுங்கள்! ஆக்குங்கள்!
விளம்பரம் தாருங்கள்! தரச்செய்யுங்கள்!

தமிழியக்கம் இனி உங்கள் இதழ்

தொடர்புக்கு:
புலவர் கி.த.பச்சையப்பன்,
ஆசிரியர் 'தமிழியக்கம்'
19, குறுக்குச் சாலை, புதுவண்ணை, சென்னை – 600 081. பேசி: 044 – 5965758

இதழ்க் கட்டணம்

தனியிதழ்	உரு.	10.00
ஆண்டுக் கட்டணம்	உரு.	60.00
புரவலர் கட்டணம்	உரு.	1000.00

விளம்பரக் கட்டணம்

அட்டை வெளிப்பக்கம்	உரு.	1000.00
அட்டை மூன்றாம் பக்கம்	உரு.	750.00
உள்பக்கம்	உரு.	500.00
அரைப்பக்கம்	உரு.	300.00

Bharath College of Science and Management

(Affiliated to Bharathidasan University)

Near New Bus stand, Trichy Road, Thanjavur - 613 005.
Ph. : 04362 - 327166, 355525, 326735 Fax : 04362 - 332567
E-mail: Bharath college@hotmail.com

Admission Notice - 2002 - 2003

1. B.Sc., Computer Science
2. B.C.A., Computer Applications
3. B.Sc., Nutrition and Dietetics
4. B.B.A., Business Administration
5. B.Sc., Information Technology
6. B.H.M. Hotel Management and Catering Technology
7. B.Sc., Fashion Technology and Costume designing*
8. B.Sc., Bio-Technology*

PG Course

9. M.S. Information Technology
10. M.S. Software Technology*

No Donation ***Spot Admission***

Eligibility : UG Degree : +2 / HSc.
PG Degree : Any Degree with Maths

* Subject to Affiliation

Prospectus and Application Form Rs. 50/- by cash or by DD of Rs. 75/- drawn in favour of "**Bharath College of Science and Management**" Payable at Thanjavur.

N.GANESAN, M.Com., M.Phil., (Ph.D.)
Secretary

A Co-Educationai Arts and Science College

With
Best Wishes

No. 1 TV Show Room

S L V Ceiling Fan

No. 1 Furniture

Maruthi Electronics & Furnitures

245, Thiruchi Road,
Thuraiyur,
Phone : 22280 / 23040

With
Best Compliments

National Electricals

(Wholesale and Retail Sates)

Sri Complex
18, Madurai Road,
Thiruchirappalli - 620 008.
Phone : 700124

தொ.எண். 75407
செல் : 9842446707

'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்'

பாவாணர் நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகள்!

குறைந்த வட்டியில் வீட்டுக்கடன் பெற, வருமான வரியில் இருந்து விலக்குப் பெற அணுகுவீர்

நா. சாரங்கபாணி
வாழ்நாள் காப்பீட்டு முகவர் (L.I.C.)
7-B, பாரதி நகர்,
புதிய மதன கோபாலபுரம்
பெரம்பலூர் - 621 212.

With

Best Compliments

From

JANANI MINERALS

39, Shastri Road,

Thillai Nagar,

Thiruchirappalli - 620 018.

தமிழியக்கம் சார்பில் நடத்தப்பெறும்
மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு நிறைவுவிழா
சிறக்க வாழ்த்துகிறோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

கரந்தை, தஞ்சாவூர் - 2. தொலைபேசி : (04362 - 350349)

கரந்தைத் தமிழ்ச் சங்க கல்வி நிலையங்கள்

★ குழந்தைகள் இல்லம்
★ இராதாகிருட்டிணத் தொடக்கப் பள்ளி
★ உமாமகேசுவர மேல்நிலைப் பள்ளி
★ தி.ச.பழனிச்சாமி பிள்ளை தொழிற் பயிற்சி மையம்
★ தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி

கற்பிக்கப் பெறும் பாடப் பிரிவுகள் :

பி.லிட்., (தமிழ்)
எம்.ஏ., (தமிழ்)
எம்.ஃபில் (தமிழ்) முழு / பகுதி நேரம்
பி.எச்டி. (தமிழ்) முழு/பகுதி நேரம்
பி.எஸ்சி., (கணிதம்)
பி.எஸ்சி. (வேதியியல்)
எம்.எஸ்சி. (வேதியியல்)
பி.எஸ்சி. (ஐடி)
பி.காம்.,
எம்.காம்.,
பி.எஸ்சி. (இயற்பியல்)
பி.எஸ்சி. (கணிப்பொறி)
எம்.எஸ்சி. (கணிப்பொறி)
பி.சி.ஏ.,
பி.ஜி.டி.சி.ஏ.,
எம்.எஸ்., (ஐடி)

★ தரமான பயிற்சி.
★ அதிநவீன வேதியியல், இயற்பியல், விலங்கியல், ஆய்வகங்கள்.
★ இணைய வசதியுடன் கூடிய கணினி ஆய்வகம்.
★ பழம்பெரும் நூல்களைக் கொண்ட நூலக வசதி.

முனைவர் இரா.குருநாதன்
முதல்வர்

ச.இராமநாதன்
செயலாளர்

The One Stop Shop For All Your Printing Needs

ALL UNDER ONE ROOF

Offset, Screen, Scanning, Designing, Lamination, Cutting, Perfect Binding, Punching

BEST QUALITY WITH SPEED DELIVERY

Skilled & Experienced Professional to carry out your job

- Vising cards ❖ Letterheads ❖ Wedding Cards
- Invitation ❖ Wrappers ❖ Cassette Covers
- Books ❖ Novels ❖ Bill Book ❖ Annual Reports
- Danglers ❖ Vouchers ❖ Posters ❖ etc.

H.O. : 1st Floor, #324, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005.

B.O. : 133, Dr. Besant Road, (Near ICE House Mosque) Royapettah, Chennai - 14.

Phone : 857 2012 Telefax : 8420639

SHARP PRINTS

CREATIVE DESIGNERS & PRINTERS

SRI VENKATESWARA COLLEGE OF ARTS AND SCIENCE

வையத் தலைமை கொள்!

PERAVURANI - 614 804 Thanjavur Dist.,
Phone : 04373 - 33437



எங்கள் நோக்கம்! *ஏழைகட்கு எழுத்தறிவிப்பதே!!*

சாமி அருள் கலை அறிவியல் கல்லூரி

பிள்ளையார்பட்டி (வல்லம்), தஞ்சாவூர். தொலைபேசி : (04362) 66282.
செல்போன் : 098430 24711, 098424 41696, கல்லூரி - 098424 60282

தமிழ்நாடு அரசு ஆணை எண் 176ன் படி, ஏற்புரிமை பெற்று சுயநிதிக் கல்லூரியாகத் தொடங்கப்பட்டு முதலாம் ஆண்டு வகுப்புகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தஞ்சை மருத்துவக் கல்லூரி சாலை வழியாக, வல்லம் செல்லுகிற வழியில், பிள்ளையார்பட்டி நெடுஞ்சாலையில் இயற்கையின் எழிலார்ந்த எல்லா சூழல்கள் பொருந்திய இடத்தில் கல்லூரியின் கட்டிடங்கள் அமையப் பெற்றுள்ளன.

வரும் ஆண்டு 2002 - 2003ம் ஆண்டு நடைபெறவுள்ள வகுப்புகள்

பட்டப்படிப்பு

1. B.Sc., (Information Technology)
2. B.Sc., (Computer Science)
3. B.C.A., (Computer Application)
4. B.Com., (Applied Computer)
5. B.B.A.
6. B.Litt. (தமிழ் இலக்கியம்)

முதுநிலை பட்டப்படிப்பு

M.S. (Cyber Technology)
M.S. (Information Technology)

மாணவியர் மற்றும் மாணவருக்கு காலை மற்றும் மதியம் தனித்தனியாக கல்லூரி வகுப்புகள்

இக்கல்லூரியில் படிக்கும்மாணவர் மற்றும் மாணவியருக்க தனித்தனியாக வகுப்புகள், காலையில் மாணவியருக்க வகுப்பு நடத்தி முடிந்து அவர்கள் கல்லூரியிலிருந்து சென்ற பிறகு மதியம் மாணவர்களுக்கு வகுப்பு நடத்தி வருகிறோம். இதனால் எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் நல்ல மதிப்பெண்களுடன் நூறு விழுக்காடு தேர்வு முடிவுடன் மாணவர்கள் தயாராகி வருகிறார்கள். குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு பயமில்லாத பாதுகாப்பு.

கல்லூரிப் பேருந்து

எங்கள் கல்லூரிப் பேருந்து நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் வந்து மாணவியர்களை காலையிலும் மாணவர்களை மதியத்திலும் தனித்தனியே கல்லூரிக்கு அழைத்து வருகிறது.

விடுதி வசதி

மாணவியர்களுக்கும், மாணவர்களுக்கும் தனித்தனியான பாதுகாப்புடன் கூடிய விடுதி வசதிகள் உள்ளன. சுவையான, சத்தான சாப்பாடும், மாணவர்களின் நடத்தை மற்றும் கல்வியைக் கண்காணிக்க விடுதிக் காப்பாளர்கள் தனித்தனியாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

எஸ்.குணசீலன்
நிர்வாக அறங்காவலர்

வீ.வைத்தியநாதன், D.M.E., A.M.I.E.,
இயக்குநர் (நிதி)

க.சாமிநாதன், M.C.A., P.G.D.C.A.,
இயக்குநர் (பொது)

அ.அருள்லாரன்ஸ், M.C.A., P.G.D.C.A.,
கல்லூரித் தலைவர், முதல்வர் (பொறுப்பு)

We Wish
Paavaanar's Centenary
Celebration a Grant
Success

DHANDAPANI CEMENT
PRIVATE LTD.,
S. PUTHUR
Kariyamanickam Road,
Samayapuram.

சேலம் தமிழ்ப் பேரவை சார்பில்
தந்தை பெரியார்
'திராவிட மொழி நூரல் ஞாயிறு'
எனப் பட்டயம் அளித்துச் சிறப்பித்த

ஞா.தேவநேயப் பாவாணர்

நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகள்!

தமிழுணர்வுடன்
என். இராசகோபால்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்
பறம்புமலை பாரிவிழாவில்
'செந்தமிழ் ஞாயிறு'
எனச் சிறப்புப் பெயர் சூட்டிப் பாராட்டிய

ஞா.தேவநேயப் பாவாணர்

நூற்றாண்டு நிறைவு விழா இனிதே நிகழ வாழ்த்துகள்

அன்புடன்
கே.சேவையா
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பாவாணர் நூற்றாண்டு விழாவை 2.10.2001ஆம் நாள் கோவை மாவட்டத் தனித்தமிழ் எழுச்சி விழாவாகக் கொண்டாடியது சூலூர்!

பகுத்தறிவும் தனித்தமிழும் பரவுவதற்குப் பதினைந்தாண்டுகளாய்ப் பணியாற்றிவரும் அமைப்பு

சூலூர் - பாவேந்தர் பேரவை

38, கலங்கல் பாதை, சூலூர், கோவை - 641 402.

வெளியீடுகள்

சூலூர் வரலாறு (750 பக்கம்) (கொங்கு நாட்டு வாழ்வியல் வரலாறு)	175 உருபா
பாவேந்தர் நூற்றாண்டு மலர்	25 உருபா
மனிதரைக் காக்கவா மதம்? (பெரியார்தாசன் சொற்பொழிவு)	5 உருபா

அறிவியல், குமுகவியல், பகுத்தறிவு நூல்களைத் தொடர்ந்து வெளியிடுகிறது



சூலூர் வெளியீடு

'பால இல்லம்', 8, நஞ்சப்பா குடியமைப்பு, சூலூர், கோவை - 641 402. தொ.பே. : 0422 - 681147

வெளிவந்துள்ளவை

பகுத்தறிவின் சிகரம் பெரியார் - ஏ.எசு.கே.	35 உருபா.
கடவுள் கற்பனையே! - ஏ.எசு.கே.	35 உருபா
அறிவியலா? அருஞ்செயலா? - பி.பிரேமானந்து (150 'தெய்வீக மோசடி'களின் விளக்க நூல்)	50 உருபா
ஆவி, ஆன்மா, மறுபிறப்பு - கோவூர்	30 உருபா

பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனால் உண்டோ பயன்? — *பாவாணர்*

- மொழிக்கலப்பட அழிவுவாதிகளின் முகமூடி கிழிக்கும் வெளியீடுகள்!
- மதவாத வெறிநோய்க்கு மருத்துவம் பார்க்கும் நூல்கள்!



வெளியீட்டாளர் - விற்பனையாளர்:

க.தேசராசு

சூலூர் - அறிவுநெறி

'வள்ளுவர் இல்லம்', ஏ.கே.இராமசாமி நகர், சூலூர், கோவை - 641 402. தொ.பே. : 0422 - 681445

தமிழியக்கம் நடத்தும்
மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா
சீருற வாழ்த்துகிறோம்

செல்வி பதிப்பகம்

25, இரண்டாம் தெரு, உலூர்துசாமி குடியிருப்பு, காசாமலை,
திருச்சிராப்பள்ளி - 620 023. தொலைபேசி : 0431 - 420568

வெளியீடுகள் :

மூலிகை மருத்துவம் (வண்ணப் படங்களுடன்)	உரு.	90.00
திருக்கோயில் மரங்களின் மருத்துவப் பயன்கள்	உரு.	36.00
வியத்தகு எண்ணெய் மருத்துவம்	உரு.	25.00
அன்றாட வாழ்வில் ஓமியோபதி	உரு.	40.00
ஓமியோ - பயோ - உடனடிக் குறிப்புகள்	உரு.	100.00
பாலியல் வினாவிடை	உரு.	15.00
உலகக் கவிதைகள்	உரு.	40.00
பழந்தமிழ் இலக்கியத்தில் தாளமுழக்கியல்	உரு.	36.00

Phone : 420121

For Project Work

- Printing with your College/University Emblem
- Binding with Lamination
- Cushion Binding • Spiral Binding • Stick Binding
- DTP, Xerox, Offset Printing

all under one Roof

THE PRINTING HOUSE

6, Kajamalai Main Road, Near Collector Bungalow,
(Arabic College Bus Stop) Trichy - 620 023.

மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்
நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகள்

அருள்மிகு மாத்தூர் உலகநாயகி அம்மன் துணை!

தரமான தங்கம், வெள்ளி நகைகள் வாங்கச் சிறந்த நிறுவனம்

சிரீ பாலா தங்க மாளிகை

243, பெரிய கடை வீதி, துறையூர் - 621 010.
☎ : 45700

உங்கள் பொன்னுடல்கள்
எங்கள் பொன் நகைகளால் பொலிவு பெறட்டும்!

இளைஞர் உலகில் பாராட்டுப் பெற்ற நூல்களின் பிறப்பிடம்

கண்மணி பதிப்பகம்

ஏ-2, சங்கர் அபோடஸ், சங்கரன் பிள்ளை சாலை, திருச்சி - 620 002.
தொலைபேசி : 0431 - 704756

நாஞ்சில் ஆனந்தனின் படைப்புகள்

1.	நினைவுப் பாதை (கவிதை)	30.00
2.	விண்ணும் மண்ணும் (சிறுகதை)	35.00
3.	பேராண்மை (சிறுகதை)	35.00
4.	கடலம்மை (சிறுகதை)	35.00
5.	இந்திரசித் (நாடகம்)	40.00
6.	சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்	30.00

மொழிஞாயிறு பாவாணர்
நூற்றாண்டு நிறைவுவிழா மலர்
சிறக்க வாழ்த்தும் தமிழ் நெஞ்சங்கள்

ஆர்தர் வழக்குரைஞர் குழுமம்
திருநெல்வேலி - 627 002

வழக்குரைஞர்கள்
ச.ஆர்தர்

இர.அரீந்திரன்
பொ.இளஞ்செழியன்
மு.இராமேசுவரன்
இரா.முருகன்குமார்

இ.சேதுராமலிங்கம்
ச.சிவசுப்பிரமணியன்
த.செல்வகுமாரி
சே.மகேசுவரன்

ந.பாப்பி மார்சலின்

பாவாணர் நூற்றாண்டு நிறைவுவிழாச் சிறக்க
நெஞ்சார்ந்த வாழ்த்துகள்

மக்கள் மருத்துவர்
புகழேந்தி
புதுப்பட்டினம், கல்பாக்கம், காஞ்சி மாவட்டம்.

நல்வாழ்த்துகள்

மாருதி பசுஞ்சுதை

(MAARUTHI CEMENT)

உற்பத்தியாளர் :

தண்டபாணி பசுஞ்சுதை நிறுவனம்

(Dhandapani Cement (P) Limited)

கரியமாணிக்கம் சாலை, சமயபுரம்.

பேசி : 670354, 670164

வீட்டு நூலகத்தை

விலைமதிப்பற்ற சொத்தாகக் கருதிய பாவாணரின்

நூற்றாண்டு நிறைவு விழா சிறக்க

வாழ்த்துகிறோம்.

அம்பாள் பதிப்பகம்

1, கக்கன் தெரு, சத்தியாத் தோட்டம்,

சென்னை - 600 093.

Pure Chem Products Pvt. Ltd.,

70-C, Viralimalai Road, Edamalaipattipudur,
Tiruchirapalli - 620 012.
Tamil Nadu, India

Tel : 0091 - 431 - 471 421, 471 611
Fax : 0091 - 431 - 471 008
E-mail : purechem_cpw@yahoo.com

Manufacturer of

Chlorinated Paraffin Wax
Sulphochlorinated Paraffin Wax

to be used in

Rexine Cloth, Transparent Hose,
Irrigation Hose, Leather Chemicals etc.

and also

Hydrochloric acid

to be used in

Pickling, Neutralization, Textile Bleeching etc.

வாழ்க குறளியம்! வளர்க பாவாணரியம்!

பாவாணரின் கோட்பாடுகளைத் திங்கள்தோறும்
ஆய்வுக் கூட்டங்கள் மூலம் வெளிப்படுத்தி வரும்
'தமிழியக்கத்தின்' தொண்டு செழிக்க வாழ்த்துகிறோம்.

- ★ திருக்குறளின் உண்மைப் பொருளை அறிந்திட
- ★ ''திருக்குறள் இளம் புலமையர்'' சான்றிதழ் பெற்றிட

இணைந்திடுவீர்!

திருக்குறள் கல்வி மையம்

(கல்வி ஆண்டு சூன் முதல் மே முடிய)

இரண்டாம் தளம் - ஈசுவரி வணிக வளாகம்

சிந்தாமணி கடைவீதி, திருச்சிராப்பள்ளி.

தொலைபேசி : 716106

மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்

நூற்றாண்டு நிறைவுவிழா சிறக்க வாழ்த்துகிறோம்!

பாரத் பதினகப்பள்ளி

(Bharath Matriculation School)

அரசின் அறிந்தேற்பு பெற்றது

81, திலகர் திடல், புதுக்கோட்டை - 622 001.

பேசி : 04322 / 20553

ச.சகுந்தலா துரைப்பாண்டியன்
தாளாளர்

மு.இரவிக்குமார்
முதல்வர்

நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்

உணவே மருந்து! பழமே உணவு!!

பத்மா பழமுதிர் சோலை

திருச்சி

கிளைகள்	தொலைபேசி எண்
திருவரங்கம்	433267
மாம்பழச் சாலை	430226
குமரன் நகர்	772287
சுந்தர் நகர்	456742
சத்திரம் பேருந்து நிலையம்	705211

அனைத்துப் பழ வகைகளும் நியாயமான விலையில்
(சந்தை விலையை விடக் குறைவாக)

சரியான எடையில், மரங்களில் பறித்தபோது உள்ள அதே பொலிவுடன் வழங்குகிறோம்.

அனைத்து வகையான பழச்சாறுகளும் கிடைக்கும் ஒரே இடம்!

பத்மா குளம்பிப் பணிகள்

(PADMA COFFEE WORKS)

4, காவேரிச் சாலை, திருச்சி - 620 002. தொலைபேசி : 705210, 708340

கிளைகள்	தொலைபேசி எண்
நந்திக்கோயில் தெரு	700671
தெப்பக்குளம்	706057
காந்தி சந்தை	707138
உறையூர்	762960
மேலப்புதூர்	401119
சுந்தர் நகர்	456742
திருவரங்கம்	431308
சத்திரம் பேருந்து நிலையம்	712965
மண்ணச்சநல்லூர்	560251
துறையூர்	22221
புத்தூர் நான்குசாலை	

பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா
மேலும் மேலும் சிறக்கவும், விழாமலர் பொற்றாமரைபோல்
மலர்ந்திடவும் வாழ்த்துகிறோம்.

அன்னை இந்திராகாந்தி நினைவு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
அன்னை இந்திராகாந்தி நினைவு மேல்நிலைப் பள்ளி,
நேரு நினைவு நடுநிலைப் பள்ளி மற்றும்
புனித தெரசாள் ஆங்கிலப் பள்ளி

ஒவ்வோராண்டும் சூன் 3ஆம் நாள் முதல் சேர்க்கை நடைபெறும். விடுதி வசதி உண்டு. திருச்சி மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையில் 13வது கி.மீட்டரில் முத்துக்குளத்தில் அமைந்துள்ள எங்கள் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயன்பெறுவீர்களாக!

திரு. க.சவரிமுத்து அவர்கள்,
தாளாளர், ந.குட்டப்பட்டு அஞ்சல், முத்துக்குளம்,
இராம்சி நகர் வழி, திருச்சி – 620 009.

மலர் மணக்க
உளம் நிறைந்த
வாழ்த்துகள்!

வெற்றிவேல்

(வெள்ளி விழாக்கண்ட மிக நல்ல கல்வியகம்)
நெல்லை சந்திப்பு
தொலை பேசி எண்: 322878, 500547

சிவ.சேதுராமன், முதல்வர்

தமிழியக்கம்

நடத்தும்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

நூற்றாண்டு நிறைவு விழா

சிறப்பாக நிகழ்ந்திட

நெஞ்சுநிறைந்த வாழ்த்துகள்

திரு பாலாசி வேதிமத் தொழிலகம்

(SRI BALAJI CHEMICAL INDUSTRIES)

எண் - 10, அம்மன் நகர், மதனந்தபுரம்,

சென்னை - 600 116.

Hearty Greetings for the success of
Paavaanar's Centenary Celebration!

Trichy Ramesh
Pipe Industry (P) Ltd.

Manufactures :

Ramesh (ISI) Rigid PVC Pipes Casing
& Screen Pipes

Factory:

5/301-A, Trichy Main Road,

Thuraiyur - 621 010. Thiruchi Dt.

☎ 04327 - 56151

Fax : 04327 - 56351

மொழிஞாயிறு பாவாணர் அவர்களின்
பழகு தமிழ்
பாரெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!

ஓம்சக்தி பதிப்பகம்

31, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க நகர்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம்.

With
Best
Compliments
From

ROTARY CLUB OF MUSIRI

R.I. 3000

P.Murugan
S. Balu
R.Thiyagarajan

S.Vijayaragavan
M.Siva
S.Srinivasan

With
Best
Wishes

KOVAI KRISHNA

Bakery & Sweets

111-A, Market Street, Ariyalur - 621 704

Phone : 04329 - 24646

மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா
வெற்றிபெற வாழ்த்துகள்

பெரியார் பேருரையாளர்

முனைவர் மா. நன்னன் நூல்கள்

தடம் புரள்கிறதா தமிழ் உரைநடை?	உரு.	35.00
தவறின்றித் தமிழ் எழுதுவோம்	உரு.	27.00
கல்விக்கழகு கசடற எழுதுதல்	உரு.	45.00
பெரியார் கணினி - இரு தொகுதிகள்	உரு.	220.00
பெரியாரியல் - 1 பொருள்	உரு.	8.00
பெரியாரியல் - 2 மொழி	உரு.	18.00
பெரியாரியல் - 3 இலக்கியம்	உரு.	24.00
பெரியாரியல் - 4 கலை	உரு.	12.00
பெரியாரியல் - 5 தாம்	உரு.	14.00
பெரியாரியல் - 6 கல்வி	உரு.	18.00
பெரியாரியல் - 7 ஒழுக்கம்	உரு.	25.00
பெரியாரியல் - 8 திருமணம்	உரு.	25.00
பெரியாரியல் - 9 கடவுள்	உரு.	27.00
பெரியாரியல் - 10 மதம்	உரு.	18.00
பெரியாரியல் - 11 பார்ப்பனியம்	உரு.	25.00
பெரியாரியல் - 12 சாதி	உரு.	25.00
பெரியாரின் உவமைகள்	உரு.	27.00
பெரியாரின் பழமொழிகள்	உரு.	12.00
பெரியாரின் குட்டிக்கதைகள்	உரு.	18.00
இவர்தாம் பெரியார் (வரலாறு) - 1 தோற்றம்	உரு.	75.00
இவர்தாம் பெரியார் (வரலாறு) - 2 போர்	உரு.	80.00
சுயசிந்தனையாளர் - பெரியார்	உரு.	30.00

கிடைக்கும் இடம் :

ஞாயிறு பதிப்பகம்

சிறுகுடி,
22, முதல் தெரு,
அரங்கராசபுரம், சைதை, சென்னை - 600 015.
தொலைபேசி எண் : 2350193

மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு நினைவு நூல்கள் வெளியீடு

தமிழுயர்ந்தால் தமிழ்நாடு
தானுயரும் அறிவுயரும்
அறமும் ஓங்கும்
இமயமலை போலுயர்ந்த
ஒருநாடும் தன்மொழியில்
தாழ்ந்தால் வீழும்.
– பாவேந்தர்

தமிழ்மண் பதிப்பகம்

தமிழ்மண் பதிப்பகம்



எண்.	பாவாணர் நூல்கள்	விலை	
1.	திருக்குறள் தமிழ் மரபுரை அறத்துப்பால் 1	130	00
2.	திருக்குறள் தமிழ் மரபுரை பொருட்பால் 2	90	00
3.	திருக்குறள் தமிழ் மரபுரை பொருட்பால் 3	130	00
4.	திருக்குறள் தமிழ் மரபுரை இன்பத்துப்பால் 4	125	00
5.	தமிழ் வரலாறு பகுதி 1	115	00
6.	தமிழ் வரலாறு பகுதி 2	90	00
7.	தமிழர் வரலாறு பகுதி 1	90	00
8.	தமிழர் வரலாறு பகுதி 2	110	00
9.	வடமொழி வரலாறு பகுதி 1	105	00
10.	வடமொழி வரலாறு பகுதி 2	105	00
11.	தமிழ் இலக்கிய வரலாறு பகுதி 1	120	00
12.	தமிழ் இலக்கிய வரலாறு பகுதி 2	70	00
13.	முதற்றாய்மொழி பகுதி 1	100	00
14.	முதற்றாய்மொழி பகுதி 2	105	00
15.	ஒப்பியன் மொழிநூல் பகுதி 1	140	00
16.	ஒப்பியன் மொழிநூல் பகுதி 2	110	00
17.	வேர்ச்சொல் கட்டுரைகள் பகுதி 1	80	00
18.	வேர்ச்சொல் கட்டுரைகள் பகுதி 2	110	00
19.	சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்	55	00
20.	கட்டுரை வரைவியல்	100	00
21.	உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதற் பாகம்)	130	00
22.	உயர்தரக் கட்டுரை இலக்கணம் (இரண்டாம் பாகம்)	120	00
23.	இயற்றமிழ் இலக்கணம்	90	00
24.	பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்	100	00
25.	பழந்தமிழாட்சி	90	00
26.	திரவிடத் தாய்	75	00
27.	தமிழர் மதம்	100	00
28.	மண்ணில் விண் (அ) வள்ளுவர் கூட்டுடைமை	130	00
29.	வண்ணனை மொழிநூலின் வழுவியல்	90	00
30.	தமிழ்நாட்டு விளையாட்டுகள்	90	00
31.	இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?	75	00
32.	தமிழர் திருமணம் தமிழர் சரித்திரச் சுருக்கம் தமிழன் எப்படிக் கெட்டான்?	70	00
33.	செந்தமிழ்க் காஞ்சி இசையரங்கு இன்னிசைக் கோவை சிறுவர் பாடல் திரட்டு கிறித்தவக் கீர்த்தனம்	95	00
34.	இசைத்தமிழ்க் கலம்பகம்	130	00
35.	சுட்டு விளக்கம்	80	00
36.	சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு என் அண்ணாமலைநகர் வாழ்க்கை	80	00
37.	The Primary Classical Language of the World	220	00
38.	The Language Problem of Tamilnadu and its Logical Solution The Lemurian Language and its Ramifications	120	00

அச்சில் உள்ளவை

எண். பாவாணர் நூல்கள்

1. கட்டுரை கசடறை என்னும் வியாச விளக்கம்
2. வேர்ச்சொல் கட்டுரைகள் 3
3. வேர்ச்சொல் கட்டுரைகள் 4
4. மறுப்புரை மாண்பு
5. தென்சொற் கட்டுரைகள்
6. மொழியாராய்ச்சிக் கட்டுரைகள்
7. செந்தமிழ்ச் சிறப்பு
8. இலக்கணக் கட்டுரைகள்
9. பாவாணர் நோக்கில் பெருமக்கள்
10. தலைமைத் தமிழ்
11. கூவுக இனிய குயிலே
12. பாவாணர் முகவுரைகள்
13. பன்முகப் பார்வையர் பாவாணர்
14. கட்டுரை வரைவது எப்படி? கடிதம் எழுதுவது எப்படி?

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் நூல்கள்

15. இன்பத்துள் இன்பம்
16. செந்தமிழ்ச் செல்வம்
17. சிலம்பு வழங்கும் செல்வம்
18. மொழி வளம்
19. தமிழ் முழக்கம்
20. வள்ளுவர் நிழல்
21. வாழ்க
22. வளரும் தமிழ்
23. தமிழன் உரிமை
24. தென்மொழி

கவியரசர் முடியரசன் நூல்கள்

25. தாய்மொழி காப்போம்
26. எப்படி வளரும் தமிழ்?

தொல்காப்பியம்

27. எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)
28. எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர் உரை)
29. சொல்லதிகாரம் (இளம்பூரணர் உரை)
30. சொல்லதிகாரம் (நச்சினார்க்கினியர் உரை)
31. சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை)
32. சொல்லதிகாரம் (தெய்வச்சிலையார் உரை)
33. சொல்லதிகாரம் (கல்லாடர் உரை)
34. பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை)
35. பொருளதிகாரம் (நச்சினார்க்கினியர் உரை)
36. பொருளதிகாரம் (பேராசிரியர் உரை)

முகவரி :
அகமது வணிக வளாகம்,
293 இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
✆ : 831 21 75

SHARP PRINTS, Ch-5. Tel. : 8572012